சுந்தர காண்டம்

வெளியீட்டுரை

முந்திய நான்கு காண்டங்களுக்கும் மதிப்புரை யெழுதி யுதவிய பெரியார்களுக்கும் பத்திராசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

படல அட்டவணை

கம்பராமாயண சாரம்

சுந்தர காண்டம்

[மற்றைய காண்டக் கதைகளினும் அழகான கதையைக் கூறுவது, இராமனது திருமேனி அழகைக் கூறுவது; சுந்தரன் என்னும் பெயரையுடைய அனுமான் செயல்களைக் கூறுவது என இக்காண்டத்திற்குப் பலர் பலவாறு பொருள் கூறுவர்]

---

1. கடல் தாவு படலம்

[இலங்கைக்குச் செல்லுமாறு அனுமான் கடலைத் தாவிச் சென்றதைக் கூறுவது]

கடவுள் வாழ்த்து

அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்பர் கைவி லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்

(அன்வயம்*) : அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவு என, ஐம்பெருங் கூறுகளும், பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் (ஆகிய காரியம்) வேறுபாடு உற்ற வீக்கம் கலங்குவது, மறைகளுக்கு இறுதியாவார் (ஆகிய) அவர் கைவில் ஏந்தி இலங்கையில் பொருதார் என்பர்.

பொருள்: உண்மைப் பொருளாகிய மாலையை உள்ளபடி கண்டால், பூமாலையால் தோன்றிய தோற்றப் பொருளாகிய பாம்பு காணப்படாது நீங்குதல் போல, உண்மைப் பொருளாகிய தெய்வத்தைக் கண்டால், அவரால் தோற்றுவிக்கப்பட்ட தோற்றப் பொருளாகிய பிரபஞ்சம் காணப்படாது நீங்குமோ, மெய்யான பொருளாகிய அவர் இலங்கையில் இராவணனோடு போர் செய்தார் என்பர் பெரியோர்.

* அன்வயம் = உரைநடை = வசன நடை (Prose order).

அலஙகல - பூமாலை. உறற - மிகுநத. [illegible]
அசைகள

'அலஙகலில தோன்றும பொயயமை ஏ[illegible], ([illegible]
கணட மாததிரததில, காணபபடாதொழிதல) [illegible]
தறகுப பின 'என' என்பதறகு முன பல [illegible]
கொளளல வேணடும. இவவாறு பொருள விள[illegible] [illegible]
கூறாது விடககூடிய சொறகளைக கூறா[illegible] [illegible]
பல இடஙகளிற காணலாம. இதறகோ[illegible] உதாரணமா[illegible]
காணடம 'குருவின' எனற 4½-ம பாடடைப பா[illegible].

மாலை மாயைககும, மாலை [illegible]
காரணமாகத தோனறும பிரபஞ[illegible] [illegible]
(சூரியன ஒளி தோனறாத) காலம [illegible]
(ஈசுவரன அருள தோனறாத) [illegible]
சூரியன ஈசுவரனுககும, சூரியன ஒளி ஈசுவரன அருள[illegible]
யால மாலையை உளளபடி அறிதல ஈசுவரன அருள[illegible]
படி அறிதலுககும, மாலையை உளளபடி அறியவே அ[illegible]
தோனறிய பாமபு காணபபடா தொழிதல மாயையை உளளபடி அறிய[illegible]
அது காரணமாகத தோனறிய பிரபஞசம காணபபடா தொழிதற்கும
ஒபபு எனறு உவமான உவமேயங்களை விரித்து [illegible].

பிரபஞசததிறகு மூலமாயிருககும மாயை பிரகிருதி என[illegible]
படும.

நமககுப புலபபடும பிரபஞசததுககு [illegible]
மாதலால, தானே தொழிறபட மாடடாத அசேதனமான [illegible]
தோறறுவிபபவா 'ஆதிபகவன முதறறே உலகு' [illegible]
பது பறறி 'அவரால தோனறிய தோறறப பொருளாகிய பிரபஞசம' [illegible]
உரையிற கூறபபடடது.

மாலையை வியவகாரிக உணமைப பொருளாகவும [illegible]
மார்ததிக உணமைப பொருளாகவும கொளக

'(நிலம நீா தீ காறறு வானம ஆகிய) பஞசபூதங[illegible] (கணடு
பொருளகளாக உளள தனமை நீஙகித [illegible]
நிலையினினறு) மாறிய மாறுபாடடுடன [illegible]
மிகுதி' என்ற பொருள உளள 'பூதம [illegible]
வேறுபாடு உறற வீககம' எனபது, அணடகோடிகள [illegible]
தைக குறிததது.

மாலையில் தோன்றும் பாம்பு, தோற்றத்தில் உள்ளதாய், உண்மையில் இல்லாததாதலைப்பற்றிய 'பொய்ம்மை அரவு' எனப்பட்டது.

'மர யானையைக் காணுங்கால், அது எப்பொருளால் ஆக்கப்பட்டதோ, அப்பொருளாகிய மரத்தைக் [illegible], மரத்தைக் காணும்போது, அதனால் ஆக்கக் கூடிய யானையைக் [illegible], அவ்வாறே, பாராதி பூதங்களாலுமான பிரபஞ்சத்தைக் காணும்போது அதன் காரணமாகிய பரம்பொருளைக் காணார், பரம்பொருளைக் காணும்போது அதன் காரியமாகிய பிரபஞ்சத்தைக் காணார்' என்று பொருள்படும்,

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்

என்ற திருமந்திரப் பாட்டுடன் இப்பாட்டு ஒருவாறு கருத்தொத்திருத்தல் காண்க.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு [illegible] வழியாகச் செல்வோர், இடையே உள்ள ஒரு [illegible] இந்தியாவைக் காணுகின்ற [illegible], இடையே [illegible] நின்றால் [illegible], அதனைக் கடந்த மாத்திரத்தில் அவர்களுக்கு இலங்கை [illegible], இந்தியா மறைந்துவிடுகின்ற [illegible] கருத்துக்கு [illegible] யிருத்தல் காண்க.

ஆன்மா, பிரபஞ்ச [illegible] (அதாவது பிரபஞ்சரூப பொருள்களில் அவா) உடைமையால்,

அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து

என்றபடி [illegible] பிறப்புக் காரணமாம், அதனால், ஆன்மா பரம்பொருளை [illegible] பரம்பொருள் [illegible] பிறப்பு நீங்குதற்குக் காரணம் என்ற கருத்தை இப்பாட்டு விளக்குதல் [illegible].

பொய்ப்பொருளாகிய பிரபஞ்சத்தை மெய்ப்பொருள் என்று மயங்குதலால் பிறப்பு [illegible] மெய்ப்பொருளாகிய கடவுளை அறிதலால் அம்மயக்கமும் பிறப்பும் [illegible] கூறுதலால், இப்பாட்டு,

பொருள்* அல்லவற்றைப் பொருளென் றுணரும்
மருள்† ஆம் மாணாப் பிறப்பு

என்ற [illegible] கருத்தை [illegible] விளக்குதலைத் தெரிக.

* பொருள் - [illegible].

† மருள் - [illegible], [illegible], [illegible], இழிவான [illegible] பொருள் [illegible].

உயிர், ஈசுரன், உலகம் என்ற [illegible] பொருள்களை [illegible] மேலை பிரபஞ்சம் என்ற [illegible] பிரபஞ்சங்களைக் [illegible] னிருந்த [illegible] பிரபஞ்சத்தி [illegible] இறுதியாய் [illegible] 'பாதத்தில் மலைநதை [illegible]' [illegible] கூறிய கொள்கையுடையார் கூ[illegible]

'மாலையினிடத்[illegible] மம் போல (விபரீத [illegible]) [illegible] தனியே யிருக்கும் [illegible] ஆம (இருத்தல், பிறத்தல், [illegible], [illegible], [illegible], அழிதல் என[illegible] [illegible]) [illegible] மனிதர், விலங்கு, [illegible] என்னும் பாகுபாடு பொருந்[illegible] பிறப்பு எவரை பார்த்த மாத்திரத்தில் [illegible] வான உபதிடத்[illegible] கூறப்படுகின்ற பொருளாயிருப்பவராகிய [illegible] வுளே இலங்கையிற (சென்று அரக்கருடன்) போர் புரிந்து [illegible] றவராவர் என்று சொல்வார் (தத்துவ ஞானிகள்)' * என்ற இப்பாட்டு[illegible] பொருள் கூறப்பட்டிருப்பது காண்க.

இப்பாட்டிற் கூறிய மயக்கக் காட்சிபோல [illegible] கடக்கப் பேருருவங்கொண்ட அனுமான் [illegible] லோகத்தைக் கண்டபோது, அது பொன்[illegible] சந்தேகித்தற் கேதுவான மயக்கக் காட்சி கூறப்பட்டிருத்தல் [illegible] தக்கது. அம்மயக்கக் காட்சிக்கு இம்மயக்கக் காட்சி தொடர்பாய் [illegible] தது போலும். ( )

அனுமான் கால்களை ஊன்ற, மகேந்திர மலையிலுள்ள [illegible]

2\. வன்றந்த வரிகோ ளுகிம் வயங்[illegible] [illegible]
பொன்றந்த முழைக டோறும் புறத்[illegible] [illegible]
நின்றந்த மில்லா ஞான்ற நேரிந்து[illegible] [illegible]
[illegible]ன்றந்தன் வயிறு கீறிப் பிதுங்கின [illegible]

---

* வை. மு. கோ.

கொண்டுகூட்டு : *அந்தம் இல்லான் நின்று ஊன்ற, நீலக் குன்றம் நெரிந்து கீழ் அழுந்தி(யதால்) தன் வயிறு கிழிய பிதுங்கின குடர்கள் மான, வலத்தம் வரிகொள் நாகம் வயங்கு அனல் உமிழும் வாய(னவாய) பொன் தந்த முழைகள் [illegible] புறத்து உராய புரண்டு போவ.*

பொருள் : *[illegible] மலைமீது ஏறி நின்று இலங்கை சேர்தற்குப் [illegible] அனுமான் கால்கள் அழுத்த, (அவ் [illegible]) மலை நெரிந்து கீழே அழுந்தி யதனால், அதன் வயிறு [illegible] குடல்கள் போலப் பெரிய [illegible] முழைகளிலிருந்து வெளியே [illegible] போவனவாயின.*

வலத்தம் வரிகொள் - வன்மையான பத்தனையும் (உடல்) வரிகளையும் [illegible] குறித்தது. வாய - வாயை உடையன. பொன் தந்த முழை - (மலையிலுள்ள) பொன்னைத் தருகின்ற குகைகள். உராய - [illegible] 'உராவி' உராய என வந்தது [illegible] குறித்தது. குடர், குடல் என்பன [illegible] மான - போல.

[illegible] அமைந்திருந்தல் காண்க.

பாட பேதம் : *வயங்குறல : குன்றாந்த வயிறு.* (உ)

[*அனுமானால் காலூன்றிய அதிர்ச்சியால் வெருண்டு அந்த மலைப் புலிகள் [illegible] மயிர் முளையாக் கண் திறவாதனவும் இளங் குட்டிகளை [illegible] தூக்கிக்கொண்டு ஓடலுற்றன.*]

[illegible] ஆதல்

3. [illegible] குடர்கள் மேக மென்றிவை தவிரத் தாழ்ந்து
பாரிடை யழுந்து கின்ற [illegible] பனிமாக் குன்றம்
[illegible] குமிழி பொங்க
[illegible] கலமென வாயிற் றன்றே

கொண்டுகூட்டு : *நாக குடர்கள் மேகம் என்ற இவை தவிர, பாரிடை [illegible] பனிமாக் குன்றம், [illegible] குமிழி பொங்க [illegible] எனவாயிற்று.*

பொருள்: நட்சத்திரங்களும், சூரிய சந்திரர்கள், மேகம் என்ற (தன் உச்சிக்கு அடுக்க உள்ள) பொருள்களை (மேலே தெரிவது போலத் தோன்றுவிக்கின்று) நீங்காதிருக்க, பூமியில் அழுந்துகின்ற அந்த மலை (தன் மேல் நின்ற) அனுமானைப் பாய்மரம் போலத், தான், சமுத்திரத்தில் அமிழ்கின்ற மூழ்குகின்ற மரக்கல மென்று சொல்லும்படி யாயிற்று.

தாரகை - நட்சத்திரம். என்ற இவை, என்றிவை யெனத் தொகை. தவிர - நீங்க. கூரகிர - கூர்மையான நகம் குவவு - திரட்சி. கூம்பு - பாய்மரம். ஆழி - கடல். அழுவம் - பரப்பு, ஆழம். கலம் - மரக்கலம்.

'பூமியை ஆழி யழுவமாகவும், அப் பூமியில் தாழ்கின்ற மகேந்திர மலையை அக்கடலில் முழுகிப்போகும் மரக்கலமாகவும், அம் மலை மீது நின்ற அனுமானை அம் மரக்கலத்தின் மீதுள்ள பாய்மரமாகவும், அக்காலத்து மலையின் மேற்புறத்தில் தோன்றும் தாரகைகளையும் சூரியன் முதலானவற்றையும் அம் மரக்கலம் முழுகுங் காலத்துத் தோன்றும் நீர்க்குமிழிகளாகவும் கொள்க. "மேகம் தவிர" என்று கூறியது, மேகத்தைப் பற்றிய கூற்றன்றி, உவமையை நிறைத்தற்காகவன்று. ... தோன்றுவதாகவன்றென்று கொள்ளாமல், உவமானத்தில் மேகத்தை யெல்லாம் நீராகக்கொண்டு, உவமேயத்தில் நானாவித வருணிக்கப்பட்ட 'மேகம் தாரையாகவும்' என்று சேர்த்துக் கூறலாம். கூட்ட உவமான உவமேயங்களை கூறுமிடத்து, சில சமயங்களில், அவைகளிற் சில பகுதிகளைக் கூறாது விடுவதும் உண்டாதலால், உவமேயத்தில் 'குமிழி' வருதலைக் கொண்டு, 'நீர்' வருவித்து உவமைக்கேற்றவாறு கொள்க. (௩)

தேவமாதர் நடுங்குதல்

4\. வெயிலியற் குன்றங் கீண்டு வெடித்தலு நடுக்க மெய்தி
மயிலியற் றேவி மார்க டழீஇக்கொளப் பொலிந்த வாறே
அயிலெயிற் றரக்க னள்ளத் திரிந்தநா ளணங்கு புல்லக்
கயிலையி னிருந்த தேவைத் தனித்தனி கடுக்கும் போதா

கொண்டுகூட்டு: வெயிலை இயல குன்று கீண்டு வெடித்தலும் மயில் இயல் தேவிமார்கள் நடுக்கம் எய்தி தழீஇக் கொள்ளப் பொலிந்தவாறே, அயில் எயிறு அரக்கன் அள்ள, (கயிலை) திரிந்தநாள், அணங்கு புல்ல (அப்) கயிலையின் இருந்த தேவைத் தனித்தனி கடுக்கும் போதா.

* வை. மு. கோ.

பொருள்: (அனுமானது பாரம் தாங்க மாட்டாமல்) அந்த மலை மிளாந்து நொறுக்கத், தேவமாதர் பயந்து நம்மைக் கட்டிக் கொள்ள விளங்கிய தேவர்கள், இராவணன் கைலாச மலையை வாரியெடுக்க, அம்மலை அசைந்த காலத்தில் பயந்து உமாதேவி கட்டிக்கொள்ள அந்த மலையில் இருந்த சிவனைத் தனித்தனியாக ஒத்தார்கள்.

வெயில் எறி இயல் - தன்மை. வெயில் இயல் குன்று - (தன்னிடத்துள்ள பொன்மணிகள் அருவிகள் முதலியவைகளால்) ஒளித் தன்மையுடைத்தான மலை. மயில் இயல் - மயில் போலும் சாயல். தேவி - தேவப்பெண், மனைவி. தழீஇ - தழுவி. அயில் - கூர்மை. எயிறு - பல். கடுத்தல் - ஒத்தல்.

பாட பேதம்: மயிலியற் றனிக்கை மாதர். (௪)

அனுமான் ஆகாயத்தில் கிளம்புதல்

[அனுமான் பாரிய உயரத்தில், கால்களை மடக்கி, மார்பை ஒடுக்கி, தோள்களை உயர்த்தி, கழுத்தைச் சுருக்கி, கைகளை நீட்டி, வேகமாக உயரக் கிளம்பினான்.]

வானில் செல்லும் அனுமான் வருணனை

விண்ணவ ரேத்த வேத முனிவார் வியந்து வாழ்த்த
மண்ணவ ரிறைஞ்சச் செல்லு மாருதி மறமுட் கூர
அண்ணலவ் வரக்கன் றன்னை யமுக்குவா மின்ன மென்னுக்
கண்ணுதல் ஒழியச் செல்லுங் கயிலையங் கிரியு மொத்தான்

கொண்டுகூட்டு. விண்ணவர் ஏத்த, வேதம் முனிவர் வியந்து வாழ்த்த, மண்ணவர் இறைஞ்ச, செல்லும் மாருதி, மறம் உள்கூர, 'அண்ணல் அவ் அரக்கன் தன்னை இன்னம் அமுக்குவாம்' என்னு, கண்ணுதல் ஒழியச், செல்லும் கயிலையங்கிரி ஒத்தான்.

பொருள். தேவர்கள் துதிக்க, முனிவர்கள் ஆசீர்வதிக்க, பூவுலகத்தோர் வணங்க செல்லுகின்ற அனுமான, (தன்னைப் பிடிக்க வந்த) கோபம் மனத்தில் மிகுதலினால், 'இராவணனை முன் அமுக்கியது போல இன்னும் அமிழ்த்துவோம்' என்று, சிவபெருமான் இருத்தல் நீங்கத் தனியே செல்லும் கைலாச மலையை ஒத்தான்.

மறம் உள்கூர - கோபம் மனத்தில் மிக. அண்ணல் பெருமை (உடைய).

'முன்னாள் சிவபிரானை இராவணன் சாமகானஞ் செய்ததற்கு உவந்து அவனுக்கு நாள் தனை விட்டதைக் கருதி, கைலாசகிரி இடம்பெயர்ந்து அவனை அடைக்குந்தகு அப்பிரானின் நின்று தானே தணிந்தபெருமை வெள்ளி.' *

கைலை மலையாகிய வெள்ளிமலை பருமையிலும் நிறத்திலும் அனுமானை ஒத்ததென்க. (௰)

தடக்கைநா லைந்து பத்துத் தலைகளு முடையான் றானே
அடக்கியைம் புலன்கள் வென்ற தவப்பய னறுத லோடும்
கெடக்குறி யாக மாகங் கிழக்கெழு வழக்கு நீங்கி
வடக்கெழுந் திலங்கை செல்லும் பரிதிவா னவனு மொத்தான்

கொண்டுகூட்டு: *நாலைந்து தடக்கை(யும்) பத்துத் தலைகளும் உடையான் ஐம்புலன்கள் அடக்கி வென்ற தவப் பயன் அறுதலோடும், (அவன்) கெட (அறி) குறி ஆக, மாகம் கிழக்கு எழு வழக்கு நீங்கி, வடக்கு எழுந்து இலங்கை செல்லும் பரிதிவானவனை (அனுமான்) ஒத்தான்.*

பொருள்: *இருபது கைகளும் பத்துத் தலைகளும் உடைய இராவணனது தவப்பயன் அனுபவித்துத் தீர்ந்துவிட்டதால், இனி அவன் கெட்டுப்போவதற்குத் தோற்றமான அறிகுறியாக, இயல்பாக எக்காலத்தும் கிழக்கே உதிக்குந் தன்மை நீங்கி, வடக்கே உதித்துத் தெற்கிலுள்ள இலங்கை நோக்கிச் செல்லும் சூரியனை ஒத்தான் (வடக்கேயிருந்து தெற்கே செல்லும் ஒளிமயமான அனுமான்)*

தடம் கை பெரிய கை, நீண்ட கை. ஐம்புலன்களை அடக்கி - (ஐம் பொறிகளை அவற்றிற்குரிய) ஐம்புலன்களை (விஷயங்களை) ... மாகம் - ஆகாயம். வழக்கு - வழக்கம். பரிதி வானவன் - சூரிய தேவன்.
(,,)

அனுமானது வாலின் வருணனை

விளித்துப்பின் வேலை தாவும் வீரன்றான் வேத மெய்க்குதான்
அளித்துப்பி னனுமனென்று மறந்ததனைப் பெற்ற தாயுஞ்
சளித்துப்புன் றொழின்மே னின்ற வரக்கர்கள் ... மென்
றெளித்துப்பின் செலலுங் கால ...

* வை. மு. கோ.

கொண்டுகூட்டு: *விளிந்து, பின் வேலை தாவும் வீரன் வால், வேகம் மெய்சகும் அறிவும் [illegible] (உடைய) அனுமனை என்றும் [illegible] பெற்று ஆயும், களிற்றுப் புனைதொழில் மேல் நின்ற அரக்கர் கண்ணுறுவர் என்று ஒளித்துப் பின் செல்லும் காலபாசத்தை ஒத்தது.*

பொருள்: (இப்படி [illegible]) ஆரவாரித்துப் பிறந்து கடல் தாவத் தொடங்கிய அனுமானது வாலானது, [illegible] உணர்ந்தவனும், அருளும் [illegible] உடையவனும் ஆகிய அந்த அனுமான் [illegible] கருமச் சேவகத்தைத் துணையாகக் கொண்டு [illegible] [illegible] பின்தொடர்ந்து [illegible] கொண்ட [illegible] [illegible] பார்த்துவிடுவார்கள் என்று ([illegible], அனுமானது உடல் மறைவில்) மறைந்து பின் பக்கமாகவே (அவர்களைக் கொல்லுதற்குக் காலத்தை எதிர்பார்த்து அக்காலம் வந்தவுடன் கொல்லக் கருதிச்) செல்லுகின்ற [illegible] [illegible] ஒத்தது.

விளிந்து - [illegible]. [illegible] - [illegible]. அறிவு - [illegible]; [illegible] [illegible] - பலம். களிற்றுப் - [illegible], [illegible]. [illegible] - இயமனது [illegible] ஆயுதம்.

'[illegible] [illegible] [illegible] அனுமனை' என்பதற்கு, '[illegible] [illegible] ([illegible]) [illegible], அறிவும் [illegible] உடைய அனுமன்' என்றேனும், '[illegible] [illegible]' என்ற சொல்லை 'அறி' என்பதற்கு அடை[illegible]யாக்கி, 'வேதங்களில் விரும்பித் துதிக்கப்படுகின்ற (திருமாலின் அவ)தாரமான இராமபிரானது) [illegible] [illegible] [illegible] அனுமான்' என்றேனும் கூறிய உரை.

'[illegible] இரண்டாம் [illegible] "[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]" என்றாதலின், இங்கு "[illegible] வேலை தாவிய வீரனே" என்றார்.'

'இனி அனுமானை [illegible] [illegible] [illegible] வாலிற்குப் பல அரக்கர் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கூறுவர் சிலரும்.'

பாட பேதம்: *அருகுவிடா.* (க)

விண்ணவரும் மண்ணவரும் அனுமன் வேகம் கண்டு கலங்கல்

['*அனுமான் [illegible] [illegible] வேகம், [illegible] [illegible] [illegible] [illegible]) அனுமனின் [illegible]; [illegible] மிக [illegible] [illegible] [illegible];*

இவ்வளவு வேகங்கொண்ட இவன் குறிப்பு யாதோ?' என்று வியப்புற்றுத் தேவர்களும் மாமுனிவர்களும் கொண்டாடினார்கள்.

அவன் வேகங் கொள்ளும்படி முன்னாக நீட்டிக் கொண்டு சென்ற கைகள், இராம லக்ஷ்மணரை அவனுக்குப் பின்னாக முன் சென்று போக்கியிருந்தன.

கடலினின்று மேலெழுந்த மைநாக மலையின் வருணனை

[அவன் அவ்வாறு செல்லும்போது, எதிரே, கடலுள் முழுகிக்கிடந்த மைநாக மலை, அந்தமும் அளவும் அறியப்படாதது, தேவர்களை அழுத்துங் [illegible] தில, கடலினின்று [illegible] யானை [illegible], அனந்தியும், பொன்னும் மணிகளும் ஒளி செய்கின்ற [illegible] சிகரங்கள் கிரீடங்கள் போலவும் அருவிகள் [illegible] மேலாடை போலவும் விளங்க, கடலிற் பள்ளிகொண்ட ஆயிரம் கிரீடங்களை உடைய திருமால் உலகத்துள்ளோர் யாவரையும் [illegible] எழுந்தது.

அம் மலைமேற் காணப்பட்ட பளிங்குப் பாறைகளும், அதன்மேல் இயமிருள் ஒளிக்கும் பளிங்குப் [illegible] இருக்க முறைமுறை மேகக் கூட்டம் போல, ([illegible]) [illegible] சந்திர நட்சத்திரங்களின் [illegible] போல, எங்கும் நிலவு பரவப்பெற்று [illegible] இருந்தது.

மைநாகம் அனுமானை உபசரிக்க,
அவன் அதன் அன்பைப் பாராட்டிச் செல்லல்

[அந்த மலையைக் கண்ட அனுமான், அதனைத் தலையினால் தள்ளிவிட்டு, அப்பால் செல்ல, அது, ஒரு மானுட வடிவத்துடன் தோன்றி, 'நான் விரோதி யல்லன் [illegible] மலைகளின் சிறகு அரிந்த காலத்தில், [illegible] வாயுதேவன் [illegible] கடலிற் கொண்டு சேர்த்துக் காப்பாற்றினான். [illegible] அவன் புதல்வனாகிய [illegible] தங்கி இளைப்பாறியிருந்து [illegible]' என்ன, அனுமான், 'யான், மேற்கொண்ட காரியம் [illegible] ஒருவும் புரியேன்; உன் அன்புமொழிகளைப் பெற்றுக்கொண்டேன் [illegible],

உன்பால் தங்கியிருந்து விருந்து அருந்தினால் போல, மகிழ் வடைந்தேன். அங்ஙனமிருப்பினும் சிறந்தனாக நீ தரத்தக்க விருந்து யாதிருக்கின்றது?

8. முன்பிற சிறந்தா ரிடையுள்ளவர் காதன் முற்றப்
பின்பிற சிறந்தா ரணங்கன்றித் பெற்ற யாக்கைக்
கென்பிற் சிறந்தா யதொருற்றமுண் டென்ன லாமே
அன்பிற் சிறந்தா யதொருபூசனை யாக முண்டே

கொண்டுகூட்டு. '(யாசகர் து) காதல் முற்ற (காலத்தில்) முன்பு சிறந்தார், இடை (சிறந்து) உள்ளவர், பின்பு சிறந்தார் (ஆகிய இவர்களுடைய காரணமான) குணம் (- அன்பு) அன்று இங்குப்பெற்ற யாக்கைக்கு என்பின் சிறந்து ஆயது ஓர் ஊற்றம் உண்டு என்னலாமே! அன்பில் சிறந்து ஆயது ஓர் பூசனை ஆசனை உண்டு?

பொருள்: '(கடலில் அடைந்த யாசகர்) ஆசை நிறைவேற(க் கொடுத்தலில்) முதலில் சிறந்தோர் (ஆகிய முதல் வள்ளல்கள்), நடுவே (சிறந்து) உள்ளோர் (ஆகிய இடை வள்ளல்கள்), கடையாகச் சிறந்தோர் (ஆகிய [illegible] கடை வள்ளல்கள் என்ற இவர் களுடைய கொடைக்குக் காரணமாய) குணமாகிய அன்பு என்ற நிலையைத் துணையாக விரும்பி சிறந்தது. நாம் பெற்ற உடம்பைக் கொண்ட (யாதொரு) உடம்புக்கு (உறுதி தருவதாகிய) எலும்பிலும் (உறுதி [illegible] அதிகமாக) சிறந்து அமைந்தோர் உறுதி தரும் பொருள் ஒரு அன்பு அதுவே உயிர்க்கு இருக் கின்றது என்று நிச்சயமாகக் கூறலாம். அவ்வாறு சிறந்த அன் பினும் சிறந்த உபசாரம் யாதிடத்தில் உண்டு? (ஒருவரிடத்தும் இல்லை).

வள்ளல்களின் 'குணம்' அன்பு 'இது' அந்த அன்பைச் சுட்டி யது. ஊற்றம் - உறுதி, உறுதி தரும் பொருளின் உவமைத்தி னாற்று. ஆமே என்பதில் [illegible] பொருளையும் [illegible] பொருளையும் குறித்தன.

அன்பு பொருள் தரும் உயிராயினும், என் - ம் ஒருவனை உணர் கூறமாறு உயிர் 'உடம்பினை என்பினால் அன்புபொருள் வள்ளலாயினை' 'இது (அன்பு) பெற்ற யாக்கை' என்றும்.

அன்பு செய்தலினும் உபசாரம் செய்தல் சிறந்ததன்றென்பது கருத்து.

பாடபேதம்: யாக்கையுண்டே. (அ)

['உபகாரமொழிய [illegible] அனை [illegible] [illegible] இடம் [illegible] [illegible] [illegible]]

[illegible] அபயமாக [illegible]

[அப்போது [illegible] [illegible] [illegible] வாயுள் [illegible] பெற்றோர் [illegible] உலகத்தில் [illegible] [illegible]]

அனுமன் [illegible] [illegible] வெளிப்படல்

[[illegible] போல், கடல் மற்றொரு [illegible] பெற்றுவிடா, [illegible] போலக், [illegible] உலகறியா [illegible] அருகில் [illegible] அதைப்பற்றி [illegible] [illegible] நீ யார்?' என, '[illegible] உன்னைத் [illegible]!' என்றான்.]

9. திறந்தா னொளிமறைவை [illegible]
அறந்தா [illegible]
இறந்த [illegible]
பிறந்த [illegible]

கொண்டு கூட்டு. [illegible] [illegible] என்றான். (அவன்) [illegible] அமரர் [illegible]. பெரிய [illegible] ([illegible]) [illegible] பதவின முனனம் (செருப்ப) பிறந்தான் [illegible].

பொருள்: ([illegible]) [illegible] திறந்தான். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இமைப [illegible] [illegible] போல (அவன் [illegible]) [illegible].

எயிறு [illegible] [illegible] குறித்தது. எனக்கொடு - [illegible]. [illegible] - [illegible]. 'அவன் எயிற்றைத் திறந்தான்' என மாறுக. 'திறந்தான் எனக்கொடு அறந்தான் அரநறியது' [illegible].

[illegible] [illegible] வயிற்றைப் பிளந்து [illegible] பொருளை [illegible].

பாட்டுடைத் [illegible]: [illegible] ( )

1 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]: [illegible] [illegible] ([illegible]) [illegible] [illegible]. (அவன்) [illegible] [illegible] உவமை ஆகுமென.

பொருள்: [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] தொடர்புற [illegible], [illegible] ஆகாயத்தை [illegible] [illegible].

[illegible] - [illegible]. [illegible] - ([illegible]) [illegible]. [illegible] - [illegible]. [illegible] - [illegible]. [illegible] - [illegible]. [illegible] - [illegible].

அணுவான [illegible] பட்டதுமம், அவன் [illegible] அதனை [illegible] [illegible], ஆகாசி குடல் அதன் வயிறாகும், [illegible] [illegible]

தொடர்புடையதாய அவள் வயிற்றில் எரிந்திருந்த (உடைபட்ட) பின்னே
போனது போலத் தரையிற் கிடக்கும் கயிற்றைப் பகுதியும் எய்த

பாட பேதம்: பாவாயிருந்த தலையில். (௬௦)

இலங்கையில் அனுமான் பவள மலையிற் பாய்தல்

[அவ்வாறு ஆகாய வழியே போன அனுமான், இலங்கா நகரத்துக்கு அடுத்திருந்த பவள மலைமேற் பாய்ந்தான். அவன் பாய்ந்ததனால் அலைந்து தள்ளாடிய அந்த மலை, புயற்காற்றால் மோதப்பட்ட கப்பல் போன்றது.]

இலங்கையைக் கண்ட அனுமான் அதிசயம்

மண்ணடி யுற்று மீது வானுற வரம்பின் றன்மை
எண்ணடி யுற்ற குன்றத் தலத்துநின் றெய்த நோக்கி
விண்ணிடை யுலக மென்னு மெல்லியன் மேனி நோக்கக்
கண்ணடி வைத்த தன்ன விலங்கையைத் தெரியக் கண்டான்

கொண்டுகூட்டு. அடி மண் உற்று, மீது வான் உற, வரம்பின் தன்மையை எண்(ணுகின்றதும, அனுமான்) அடி உற்ற(தும் ஆன) குன்றத் தலத்து (அவன்) நின்று, விண் இடை உலகம் என்னும் மெல்லியல் (தன்) மேனி நோக்க, கண்ணடி வைத்தது அன்ன இலங்கையை எய்த நோக்கி (அது) தெரியக் கண்டான்.

பொருள்: தனது அடிப் பாகம் பூமியில் (மிகத் தாழ்வான கீழ்ப் பூமிவரை) பொருந்தி, மேற் பாகம் ஆகாயத்தில் (உயரியமாய்) உற்றதனால் (உலகத்தின் மேல் கீழ்) எல்லை நிலைமையை மதிப்பிடுகின்றது போன்றதும், அனுமானது பாதம் தங்கியதுமான (அந்தப் பவள) மலைமேல் அவன் நின்று, வானத்தில் உள்ள தேவ லோகமாகிய பெண் தன் வடிவழகைப் பார்க்க வைத்த கண்ணாடி போன்ற — எனவே தேவலோகத்தின் பிரதிபிம்பம் போல் தோற்றும்படியான அழகுடைய — இலங்கையை நன்றாகக் கூர்ந்து நோக்கி (அது துலக்கமாகத்) தெரியக் கண்டான்.

அடி, மண் உற்று என மாற்றுக. எண்ணல் - மதிப்பிடுதல். எய்த நோக்கி - (கண் பார்வை, பார்க்கப்படும் பொருளில் சென்றுபட) பொருந்தப் பார்த்து. 'அடியுற்ற' என்பதற்கு 'இலங்கைக்கு முன்னடியிலுள்ள' என்றலும் ஒன்று.

மதில் சூழ்ந்த மாவிந்த நகரமும், அதனைச் சூழ்ந்த அகழியும், அதனைச் சூழ்ந்த தரையும், முறையே, ஒரு தடாகத்தில் தோன்றும் தேவர்களின் பிரதிபிம்பத்தையும் அதனைச் சூழ்ந்த நீலப் பசுநிலையையும், அதனைச் சூழ்ந்த கரையையும் போலும் என்பது கருத்து. கொண்ட 'குடவளைக் குலம்' என்னும் நைடதப் பாடலை இப்பாட்டு நினைவுகூரச் செய்கின்றது.

பாட பேதம். வானுவ. (கக)

12. நன்னக ரதனை நோக்கி நளினக்கை மறித்து நாகர்
பொன்னக ரிதனை யொக்கு மென்பது புலவி தம்மா
அந்நக ரிதனி னன்றே லண்டத்தை முழுது மாளவான்
இந்நக ரிருந்து வாழ்வா னிதுவதற் கேது வென்றான்.

கொண்டுகூட்டு: (அனுமான்) நல் நகர் அதனை நோக்கி நளினக் கை மறித்து, 'இந் பொன்னகர் ஒக்கும் என்பது புலமை அம்மா! அந்நகர் இதனின் நன்று ஆயின் அண்டம் முழுதும் ஆளவான் இந்நகர் இருந்து வாழ்வான்; இது அதற்கு ஏது' என்றான்.

பொருள்: அனுமான் அந்த இலங்கையைப் பார்த்து (ஆச்சரியத்தால்) கையை மடக்கிக் கொண்டு, ('இப் பொன் இலங்கை நாகர் பொன்னகர்' என்பதுபோல, உவமைப் பொருளுக்கு அதனினும் சிறந்த பொருளை உவமானமாகக் கூறல் முறையாதலால், அதற்கு மாறாக,) 'இந்நகர் பொன்னகரை ஒக்கும் என்பது மதியீனம். இம்மதியீனம் இருந்தவாறு என்னே! ஆச்சரியம்! மெய்யாக அந்த நகரம் (இந்த நகரத்துக்கு உவமானமாகுமானால்) இந்த நகரத்தினும் அழகுடையதோ? (இல்லை.) (தேவலோகத்து உள்ள) உலகங்களையெல்லாம் ஆளும் இராவணன் இந்நகரிலிருந்து வாழ்கின்றான். இது (= அவன் இந்நகரை இராசதானியாகக் கொண்டு வாழ்வது) அதற்கு (= அந்நகரினும் இந்நகர் அழகுடையது என்பதற்கு) காரணமாகும்' என்று எண்ணினான்.

நல் - அழகிய. நன்னர் - அழகியது. நன்மை - அழகு.—புறப் வெண். மாலை. நளினம் - தாமரை. நாகர் - தேவர். புலமை - அறிவுடைமை; மதியீனம் என்பது குறிப்புப் பொருள் கொள்ளப்படும். 'இப் பொன் னகரை நோக்கும்' எனவும் 'அண்டம் முழுதையும்' எனவும் விருத்தி பிரித்துக் கூட்டுக. என்றான் - என்றெண்ணினான்.

சுருங்கிய சொற்களால் விரிந்த பொருள் விளைய, 'ஒடு அதற்கு எதிர்' *என்ற நயம் நோக்கத்தக்கது.*

பாட பேதம்: *அனந்தல. வாமான.* (௧௨)

மாண்டதோர் நலத்திற் றும்மென் றுணர்தலின் வாய்மைத் தன்றால்
வேண்டிய வேண்டி னெய்தி வெறுப்பின்றி விழைந்து துய்க்கும்
ஈண்டரும் போக மின்ப மீறில தியாண்டுங் கண்டாம்
ஆண்டது துறக்க மஃதே யருமறை துணிவு மம்மா!!

கொண்டுகூட்டு: *' "(பொன் நகர்) மாண்டது, ஓர் நலத்திற்று ஆ(கு)ம்" என்று உணர்தல் வாய்மைத்து அன்று, (எனெனில்) வேண்டிய வேண்டின எய்தி விழைந்து(போகங்களை) வெறுப்பு இன்றித் துய்க்கும் ஈண்டு(தல்) அரும்போக இன்பம் ஈறு இலது யாண்டும் கண்டாம், ஆண்டது துறக்கம். அரு மறைத் துணிவும் அஃதே.' (என்றான்).*

பொருள்: *'(மேற்கூறிய இரண்டு நகரங்களுள் பொன் நகரான்து) மாட்சிமைப்பட்டது; ஒப்பற்ற இன்பம் (தருதலை) உடையது" என்று சொல்வது உண்மையுடையதன்று; (பொய்யே; ஏனெனில், இப்போது அழகுள்ள தேவர்கள் இரா வணனால் செயிக்கப்பட்டவராய்த் துன்புற்றிருக்கின்றனர். எல் லாரும்) விரும்பப்பட்ட பொருள்களை, (எப்போதும் தாம்) விரும்பி னால், (அப்போது) அடைந்து, (அவ்வாறு) விரும்பி அடைந்த பொருள்களைத் தெவிட்டுதல் இல்லாமல் அநுபவித்து, (பிற இடங்களில்) கிட்டாத அரும்போக சுகம் முடிவில்லாதிருப்பதை எவ்விடத்துக் காண்கின்றோமோ, அவ்விடமே சுவர்க்கமாம். அருமையான வேதங்களின் சித்தாந்தமும் அதுவேயாம். (ஆத லால், தேவர்கள் துன்பங்களை அநுபவிக்கும் பொன்னகர் சுவர்க்க மன்று; இராக்கதர் எல்லாப் போகங்களையும் அநுபவிக்கும் இலங்கா நகரே சுவர்க்கமா' மென்று அநுமான் எண்ணினான்.)*

மாண்டது - மாட்சிமைப்பட்டது. ஓர் - ஒப்பற்ற. நலம் - இன்பம். நலத்திற்று - இன்பமுடையது. உணர்தல் - தெரிவித்தல், சொல்லுதல் குறித்தது. வாய்மைத்து - உண்மையுடையது. அன்று - அன்று. வேண்டிய - வேண்டியவை - விரும்பப்பட்ட பொருள்கள். வெறுப்பு - தெவிட்டுதல். விழைந்த - விரும்பப்பட்டவை. 'விழைந்த(வைகளை) வெறுப்பின்றித் துய்க்கும்' எனக் கூட்டுக. ஈண்டு(தல்) அரும் - நெருங்குதற்கரிய - கிட்டாத. யாண்டு - எவ்விடம். ஆண்டு - அவ்விடம். ஆண்டது என்பதில் அது

பகுதிப்பொருள் விகுதி. முன் பாட்டின் முடிவிலுள்ள 'என முன' என்பதை இப்பாட்டின் முடிவிலும் வருவித்துப் பொருள் முடிவுசெய்க.

முந்திய பாட்டில் 'பொன்னகர்' 'இலங்கை' யென ஒன்றற்கொன்றெதிராகக் கூறப்பட்ட நகரங்களுள் முன்னதை இப்பாட்டில் முதலடியிலும் பின்னதை ஏனைய மூன்றடிகளினும் குறிப்பித்தார்.

முதலடிக்கு, 'மிகச் சிறந்த ஒப்புயாவு மில்லாத அழகை மட்டும் உடையதிவ் விலங்கை யென்பது உண்மையல்ல' என்ற பொருளும் உண்டு.

பாட பேதம்: மேவண்டுரு செல்வம்: வீழந்து துய்க்கும். (கரு)

2. ஊர் தேடு படலம் *

[அனுமான் சீதையை இலங்கையில் தேடியதைக் கூறுவது]

அனுமான் அரக்கரது ஐசுவர்யம் கண்டு அதிசயித்தல்

[அனுமான் பவள மலையிலிருந்து இலங்கா நகரத்தை நோக்கினான். அங்கே உள்ள இராக்கதர் மாளிகைகள் இந்திரன் மாளிகையை ஒத்தவை யென்றால், அவ்வாறு உவமித்தல் குற்றத்தின் பாற் படும்படி அம்மாளிகைகள் சிறந்தன வென்றும், அவ்வாறே அரக்கர் ஐசுவரியம் இந்திரன் ஐசுவரியத்தை யொக்குமென்பது மென்றும், திரிலோகங்களிலு முள்ள பெருமையும் ஒளியும் மிக்க எந்த ரத்தினமும் திருமால் மார்பில் அணிந்த கௌஸ்துப ரத்தினத்தை ஒத்திராதது போலப், பெருமையும் அழகுமுடைய எந்நகரும் அந்நகரை யொத்த தில்லை யென்றும், எந்த ஊரும் அந்த ஊரை யொக்கு மென்பது நரகம் சுவர்க்கத்தை யொக்கு மென்பது போலு மென்றும், ஒழிவின்றி ஓடும் சூரியன் தேர்க் குதிரைகளல்லாத எல்லாக் குதிரைகளும், ஒரு கணமும் நிலைபெயர முடியாமல் உலகத்தைத் தாங்கி நிலையாக நிற்கும் திசையானைக ளல்லாத எல்லா யானைகளும் அந்நகரத்துள்ளன வென்னும்படி குதிரைகளும் யானைகளும் சிறந்தனவாயும் மிகுந்தனவாயு மிருக்கின்றன வென்றும், இராவணன் இந்திரன் ஆட்சியினின்றும் பறித்துக் கொண்டுவந்து வைத்திருக்கின்ற கற்பக தருக்களும், தேவரும்,

* ஊர் தேடு - ஊரில் தேடிய.

தேவமாதரும் ஏவல் செய்துகொண்டிருத்தல் அவன் செய்த தவப் பயனென்றும், அனுமான் எண்ணினான்.]

இலங்கையின் ஒளி மிகுதி

14. திருகு றுஞ்சினத் தரக்கருங் கருநிறந் தீர்ந்தார
அருகு போகின்ற திங்களு மறுவற்ற தழகைப்
பருகு மிந்நகர்த் துன்னொளி பாயதலிற் பசும்பொன்
உருகு கின்றது போன்றுள துலகுசூ ழுவரி

கொண்டுகூட்டு: 'அழகைப் பருகும் இந் நகரத் துன்னொளி பாய்தலின், திருகுறும் சினத்து அரக்கர் கருநிறம் தீர்ந்தார், அருகு போகின்ற திங்களும் மறு அற்றது, உலகுசூழ் உவரி பசும்பொன் உருகுகின்றது போன்றுளது.'

பொருள்: '(உண்பவர், வாய்க்கினிய உணவை உண்ணுதல் போலத், தன்னைக் காண்பவர், கண்ணுக்கினிய தனது) அழகைக் கண்ணால் உண்ணுவார்போல் ஆவலோடு காணும் இந் நகரத்தின் ஒளி பாயப் பெற்றதனால், இந் நகரத்தில் உள்ள இராக்கதர் (தமக்கியல்பான) கரு நிறம் நீங்கியுள்ளார்கள்; இந் நகரத்தின் அருகே செல்லும் சந்திரன் களங்கம் நீங்கினதாம்; இந் நகரத்தைச் சூழ உள்ள (இயல்பாகக் கரியதான) கடல் பொன் உருகுகின்றது போன்றிருக்கின்றது' என்று அனுமான் எண்ணினான்.

திருகுதல் - முறுகுதல் — புறநா. தீர்தல் - நீங்குதல். '"உலகு" என்பது உலகத்தின் ஒரு பகுதியையும் உணர்த்துதலை "மாயோன் மேய காடுறை யுலகமும்" என்ற தொல்காப்பியத்திலும் காண்க' என்றதனால் 'உலகு' இங்கே இலங்கை நகரத்தை உணர்த்தியது.

இராக்கதர் கரிய நிறம் நீங்கினதும் கடல் பொன்னுருகுகின்றது போன்றதும் அனுமான் முக்கண்களால் கண்ட தற்காலக் காட்சிகளாகவும், 'அருகு போகின்ற திங்களும் மறுவற்றது' அக்கண்ணுற்ற கண்ட பிறகால நிகழ்ச்சியாகவுங் கொள்க, இப்படலம் 42-ம் பாட்டில் சூரியன் அத்தமித்தல் சொல்லப்படுதலால்

பாட பேதம்: வெஞ்சினத் தரக்கரும்: பரத்தலின். (கச)

15. அண்ட முற்றவும் விழுங்கிரு ளகற்றுநின் றலரி
கண்ட வாற்றினிக் கடிநகா நெடுமனைக கதிாகள
உண்ட வாற்றினே னுரைப்பரி தொப்பிடிற் றன்முன்
விண்ட வாயச்சிறு மின்மினி யென்னவும் விளங்கா

கொண்டுகூட்டு : *'அண்டம் முற்றவும் விழுங்கு இருளை நின்று அகற்றும் அலரியை, இக் கடிநகர் நெடுமனைக் கதிர்கள் கண்ட ஆற்றின் உண்ட ஆற்றினால் (அதனை, உள்ளதாம்) ஒன்று (ஆக) உரைப்பு அரிது. (மனையுடன்) ஒப்பிடில் (அது) தன்முன் விண்ட ஆய சிறு மின்மினி என்னவும் விளங்கா.'*

பொருள் : *உலக முழுதும் விழுங்கிய இருளை அது இல்லா தொழியத், தான் நிலையாக நின்று, நீக்குகின்ற சூரியனை இந் நகரத்து மாளிகைகளின் ஒளிகள் பார்த்தபடியே விழுங்கிய படியால், அச் சூரியனை உள்ளதாகிய ஒரு பொருளாகச் சொல்லு தற்கில்லை. (அச்சூரியனை உள்ளதாக வைத்து மேற் கூறிய மாளிகையோடு) ஒப்பிட்டால், அது அதன்முன் மின்மினிப் பூச்சி (விளங்குதல்) போலவுங்கூட விளங்காததாம்.'* *

அலரி - சூரியன். ஆறு - படி. கடி - காவல். நெடுமை - பெருமை. சிவஞான சித்தியாரின் காப்பில் 'செல்வமும் ஒன்றே' என்பதிற்போல, 'ஒன்று' 'ஒரு பொருள்' என்று பொருள் கொள்ள நின்றது. 'உரைப் பரிது' என்பதில் 'அரிது' இன்மை குறித்தது. ஒப்பிடில் - ஒப்பிட்டால். 'விண்டு உமிபோனல் முளையாதாம்' என்பதிற் போல, 'விண்ட' '(ஒளி) நீங்கிய' என்ற பொருள் குறித்தது. 'ஆய - சிறுமை. (புறநானூறு 249)'— ச. அ. ஆயச்சிறு மின்மினி - மிகச் சிறிய மின்மினிப் பூச்சி. 'விளங்கா' என்பதில் ஈறு விகுதி தொக்கது.

'இருள்(ை) நின்று அகற்றும் அலரி(யை) மனைக்கதிர்கள் கண்ட ஆற் றின் உண்ட ஆற்றின் (அவ் அலரியை) ஒன்று (ஆக) உரைப்பரிது' என இயைக்க.

பொன்னே நிலமாகிய இலங்கையில், பொன்னாலும் இரத்தினங்க ளாலும் அமைக்கப்பெற்ற மாளிகைகளின் ஒளித்திரள், உலக முழுவதையும் விழுங்கிய இருளை விழுங்கிய சூரியனை விழுங்கிய தெனவும், மாளிகை முன்

* *'உலக முழுவதும் நிறைந்த இருளைத் தான் நிலைபெற்று விலக்குகின்ற சூரியன் செய்கின்ற வகையோடு, சிறந்த இயல்பினையுடைய இலங்காபுரியிலுள்ள உயர்ந்த மாளிகை களின் கிரணங்கள் (அவனின், ஊர் முழுவதையும்) உடனொழிக்கின்ற வகைக்குச் சிறி தும் ஒப்புமை சொல்ல இயலாது' என்பது முதல் மூன்றடிகளுக்கு முந்திய உரை.*

சூரியன், அச சூரியன் முன் மின்மினியையும் ஒவ்வாதெனவும் வியக்குமாறு கூறியது காணக.

பாட பேதம் : ஆறறலொனறு : விளஙகான். (கரு)

வன வருணனை மதில் வருணனைகளும் ஆடல் பாடலாதி விநோதங்களும்

['பொன் மலர், நாற்றம் உடைத்து' ஆனால், எவ்வளவு சிறந்ததாம்! 'மாணிக்கம் திததிக்கில் என் ஆகும மற்ற மதுரங் களே!' என ற மஞ்ஞபாவனைகள் உண்மையாகுற் போல, 'பொன மணிகளா லியற்றப்பட்ட செயற்கைக காடுகளும சோலைகளும் இயற்கை மரங்கள் போலத் தேன் மலா கனிகளைத் தருகின்ற அற்புதம் இந நகரததிலுள்ளதேயன்றி மற்றை நிலவுலகத்தி லேனும் வானுலகததிலேனும் எஙகுமில்லை' என்றும், 'இராவண னுக்குப் பயநது இலங்கைககு மேலாகச் செல்லாமல் சூரியன் உத்தராயண தெக்கிணாயனமாகச செல்லுகின்ற னெனபது உண்மையன்று, நேராக மேலாகச சென்றால், இநநகரத்து மதி லொளி கண்கூசச் செயயுமென்று விலகிச செல்கின்ற' னென்றும, 'கைலாச மலையைத் தூக்கிய வல்லமையுடைய இராவணன், தனக் குப் பகைவர் வானவராதலால், "அவர்கள் சேர்தற்கரிதாகச செய வே" னென்று அவர்களது வானுலகத்தினும உயரமாக இந்நகர மதிலை அமைத்திருக்கின்ற' னென்றும், 'அவன் ஆணையினறி இம் மதிலைக் கடநது உள்ளே வாயு நுழையான, சூரியன் பிரவேசியான, இயமனும் போகா னென்றால, தேவர் செல்ல வல்லரல்ல ரென்று செப்புதல் வீணே!' யென்றும், 'இந் நகரத்திலே பாடுவார் பல ரெனின, ஆடுவார் அவரினும் பல' ரென்றும, 'ஆடல் பாடல்களுக கியையத் தாளம தட்டுவார் அவர்களினும் அதிக' ரென்றும், நர்தத னஞ்செய்யும தேவமாதருக்கு எதிராக அவரினும் மேலாக வித்தி யாதர மின்னார் நிருத்தம் புரிய, அவரோடு இகலி அவரினும் திற மாக இயக்க மகளிா நடனமாட, அவருடன் வாதிட்டு இராக்கத மடவார் அவரினும சிறப்பாக நடிக்கக் கண்டு மகிழ்நது எநநாட்டு மங்கையரும அவ அரக்கிகளை எதிரானாய வியநதுகொண்டிருக் கின்றாக' ளென்றும, 'மாளிகைகள் தோறும் சோலைகள் தோறும கள்ளுண்டு ஆடிப்பாடிக் களிப்படைகின்றவர்க ளல்லாமற் கவலை யடைகின்றவர்க ளொருவரையும காண்கின்றிலே' னென்றும் அனுமான் கருதினன்.]

அரக்கர் களிப்பு

16. தேறன் மாந்தினா தேனிசை மாந்தினர் செவ்வாய்
ஊறன் மாந்தின ரின்னுரை மாந்தின ரூடல்
கூறன் மாந்தின ரனையவாத் தொழுதெழு கோபத்
தாறன் மாந்தின ரரக்கியர்க் குயிரன்ன வரக்கா

கொண்டுகூட்டு: '*அரககியாகககு உயிா அனன அரககா தேறல மாந தினா, இசைத தேன் மாநதினா, செவவாய ஊறல மாநதினா, இன் உரை மாநதினா, ஊடலில கூறல மாநதினா, அனையவாத தொழுது எழு கோபதது ஆறல மாநதினா.*'

பொருள்: '*அரக்கிமார்க்கு அவர்கள் உயிர்போன்ற கணவ ராகிய அரக்கர் (அம்மாதர் கையாற கொடுக்கப்பெற்று அதனுல் இயல்புக் கதிகமாக இனியதான) தேனைக் குடித்து மகிழ்நதார்கள்; (அத்தேனினும் இனிதாக அவர்கள் பாடும்) இசைத தேனைச செவிமடுத்து* * *மகிழ்ந்தார்கள்; (அவ் இசைத்தேனை அளித்த) செவவாயிற் பிறநத நீர் (ஆகிய தேனை) உட்கொண்டு மகிழ்ந்தார் கள்; (மீண்டும அவவாயிற் பிறந்த) இனிய பேசசைக் கேட்டு மகிழ்ந்தார்கள; (இனிது பேசியவர் 'ஊடுதல் காமத்திற கின்பம்' என்று ஊடி அவ்) ஊடலில் ('தொடாதே' 'தூரப்போ' என் பன போன்ற வார்த்தைகளைக்) கூறுதலையும் பிரியமாகக் கேட்டு மகிழ்ந்தார்கள்; (அவ் ஊடல் தணியத) தொழுது அதன் பயனு கக் கோபம் ஆறுதலை உணர்ந்து மகிழ்நதார்கள்.*'

தேறல - தேன்; கள எனறும் பொருள் கூறலாம. 'மாந்தினர்' எனப பலமுறை வருபவைகளுள் முதல மூன்றும் 'உணடாா' என்ற செம் பொருளையும், அடுத்தவை இரணடும் இறுதிய தொன்றும் முறையே 'கேட் டாா' 'உணாந்தாா' என்ற தாறபரியப பொருள்களையுந் தந்து நின்றன. 'தேன் இசை'யை 'இசைததேன்' என மாறறுக. தேன் 'இசை'யைத் 'தேன்போலும் இசை' என்று கொணடால, 'இசை மாந்தினா' என்ப தற்கு 'இசையைக் கேட்டு மகிழ்நதனா' என்று பொருள கொள்க. கோபதது ஆறல் - கோபததின் தணிவு.

அனுமான், இதன் முன், இராககதர் 'களிககின்ரான்றிக் கவல்கின்ரு ரொருவரைக காணேன்' என்று, இபபோது இவவாறு களித்தார்க ளென்று தான் கணடவற்றையும் ஊகித்தவறறையும் தனக்குத் தானே

---

* செவிமடுத்தல் - கேட்டல; மடுததல - குடிததல்.

கூறுகின்றானாதலால், அதனை விளக்க, 'மகிழ்ந்தார்' என்ற சொல்லை வருவிக்கவேண்டிய இடமாக எல்லாவற்றிலும் வருவித்துப் பொருள் கூறப்பட்டிருத்தல் காண்க.

ஓர் இராக்கத மாது கள்ளுக் கொடுக்க அவள் கணவன் குடித்துக் களித்தான், வேறொருத்தி பாட அவள் புருடன் கேட்டு மகிழ்ந்தான்; மற்றொருத்தி வாயமுதை அவள் கொழுநன் உண்டு உவந்தான் என்றிவ்வாறாகத் தொடர்பின்றிப் பிரித்தும் இப்பாட்டுக்குப் பொருள் செய்யலாம்.

பாட பேதம் : தொழுதவர். (கசு)

இராக்கதர் பெருக்கமும் இலங்கையின் பரப்பும்

['தேவர் மனிதர் மிருகங்கள் முதலிய உயிர்த் தொகைகள் இராக்கதர் தொகைக்கு உறையிடவும் போதா. இந்நகர வித்தாரம் அபாரமானது. இதன் ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவுக்குப் போதல், ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் போதல் போலாம்.]

சேனைச் சிறப்பு

['யான், இராம பிரானுக்கு இலங்கைச் சேனை அளவைத் திரும்பிச் சென்று செப்பும் போது, மல் வீரர் படை பெரிதென்பேனோ, வாள் வீரர் படை பெரிதெனபேனோ, விற்படை பெரிதெனபேனோ, எப் படை பெரிதெனபேன்!' என்னும் இவை போலவன பலவும் எண்ணி, 'இனி இராக்காலம் சமீபிப்பதால் இரவிற் சஞ்சரிப்போராகிய இராக்கதர் இங்கு வர நேரினும் நேரும்' என்று, அவர் அறியாவாறு அநுமான் தன் உடலைச் சுருக்கி மறைவானான். சூரியனும் தன் ஒளியை ஒடுக்கி மறைந்தான்.]

இருட் செறிவு

[இருள் இராவணனுடைய பாவம்* போல வளர்ந்து, அவன் பழிபோலப் பரந்தது. செவ்வந்தி வானமும் காரிருளும், நெருப்பும் புகையும் நிகர்த்தன.]

* பாவம் கருமை யெனபதும், தருமம் வெண்மை யெனபதும் கவிமரபு.

இராவணனுக்கு ஏவல் செய்யத் தேவர்கள் விரைதல்

[*இராக்கதர், இராவணன் ஏவலால், இநதிரன் சந்திரன் இயமன முதலியோருடைய உலகங்களுக்குச செல்லலுற்றனர். இராவணனுக்குப் பணிவிடை புரியத், தேவமாதர், வித்தியாதர மடவார், இயகக மகளிா, நாக கன்னியர் ஆகிய இவர்கள் விண் வழியே விரைநது சென்றனர். அவ்வாறே தேவரும் அசுரரும் நாகரும் இயக்கரும் விததியாதரரும் வேறு தேவ கணத்தினரு மாகக் குறறேவல செயயக் கூட்டங் கூட்டமாகச் செல்வோர், 'தாமதமாயவிட்டது, இராவணன கோபிப்பான்' என்று தலை மாலையும் கழுத்து மாலையும் மேலாடையும் சரிந்து விழ விரைந் தோடினார்கள்.*]

சந்திரோதய வருணனை

[*இராவணன முதலிய இராக்கதாகளின் பாவமாகிய கோடை காய்ந்து வாட்டியதனால, ஈரப் பசையற உலர்ந்திருந்த தருமமாகிய பயிர், அனுமானாகிய மழை வரப்பெற்றதனால், முளைதெழுதல் போலச சநதிரன உதிதெழுநதது.*

கீழ்த்திசைக் கிறைவனாகிய இநதிரனுக்குச சத்துருவாகிய இராவணன், அனுமான் வந்ததனால், வாழ்வறறான், இந்திரன் வாழ்வுறறான் எனற மகிழ்சசியால் கீழ்த்திசையாகிய பெண்ணின் முகம் பொலிவது போலச, சந்திரன் பொலிந்தது.

இராவணனுக்கு அடங்கி யொடுஙகி ஒதுங்கிப் பதுங்கி யிருந்த இநதிரன், இனிப் பகை ஒழிந்த தெனறு பயம் நீஙகித தனக்குரிய கீழ்த் திசையினின்று கெமபீரமாக வெளியே புறப் பட, அவன் சாமரைகள் போலக் கடலலைகள எழுநது விழுந்து விளங்க, அவன் கொறற வெண்குடை போலச சநதிரன் பொலிந் தது.

ஆகாயமாகிய புருடன் சந்திரனாகிய வெள்ளிக் குடத்தினால் பாற்கடலின் பாலை முகந்து பூமிமேற் பொழிநதாற் போல வெண் ணிலா எங்கும் பரவியது.

ஆகாயம், காமதேனு வென்ற வானுலகப் பசுவாகச், சந்தி ரன் அப்பசுவின் பால் மடியாக, அம் மடியினின்று சுரந்து வழிந்து பரந்த பாற்பரப்புப போல நிலாப் பரப்புத் தோன்றியது.]

நட்சத்திர வருணனை

17. எண்ணுடை யனுமன்மே லிழிந்த பூமழை
மண்ணிடை வீழ்கில மறித்தும் போகில
அண்ணல்வா ளரக்கனை யஞ்சி யாய்கதிர்
விண்ணிடைத் தங்கின போன்ற மீனெலாம்

கொண்டுகூட்டு: *மீன் எலாம, எண உடை அனுமனமேல் (வானவா இறைக்க) இழிநத பூமழை, அணணல வாள அரககனை அஞசி மண இடை வீழகில(வாய), மறிதது்ம போகில(வாய), ஆயகதிா விண இடைத தங கின (போன்றன).*

பொருள்: *நட்சத்திரங்களெல்லாம், அனுமான் மீது (வான வர் மகிழ்ந்து வாழ்த்தி வாரி இறைக்க) விழுந்த மலர் மழை, இராவணனுக்குப பயந்து மண்ணில் வீழாவாய்த், திரும்பவும மேல் நோக்கி விண்ணில் போகாவாய், இடையே அநதரத்திலே தங்கியவறறைப் போன்றன.*

எண - ஆலோசனை, அறிவு, மதிபபு. இழிந்த - இறஙகிய. மறித தும் - திருமபவும. அணணல - பெருமை. ஆயதல - ஆராய்தல், நுணுகு தல். கதிா - சூரியசநதிரா, கிரணம. ஆய கதிா விண - ஆராயதற சூரிய சூரிய சநதிரா (வழஙகும) வானம, நுணுகிய கிரணஙகள் (பரததலை) உடைய வானம.

'தேவர்களின் சமமந்தமான அசேதனஙகளும (அறிவிலலாப பொருள் களும) இராவணனிடதது அஞசுகினறன வென, அவனது அதிபயஙகர மான தனமை இஙகு வெளியாம.'—வை மு. கோ. (கஎ)

நிலா வருணனை

[*அவ் இரவில் மல்லிகை யரும்புகள் மலர, அவறறில் வண்டு கள் தேனுண்ண மொய்த்தல், பகைப பொருள்களாகிய இருளும் நிலவும் பல பல சிறு சிறு பிரிவுகளாய ஒன்றோடொன்று நெருங் கிச் சண்டையிடுதலை ஒததிருநதது.*

நிலா இலங்கை முழுதும் பரவியது அந நகருக்கு வெள்ளை வஸ்திரங்கொண்டு உறையிட்டது போன்றது.]

18. இகழ்வரும் பெருங்குணத் திராம னெய்ததோர்
பகழியின் செலவென வனுமன் பற்றினால்
அகழ்புகுந் தரண்புகுந் திலங்கை யன்னவன்
புகழ்புகுந் துலாயதோர் பொலிவும் போன்றதே

கொண்டுகூட்டு: *இகழவு அரும் பெருங குணதது இராமன புகழ, அனுமன பற்றினால், அன்னவன எய்தது ஓர் பகழியின செலவு என, அகழ புகுந்து, அரண புகுந்து, இலங்கை புகுந்து உலாயது ஓர பொலிவும் போன்றது (அந் நிலா).*

பொருள்: *இராமனது புகழ், தனக்கு அனுமான் ஆதாரமாக அவ் ஆதாரத்தினால், அவன் அம்பின் (தடையற்ற வேகமான) போக்குப்போல (இலங்கையைச சூழ்ந்த கடலாகிய) அகழைத தாண்டி, மதிலையும தாண்டி, இலங்கையிற புகுந்து எங்கும் உலாவிப் பரவியதையும ஒத்தது அந்த நிலா.*

இகழ்வு அரும - இகழ்தல (செயததற்குரிய குறறமொனறும) இல்லாத: அருமை இன்மை குறித்தது. பகழி - அமபு செலவு - செலுததல பற்று - ஆதாரம - தாஙகும இடம. அரண - மதில உலாவியது உலாயதென விகாரமாயிற்று. பொலிவு - அழகு, விளககம (கஅ)

மதில் வருணனை

[*அனுமான் இலங்கை நகரத்துட் செல்லக் கருதித், தான் இருந்த பவளமலையினின்று புறப்பட்டுக, கடலே அகழியாகப் பெற்று வானத துசசிவரை வளர்ந்த மதிற் பக்கத்தில் வந்தான.*]

19. கலங்கலில் கடுங்கதிர்கண் மீதுகடி தேகா
அலங்கலயில் வஞ்சகனை யஞ்சியெனி னன்றால்
இலங்கைமதி லிங்கிதனை யேறலரி தென்றே
விலங்கியகல் கின்றன விரைந்தென வியந்தான்

கொண்டுகூட்டு: *'கலங்கல் இல் கடுங்கதிர்கள், அலங்கல அயில் வஞ்சகனை அஞ்சி இலங்கை மதில்மீது கடிது ஏகா எனின அன்று, இங்கு இதனை ஏறல் அரிது என்றே விலங்கி விரைந்து அகலகின்றன' என வியந்தான.*

பொருள்: 'சந்திர சூரியர்கள் இராவணனுக்குப் பயந்து இலங்கைக்கு மேலே செல்கின்றிலவென்றால், (அவ்வாறு செல்லாமைக்குக் காரணம் பயம்) அன்று; வேறு யாது எனின், இந்த மதிலை ஏறுதல் ஏலாததெனறே (அக் கதிர்கள்) விலகி அப்பாற் செல்கின்றன என்பது' என்று ஆச்சரியப்பட்டான் அனுமான.

கலங்கல இல் - (கலங்கிய நீர நிறமாறுதல் போல) நிறம் மாறுதல இல்லாத. கடுமை - விரைவு. அலங்கல அயில - (வெற்றி) மாலை (அணிந்த) வேல. அரிது - ஏலாதது.—ச. அ.

இதன் முன இப்படலம் உ௬-ம் கவியில 'இம்மதிலொளி கண கூசுவிதத லால் சூரியன் இலங்கைமேற செலலா' னென்ற வருணனையை இககவி நினைவுறுததுகின்றது. (கக)

அனுமான் மதிலைத் தாண்ட முயலுதல்

[அனுமான், இராவணன் ஆணையின்றி உட் செல்வார்க்கு இயமன் வாய் போன்ற மதில் வாசலைக் கண்டான். அது, மகா மேரு மலை ஊடறுத்து இடை வெளி செயயப்பட்டது போன்றதென்றும், கடல் நீர் முழுதும் செல்லுவதற்கு இட்ட மதகையொத்த தென்றும், இராவணனை எதிர்க்க ஏழே முலகத்தவரும் வந்தால், அவர்கள், சிலர் பின் சிலர் செல்லும் அவசியமின்றி ஒருமிக்கச் செல்லப் போதிய அகலமுடைய தென்றும எண்ணினான. அவன், இத்தனை யென்று வரையறை செய்ய இயலாத பெருந்தொகையான வான விளக்குக்கள் இருளை விழுங்கி விளக்கஞ் செய்யப்பெற்று, இயமனும் அஞ்சுமபடியிருந்த அந்த வாயிலிலே, செம்பட்ட மயிரும், சினத்தீச் சுவாலிக்கும் செங்கண்களும், கோரப் பற்களும், கரி நிறமும் உடையராய்க், கொடிய பல ஆயுதங்கள் பூண்டவராய், எண்ணி லடங்காதவரா யுள்ள இராக்கத வீரர் காவல் செய்துகொண்டிருத்தலைக் கண்டான். கண்டு, 'எத் தேவர், எவ் அசுரர், வேறெவர்தாம் இக் காவலைக் கடக்கவல்லார் உளர்? ஒருவருமே இல்லை; யான் கருங்கடல் கடந்தது கடினமன்று; இந்தக் காவற் பெருங்கடலைக் கடப்பதுதான் கடினம்: இக் காவலாளருடன் போர் தொடங்கினால், அது முடிய நாள் பல கழியும்; சீதாதேவியைத் தேடிக் காணுதற்கு இடையூறும்; இவ் வாயில்வழி உட்புகுதல் எளியதன்று; அன்றியும், "இவ் வழியே

இந் நகருட் பிரவேசிக்க" எனப் பகைவன் நியமித்திருக்கிற வழியே புகுதல் பலசாலிகளுக்குத் தகுதியன்று; ஆதலால், சூரியனும் தாண்டாத மதிலை வான வழியாகக் கடந்து இந்நகரின் உள்ளே புகுவேனாக' வென்று, அவ்வாயிலை விட்டு அம் மதிலின் வேறொரு பக்கம சென்றான.]

இலங்கைமாதேவி அநுமானை வழிமறித்தல்

[அங்கே இலங்கைக்கு அதிதேவதையாய் அதனைக் காக்கும் இலங்கைமாதேவி, வான் வழிச் செலலும சூரியனைப் பற்ற வரும் இராகு கேது வெனனும் பாம்புபோல, வான் வழிச செல்லும் சோதிமானான அனுமானைப் பறறுதற்கு வழி மறித்து நின்றாள். அவள், கூற்றுவனும அஞசும் கோபமுடையாள். சநதிரனை இரணடாகப் பிளந்து வைத்தாற் போன்ற வீரப் பற்களை யுடையாள்.]

இலங்கைமாதேவி வருணனை

20. அஞ்சு வணத்தி னுடை யுடுத்தா ளரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேக மிகுத்தா ளருளில்லாள்
அஞ்சு வணத்தி னுத்தரி யத்தா ளலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளி ராரத் தணிகொண்டாள்

கொண்டுகூட்டு: அஞசு வணணத்தின் ஆடை உடுததாள; அரவு எல்லாம் அஞசு உவணததின வேகம் மிகுததாள், அருள் இலலாள்; அம் சுவணததின உததரியததாள, அலை ஆரும அம சு வள நததின முதது ஒளிா ஆரதது அணி கொணடாள.

பொருள்: (இலங்கைமாதேவி) பஞ்சவருணச சேலை கட்டிய வள்; பாம்புகளெல்லாம் பயபபடும கருடன்போல வேகம் மிகுந்தவள்; இரககம் இல்லாதவள்; அழகிய பொன்னின் (இழை களாலான) மேலாடை (-தாவணி) உடையவள்; கடலில தங்கிய நீரில உள்ள அழகிய நல்ல பெரிய சங்கின் முத்து ஒளிசெய்கின்ற மாலையாகிய ஆபரணத்தை அணிநதுகொண்டவள்.

இப பாட்டின நான்கு அடிகளிலும வரும் 'அஞசு வணததின்' என்பது கீழே குறித்திருககிறபடி முறையே பிரிததுப பொருளகொள்ளபபட்டிருக கிறது:

அஞ்சு வ(ண)ணததின் - பஞ்சவருணத்தின - ஐந்துவிதமான நிறஙகளை யுடைய. அஞ்சு உவணததின் - (பாம்புகளெல்லாம்) பயபபடுகினற கருடன போல. அம சுவணததின் - அழகிய பொன்னின். அம சு வள் நததின - அழகிய நலல பெரிய சஙகின.

இப பாட்டு, ஓா அடியின் முதலில வந்த சொறகளே மறற அடிகளின் முதலினும் வரபபெறற 'யமகம்' எனனும் சொல்லணி நிகழபபெறறது. இது பெருமபானமையான யமகச செயயுட்களா போலாது, சிறிதும கருகுத லினறிச, சொலலும பொருளும ஓசையும் ஒருஙகே இனியனவாய அமைந திருததல பாராட்டறபாலது. (உ0)

அனுமான் அவளை அடித்து வீழ்த்தல்

[*அவள், கண்ணை இமை காத்தல்போல, இலங்கையைக் காப் பவள். அனுமானை 'நில் நில்' என்று அதட்டிக்கொண்டு எதிர் வந்தாள். இவ்வாறு எதிர்பாராவண்ணம் திடீரென எதிர்ந்தவளை அவன சிறிதும திகைப்பேனும் அச்சமேனுங கொள்ளாமல் அமைதியாக 'வருக' என்ருன். 'அஞ்சாமல் அசட்டுத் துணிவுடன் ஆகாத காரியம் செய்யப் புகுந்தாய்! அறிவில்லாய்! போய்விடு!' என்ருள். 'இவ்வூர் காணும் ஆசையால் உள்ளே போகின்றேன். இநத ஏழை போவதனுல் உனக்கு யாது நட்டம்?' என்ருன். 'திரிபுரம் எரித்த சிவன்போன்ற தீரரும் செல்லுதற்கு அஞ்சும் இவ் வூர்க்குள்ளே செல்லத்தக்கவன் நீயேயோ! சீ! சீ! போ!' என்று இகழ்ந்து சிரித்தாள். சிரித்தவளை மாறி இகழ்ந்து சிரித் தான். 'நகைக்கின்ற நீ ஆர்? உன்னைக் கொன்றுவிடுவேன்: உயிரை இழந்து நீ அடையும் பயன் யாது? ஓடிப்போகாமல் நிறகின்ருயே!' என்ருள். அவன் 'இவ வூருட் புகுந்து பார்த்து விட்டுத் தான் போவேன' என்ருன்.*

'இவன் வஞ்சகன், வானரமல்லன், இயமனும் அஞ்சும் என் னைப் பரிகசிக்கிருன்! இவனைக் கொல்லாதுவிட்டால் இவ் வூருக்குந் தீஙகு விளையும்' என்று எண்ணிச சூலாயுதத்தை யெறிந்தாள். அவன், பாம்பைக் கடித்துத் துண்டுபடுத்தும் கருடன் போல அதைக் கடித்து ஒடிததது, அவளுடைய மற்ற ஆயுதங்களையும் பறிதது எறிநதான். எறியவே, கையாலடிக்க முயன்ருள். அவள் கைகளை ஒரு கையாற் பற்றிக்கொண்டு, பெண் கொலை பிழை

யென்று, அவள் வலியை ஒடுக்க மற்றொரு கையால் ஓர் அறை அறைந்தான். கீழே விழுந்தாள். பின்பு எழுந்து கூறுவாளானாள்:]

அவள் தன் வரலாறு கூறி அகலல்

['என் பேர் இலங்கா தேவி. யான் பிரமன் கட்டளைப்படி இவ்வூர் காப்பவள். அவனை நான் எவ்வளவு காலம் இவ்வூரைக் காவல் செய்யவேண்டுமென்று கேட்டபோது, "ஒரு குரங்கு உன்னைக் கையால் தாக்கியபோது என்பால் மீண்டு வருவாயாக" என்றான். அவ்வாறே முடிந்தது. அறம் வெல்லும்; பாவம் தோற்கும்; உன் விருப்பம் அனைத்தும் நிறைவேறும். நகர்க்குள் ஏகுவாயாக!' என்று வணங்கிச் சென்றாள்.]

இலங்கையுள் புகுந்த அனுமான் அதன் ஒளி மிகுதி கண்டு வியத்தல்

[சிற்றுருக் கொண்டிருந்த அனுமான், மதிலைத் தாவிப் பெரிய பாற்கடலில் சிறிய மோர்த்துளி சிந்தினது போல், இலங்கைமா நகருட் குதித்தான். அங்கே இரத்தினங்கள் இழைத்த பொன் மாளிகைகள் அளவிறந்த ஒளி சிறந்த விளக்குகளோடு எங்கும் பகல் (போல ஒளி) செய்ய, அவன், தான் இரவிலே ஒருவரும் அறியாமல் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க எண்ணியிருந்த எண்ணத்துக்கு எதிராகச் சூரியோதயமாய்விட்டதே யென்று திடுக்கிட்டான். பின்பு தெளிந்து, 'இந்நகர் இரவில் இவ்வளவு ஒளியுடையதா யிருந்ததலினன்றே, இங்கு வாழும் இராக்கதர் நிசிசரர் (= இரவிற் சஞ்சரிப்பவர்) ஆயினர்' ரென் றெண்ணினன்.]*

அங்கே பல இடங்களிலும் அனுமான் சீதையைத்
தேடிச் செல்லல்

[அவன், 'நாம் தெரு நடுவே சென்றால், பிறர் கண்டு பிடித்தற் கேதுவாய் நாம் கருதியுள்ள காரியத்துக்கு இடையூறாம்'

** பால் எத்தனை பேரளவினதாயிருந்தாலும் அதிற் றெறித்த ஒரு சிறு மோர்த்திவலை அப் பால் முழுவதினும் பரவி அதன் இனிமையை மாற்றிப் புளிப்பாகச் செய்துவிடல்போலப், பெரிய இலங்கை நகரிற் சேர்ந்த சிற்றுருக்கொண்ட அனுமான் அப் பெருநகர் முழுதும் படர்ந்து (= பரந்து சென்று) சுட்டு அதன் அலங்காரத்தைக் கெடுத்து அலங்கோலப் படுத்தப்போவதை முன்னதாகக் குறிப்பிப்பாராயக் கம்பர், 'சீரிய பாலின் வேலை சிறுபிரை தெறித்ததன்ன' என்ற கவித்திறம் கண்டு களிக்கத்தக்கது.*

என்று எண்ணி, முன்னமே சுருங்கியிருந்த உடலை இன்னமும் சிறிதாகச் சுருக்கிக்கொண்டு, வீடுகளின் நிழல் சாய்ந்த பக்கத்து ஓரமாகச் செல்வானாய், எந்தப் பூவிலே தேன் உள்ள தென்று தேடித் திரியும் வண்டுபோல, எங்கே சீதை உள்ளா ளென்று நாடி, அரக்கர் மாளிகைகள், ஆனைக்கூடங்கள், குதிரைப் பந்திகள், தேர் நிலையங்கள், வணிகர் கடைகள் முதலிய இடங்க ளெல்லாவற்றி லும் தேடிப் பார்த்துக்கொண்டு சென்றான்.]

பெரியநா ளொளிகோ ளுறு விதமணிப் பித்திப் பத்தி
சொரியுமா நிழல்க ளாங்குச் சுற்றலாற காலின் றோன்றல்
கரியனுய் வெளிய ளுகிச் செய்யனுய்க் காட்டுங் காண்டற்
கரியனு யெளிய னுயததன் னகத்துறை யழக னேபோல்

கொண்டுகூட்டு : நாள ஒளி கொள நாறு வித(மான) பெரிய மணிப பிததிப பததி சொரியும மா நிழலகள ஆஙகுச சுறறலால, காலின தோன றல, காணடறகு அரியனுய எளியனுயத, தன அகதது உறை அழகனே போல, கரியனுய, வெளியன் ஆகிச, செயயனுயக காடடும்.

பொருள் : (பல வருண) நட்சத்திரஙகளின ஒளிகள் படைத்த பலவகையான பருமையான இரததினங்களால் அமைக்கபபெறற சுவா வரிசைகள் சொரியும ஒளிகள சூழதலினால், வாயுகுமாரனுன அனுமான், — (அன்பரல்லார்) காணுதற கரியவனுய (அனபா காண) எளியவனுயத் தனது மனததின்கண் வாழும சுநதர மூர்த்தி(யாகிய சுவாமி பலவாறு தோனறுதல போல, — ஓரிடத் தில்) கறுததவனுகியும், (மறறோரிடத்தில்) வெளுததவனுகியும, (வேறோரிடததில) சிவநதவனுகியும தோன்றுவானுனன்.

நாள - நடசததிரம். பிததி - சுவர். பததி - வரிசை. நிழல - ஒளி. கால - வாயு. தோனறல - மகன. காட்டும் - தோனறுவான. 'பெரிய மணிப பிததி' யெனக கூட்டுக. (உக)

அமர மாதர் அரக்க மாதரை நீராட்டல்

[அனுமான் அவ்வாறு செல்லும்போது குல முதலியவற்றிற் சிறந்த தேவ மாதர், சேடியராய், நீர்க்குடஙகளை வருந்திச் சுமந்து கொண்டுவந்து நீராட்ட, அரக்க மாதர் சுகமாக நீராடுகலைக் கண்டான்.]

22. ஈட்டுவார் தவம லான்மற் றீட்டினு லியைவ தின்மை
காட்டினர் விதியா ரஃது காண்கிற்பார் காண்மி னம்மா
பூட்டுவார் முலைபோ ருத பொய்யிடை நையப் பூநீர்
ஆட்டுவா ரமரா மாத ராடுவா ரரக்கா மாதா

கொண்டுகூட்டு: 'ஈட்டுவார் தவம் அலால் மற்று ஈட்டினால் இயைவது இன்மை விதியார் காட்டினார். அஃது காண்கிற்பார் காண்மின், அம்மா! வார் பூட்டும் முலை பொருத பொய் இடை நைய அமரர் மாதர் பூநீர் ஆட்டுவார், அரக்கர் மாதர் ஆடுவார்.'

பொருள்: (அக்காட்சியைக் கண்டபோது, அனுமான் தன் மனத்துள்ளே கூறியதாவது:) 'சம்பாதிப்போர் தவத்தை யன்றி வேறெதனையும் சம்பாதித்தால், அதனால் அடைவது (ஆகிய நன்மை ஒன்றும்) இல்லாமையை விதியார் காட்டியுள்ளார். அக் காட்சி ஆச்சரியமானது. அதனைக் காண விரும்புவோர்கள் இங்கே வாருங்கள்; இதோ பாருங்கள்! (தவத்தைச் சம்பாதியாத) தேவர்களுடைய பெண்கள் தனபாரம் தாங்கமாட்டாத சிற்றிடை (பெரிய நீர்க் குடத்தையும் சுமந்து) வருந்த நீராட்டுகிறார்கள்; (தவத்தைச் சம்பாதித்த) அரக்கருடைய பெண்கள் (சுகமாக) நீராடுகிறார்கள்.'

ஈட்டுதல் - சம்பாதித்தல். இயைதல் - பொருந்தல். விதி - பிரமன். விதியார் என்பதில் ஆர் உயர்வுப் பன்மை விகுதி. அஃது - காட்டினதைக் குறித்தது. 'வார் (-கச்சு) பூட்டும் முலை' யெனக் கூட்டுக. பொய்யிடை - இல்லை யென்று சொல்லும்படி சிறுத்த இடை. பூ - அழகு; பொலிவு.

'பலவகை மகளிரைக் கூறத் தொடங்கி[த் தெய்வ நீராற்றிற் றெண்ணீர (கொண்டு) வானவர் மகளிராட்ட] அரக்க மாதர் மஞ்சன மாடுவாரைக் கூறியவிடத்து அங்ஙன மாடுதற்குக் காரணங் காட்டுவாராயத் தவப் பெருமையைப் பாராட்டுகின்ற இச் செய்யுள் இடைப் பிறவரலாக நின்றதெனக. இங்ஙனம் கதை நிகழ்ச்சியைக் கூறுமிடத்து, அதனாற் போந்த பயனை ஆங்காங்கு உலகத்தாரை நோக்கிச் சொல்லிப்போதல் ஒருவகைக் கவி சமயம்.' *

'திருவள்ளுவர் அறனவலியுறுத்தலில

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை

என்று அறத்தின் சிறப்பை எடுத்துக் காட்டினாற் போல, இங்கு(க் கம்பர்) இங்ஙனம் தவத்தின் சிறப்பை எடுத்துக்காட்டினார்.' * (உஉ)

* வை. மு. கோ.

அரக்க மாதர் மதுவுண்டு மயங்கல்

[*வேண்டியதைக் கேட்டாற் கொடுக்கும் சிந்தாமணி வேண்டாமலே விளக்கொளியை வெப்பந் தவிர்த்துக் கொடாநிற்ப, அவ்வொளியில் கந்தருவ மகளிர் நடனமாடுவதைத் தாம் பஞ்சணையிலே சாய்ந்தபடியே யிருந்துகொண்டு காண்பவரையும்,—தம் கணவர் தம் மனம் புலந்து விளைத்த காமப் பயிர் தழைத்து வளர்தற்கு வார்க்கும் நீர் போல,—உள்ளக் கருத்தைத் தெள்ள உரைக்கும் கண்ணைச் சிவப்பிக்கும் கள்ளைக் குடிப்பவரையும் அனுமான் கண்டான்.*]

உள்ளுடை மயக்கா லுண்கண் சிவந்துவாய் வெண்மை யூறித்
துள்ளிடைப் புருவங் கோட்டித் துடிப்பவோ பொடிப்பத் தூய
வெள்ளிடை மருங்கு லார்தம் மதிமுகம் வேறொன் றாகிக்
கள்ளிடைத் தோன்ற நோக்கிக் கணவரைக் கவல்கின் றாரை

கொண்டுகூட்டு: *தூய வெள் இடை மருங்குலார், உள் உடை மயக்கால் உண்கண் சிவந்து, வாய் வெண்மை ஊறித் துள் இடைப், புருவம் கோட்டித் துடிப்ப, வோ பொடிப்பத், தம் மதிமுகம் வேறு ஒன்று ஆகிக் கள் இடைத் தோன்ற நோக்கிக், கணவரைக் கவல்கின்றாரை (அனுமன் கண்டான்).*

பொருள்: *(மேற்கூறியவாறு கள்ளைக் குடிப்பவருள்ளே, ஒருமுறை குடித்த கள்ளால் உண்டாகிய) மயக்கத்தினால் (கருங்) கண்கள் சிவப்பேறி, (செவ்) வாய் வெளுப்பூறி, (இரண்டு) துயுக்கும் சமயத்தில், புருவமும் துடிக்க, வியர்வை பொடிக்க, முகம் வேறு முகமாகி, (மறுமுறை குடிக்கத் தொடங்கிய) கள்ளிலே (தாம் பிறர் போலத் தோன்ற)*

I. *நோக்கி, ('ஐயையோ! நம்மைக் காணோமே! பிறரை யன்றோ காண்கின்றோம்! நம் கணவர் நம்மைத் தேடிக் காணாது திண்டாடுவாரே! யாது செய்வோம்!' என்று)*

அல்லது-II. *(தாமறியாது தம் பின் நின்ற தம்) கணவரை (வேற்றுருவடைந்திருக்கிற தம்மோடு) கண்டு ('நம் கணவர் பிற மாதரோடு சேர்ந்தாரே!' யென்று) தம் கணவரைக் குறித்துக் கவலைப்படுகின்றவர்களை (அனுமான் கண்டான்).*

உள் உடை மயக்கு - மனத்தைச் சிதறச் செய்த (கள் உண்ட) மயக்கம். உண் கண் சிவந்து வாய் வெண்மை ஊறி - மையுண்ட கண் சிவந்து வாய் வெளுத்து. துளிடை - (கண் வாய் இரண்டும்) துடிக்கும் சமயத்தில். * புருவம் கோட்டித் துடிப்ப - புருவம் வளைக்கப்பட்டுத் துடிக்க. எழுதப் பட்ட ஓலையை எழுதிய ஓலை யென்றாற்போலப் புருவம் கோட்டப்பட்டு என்பது 'புருவம் கோட்டி' எனப்பட்டது. கள்ளுண்ட மயக்கத்தால் உண்டாகிய முகச்சேட்டையால் இயல்பாக வளைந்த புருவம் அதிகமாக வளைக்கப்பட்டது என்பது குறிப்பு. 'பெயர்' 'பேர்' என ஆகுதல்போல 'வியர்வை' 'வேர்வை' யென்றாகி ஈழுதொகக்கு 'வேர்' எனச் செய்யுளில் வரும். பொடித்தல் - தோன்றுதல்: ['கூழை (- கூந்தல்) முடியா முலை பொடியா (- முளையாத - தோன்றாத) ஒரு குதலைச் சின் மழலைக்கு' திருக்கோ.—௧௦௪.—௪. அ] தூய - சுத்தமான. வெள்ளிடை: (வெளி - ஆகாயம்) 'பொய் யிடை' போல, 'வெள்ளிடை மருங்குல்' 'மிகச் சிறுத்த இடை' என்ற பொருள் குறித்தது ஆகாயம் இடைக்கு உவமான மென்பதை 'முலையும் மந்தரம் இடையும் அந்தரம்' என்பதிற் காண்க.

II அடையாளமிட்ட உரைப்பகுதியில் 'கண்வரை நோக்கிக் கவல்கின்றாரை' என மாற்றிக்கொண்டு பொருள் கூறப்பட்டது.

கண் சிவத்தல், வாய் வெளுத்தல், கண்ணும் வாயும் புருவமும் துடித்தல், வியர்வை பொடித்தல், கவல்கின்றமை ஆகிய இவைகட்கெல்லாம் ஒரு காரணம் கள் மயக்க மென்பதை 'மயக்கால்' என்பதனால் குறிப்பித்தார். இப் பாட்டும் இதனோடு குளகமாக முன் பின் வரும் பாட்டுக்களும் இப்படலத் தில் 'இயக்கியர்' என்ற ௪௨௧-ம் பாட்டில் வினை முடிவு பெறுகின்றன.

இப்பாட்டில் குறிப்பாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ள மிக விநோதமான கருத்துக்கள், திருவிளையாடற் புராணச் செய்யுள்களில் வெளிப்படையாகவும் விரிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. அச் செய் யுள்கள் வருமாறு:

> சாடியுள் நறவம் உண்டாள், தன் உரு வேறுபாட்டை
> ஆடியுள் நோக்கி, 'நானோ அல்லனோ?' என்னத்தான் கைக்கொண்
> டோடினர் பிறரும் உண்டோ? உயிரனையானை வந்திங் கென்னைத்
> தேடின், என் செய்கேன்! என்னைத் தேடித்தா சேடி' என்றாள்.
>
> (நறவம் - கள். ஆடி - கண்ணாடி. செய்கேன் - செய்வேன்.)

---

* 'துள் இடை புருவம் கோட்டி - துடிக்கின்ற நடுவிடத்தையுடையனவாகப் புருவங்களை வளைத்து' என்பது முந்திய உரை.

களித்தவள் ஒருத்தி, நின்ற ஆடியுள் கணவன் தன்பின்
ஒளித்தவன் உருவும் தானும் நோபட உருந்து நோக்கி,
துளித்த கண்ணீராளாகி 'ஏதிலாள் தோள் தோய்ந்து இன்பம்
குளித்தனை இருத்தியோ!' என்றுரைத்தனள் கோபம் மூண்டாள்.

(*களித்தல் - கள்ளுண்ணல். நின்ற ஆடி - நிலைக்கண்ணாடி. உருத்தல் - கோபித்தல். ஏதிலாள் - அந்நிய மாது.*) (உரு)

அவர்கள் காதல்கொண்டு கலங்கல்

[*கரும்பாலையிற் கிடையாத கருப்பஞ்சாறும், தேன் கூட்டிலும் மலரிலும் இல்லாத தேனும், கள்விற்பார் மனையில் வாங்கலாகாத கள்ளும், கடலிற் கடைந்தெடுக்க முடியாத அமிழ்தமும் ஆன இனிமை மிகுந்த மாதர் வாயூறலை மாந்தி மயங்கியிருக்கும் அரக்கரையும், ஒரு தாமரை மலர்மீது மற்றொரு தாமரை மலரை வைத்தாற்போலக், கணவரைப் பிரிந்த சோகத்தால் சோர்ந்து சாயும் முகத்தைத் தாங்கிய கையராகிய இராக்கதத் தையலாரையும், பிரிவாற்றாமையால் சோகித்து, உடல் தானே சாய்ந்தாற்போலப், படுக்கையிற் சாய்ந்தவராய்த் தம் கணவர்பாற் சென்ற தூதியர் வரும் வழிமேல் விழி வைத்துப், பிராணன் போனதோ வென அடங்கிக் கிடப்பார், அத் தூதியர் புன்முறுவலோடு வரக் கண்டு, இனிக் கணவர் வந்துவிடுவ ரென்ற களிப்பினால், அடங்கிய உயிர் திரும்புதற்குத் துடிக்கின்ற அரக்கியரையும் அனுமான் கண்டு சென்றான்.*]

24. பள்ளியின் மைந்த ரோடு மூடிய பண்பு நீங்கி
ஒள்ளிய கலவிப் பூச லுடற்றுதற் குருத்த நெஞ்சர்
மெள்ளவே யிமையை நீக்கி யஞ்சன விழுது வேய்ந்த
கள்ளவா ணெடுங்க ணென்னும் வாளுறை கழிக்கின்றாரை

கொண்டுகூட்டு: *பள்ளியில் மைந்தரோடும் ஊடிய பண்பு நீங்கி, ஒள்ளிய கலவிப் பூசல் உடற்றுதற்கு உருத்த நெஞ்சராகி, மெள்ளவே இமை(யாகிய உறை)யை நீக்கி, அஞ்சனம் (ஆகிய) இழுது வேய்ந்த கள்ளம் (உடைய) வாள்* நெடுங்கண் என்னும் வாளை (அவ்) உறை(யினின்று) கழிக்கின்றா(ர் போலக் கண் விழிக்கின்ற அரக்கிய)ரை(க் கண்டான்).*

---

* *வாள் - ஒளி (பொருந்திய).*

பொருள்: ஒரு சயனத்தில் (தம்முடனிருந்த) கணவருடன் ஊடல் (யுத்தஞ் செய்து செயமடைந்து. அவ் யுத்தத்தால் நேர்ந்த சிரமத்தைச் சாந்தி செய்யத் தூங்குவார் போலக் கண் மூடியிருந் தவர்கள், அவ் ஊடற் போர்) செய்த (குரோத) குணம் மாறிக், கூடற் போர் செய்யத் தோன்றிய நினைவினராகி (அப் போர்க்கு ஆயுதமாகும் அறிகுறியாக) இமை(யாகிய உறை)யை நீக்கி, மையாகிய நெய் பூசிய கண்ணாகிய வாளை அவ் உறையினின்று கழற்றுவா(ர் போல, மூடியிருந்த கண்ணை மெல்லத் திறக்கின்ற அரக்கிமா)ரையும் அனுமான் கண்டு சென்றான்.

பள்ளி - படுக்கை. மைந்தர் - கணவர்.—பரிப. பண்பு - குணம். ஒள்ளிய - அழகான: (ஒண்மை - அழகு). பூசல் - போர். உடற்றுதல் - உக்கிரமாய் நடத்துதல். — ச. அ. உருத்தல் - தோன்றுதல்—பதி. ப. நெஞ்சு, நினைவைக் குறித்தது: (சிந்தாமணி 458-ம் பாட்டில் 'நெஞ்சின் ஒத்து' என்பதன் உரையைப் பார்க்க.)

'கொழுநர் அறியாதபடி மெல்லப் பார்த்து அவரியல்பை அறிய முயன்றமைபற்றிக், "கள்ளம்" என்ற அடைமொழி கண்ணுக்குக் கொடுக் கப்பட்டது.' *

பாட பேதம்: உள்ளிய: அஞ்சன மெழுதி. (உச)

[கணவர் வரவை எதிர்பார்த்து வாசலில் நின்ற தம்பால் அக் கணவர் வந்து நெருங்க, அவரோடு ஊடி, ஊடிய உணர்வும் உள்ள முதலிய அந்தக்கரணங்களும் வீட்டுக்கு வெளியே அக் கணவரோடு தங்கவிட்டு, உயிரைமட்டுங் கொண்டு உள்ளே சென்று, ஒருவாறு கதவை அடைக்க மட்டும் சத்தியுடையராயத் தாளிடச் சத்தியற்ற அரக்க மாதரையும்,—முரசு முழங்க, முனி வர் மங்கள வாழ்த்து மொழிய, அமரர் ஆசீர்வதிக்கத், தேவர் தேவியரும் முனிவர் மனைவியரும் பல்லாண்டு பாடக் கல்யாணஞ் செய்யும் இராக்கதத் தம்பதிகளையும்—எங்கெங்கும் இனிதிருக்கும் இராக்கத மகளிரே யல்லாமல் இடையிடையே காணப்படும் இயக்க மாதர், நாக கன்னியர், வித்தியாதர மின்னார் முதலிய பெண்களெல்லாரையும், அவருள் எவளாயினும் சீதையா யிருப் பாளோ வென்று தெரியும் நோக்கத்துடன், நன்றாக நோக்கிக் கொண்டு சென்ற அனுமான் கும்பகருணனைக் கண்டான்.]

---

* வை. மு. கோ.

அனுமான் கும்பகருணனைப் பார்த்தல்

[அப்போது மலைபோலப் பிரமாண்ட சாதநிரமுடையனுய, அலை கடலிலே திருமால் பள்ளிகொள்ளும ஆதிசேடனே போல வும், அந்தக் கடலை போலவும், உலகத் திருளெல்லாம் ஒருங்கே திரண்டு ஓரிடத்தே ஒதுங்கி உறைவது போலவும், பாவமே உரு வெடுத்தாற் போலவும, தண் கடலிற் றோய்ந்து குளிர்ச்சியும், நறு மலர்ச் சோலையூடு தவழ்ந்து மணமுங்கொண்டு தென்றல் வீசத, தேவ மாதா கால பிடிக்க, ஊழிக் காற்றுப்போல மூச்சு இயங்க, நிலாவை இரு கூறுபடுத்தி இரு கடைவாயாலும உண்ணா வைதத தருணததில் விளங்கும் அந் நிலாப் பகுதிகள் போல வக்கிர தந்தங்கள் விளங்க, மந்திரததால தடையுண்டு எவரையும் கொல் லாது தம்பித்திருக்கும் சர்ப்பம் போலவும, எல்லா உலகையும எளிதே பொங்கி அழிக்கக்கூடிய கடல் கடவுள் ஆணைக்குக கட்டுப்பட்டு நிலை கடவாது நிற்றல போலவும், சர்வ லோகத் தாரையும் இலகுவாகக் கொல்லவல்ல கும்பகருணன அசையாது நெடிய பெரிய தூக்கந் தூங்கிக்கொண்டிருந்தான்.

அனுமான் அவனை இராவணனே வென்று ஐயுற்றுப் பொங்கி யெழுந்த கோப வடவாமுகாக்கினியைப், பத்துத் தலை யிருபது கை யில்லாமை கண்டு, இராவணன் அல்லனென்று தெளிந்த அறிவுக் கடல் நீரால் அவித்தான்.

அவன் அப்பாற் செல்வானுகி எல்லா மாளிகைகளையும், ஆடற் சாலைகளையும், பாடல் மேடைகளையும், பள்ளிக்கூடங்களையும் முதலாக உடைய எல்லா இடங்களையும் பார்த்துச் சென்றான்.]

அவன், விபீஷணனையும் இந்திரசித்தையும் பார்த்தல்

[அவ்வாறு செல்லும்போது, கற்பகச் சோலை மத்தியில் விளங்கிய ஒரு பவள மாளிகையை அடைந்தான. அங்கே, இயல்பாக வெண்ணிறம படைத்த தரும தேவதை, தன் சுபாவ வருணத்தோடு இராக்கதர் மத்தியில் வெளிப்படையாகத் தங்கு தல் சாததிய மன்றென்று, அவரை வஞ்சித்துக் கரிய அரக்கனுகி வாழ்கின்றதை ஒத்த விபீடணனைக் கண்டான்.

அப்பால் மற்றொரு மாளிகையுள் பிரவேசித்தான். அங்கே பன்னிரண்டு கைகளும் ஆறு முகங்களும உள்ள குமாரக கடவுள் ஐந்து முகங்களையும பததுக் கைகளையும மறைத்து வந்தானோ வெனறெண்ணுமபடி அழகும் வீரமும அமைந்த இநதிரசித்தைக் கண்டான. கணடவன, 'இவனை வெலல இலக்குமணனும இராமனும நெடுநாள அமா செயய நேரும; இவனைப் போர்த துணையாகப பெறற இராவணன் மூனறுலகங்களையும வென்றது அரிய செயலன்று' என்று கருதி, அவனைவிட்டு நீஙகி, ஏனைய இராவண குமாரர், இராக்கத சேனைவீரா, மநதிரிமாா முதலியோர் மாளிகைகளை யெல்லாம பார்த்துச சீதையைத் தேடிச சென்றான.]

நடுராத்திரி வருணனை

[அப்போது, அர்ததராத்திரியாகக், குடியர் கள்ளுண்ணு தோய்நதனர்; கம்மாளா முதலியோர் தத்தம் கைத் தொழில் விடடொழிந்தனர்; ஆடல பாடல்கள அடங்கின; விட்ட நெய வற்றி விளக்குகள அவிநதன; தூஙகாத யோகியரும் பிததரும தூங்கினர்; என்றால், ஏனையோ ரெலலோரும உறங்கின ரென்று கூறுவானேன்?]

இராவணன் பிரிவால் வருந்தும் பல சாதி மனைவியர்களை அநுமான் பார்த்தல்

[இராவணன் மாளிகை சந்திரனாக, அச் சந்திரனைச் சூழ்ந்த தாரகைகள் போல விளஙகிய அவனுடைய மனைவிமார் மாளிகை களை அநுமான் அணுகினன. அவா பல சாதி மாதரினின்றும தெரிநதெடுதது மணநதுகொள்ளப் பெற்றவர்.

அவருள்ளே, இயகக மனைவியர் சிலர், இராவணன மீது பதிதத மனததினராயக, காதல் மீதூர மூசசடங்கி, இமைப் பொழிநது, அசைவினறிச சிததிரங்களை ஒத்திருநதனர்.

வேறு சிலர், மன்மதன் எதிர்த்து வருவானென்று அவனைக் காணா அஞ்சியோ, தூங்கினால் கனவில் இராவணனைத தழுவலா மென்று கருதியோ, கண் மூடி உண்மையில் தூங்காமல் தோறறத தில் தூங்குகின்றார்கள்.

மற்றும் சிலர், இராவணனைச் சித்திரத்திலாயினும் காணக் கருதி அவன் வடிவைச் சித்திரிக்க முயன்று, அவன் அழகு சித்திரத்தில் அமையாதென்று தியங்குகின்றார்கள்.

இன்னுஞ் சிலர், தாம் தாம் வளர்க்கும் கிளியை நோக்கி, 'என்னுயிரை (இராவணனை) அழைத்து வருகின்றா யில்லை; யான் படும் துன்பத்தைப் போய்ச் சொல்லுகின்றா யில்லை; எனக்கான தொண்டும் செய்வா யல்லை!' என்று குறை கூறுகின்றார்கள்.

பின்னும் சிலர், மேரு மலையை வில்லாக வளைத்த மகாதேவ னோடு அவனிருந்த கயிலாய மலையைத் தூக்கி யெடுத்த தோள் களிற் பூசிய சந்தனம் அவனைக் கூடியிருந்தபோது தம் தனங் களில் தோயப்பெற்று, அவன் பிரிந்த நாள் முதல் குளியாமையால் அழியாமல் விளங்குதலை நோக்கிப் பிரிவாற்றாமைத் துன்பத்தை ஒருவாற்றால் மறந்து குதூகலிக்கின்றார்கள்.

இவ்வாறாகவுள்ள, இராவணனது இயக்க மனைவியர் மாளிகை களைக் கடந்து அவனது குல மனைவியராகிய இராக்கத மாதா வாழும் மாளிகைகளை அனுமான் அடைந்தான்.]

25. எரிசுடர் மணியின் செங்கே ழிளவெயி லிடைவி டாது
விரியிருள் பருகி நாளும் விளக்கின்றி விளங்கு மாடத்
தரிவையா குழுவு நீங்க வாசையுந் தாமு மேயாய்
ஒருசிறை யிருந்து போன வுள்ளத்தோ டூடு வாரும்

கொண்டுகூட்டு: எரி சுடர் மணியின் செங்கேழ் இள வெயில் இடைவிடாது விரி இருள் பருகி நாளும் விளக்கு இன்றி விளங்கும் மாடத்து, அரிவையர் குழுவும் நீங்க, ஆசையும் தாமுமே ஆய் ஒரு சிறை இருந்து போன உள்ளத்தோடு ஊடுவாரையும் (கண்டான்).

பொருள்: (சுவர்களிற் பதிக்கப்பட்டிருக்கிற) மாணிக்கங் களின் சிவந்த நிறத்தையுடைய இளஞ்சூரிய (ஒளி போன்ற) ஒளி இருளை விழுங்கிப் போக்கிவிடுதலால் எந்நாளும் விளக்கு (வேண் டிய அவசியம்) இல்லாமல் தாமே சுயம்பிரகாசமாய் விளங்கா நின்ற மாளிகைகளிலே, (தோழியா பணிப் பெண்களாகிய) மகளிர் கூட்டமும் (மற்றவர் கூட்டங்கள் நீங்கியபின் தூங்குதற்கு) நீங்க,

(இராவணன்மேல் வைத்த தணியாத) காதலும் தாமுமே தனியாகி ஒதுங்கிய ஒரு புறத்தில் தூங்காமல் இருந்து, (அவன் பால்) போன நெஞ்சோடு ('பரிந்து அவர் நல்கார் என்று ஏங்கிப் பிரிந்தவர்—பின் செல்வாய பேதை என் நெஞ்சு!' என்றும், 'அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும் எவன் நெஞ்சே!—நீ எமக்கு ஆகாதது?' என்றும்) ஊடுவோரையும் அனுமான் கண்டு சென்றான்.

எரிசுடர் - நெருப்பு—ச. அ. எரி சுடர் மணி - நெருப்புப் போன்ற (மிக்க சிவப்புடன் மிகு) பிரகாசம் உடைய மாணிக்கம், சுவாலிக்கின்ற ஒளியையுடைய மாணிக்கம் எனலுமாம். கேழ் - நிறம். பருகல் - விழுங்குதல் —பத்துப் பா. சிறை - இடம், பக்கம்.

கல்யாணஞ் செய்யக்கூடாத தவப்பெண்ணென்று தான் கருதியிருந்த சகுந்தலை, தவக்கோலம் பூண்டிருந்தாலும், அக்கோலம் யாத்திரைக் காவி போலத் தற்காலக் கோலமாய் நிலையானதன்றென்றும், அவள் மணஞ்செய்தற் குரியவளென்றும் அவள் காதலன் துஷ்யந்தனுக்குத் தெரியவந்தபோது, அவன் தன் னெஞ்சை நோக்கி, 'நெஞ்சே! நீ தீண்டக்கூடாத தீக்கங்கென்று பயந்தது மகிழ்கூர்ந்து மார்புற அணியும் மாணிக்கமானது' என்று னென்ற கருத்துப்படக் காளிதாசர் கூறியதை, இங்கே கம்பர் மாணிக்கத்தை நெருப்புப்போன்ற தென்றது, நினைவுகூரச் செய்கின்றது.

பாட பேதம்: குழுவை நீக்கி. (உரு)

[அவ் அரக்க மனைவியர், கரிய மலைபோலக் கறுத்த பருத்த உடலும், அம் மலைமீது எரியும் தீப்போலச் சிவந்த கூந்தலும், அத் தீமேற் புகைபோல அக் கூந்தல்மேல் அதன் இயற்கை மணத்தை நாடிச் சுழலும் வண்டும் விளங்க வீற்றிருந்தார்கள்.

கரிய வானம் தேகமாகச், செவ்வானம் சிவந்த கூந்தலாகப், பிறைச் சந்திரன் நெற்றியாக, நட்சத்திர சாலம் விரக வெம்மை தணிய அணிந்த முத்துமாலையாகக், கொடி மின்னல் இடையாக அவ் அரக்கியர் அந்திக்காலத்து ஆகாயத்தை ஒத்து விளங்கினார்கள்.

இராவணன் சீதை காதலால் தம்மைப் பிரிந்த விரகவேதனையால் தூக்கம் வரப்பெறாத அவ் அரக்க மனைவியருள்ளே,—சிலர்,

தம் விரகத்தை மறப்பிக்கும் பொழுதுபோக்காக, அவன் வித்தி யாதர தேவநதா நாகராசா முதலியோரை வென்று பறிததுத தமக் குக் கொடுத்திருநத கிரீடஙகள் முதலிய ஆபரணஙகளைப் பநதய மாக வைத்துச சூதாடுகின்றார்கள்; வேறு சிலா சிதத மாதர் பாட, நாக கன்னியர் முழவங் தட்டத், தேவ மாதரை நர்த்தனம செயயச செயது பார்த்திருக்கின்றார்கள, பினனும சிலர் வீணை இசையும தம குரல ஓசையும வெவவேறு பிரிததறியாதவாறு, வேற்றுமை யின்றி ஒற்றுமையாக, இராவணனது புகழைப பாடுகின்றார்கள்: இனனும சிலர், கள்ளுணடு துகில சோர்தல உணராது, கணகள சுழலக, குணடலங்கள தாண்டவம புரியத, தோழியரோடு கை கோததுக குரவைக் கூத தாடுகின்றார்கள்.

இவவாறான இராவணன் குல மனைவியர் வீதியைக் கடநது விததியாதர மனைவியர் வீதியை அனுமான அடைந்தான.]

இராவணனுடைய வித்தியாதர மனைவியர் நிலை

[அவ் வித்தியாதர மனைவியருள் சிலர் நடுநிசி வரையும் நித் திரை வராதிருநதவர்களு. நித்திரை வருமபடி பிரதிதினமும வழக்கமாகப் பாடும பாடகா வநது இனிதாகப் பாட, அவ் இனிய பாடல் அவர் செவியுள்ளே பாமபுபோல நுழைநது விரக வேத னையை மிகுவிகக வருநதுகின்றார்கள. வேறு சிலா, 'தேவ கண்டக னை இராவணன் மீது உண்மையான அனபுடையார் இவா' என்று அத தேவ ரினததைச சேர்நதவனாகிய, இயல்பாகக் குளிர்சசி யுடைய சந்திரன, சோபததீக கொளுநதிச சுடுதல்போலச சநதிர கிரணங்கள் தனஙகளில விழுநது வெதுப்பத துடிக்கின்றார்கள்.]

இராவணன் பட்டத்தரசி மண்டோதரியை அனுமான் பார்த்தல்

[அநத வித்தியாதர மினனார் வீதியை விட்டு நீங்கி இராவ ணன் அரண்மனையைச சமீபிதத அனுமான் அவன பட்டமகிஷி மண்டோதரி மாளிகையைக் கண்டான.

'இந்த மாளிகை இராவணன் மனைவியர் மாளிகைகளெல்லா வற்றினும் சிறநதிருக்கின்றது; இதிலேதான அவன சீதையை வைத்திருககின்றானோ?' என்று அனுமான் ஐயுற்றான்.

கரும்பையும் கசப்பிக்கும் கனிமொழியாரான தேவமாதர்கள் கால்வருடியும், சாமரை இரட்டியும், செவிக்கினிமையாக யாழ் வாசித்தும், நாசிக்கு உவப்பாகக் கற்பக மலரை எதிரேந்தியும் பணிவிடை செய்யச், சூழ உள்ள இரத்தின தீபங்கள் சோபை குன்றும்படி தன் மேனியொளி சொலிக்கத், தூங்குகின்ற மண்டோதரியை அனுமான் கண்டு, தன் உள்ளத்துள்ளே அவள் சீதையோ என்று ஐயங்கொண்டு, அதனால் அந்த உள்ளத்தோடு உயிரையும் உயிரோடு உடலையும் சுமைபடியான துன்பமுற்றுக், 'கற்பு நீங்கிய இவள் சீதையாயின், இராமனுக்குச் சீதையைத் தேடிக் கொடுத்தலே பெரும்பய னென்றறிந்த யான் அதனை யிழந்தேனவேன்; இராமன் புகழும் யானும் இவ் இலங்கையும் எல்லா இராக்கதரும் இன்றே இறந்தொழிவோம்!' என்று கருதினான். பின்பு 'இவளிடத்துச் சீதையின் இலக்கணங்கள் சில காணப்படினும் இவள் அவை முழுதும் உடையா ளல்லள். அவள் மானுட வடிவினள், இவள் அதற்கு மாறுபட்ட வடிவினள். இராமனைக் காதலித்த ஏந்திழையா ரெவரும் இரதிதேவியையும் ஏறிட்டுப் பாரார். சந்தேகித்தது தவறு' என்று எண்ணினான்.]

இராவணனைப் பார்த்தல்

[பின்பு மண்டோதரியின் மாளிகையை நீங்கி இராவணன் மாளிகையை அடைந்தான். அப்போது இராவணனுக்குக் கேடு விளைவதற்கு முற்குறிகளாகப் பற்பல உற்பாதங்கள் நிகழ்ந்தன. அனுமான் அவைகளைக் கண்டு, 'அந்தோ! இப்பெரு நகரத்தின் செல்வம் அழியும். எவராயினும், அவர் செய்த பாவ புண்ணிய பலங்களை அநுபவித்தல் திண்ணம். இராவணன் நலவினைப் பயனாக வாழ்வு வந்தது போலத் தீவினைப் பயனாகக் கேடு நேரும் காலம் கிட்டியது' என்றெண்ணினான்.

மிகவும் விசாலமான வெள்ளிய மெல்லிய மலர்ப்பள்ளியில் இரத்தினாபரணங்கள் விளங்க இராவணன் சயனித்திருத்தல், வெண் பாற்கடல்மேல் இரத்தினங்கள் காணப்படும் கருங்கடல் கிடந்தாற் போன்றிருந்தது.

உதயகிரியிலே பால சூரியன் விளங்குதல் போலப் பத்துத் தலைகளில் ஒவ்வொன்றிலும் இரத்தின கிரீடம் விளங்கினது.

அவ விளக்கத்தோடு ஏனைய இரத்தினாபரணங்களின் விளக்கமும் சேர்ந்து பெரும பிரகாசம செய்தலால இரவென்னும பொருள் இறந்தொழிய, நரசிங்கமூர்த்தி பல கைகளும தலைகளும் பரபபி மேருமலையிற பள்ளிகொண்டிருநதாற போலத, தன் சுவாண மாளிகையிலே இராவணன படுத்திருந்தான்.

தேவமாதர் இருபக்கமும் வரிசையாக நின்று சாமரைகள் சுழற்ற உண்டாகிய இளங்காற்று, அவனது பள்ளியறையில் தொஙகும கறபக மலா மாலைகளின் தேன துளிகளை அவன மேனி மேற சிதறி வீசுந்தோறும சீதையை நினைந்து பெருமூச் செறிநது உயிர் தேய்ந்துகொண்டிருநதான.

அவன் திகவிசயம செய்த காலத்தில் அட்டதிக் கசங் களும் எதிர்த்து மாாபிற பாய, அவற்றின கொம்புகள் புகுநது முறிநது பதிநத பழம்புண் வடுக்களினிடையே மன்மத பாணங் கள பாய்நத புதுப்புண்கள் இருந்தன.

விரக வெப்பம் தணியப் பூசிய செஞ்சந்தனததில் தென்றல் வீசுதல், சிவந்த உலைத் தீயை எழுப்பும துருததிக காறறுப் போன்று காமத் தீயைக் கதிததெழச் செயய, மனம் முதலிய அநதக்கரணங்கள் சீதைபாற் சென்றதனால், அவன் நெஞ்சு பாம்பு நீங்கிய பாழ்ங குகை போலப் பாழ்படடிருந்தது.]

கொண்டபே ரூக்க மூளத் திசைதோறுங் குறித்து மேனாள்
மண்டிய செருவில் வீரத் தோள்களால் வாரி வாரி
உண்டது தெவிட்டிப் பேழ்வாய்க் கடைகடோ றொழுகிப் பாயும்
அண்டாதம் புகழிற் றோன்றும் வெள்ளெயிற் றமைதி யானே

கொண்டுகூட்டு: கொணட போ ஊக்கம மூள, (அதனால்) மேல்நாள் திசை தொறும குறிதது மணடிய செருவில், வீரத தோள்களால வாரி வாரி உணடது தெவிட்டிப பேழவாயக் கடைகளதோறும் ஒழுகிப பாயும் அணடா தம புகழின தோனறும வெள எயிறறு அமைதியானை (க கணடான).

பொருள்: (இயற்கையாகப பிறவியில) கொண்டிருந்த பெருந தைரியம் (செயறகையாகத் தவஞ்செயது பெற்ற வரபலத தினால்) விருத்தியாக, அதனால் முன் காலததில் திசைகள் தோறும் (உளள வீரர்களை வெல்லக்) கருதிச் சென்று தாக்கிய

யுத்தங்களில், (இருபது) வீரக் கைகளாலும் அள்ளி யள்ளி(ப் பத்து வாய்களால்) உண்டது (வயிறு நிறைந்து மேலெழுந்து, வாயும்) நிறைந்து, (இருபது) கடைவாயகள் தோறும் ஒழுகி வழி கின்ற தேவர் புகழ் போலத் தோன்றும் வீரப்பறகள் அமைந் திருந்தவனை அனுமான் கண்டான்.

மண்டிய - தாக்கிய.—சு. அ, அடாதருச் செய்த.—புறநா. தோள - கை —சிந்தா. பேழ - பெருமை : பேழ வாய - பெரிய வாய.

'கீர்த்தியை வெண்ணிற முடையதென்று கூறும் கவிமரபும், ஒருவனது புகழை மற்றொருவன் வென்றொழித்தன னென்ற பொருளில் அதனை அவன் வாயிற் போட்டுக்கொண்டா னென்று கூறும் உலக வழக்கும் இவ் வருணனைக்கு மூலம்' *... தோள் வலியாற் புகழைக் கவர்ந்துகொண்டமை, கைகளால வாரியுண்ட தெனப்பட்டது. (உசு)

[மனம் சீதையாகிய திருமகள்பாற் செல்லுதலாலும் அந்தச் சீதை காதலால் உறக்கமின்றி அறிதுயிலாகப் பொய்த் தூக்கம் தூங்குதலாலும் திருமா லெனனுமபடி இராவணன் பள்ளி கொண் டிருந்தான்.

பரந்த கருங்கடலிலே, உயர்ந்த உதயகிரியிலே பேரொளி யுடன் தோன்றும் சூரியன்போல, அவனுடைய பெரிய கரிய உடலிலே வளர்ந்த மார்பிலே இரத்தின மாலை விளங்கினது.]

27. தோடுழுதண் டார்வண்டுந் திசையானை
மதந்துதைந்த வண்டுஞ் சுற்றி
மாடுழுத நறுங்கலவை வயக்களிற்றின்
சிந்துரத்தை மாறு கொள்ளக்
கோடுழுத மார்பானைக் கோலையுழுத
வடிவேலின் கொற்ற மஞ்சித்
தாடோழுத பகைவேந்தர் முடியுழுத
தழும்பிருந்த சரணத் தானை

கொண்டுகூட்டு : (தன மார்பின்) தண் தார் தோடு உழு வண்டும் திசை யானை மதம் துதைந்த வண்டும சுற்றி, மாடு உழுத கலவை, வயக் களிற்றின் சிந்துரத்தை மாறு கொள்ள, (அவ் யானையின்) கோடு உழுத

* வை. மு. கோ.

மார்பானைக, கொலை உழுத வடிவேலின் கொற்றத்தை அஞ்சித, தாள் தொழுத பகைவேந்தர் முடி உழுத தழும்பு இருந்த சரணத்தானை(க் கண்டான).

பொருள்: தான மார்பில் அணிந்த பூ மாலையின் (மலர்களில் உள்ள தேனை உண்ண அம மலர்களின்) இதழ்களை உழக்கிய வண்டுகளும் (தன் திக்குவிசயப் போரில் அவ்வத் திக்கில் தன்னை எதிர்த்துத் தாக்கிய) திசை யானைகளின் மத நீரில் மொய்த்த வண்டுகளும சூழ்ந்து, பக்கங்களில் உழக்கப்பட்ட கலவைச் சந்தனம், அது இருந்த மார்பை யானை நெற்றிச் சிந்தூரத்துக்குக் கொடுத்து, அந்தச் சிந்தூரம் இருந்த இடத்தை அது கொடுத்த மார்பிடத்துக்கு மாறாகக் கொள்ள, அந்த யானைகளின கொம்புகள் பாய்ந்து உழக்கிய மார்பையுடையானும், (தன்னை யெதிர்த்தா ரெவரையும தவறாது) கொலை செய்ய அவர்களை உழக்கிய கூர்வேலின் (துணையால தான அடைந்துள்ள) செயத்தையும் நினைந்து பயந்து தன்னைத் தொழுத பகை அரசர் கிரீடங்கள் அழுந்தியதனால் உண்டாகிய தழும்புகள் தங்கிய தாளகளை யுடையானுமான இராவணனை அனுமான கண்டான்.

தோடு - பூ இதழ். உழுதல - உழக்குதல - கலக்குதல - நிலை குலையச் செய்தல. தார - மாலை. துதைதல - நெருங்குதல - மொய்த்தல. மாடு - பக்கம. நறுமை - வாசனை. கலவை - கலவைச் சந்தனம. வயம - வலி. மாறுகொள்ள - மாறாகக்கொள்ள - பரிவர்த்தனை பண்ண. கோடு - (யானைக) கொம்பு: (யானைக் கொம்புகள உண்மையில கொம்புகளா யில்லாமல வளர்ந்த பற்களா யிருப்பதும அதனால தந்தமென்று வழங்குவதும் அறியத தக்கவை) கொலை உழுத - கொலை (செய்யப் பாய்ந்து) கிளறிய. வடி - கூர்மை. கொற்றம - வெற்றி. பின்னிரண்டடிகளில 'உழுத' என்பது 'உழுதலைச் செய்த' என நேரான பொருள் பயவாமல 'பாய்ந்த' 'அழுந்திய' என்ற தாற்பரியப பொருள்கள பயந்து நிற்றல காணக. ஒருவகை வனப்புத தோன்றும்படி இப் பாட்டில 'உழுத' என்பது பலமுறை பிரயோகிக்கப்பட்டிருத்தலும் காணக.

திசை யானைகள இராவணனை எதிர்த்து முட்டியபோது அவன மார்பின மாலையில இருந்த வண்டுகளும் யானைகளின் மத நீரை உண்டு கொண்டிருந்த வண்டுகளும் கலந்தன. கலந்தவை அவன மார்பில் அணிந்திருந்த வாசக் கலவைச் சந்தனத்தில மொய்ப்பனவாயின. அப்படி மொய்த்தலை, யானை மத்தகத்தால தாக்குண்டு மூடப்பட்ட மத்திய பாகத்துச்

சந்தனத்தை அணுகமாட்டாதனவாய அதன் சுற்றுப் பக்கங்களில் மொய்த்தமை குறிக்கச் 'சுற்றி மாடு உழுத' என்றார். (உ௭)

அநுமான், இராவணனைக் கொல்ல முயன்று பின்வாங்கல்

[அநுமான் பத்துத் தலைகளாலும் இருபது கைகளாலும் அவனை இராவணன் என்று தெரிந்தான். தெரிந்தவன் மனத்தில் அவனைக் கொல்லும்படி கோபந் தோன்றிற்று. கண்கள் அக்கினி சக்கின. (பெரியோரைக் காண்போர் அவரைத் தொழ வேண்டுமென்ற நினைவு மனத்தில் தோன்றுமுன் கைகள் குவிப்பிடுதல் போல.)]

28. தோளாற்ற லென்னாகு மேனிற்குஞ் சொல்லென்னாம்
வாளாற்று கண்ணாளை வஞ்சித்தான் மணி முடியைத்
தாளாற்ற லாலிடித்துத் தலைபத்துந் தகர்த்தென்றன்
ஆளாற்றல் காட்டேனே லடியேனாய் முடியேனே

கொண்டுகூட்டு : '(இவனைக் கொல்லேனேல் என்) தோள் ஆற்றல் என் ஆகும்? மேல் நிற்கும் சொல் என் ஆம்? வாள் ஆற்று கண்ணாளை வஞ்சித்தான் மணிமுடி என் தாள் ஆற்றலால் இடித்துப், பத்துத் தலையும் தகர்த்து, என் ஆள் ஆற்றல் காட்டேனேல் (இராமனுக்கு) அடியேனாய் முடியேன்.

பொருள் : ' (இவனைக் கொல்லாது விட்டுச் செல்வேனானால், என்னுடைய) தோள் வலியால் யாது பயனாம்? (என்னைப்பற்றி) இனி நிலை நிற்கும் சொல் எத்தன்மையதாம்? (பழிப்பானதாம்.) (இராமனுக்கு உரிமையான) சீதையை (அவனை எதிர்த்து வென்று கைப்பற்றாமல்) வஞ்சனையால் கவர்தல் செய்த இவனுடைய இரத்தின கிரீடங்களை என் காலால் உதைத்துப் பொடிபடச் செய்து பத்துத் தலைகளையும் உடைத்து யான் இராமனுக்கு அடிமைத் தொழில் செய்தலைக் காட்டேனால் அவனுக்கு அடியேனாகேன்.

தோள் ஆற்றல் - தோட் பலம். வாள் ஆற்று - வாளை ஒத்திருக்கின்ற, 'ஆற்றல் - ஒத்திருத்தல். "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது."' ஆள் - அடிமை. ஆற்றல் - செய்தல். ஆள் ஆற்றல் - அடிமை(த் தொழில்) செய்தல்; ஆண் (ஆண் மகன்) ஆற்றலாகிய

ஆண்மையுமாம் ' முடிதல் - கருதிய பொருள் தால உ-ம். " அவை தாம முடிந்தாலும பீழை தரும " '.—குறள்—கூஙஅ.

'(இவனது) புயங்களின வலிமை யாது பயனபடும! நெடுங்காலம அழி வினறி நிறபதான இவனது புகழதான யாது பயனபடும!' என்பது முந்திய உரை.

பாட பேதம்: காட்டேனல். (உஅ)

['என எசமானனுக்குத் துரோகம் செய்தவன் என் கண் ணெதிரப்பட்ட பினபும பிழைததிருக்கவிட்டால், என அடிமை உணமையானதாகாது. இவனை ஒழித்து இவ வூரையும தொலைப் பேன. பினபு எனககு எத தீங்கு நேரினும் நேருக' என்று அனு மான் நினைததான்.]

என்றூக்கி யெயிறுகடித் திருகரனும் பிசைந்தெழுந்து
நின்றூககி யுணாந்துரைப்பா னேமியோன் பணியன்றல்
ஒன்றூககி யொன்றிழைத்த லுணாவுடைமைக் குரித்தன்றல்
பின்றூக்கி னிதுசாலப் பிழையாகு மெனப் பெயாந்தான்

கொண்டுகூட்டு: எனறு (- எண்ணி) ஊககி எயிறு கடிதது, இரு கரனும் பிசைநது எழுந்து நினறு, ஊககி உணாநது, உரைபபானுய, '(இவ னைக கொலலல) நேமியோன பணி அனறு, (அனறியும) ஒனறு ஊககி ஒனறு இழைததல உணாவு உடைமைககு உரிதது அனறு. பின தூககின் இது சாலப பிழை ஆகும' எனப பெயாநதான.

பொருள்: (மேற கூறியவாறு) எண்ணி(ப போா செய்ய) உறசாகங்கொண்டு, (கோபததால்) பற்களைக் கடிததுக, கைகளைப் பிசைநது, (பிறா காணுமைப பொருட்டுக குறுககியிருநத மேனி யைப் பெருககி) உயாநது, (செய்ய உன்னிய போரைச் செய்யாமல் சிறிது பொறுத்து) நினறு, (முன்னிலும்) அதிகமாக மனம் முயனறு ஆலோசித்து(த் தனககுளளே) சொல்லிககொளவானுய, '(இவனைக கொல்லுதல் இராமன இடட கட்டளை யனறு; (அலலா மலும, சீதையைத தேடிக் கணடுபிடிததலாகிய) ஒரு காரியததில் முயனறு (இராவண வதமாகிய) வேறொரு காரியத்தைச் செயதல் அறிவுடைமைக் குரிய செயலு மனறு. பின வரும் பயனை ஆராயந தால், இச் செயல, மிகவும குறறமுடையதாகும்' என்று (இராவ ணனைக கொல்லும் முயறசியினின்று) பின்வாங்கினன்.

முதலாவது ஊக்குதல் உற்சாக முறுதலையும் இரண்டாவதும் மூன்றுவதும் முயலுதலையும் குறித்தன. நேமி - சக்கரம். நேமியோன், சக்கரத்தை யுடையோனான திருமாலின் அவதாரமான இராமனை உணர்த்தியது. தூக்குதல் - ஆராய்தல். 'ஊக்கமுடையான்' என்ற குறளில் வரும் போதல் போலப், பெயர்தல் பின்வாங்குதலைக் குறித்தது. (உகூ)

[*'நல்லொழுக்க முள்ளா ரெல்லாரும் எவ்வளவு வல்லமை படைத்திருந்தாலும் எக்காரியத்தையும் சீர்தூக்காது செய்யார். இப்போது போர் செய்ய எழுந்த பெருங் கோபம் பிறர் அறியப் படாமல் என்னுள்ளே அடங்கிடுக. இரகுவீரனது மனைவியைச் சிறை வைத்தவனை ஒரு புன் குரங்கு கொன்ற தென்றால், அது, அவ் வீரசிகாமணியின் வல்லாண்மைக்குப் பழியாம்' என்று நினைந்து அனுமான் அடங்கினன்.*]

அனுமான் சீதையைக் காணாமையால் ஏங்கல்

[*இவன் 'சயனத்தினிய மணி' என்னும் பெண்மணி யொருத்தியும் தன்னொடு சயனிக்காமல், தனியே தூங்குவானாய், ஒரு தலைக் காமவெப்பம் கனற்றப்பட்டு வருந்துதலால், சீதை கற்பு நிலையில் உள்ளாளென்று அனுமான் அநுமானித்தான்.*

பின்பு, 'சீதையை யெங்கும் காணவில்லையே!' யென்று வருந்தி, 'அவளை இராவணன் கொன்றானோ, தின்றானோ, இலங்கைக்கப்பால் எங்காயினும் ஒளித்தானோ? யாதுந் தெரியவில்லை. இனித் திரும்பிப் போய் என் சொல்வேன்? என் துன்பம் யான் செத்தாலன்றித் தீராது. இராமன், யான் சீதையைக் கண்டு வருவேனென்றிருப்பான்; சுக்கிரீவன், அவளைக் கொண்டு வருவேனென்றிருப்பான்; அவர்கள் அவ்வாறிருக்க, என் செயலோ பயனின்றி யிருக்கின்றது.

'அங்கதனாதியர், சீதையைக் கண்டுபிடித்தற்குச் சுக்கிரீவன் குறித்த தவணை கடந்ததனால், "இறந்தொழிவோம்" மென்றபோது, "தவணை தவறினும் சீதையைக் கண்டு திரும்புவோமாயின், அவன் கோபியான்" னென்று அவர்களுக்குக் கூறிவந்த யான் எண்ணியதை முடிக்காமையால் என்னுயிரை முடிக்கா தொழியேன். அதன் முன் செய்யக்கூடியது யாதாயினு முளதோ என ஆராய்வேனாக. இந்தப் பெரிய இலங்கை நகரில் உள்ள எண்ணிறந்தா ரெல்லாரையும் விடாமற் பார்த்த யான் சீதை யொருத்தியை மட்டும்

கண்டிலேன். கருங் கடலைக் கடந்த யான் காலைக் கடலைக் கடக்க மாட்டாமல் அதில் ஆழ்ந்து ஆவி அழிந்தொழிவேனோ! இராவணனைப் பிடித்து இரத்தம் கக்க அடித்தாவது சீதையைக் காட்டச் செய்து காணேனோ! இராவணனுக்கு விரோதிகளாகிய தேவரைச் சீதை யெங்கிருக்கிறாள் என்று வினவித் தெரிவேனென்றால், அவன் உயிருள்ளளவும் சொல்லத் துணியார். அசுரர் முதலிய அவனைச் சார்ந்தோரும் சொல்லார். வேறு எவ்வாறு தெரிவேன்? கழுகரசனாகிய சம்பாதி, "இராவணன் சீதையை இலங்கையிற் சிறை வைத்திருக்கிறான். அதோ! அவளைக் காண்கின்றேன்" என்றது பொய்யாய்விட்டதே!' என்றெண்ணினான்.

பின்பு, 'அரக்கர் இருக்கும் இடங்கள் அனைத்தையும் பார்த்து விட்டோம். சோலைகளையும் பார்ப்போம்' என்று இராவணன் மாளிகையை விட்டுப் புறப்பட்ட அனுமான் ஒரு சோலையைக் கண்டான்.]

3. காட்சிப் படலம்

[அனுமான் சீதையைக் காணுதலைக் கூறுவது]

சிறையில் இருந்த சீதை நிலைமை

30. வன்ம ருங்குல்வா ளரக்கியர் நெருக்கவங் கிருந்தாள்
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணா
நன்ம ருந்துபோ னலனற வுணங்கிய நங்கை
மென்ம ருங்குல்போல் வேறுள வங்கமு மெலிந்தாள்

கொண்டுகூட்டு: வல் மருங்குல் வாள் அரக்கியர் (சீதையை) நெருக்க, அங்கு இருந்தாள். கல் மருங்கு எழுந்து, என்றும் ஓர் துளிவரக் காணா நல் மருந்து போல, நலன் அற உணங்கிய நங்கை, மெல் மருங்குல் போல, வேறு உள அங்கமும் மெலிந்தாள்.

பொருள்: வாள் (முதலிய ஆயுதங்கள்) ஏந்திய அரக்கியர்கள், (இராவணனுக்கு இணங்கும்படி சீதையைப் பயமுறுத்திப்) பலவந்தம் பண்ணும்பொருட்டு, அந்த அசோக வனத்தில் அவளைச் சூழ்ந்து இருந்தார்கள். (மண்போலத் தலைபால் விழுந்த

நீரை நெடும்பொழுது தங்கச் செய்யும் தன்மையும் வேர் ஊன்று தற்கு இடங்கொடுக்கும் இளக்கமும் இல்லாத) கடினமான கல்லிலே (விதை விழுந்து அரிதாகப் பெய்த மழை நீரால்) முளைத்து, (முளைத்த காலந்தொட்டு) எப்பொழுதேனும் (மழையாயினும் பனிநீராயினும் பெய்த) நீர் சிறிதும் அடையப் பெறாத (சஞ்சீவி) மருந்து (மூலிகை) போல, அழகு சிதைய வாடிய சீதை, தனது இயற்கையாகச் சிறுத்த இடைபோல, ஏனைய (கைகால் முதலிய) அவயவங்களும் (இராமனது பிரிவாற்றாமையால் உடம்பைப் பேணாமையால் செயற்கையாக) இளைத்திருந்தாள்.

வாள் - மற்ற ஆயுதங்களுக்கு உபலக்கணம். நலன், நலம் என்பதன் விகாரம். நலம் - அழகு. உணங்கிய - வாடிய. ' மருந்துக்கில் இருந்த மெலிவு . மற்றை அவயவங்களிலும் பரவலாயிற்றென ஒரு சமத்காரம் தோன்றக் கூறியவாறு ' காண்க

உவமேயத்தில 'அரக்கியர் நெருக்கிய' சீதை என்றதற்குப் பொருத்தமாக உவமானத்தில 'வெயில் வெதுப்பிய' மருந்து என வருவித்துக் கொள்க. இந்த உவமான உவமேயங்களின் ஒற்றுமைத் தன்மைகள் ஊன்றி நோக்குந்தோறும் அதிகம் அதிகமாக அறியப்பட்டு ஆனந்தம் அளிப்பனவாக அமைந்திருக்கின்றன. (௩௦)

31. துயிலெ னக்கண்க ளிமைத்தலு முகிழ்த்தலுந் துறந்தாள்
வெயிலி டைத்தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்
மயிலி யற்குயின் மழலையாண் மானிளம் பேடை
அயிலெ யிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள்

கொண்டுகூட்டு : மயிலியலையும் குயில் மழலையையுமுடையாள், துயில் எனக், கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள். வெயிலிடைத் தந்த விளக்கு என ஒளி இலா மெய்யாள் (அவள்,) இளம் பேடை மான், அயில் எயிற்று வெம் புலிக் குழாத்து அகப்பட்டது அன்னாள்.

பொருள் : சீதை, (விழித்திருப்பார்க்கு இயல்பான கண் மூடுதல் திறத்தலன்றித்) தூங்குதற்கென்று, கண்களை மூடுதலும் (தூங்கி விழித்தற் கென்று கண்களைத்) திறத்தலும் செய்யாமல் விட்டாள். வெயிலில் ஏற்றிவைத்த விளக்குப் போலப் பிரகாசமில்லாத மேனியுடையாளா யிருந்தாள். (கோர தந்தங்களோடு

கூடிய கொடிய இராக்கத மாதர் பலர் மத்தியிலே, வேறு மனித வனிதையர் ஒருவருமின்றித் தனியளாயிருந்த அவள்,) ஓர் இளம் பெண் மான (அதனைத் தின்னுதற்கென்று வாய் திறந்து காட்டுகின்ற) கூரிய பற்களையுடைய கொடிய புலிக் கூட்டத்தில் அகப்பட்டதை ஒத்திருந்தாள்.

இமைத்தல் - கண்ணிமைகளை மூடித் திறத்தல்; பின் முகிழ்த்த லென்றதனால், திறத்தலை மட்டும் குறித்தது. முகிழ்த்தல் - குவிதல், இங்கே மூடுதலைக் குறித்தது பொருள் செய்தற்குப் பொருத்தமாக முகிழ்த்தலும் இமைத்தலுமென மாற்றுக. மயில் இயல் - மயிலின் சாயல் போலும் சாயல். குயில் மழலை - குயிலின் குரல் போலும் குதலைச் சொல்.

'துயிலென' என்பதற்குக், கண்டோர் இது தூக்கமென்று சொல்லும்படி யென்று பொருள் கூறுதலும் பொருந்தும்.

பருவம் நிரம்பிய பல ஆண் மான்கள் ஒரு புலியிடத்து அகப்படினும் வருந்தும். அவ்வாறாக, ஒரு தனி இளம் பெண் மான் பல புலிகளின் வாய்ப்பட்டால் படும் பாடு பாவிக்கக் கூடியதன்றிப் பகரக்கூடியதன்று. அப்படிப் பட்ட வருத்தத்தைச் சீதை அடைந்திருந்தாளென்று மிக்க இரக்கமுண்டாக்க் கூறினர். அகப்பட்டது என்ற ஒருமை வினையால் மான் தனியான தென்பது பெறவைத்தார். (௩௧)

32. விழுதல் விம்முதன் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுத லேங்குத லிரங்குத லிராமனை யெண்ணித்
தொழுதல் சோருத றுளங்குத றுயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள்

கொண்டுகூட்டு: (சீதை) இராமனை எண்ணித் தொழுதல், விழுதல், விம்முதல், மெய் உற வெதும்புதல், வெருவல், எழுதல், ஏங்குதல், இரங்குதல், சோருதல், துளங்குதல், துயர் உழந்து உயிர்த்தல், அழுதல் அன்றி, மற்று அயல் ஒன்றும் செய்குவது அறியாள்.

பொருள்: சீதை இராமனை நினைந்து (அவன் இருந்த திசை நோக்கிக்) கும்பிடுதலும், (கும்பிட்டபடியே) கீழே விழுதலும், பொருமுதலும், மேனி மிக வெதும்புதலும், பயமடைதலும், (விழுந்து கிடந்த நிலைமையினின்று) எழுந்திருத்தலும், (வாய் விட்டு) அரற்றுதலும், (கவலையுற்று) வருந்துதலும், தளர்தலும், நடுங்குதலும், துன்பத்தில் அழுந்திப் பெருமூச் செறிதலும் (இச் செயல்க ளெல்லாம் நிகழும்பொழுது இடைவிடாமற்) கண்ணீர்

விடுதலும் அல்லாமல் (துன்பத்தைத் தணிக்கத் தக்க செயல்) வேறு யாதொன்றும் தெரியாதிருந்தாள்.

உற - மிக. ஏங்குதல - (வாய விட்டு) அரற்றுதல். இரங்கல - (கவலை யால) வருநதல: சிநதாமணி 302-ம பாட்டுரையில 'இரங்கியெனக கவலை கூறி, ஏங்கியென அரற்றுககூறி' என வருதல காணக. 'தொழுதகையுள்ளும படை ஒடுங்கும' என்ற குறளிறபோல, இங்கே 'தொழுதல' கை தொழலைக் குறிததது, ஏங்குதல முன கூறபபட்டதனால, 'அழுதல' கணணீர விடுதலை உணாததியது.

சாதாரண துககமுறறுா கணணீா விடடழுவா. அசாதாரண துகக முறறுாபால கணணீா உண்டாகுதல, வாயவிடடரறறல் முதலிய செயல் கள, அவாது மிகக துககம் காரணமாக, நிகழா. கணணீா ஒழுகல, அழுகை முதலியன துககததைதக குறைபபன. இவ வுண்மையைப போரில் சிறநத ஒரு வீரன மனைவியின துககததைபபறறி ஆங்கிலததில தேன்னிசன் என்ற கவி செயபியிருபபதனால தெரியலாம. அது வருமாறு.

தன் கணவன் போரில மடிந்தா னென்று கேட்ட ஒருததி, கணணீா அரும்பாது அழாது சிததிரம்போற செயலறறிருநதாள். அதுகணட அயல் நின்ற மாதா, அவள இந நிலையில இன்னும சிறிதுபோ திருநதால் இறநது விடுவாளென்று அவளை அழும்படி பலவாறு முயன்றும் பயன்படவில்லை. அபபோது, தொட்டிலிற கிடநத அவள் குழந்தையை ஒருத்தி எடுதது வந்து அவள மடியில வைததாள. வைககவே, மாலை மாலையாகக கணணீா வடிதலுறறது. உடனே, குழந்தையைக கொணடுவந்தவள், 'இனிச் சாகாள. வெறுதது விட்டுவிடத் துணிநத உயிரைக் குழந்தைககாக நிறுததிவைததாள!' என்றாள.

இவவாறாகக் கூறிய தென்னிசக கவிஞரது துகக வருணனையும், இராமன, தன்னைக் காட்டுககு வநது கணட பரதனை நோககித, 'தசரதா தைரியமா யிருககிறாரோ?' என, அவன 'உமது பிரிவே பிணியாக, என் தாய வரமே எமனாக, இறநதாா' என்றவுடனே, இராமன கீழே விழுநது மூர்ச்சவிநது மூாசசிததான் என்று கமபா கிளைகணடு நீங்கு படலததிற கூறியுள்ள துகக வருணனையும் ஒபபு நோககத தககன. (௩௨)

33. தழைத்த போன்முலைத் தடங்கடந் தருவிபோய்த் தாழப்
புழைத்த போலநீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால்
இழைக்கு நுண்ணிய மருங்குலா ளிணைநெடுங் கண்கள்
மழைக்க ணென்பது காரணக் குறியென வகுத்தாள

கொண்டுகூட்டு: *கண்ணீர் அருவி(யாகத்) தழைத்த பொன்மலைத் தடம் கடந்து (கடலிலே) போய்த் தாழ, இழைக்கும் நுணணிய மருங்குலாள் இணை நெடுங் கண்கள், புழைத்த போல நீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால், (அந்தக் கண்களை) 'மழைக் கண்' என்பது காரணக்குறி என வகுத்தாள்.*

பொருள்: *கண்ணீர் அருவியாக மூலை மலை(மேல் வீழ்ந்து) தாண்டி(க் கடலிலே) போய் விழும்படி, சீதை கண்கள் பொத்தலுடையன போலக் கண்ணீரை இடைவிடாமல் பொழிகின்ற மிகுதியினால், இவள், (தன் கண்கள்) 'மழைக் கண்' என்று கூறப்படுவது காரணப் பெயரென்று (அப் பெயர் வந்த) வகை தெரிவித்தாள்.*

தழைத்த பொன் - (ஒளி) தழைத்த பொன், பொன் நிறமுடைய தேமலைக் குறித்தது. தடம் - மலை. புழை - துவாரம். புழைத்த - துவாரமுடையன. நிரந்தரம் - எப்போதும். பொலிவு - மிகுதி. இழை - நூல் இழைக்கும் நுணணிய - நூலைக்காட்டிலும் சிறுத்த. மருங்குல் - இடை. இணை நெடும் கண்கள் - (வேறு உபமானங்கள் ஒவ்வாதனவாய் ஒன்றுக்கொன்று) உவமானமான நீண்ட கண்கள். மழை - மேகம், குளிர்ச்சி. காரணக் குறி - காரணப் பெயர். வகுத்தல் - வகை சொல்லல்.

'கண்கள் நீர் (கண்ணீர்) அருவி(யாகப்) போய்த் தாழப் பொழிகின்ற' எனக் கூட்டுக. *

'மழைபோலக் குளிர்ந்திருத்தலால் மகளிரின் சோந்த சீதாபிராட்டியின் கண்கட்கும் வந்த மழைக்கண்ணென்ற பெயர்க்குக் கண்ணீர் மழை பொழிவதனால் வந்த பெயரென்று வேறொரு வகையாகக் காரணங் காட்டியது, பிறிதினவிற்சி அணி யாகும், ஒரு காரணத்தால் வந்த பெயர்க்கு வேறொரு காரணப் பொருள் கற்பித்துக் கூறுவது இதன் இலக்கணம்.' †

அடுத்த பாட்டில் 'கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்' என்பதுபற்றி இப்பாட்டில் முதலடிக்குப் பொருள் கூறுங்கால் 'தாழ' என்பதன்முன் 'கடல்' வருவிக்கப்பட்டது. (௩௩)

34 அரிய மஞ்சினோ டஞ்சன முதலிவை யதிகங்
கரிய காண்டலுங் கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலி னொருவரோ டொருவரை யுலகில்
பிரிவெ னுந்துய ருருவுகொண் டாலன பிணியாள்

---

* *கண்கள் (3-ம் அடி), நீர் (2 ம் அடி), அருவி போய்த்தாழப் (1-ம் அடி), பொழிகின்ற (2 ம் அடி).* † வை. மு. கோ.

கொண்டுகூட்டு: அரிய மஞ்சினோடு அஞ்சனம் (ஆகிய) இவை முதல் அதிகம் கரிய காணடலும் (இராமன நினைவால) கண நீா கடல் புகக, கலுழ வாள (ஆகிய சீதை,) உலகில உரிய காதலின (இருவா,) ஒருவரோடு ஒருவரைப பிரிவு எனும துயா உருவு கொணடால் அனன பிணியாள.

பொருள்: மேகமும மையும் (ஆகிய) இவை முதலான மிகுதியாகக கருமையுடைய பொருள்களைக் கண்ட மாத்திரத்தில் (அநத நிறமுடைய இராமன நினைவு வர, அதனோடு அவன் பிரிவின் நினைவும கூடவர, வருந்திக்) கண்ணீர் கடலிற் பிரவேசிக்கும் படி (மிகுதியாக) அழுபவளாகிய சீதை, (காதலர் ஒருவர்பால் ஒருவா வைததற்கு) உரிய காதலையுடைய (தலைவனும் தலைவியுமாகிய இருவா) ஒருவரை ஒருவர் பிரிதலாகிய துன்பமே வடிவெடுத்தாற்போன்ற துன்பமுடையவளாயிருநதாள்.

மஞசு - மேகம. அதிகம் கரிய - அதிகமாகக் கருமையுடையன (ஆகிய பொருளகள்). காணடலும - கணடவுடனே. காதலின - காதலையுடைய. பிணி - (பிரிவாறறாமைத) துனபம்.

'சீதாபிராட்டி தனனைக கணடவா "இவள பிரிவுததுயா கொணடு வருந்துகினறாள" எனறு உணருமாறு தோனறுகின்றா ளென்பது பின்னிரணடடியின கருதது'. * கவி பின இரணடடிகளில் பெரிய மலை சிறிய கணணாடியில தோனறுதலபோல மிக விரிவான கருததைச சுருககமாகவும் விளககமாகவும புலபபடச செயதிருததல் பாராட்டததககது.

இராமன காட்டிறகுப புறபபடுமபோது சீதையை நோககி, 'நீ வீட்டில இரு, உன மெலலிய பாதம பாலைவனச் சுடடைப் பொறுககமாட்டா' எனற போது அவள 'நின்—பிரிவி னுமசுடு மோபெருங காடெனறாள்' என்றது இஙகே நினைவுகூரததககது

பிரிவாகிய அருவப பொருளின் தனமையைச சீதையாகிய உருவப பொருளகளின் தனமையோடு வியபபும நயபபும தோன்ற உவமித்திருககும கவிசாதுரியம கருததுட் பதிததுக களிககததககது.

பாட பேதம்: பிரிவ ருந்துயா (௩௪)

35. துப்பி னுறசெய்த கையோடு கால்பெற்ற துளிமஞ்
சொப்பி னுன்றனை நினைதோறு நெடுங்கண்க ளுகுத்த
அப்பி னுனைநத் தருந்துய ருயிாப்புடை யாக்கை
வெப்பி னுற்புலர்ந் தொருநிலை யுறுதமேன் றகிலாள்

* வை. மு. கோ.

கொண்டுகூட்டு: துபபிஞல் செயத கையொடு கால் பெற்ற (மழை) துளி(கரும) மஞசு (உணடாயின அதனே) ஒபபிஞனதனே நினேதொறும நெடுங கணகள உகுதத அபபிஞல நனேநது, அருந துயா உயிாபபு உடை யாககை வெபபிஞல புலாநது, ஒரு நிலே உறுத மெல துகிலாள (சீதை).

பொருள்: பவளத்திஞற் செய்யப்பட்ட கைகளும் கால் களும் பெறற (சூல் முதிர்ந்து கறுத்து மழை) துளிக்கப்போகின்ற மேகம் (ஒன்று உண்டாஞல், அதனைக் கரிய நிறத்திஞல்) ஒத்தவஞகிய இராமனை நினைக்குந்தோறும் (அவன் பிரிவு கருதித துன்புறறு) நீண்ட கண்கள் சிநதின நீரிஞல் நனேதலேயுற்றும், அரிய துனபததையும் (அதஞல் உண்டாகிய) பெருமூசசினேயும் உடைய உடமபின் வெப்பத்திஞல் உலர்தலேயுற்றும், (நனேநத சேலேயெனறு மில்லாமல் காய்ந்த சேலேயென்று மில்லாமல்) ஒரு படியா யில்லாத மெல்லிய சேலையை உடையவளா யிருந்தாள் சீதை.

துபபு - பவளம். மஞ்சு - மேகம். ஒபபுதல் - ஒததல,—சு. அ. 'ஒபபிஞன' என்பதறகு 'ஒப்பினேயுடையான' என்ற பொருளும் பொருந தும. உகுதத - சிநதிய. அபபு - நீா. உயிாபபு - பெருமூசசு.

ஈர ஆடை காயதறகு வெயிலேயனறிக காறறும் உதவுதலபோலச் சீதையின் கண்ணீரால நனேந்த சேலே காயதறகு அவளுடைய உடல வெபபே யன்றிப பெருமூசசுக காறறும் காரணமா யிருநததெனறு கொள்ள 'உயிர்ப்பு உடை யாககை' யென்ருா.

'கைகொடு' எனற பாடம் பல அச்சுப பிரதிகளிற காணபபடுவது: 'கையொடு' எனற பாடம திருவாளா திருநெல்வேலிக கவிராய ராசா மூாததியா பிள்ளேயவர்கள ஏட்டுச சுவடியிலுள்ளது.

பாட பேதம்: கைகொடு. (ருடு)

36. கமையி ஞடிரு முகத்தயல் கதுப்புறக் கவ்விச்
சுமையு டைக்கற்றை நிலத்திடைக் கிடந்ததூ மதியை
அமைய வாயிற்பெய் துமிழ்கின்ற வயிலெயிற் றரவின்
குமையு றத்திரண் டொருசடை யாகிய குழலாள்

கொண்டுகூட்டு: சுமை உடைக் கற்றை, கமையிஞள் (-சீதை) திரு முகத்து அயல் (உள்ள) கதுபபு உறக கவ்வி, நிலததிடைக் கிடந்த(தும்), தூ மதியை அமைய வாயில பெயது உமிழ்கின்ற அயில எயிறறு அரவின் குமை உற திரணடு ஒரு சடை ஆகிய(துமான) குழலாள்.

பொருள் : ('அளகபாரம்' என்று சொல்லப்படுதற் கேற்பப்) பாரத்தையுடைய மயிர்த்தொகுதி, முகத்தின் பக்கங்களில் (உள்ள) கன்னங்களை நன்றாகப் பற்றி, (மிக்க நீட்சியால்) நிலத்தில் வீழ்ந்து படிந்ததாயும், சந்திரனை வாயின் உட்கொண்டு (திரும்ப வெளிப் படக்) கக்குகின்ற (இராகு வென்னும் கரும) பாம்புபோல் (இராமன் பிரிவினால் பேணப்படாமல் மயிர்களெல்லாம் சேர்ந்து ஒன்றாய்)த் திரண்டு ஒரு சடையாகியதுமான கூந்தலையுடையாளா யிருந் தாள் சீதை.

கமை - பொறுமை கமையினாள் - பொறுமையுடையவள் (சீதை). கதுப்பு - கன்னம். கறறை - மயிர்த்தொகுதி. தூ - சுத்தம், வெண்மை. அமைய - அடங்க. அயில எயிறு அரவின - கூர்மையான பற்களையுடைய பாம்புபோல. குமையுற - (அழகு அலைந்து முந்திய நிலைமை) அழிய. 'கற்றை கதுப்புறக் கவவி நிலத்திடைக் கிடந்த(தும்) அரவிற் றிரண்டொரு சடையாகிய(தும ஆன) குழலாள' எனக் கூட்டுக.

தன்னை வெட்டுவோரையும் தாங்கும் பூமியைப் பொறுமை யுடை யாருக்கு உவமானமாகக் கூறுதல் மரபு. சீதை பூமிதேவியின் அமிசமாய்ப் பொறுமை மிகுதியுள்ளாளென்பது விளங்க அவளைக் 'கமையினாள்' என்றார். முன் மிதிலைக் காட்சிப் படலத்திலும் சீதையை 'உமையாளொக்கும்' என்ற பாட்டில் 'கமையாள்' என்றது இங்கே நினைவுகூரத்தக்கது.

கூந்தலை 'அளகபாரம்' என்பதுபற்றிக் கூந்தலின் மயிர்த் தொகுதி யைச் 'சுமையுடைக் கற்றை' என்றார். அக் கற்றை இருந்துகொண்டிருந்த * சீதையின் உடல் நீளத்தினும் அதிக நீளமாய், நிலத்தில் வியாபித்துக் கிடந் தமை விளங்க, 'நிலத்திடைக் கிடந்த' என்றார். மீண்டும் அக் கற்றை அழகு மிகும்படி பின்னிடப்பட்டுச் சடையாகாமல், பேணுமற் புறக்கணித்தமை காரணமாக அழுக்குப்பிடித்து அடையாய உரோமங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து இறுகிச் சடையான தென்பது குறிக்கக் 'குமையுறத் திரண்டொரு சடையாகிய' என்றார். அச்சடை பின்னப்பெற்றத் தன்றென்பது குறிக்க 'ஆக்கப்பட்ட' என்னாது 'ஆகிய' என்றதும் கவனிக்கத்தக்கது.

'கற்றை, நிலத்திடைக் கிடந்த'தும் 'சடை ஆகிய'துமான 'குழலாள்' என்னாது, 'நிலத்திடைக் கிடந்த தூமதி' எனக்கொண்டு இல் பொரு ளுவமையாக 'நிலத்திடைப் பொருந்திய தொரு களங்கமில்லாத பூர்ண சந்திரன்—சீதையின் திருமுகம்' என்பது முந்திய உரை.

சீதையின் தலைக்குமேல் உள்ள மயிர்ப்பகுதி இராகு வென்னும் கரும் பாம்பின் விரிந்த வட்டமான படத்துக்கும், தலையின்கீழே பின்புறத்தே

* உட்கார்ந்துகொண்டிருந்த.

உள்ள சடையான மயிரபபகுதி அப பாமபின உடலுககும, சீதையின் முகம் அப பாமபு விழுஙகலுறறு மீணடு கககபபட்டுககொணடிருககும முழு மதிக கும மிகவும பொருததமாக உவமிககபபட்டிருககினறன. இராகு விழுஙகுவது பிறைச சநதிரனை யிலலாமல முகததுககு உவமானமான முழு மதியா யுளள தெனபதும, இராகுவின நிறம கூநதல நிறம போலக கருமை யென்பதும, பாமபுப படம தலைமீதுளள கூநதற பகுதிபோல விரிந்த தெனபதும, பாம்பின உடமபும சடையும நீணடவைகளாயும தலையடுதத பகுதி பருததுப பிநதிய பகுதி படிபபடியாகச சிறுததவைகளாயும இருபபதும கொணடு, உவமான உவமேயப பொருளகளின வடிவ ஒற்றுமை வருண ஒறறுமை மிகுதியைக கணடுகொளக.

இநத உவமான உவமேயப பொருளகள, ஒபபிட்டு நோககபபடுந் தோறும ஒனறைவிடொனறு சிறநது பொருநதல மிகுந்து விளஙகி, உவமை நயம ஓாநது உணாநது உவககும இயலபினா உள்ளததுள ஊன்றி நின்று உனனுநதோறும உனனுநதோறும உவகை ஊறி உவட்டெடுககச செயதலால, சிவஞான முனிவா அமுதாமபிகை பிளளைத தமிழில, 'சீர்கொணட' என்று தொடஙகும பாட்டில 'போர்கொணட மேனிலச சோபான மிசையேறு பேதைமாா முகம நோககி நம பேராசு கொளளவரு மதிபோலும் இது வெனுப பெரிதுமஞ்க் குறறவாகள்தம கார்கொணட பின்னற கருமபாநதள கணடுளம கவலாது களிகூாநதுதண கலைமதியம வைகுபொழில சூழ குளததூா' எனறூா போலும.

இபபாட்டுக கமபாது கறபனை வனமையைக காட்டும பாட்டுககளுள ஒனறெனபது கூறுமலே விளஙகும். (௩௬)

37\. ஆவி யநதுகில் புனைவதோன் றன்றிவே றறியாள்
தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தெண்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்

கொண்டுகூட்டு: ஆவி அம துகில புனைவது ஒனறு அனறி வேறு அறியாள, தூவி அனனம, மெல புனல இடைத தோயகிலா மெயயாள, அனஙகவேள தெள கடல (பிறநத) தேவு (மயமான) அமிழது கொணடு செயத ஓவியம் புகை உணடதை ஒககினற உருவாள.

பொருள்: சேலை, உடுககப்பட்டிருநதது ஒன்றன்றி, வேறு (ச்சேலை) ஒன்றையும் அறியாள்; குளியாத உடம்பினை யுடையாள்; மன்மதன் அமிழ்தத்தை (வருணப் பொருளாக)க் கொண்டு

சித்திரித்த சித்திரம் புகையேறப்பட்டதை ஒத்திருக்கின்ற வடி வுடையாளாக இருந்தாள் சீதை

ஆவி - நீராவி, புகை. —ந. அ. ஆவி அம்துகில - புகை அல்லது நீராவி முதலிய ஆவிபோல மெல்லிய சேலை. புனைதல் - அணிதல. தூவி அன்னம - சிறகுடைய அன்னம (போன்றவள்). தோயதல - குளித்தல. தேவு - தெய்வத்தன்மை. தெள் கடல அமிழது - தெளிவான பாற்கடலில பிறந்த அமிழதம. அனங்க வேள் - மன்மதன. ஓவியம் - சித்திரம.

'இல்லாதவள்' என்பது நன்கு புலப்பட 'அறியாள்' என நயம்பட உரைத்தார்.

முதல அடி, தரித்திருக்கும் உயிரொன்றே போலத் தரித்திருக்கும் உடையும் ஒன்றேயா யிருந்தது என்ற கருத்தும் உள்ளதாகக் கொள்ளலாம. இக் கருத்துக் கொள்ளுங்கால 'ஆவி'க்குப் பொருள் 'உயிர்'. சீதையும் அன்ன மும், முறையே, மாற்றுச் சேலையும் மாற்றுத் தூவியும இல்லாத தன்மையில் ஒற்றுமையும, நீரில தோயாமையும தோய்தலும உள்ள தன்மையில வேற் றுமையும உடைமை இரண்டாம அடியின் குறிப்புப் பொருளாகக் கொள்ள லாம இறுதி அடி, இப்படலத்தின் 4-ம பாட்டில 'வெயிலி டைத்தந்த விளக்கென ஒளி இலா மெய்யாள்' என்றதையும 68-ம் பாட்டில 'மாசுண்ட மணி'யும 'வெங்கதிரத் தேசுண்ட திங்களும்' என்றவைகளையும நினைவுக்குக் கொண்டுவருகின்றது. (௫எ)

இராமனை நினைந்து சீதை வருந்தல்

[சீதை, 'மாய மானின் பின் சென்ற என் நாயகனை இளைய வன் கண்டிலன்போலும். கண்டானாயினும், இருவரும இராவ ணன் என்னைக் கவர்ந்தமையை அறியார் போலும்; அறிந்தா ராயினும், அவன் கடல் நடுவில் உள்ள இலங்கையில் என்னைக் கொண்டுவந்து வைத்திருத்தலைத் தெரியார்போலும்; தெரியாரேல், அவர்கள் என்னை மீட்ப தெங்ஙனம?' என்று எண்ணி வருந்தி, வாய்திறந்த புண்ணிலே தீ எரிந்து நுழைந்தாற்போலத் துன்புற் றாள்: 'இராவணன் என்னைக் கவர்ந்து செல்லும்போது கண்டு எதிர்த்துப் போர்செய்து அக்கொடியவனது வாளால் வெட்டுப் பட்டுக் குற்றுயிரோடு கிடந்த சடாயு இறந்தான்போலும. அவன் இறந்த பின் என் நிலைமையைத் தெரிவிக்க மாட்டுவார் யாருளர்?

ஒருவருமிலர்; ஆதலால், அவர்கள் எனனை இப் பிறப்பிற் காணுத வியலாது' எனறெணணிப புணணில் திருமபித திரும்பித தீ நுழைநதாற போல மறிதலும் வருததமுற்ருள்: 'அவாகளை என னிருப்பிடத்தை அறிநதாராயினும மனிதரைத தின்னும அரககர் நிறைிருப்ப ரென்று என்னைத தேடாது கைவிட்டார்களோ, தாய ரும தம்பியரும் திருமபிவந்து அயோததிக் கழைந்துப போயி னரோ, அபபடியாயின என கதியாதாம்?' எனறும், 'என் நாயகன உண்ணுமபோது பரிமாறுதறகும் விருநதினா வந்தபோது உப சரித்தறகும எனனையினறி எனசெய்வாரோ?' என்றும, 'வஞசனை யும மாயமும் வல்ல அரக்கர் போர்செயய வந்தாரோ? அப்போரில் சூது அறியாத என் நாயகனுக்கு யாது நேர்ந்ததோ?' என்றும புதியன புதியனவாகத துனப எண்ணங்கள் தோனற, 'மற்ற நோயகளுக்கு மருந்துணடு, யான உறற நோயக்கு மருநதில்லை' என்று எவரும் எந்நாளும் அடையாத துன்பத்தை அடைந்து, நாவறண்டு மனம் மருண்டு அறிவு சோர்நது ஆவி பதைபதைக்க, இபபோது பகல் இப்போது இராததிரி என்ற வேறுபாடறியாதவ ளாய், இருந்த இடம் செல்லரிகக அதைவிட்டு எழாதவளா யிருந்தாள்.]

38. மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி னலாந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை யுன்னுவாள்

கொண்டுகூட்டு: (தசரதன, 'நீ என) மெயததிருப பதத்தினை மேவு' என்ற போதினும, (கைகேயி,) 'இததிருவைத் துறந்து ஏகு' என்ற போதி னும, சிததிரததின அலாநத செநதாமரையை ஒதது இருந்த (இராமன்) முகததினை(ச சீதை) உனனுவாள.

பொருள்: (தசரதன், இராமனை நோக்கி, 'நீ எனது இராச சியச) செலவப் பதவியை ஏறறுக்கொள்வாயாக' என்ற சமயத் திலும, (கைகேயி) 'இந்தச செல்வததைக் கைவிட்டுக (காட்டுக் குச்) செலவாயாக' என்ற சமயததிலும, சிததிரததிலே தோன் றும செந்தாமரை மலர்போல(ப் பொலிவு மிகுதலும் குறைதலு மின்றி) இருநத இராமன் முகத்தை நினைவுகூர்வாளானுள் சீதை.

மெய்த்திரு வென்றது, தசரதனது செல்வத்தை நோக்க, மற்ற வேந்தர்களின் செல்வம் பொய்யா மெனனுமபடி, அவன் செல்வம் சிறந்த தென்பதைக் குறித்தது. அலர்தல் - தோன்றுதல்.—பரிபா.

இன்பம் வந்ததென்று இறையளவும் இறுமாந்துவிடாமலும், துன்பம் வந்ததென்று சோர்ந்துவிடாமலும் உள்ள, அரிய துறவிகள் பாலும் அரிதாகக் காணப்படுகின்ற, இராமனது அருமையிலும் அருமையான மனநிலைமையை நினைந்து அப்படிப்பட்ட நாயகனைப் பிரிய நேர்ந்ததே யென்று சீதை வருந்தினாள் என்பது கருத்து. (௩௮)

[இவ்வாறாக, இராமன் காட்டுக்குப் புறப்படும்போது,—அவனிடத்துக் காணப்பட்ட அருங்குணத்தையும்; அதன் முன்பு,—தன் மணத்துக்குப் பணயமாக வளைக்கும்படி வைத்திருந்த பெருவில்லை முறித்த பேராண்மையையும்; மணவினை நிகழும்போது தன் காலைக் கையால் எடுத்து அம்மிமீது வைத்த அருமைச் செய்தியையும்; இருபத்தொரு முறை பூமியைச் சூழ்ந்து சென்று அங்கிருந்த அரசர் குலத்தை அழித்த பரசுராமன் 'வளைக்க வல்லையேல் வளை' யெனக் கொடுத்த வில்லை வளைத்து, அவன் அகந்தையை அடங்கி ஒடுங்கி வணங்கப் புரிந்த வலிமையையும்; இராமன் காட்டுக்குச் சென்ற பின்பு,—]

39. ஆழ நீர்க்கங்கை யம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் றம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன
வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்

கொண்டுகூட்டு: ஆழ நீர்க் கங்கையில் அம்பி கடாவிய ஏழை வேடனுக்கு, 'எம்பி நின் தம்பி, நீ தோழன், மங்கை கொழுந்தி' எனச் சொன்ன நண்பினை உன்னி மயங்குவாள்.

பொருள்: (இராமன் சக்கரவர்த்தி திருமகனாயிருந்தும், அந்த மிக்குயர்ந்த நிலைமையைக் கருதாமல், தன்னோடொப்பிட்டால் மிக்க) ஏழையாகவுள்ள குகனை நோக்கி, 'என் தம்பி உன் தம்பி; நான் உன் தோழன், சீதை உன் கொழுந்தி' என்று (உரிமை பாராட்டிச்) சொன்ன (உயர்ந்த) சிநேக குணத்தையும் நினைவுகூர்ந்து மயங்கலானாள் சீதை.

ஆழநீரக கஙகை - ஆழமான நீரையுடைய கஙகையாறு. அம்பி - தோணி. கடாவுதல - செலுததுதல. எமபி - என தம்பி. வாழி, அசை.

அரசரெலலாரையும வென்ற பரசுராமனைத தன ஆணமையினுல பெருமையறச செயதவனே, தன கேணமையினுல, எளிய குகனைப பெருமையுறச செயதா னெனறதனுல, இராமன வனபுடையாரககு வனபும அனபுடையாரககு அனபும செயதமை மிக அழகாகக கூறபபட்டிருக கினறது.

இராமன், குகனிடததுத் தனககு அனபு அதிகபபட்ட முறையே இயலபாகவும படிபபடியாகவும அவனை உரிமைப பாடடில உயாததுவாறுய, அவனை நோககி 'என தமபி உன தமபி, நான உன தோழன' என்று கூறி, அமமட்டில் அமையாமல, மிகக கிட்டின உறவினனை நோககிக கூறுமாறு 'என மனைவி உன் கொழுநதி' எனறுனெனறு இராமன் நட்புரிமை பாராட்டுந திறததில் ஒபபுயாவிலலாதவ னெனபதை விளககிய நயம மிகச சிறந்தது.

‘ “ஆழி நணபினை உனனி அழுஙகுவாள்” எனனும பாடடதுககுக கடல் போலும பெரிய நடபை நினைதது வருந்தத தலைப்பட்டா ளெனறு உரைகக.’ *

பாட பேதம்: ஆழி நணபினை யுன்னி யழுஙகுவாள். (௩௯)

திரிசடை சீதையைத் தேற்றுதல்

[மேற்கூறியவாறு சீதை வருநதிககொண்டிருக்கும்போது, நடு இராததிரி ஆக, அவளைச சூழ்நது காவல் செய்த அரக்கிய ரனைவரும உறககமுறறனா: அப்போது, சீதை, திரிசடையை நோக்கி 'நீ ஒருத்தியே நல்லவள. என தோழியாவாய. எனக்கு இடப பக்கததுள்ள கண் முதலிய உறுப்புகள் துடிககின்றன. இவைகள இவ்வாறே என் கலயாணததுக்கு முனனும துடிததன. இதனுல் எனக்கு யாது நேருமெனறு நீ ஆராயநது சொல்வாயாக' எனறுள். திரிசடை, 'இக்குறி நீ உன் நாயகனை அடையும் குறி. ஒரு பொன்னிற வண்டு உன காதில் ஊதிப் போனது. அது உன் நாயகன தூதுவன் வரபபோவதை உணர்ததியதாம. பல துன்னிமித்தங்கள் தோன்றுகின்றன. இவை இராவணனும் இராக்கதரும இறந்தொழிதலைக குறிபபனவாம். இபபோது யான் கண்ட கனவைக கேட்பாயாக. இரண்டு சிஙகங்கள் ஒரு குன்றிலிருந்த பல புலிக கூட்டங்களைத் திரட்டிக் கூட்டிக்கொண்டு இலஙகைக்கு வநது இராக்கதர்களைக் கொன்றுவிட்டுத் திரும்பிச சென்றன.

* வை. மு. கோ.

இங்கு வந்து தங்கியிருந்த மயிலும் கூடச்சென்றது * ஒரு பெண், பல சுடர்த் தட்டு விளக்கு ஒன்றை ஏந்தி இராவணன் மாளிகையினின்று புறப்பட்டுச் சென்று விபீடணன் மாளிகையுட் புகுந்தாள். † அப்படிப் புகுந்த சமயத்தில் 'நீ என்னைத் துயிலெழுப்பினை' எனச், சீதை, 'நீ திருமபவும் தூங்கிக் கனவைக் குறையும் காண்!' என்றாள். ‡]

அனுமான் சீதையைப் பார்த்தல்

[அப்போது அங்கே அனுமான் வந்தான். கோர விகார குரூபிகளான கொடிய அரக்கிமார்கள், 'பொல்லாத தூக்கம், தூங்காமற் சீதையைக் காவல் செய்யும்படி இராவணன் இட்டிருந்த கட்டளையைக் கடக்கும்படி செய்தது' என்று கூறித், தூக்கத்தில் நழுவவிட்ட ஆயுதங்களை எடுத்துக்கொண்டு எழுந்தார்கள். 'இவர்கள் பெண்ணென்று பேர் படைத்துப் பெண் தன்மைக்கு மாறாக ஆயுதம் தாங்கிச் சேனைபோலத் திரண்டிருப்பதன் காரணம் யாது?' என்று அனுமான் அவர்கள் இருந்த இடத்தைக் கூர்ந்து நோக்கினான். நோக்கவே, அங்கே, மேகக்கூட்டங்களினுள்ளிருந்து அவைகளைப் பிளந்துகொண்டு வெளிப்படுகின்ற மின்னைப்போல, அந்தக் கரிய இராக்கதப் பெண்கூட்டத்துள்ளிருந்து சீதை விளங்கக் கண்டான். கண்டவுடன் 'இப் பெண்மணி, தன் கண்ணீர்த் தடாகத்திடையே அன்னம் போலவும், என் மனக் காரிருமபைப் பாடுபடுமாறு இழுத்துக் கவரும் செங்காந்தம் போலவும் தோன்றுகின்றாள். இவளே சீதை. இராமன் கூறிய இலக்கணங்களெல்லாம் இவளிடத்தில் இருக்கின்றன. இவள் கற்பு ஒரு சிறிதும் கலங்கியதன்று. பஞ்சாக்கினி மத்தியில் நின்று ஐம்புலன்களையும் அடக்கி, உண்ணும் உணவையும் குடிக்கும் நீரையும் ஒழித்து, வருந்தி நோற்பவர்களுடைய அருந்தவம், கற்புடைய மாதர் மனத்தவத்தோடு ஒப்பிடத்தக்க சிறப்புடையதாகச் சொல்லவும்படுமோ!' என்று களி கூர்ந்து, 'இராமன்

---

* இது, இராம லக்குமணர்கள் வானர சேனையுடன் வந்து, இராக்கதரைக் கொன்று, சீதையைச் சிறைமீட்டுச் செல்வதைக் குறித்தது.

† இது, பல போகங்களையும் அளிக்கும் இராசிய லக்குமி இராவணனை நீங்கி விபீடணனைச் சேர்வதைச் சுட்டியது.

‡ இது, நாடக நிகழ்ச்சிபோலக் கவி சாதுரியமாகக் கூறியது.

உயிரை இராவணன் ஒருவரும் அறியாமல் ஒளித்து வைத்திருக்கும் விதத்தை என்னென்பேன! இராமன் உயிராகிய சீதை இலக்குமியே! இராமன் திருமாலே! கற்பினுக்கு அருங்கலமாகிய சீதைக்குத் தந்தையாகப் பெற்ற சனகனைப் புகழ்வேனோ! கணவனாகப்பெற்ற இராமனைப் புகழ்வேனோ! அடிமையாகப் பெற்ற என்னைப் புகழ்வேனோ! யாரைப் புகழ்வேன! உலகத்திலே சீதை பிறந்ததனால், பெண்பிறப்பும் பெண்களுக்குரிய நாணம் முதலிய நற்குணங்களும் மிக்க சிறப்பை அடைந்தன இவள் இவ்வாறு கற்பினைக் காத்திருக்கும் காட்சியைக் கண்ணாரக் காணும் பாக்கியத்தை இராமன் பெற்றிலனே!'' என்று அனுமான் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, அந்த அசோகவனத்திலே, இராவணன் தோன்றுவானாயினன்.]

4. நிந்தனைப் படலம்

[இராவணன் காதல் வார்த்தைகள் கூற, சீதை அவனைத் துரும்பாகக்கொண்டு கடிந்து நிந்தித்ததைக் கூறுவது]

இரவில் இராவணன் சீதை யிருந்த அசோக வனத்துக்கு வருதல்

40. சிகரவண் குடுமி நெடுவரை யெவையு
மொருவழி திரண்டன சிவண
மகரிகை வயிர குண்டல மலம்புந்
திண்டிறற் றோள்புடை வயங்கச்
சகரவே லையினீர் தழுவிய கதிரிற்
றலைதோறுந் தலைதோறுந் தயங்கும்
வகையபன் மகுட மிளவெயி லெறிப்பக்
கங்குலும் பகல்பட வந்தான்

கொண்டுகூட்டு: *சிகரம் வள் குடுமி நெடுவரை எவையும் ஒரு வழி திரண்டன சிவண, மகரிகை வயிர குண்டலம் அலம்பும் திண் திறல (உடைய) தோள்கள் புடை வயங்க, சகர வேலையின் நீர் தழுவிய கதிரின் தலைதொறும் தலைதொறும் தயங்கும் வகைய பல் மகுடங்கள் இள வெயில் எறிப்ப(தால்) கங்குலும் பகல்பட, (இராவணன்) வந்தான்.*

பொருள்: மலைகளெல்லாம் ஓரிடத்துத் திரண்டனபோல இருபது தோள்கள் விளங்க, (கருமையான) கடலைச் சேர்ந்த (உதய) சூரியர்போல(க் கரிய) தலைகடோறும் விளங்கும் கிரீடங்கள் இளவெயில் போன்ற ஒளி வீசுதலினால் இராத்திரி பகல் போலத் தோன்ற, இராவணன் வந்தான்.

சிகர வண் குடுமி - சிகரமென்ற வளமான உச்சி. நெடு வரை - உயர்ந்த மலை: நெடுமை நீளமன்றி உயர்வையும் பெருமையையும் குறிக்கும். எவையும் - எல்லாம். ஒரு வழி - ஓரிடத்தில். சிவண - போல. மகரிகை வயிரகுண்டலம் - வயிரமிழைத்த மகர குண்டலங்கள் அலம்புதல் - அசைதல் திணி திறல் - திணிந்த வலி - மிகுந்த பலம். புடை வயங்க - (இரண்டு) பக்கமும் விளங்க. சகரவேலை - சகரரால் தோண்டப்பட்ட சமுத்திரம். கதிரின் - சூரியன்போல. தயங்கும் - பிரகாசிக்கும். வகைய - (பத்து) வகை (- விதம்) உடைய. பத்துக் கிரீடங்கள் பல கிரீடங்களெனப்பட்டன. படல - தோன்றுதல்.— புறப். வெண். மாலை.

இராவணனது கரிய பெரிய தேகமாகிய கடலின்மீதே பத்துத் தலைகளாகிய உதயகிரிகளின் மேலே, துவாதசாதித்தருள் இருவரொழிய எஞ்சிய பத்துச் சூரியர்போலப் பத்துக் கிரீடங்கள் பிரகாசித்தன வென்றும், அச் சூரியப் பிரகாசத்தால் இரவொழியப் பகல் தோன்றுதல் போலக் கிரீட ஒளியால் நடுஇராத்திரி இருள் நீங்கிப் பகல்போலாயிற்றென்றும், அதிசயம் விளையக் கூறிய நயம் கொண்டாடற்குரியது.

'ஒன்றுத உலக மூன்றும் உணர்கின்ற ஒருவன' என்னும் இராவணனின் மகோன்னத நிலை இதுமுதல் பதினொன்பது பாட்டுக்களில் வருணிக்கப்படுகின்றது. பின்னர்ச் சீதை அவனை ஒரு பொருளாய்க் கருதாது 'துரும்பு' ஆகக் கொண்டு இழித்துக் கூறுவதற்கு இந்தக் கெம்பீரத் தோற்றம் முரணாக விளங்குகின்றது காண்க. (௪0)

[ஊர்வசி உடைவாளேந்தித் தொடர, மேனகை வெற்றிலை மடித்துக் கொடுத்துக்கொண்டு வர, மற்றைத் தேவ மாதர்கள் புடைசூழத், தீபமேந்தி எண்ணிறந்த மடந்தையர் செல்ல, அம் மாதர் பூண்டிருந்த இரத்தினாபரணங்கள் தீப ஒளியோடு சேர்ந்து இருளை விழுங்க, அவர்கள் அணிந்திருந்த பூமாலை, பச்சைக் கருப்பூரம், கலவைச் சாந்து முதலிய பரிமள திரவியங்கள் பல திசைகளிலும் பரிமளிக்க, அன்னங்கள் ஒலித்துக்கொண்டு நடத்தல் போலக் காற்சிலம்பு ஒலிக்க அந்த மடந்தையர் படர்ந்து நடந்தனர்.]

41. அந்தரம் புகுந்த துண்டேன முனிவுற்
றருந்துயி னீங்கினு ணடைச்
சந்திர வதனத தருந்ததி யிருந்த
தண்ணறுஞ் சோலையின் றனையோ
மந்திரம் யாதோ யாரோடும் போமோ
வென்றுமா மனமறுக் குறலால்
இந்திரன் முதலோ ரிமைப்பிலா நாட்ட
முகிழ்த்தன ருயிரப்பவிந் திருப்ப

கொண்டுகூட்டு : ‘(இராவணன) அநதரம் புகுநதது உணடு என முனிவு உறறு, அருந துயில நீஙகினுன், (அவன கருதிச செலவது) ஆண டைச சநதிர வதனதது அருநததி இருநத தண நறும சோலையையோ? (அவன) மநதிரம யாதோ? (அவன கோபம) யாரொடு போமோ?’ எனறு மா மனம மறுககு உறலால இந்திரன முதலோர இமைபபு இலா நாடடம முகிழ்த்தனராய உயிரபபு அவிந்து இருபப (அவன வநதான).

பொருள் : ‘(இராவணன், யாதோ இதுவரை நேராத) மாறு பாடு நேரநதிருககிறதென றெண்ணிக கோபங்கொண்டு, தூக்கம நீங்கியிருக்கிறுன்; (அவன குறித்துச் செலவது) சீதை யிருக்கும சோலையையோ? (வேறெவவிடத்தையோ?) அவன ஆலோசனை (யில உள்ளது) யாதோ? (அவன கோபம) யா(ருயி)ரோடு முடியுமோ?’ என்றெணணி மனம மறுகுதலுறறதனுல், இநதிராதி தேவாகள் (அவன கோபத்துக்குத தாநதாம இலசகா யிருககலா மென்று பயமடைந்து அதனுல் இயல்பாக எப்போதும்) இமையாத கண்கள் (இமைதது) மூடபபெறறவராய (ஓயாது இயங்கும) மூசசு (இயங்காமல்) அடங்கினவராயிருக்கும்படி இராவணன வநதான்.

அநதரம் - வேறுபாடு. ஆணடை - அஙகு. வதனம் - முகம். அருந்ததி - அருநததி போலும கறபுடையாளாகிய சீதை. தண - குளிர்சசியான. நறும - வாசனையான. சோலை இனதனை - சோலையை: இன, தன சாரியைகள. மநதிரம - ஆலோசனை. முகிழ்ததல - மூடல. உயிரபபு - மூசசு.

பாட பேதம் : சோலையிற றுனே. (சுக)

42. நீனிறக் குன்றி னெடிதினிற் றாழ்ந்த
நீத்தவெள் ளருவியி னிமிர்ந்த
பானிறப் பட்டின் மாலையுத் தரியம்
பண்புறப் பசும்பொனா ரத்தின்
மானிற மணிக ளிடையுறப் பிறழ்ந்து
வருகதி ரிளவெயில் பொருவச்
சூனிறக் கொண்மூக் கிழித்திடை துடிக்கு
மின்னென மார்பினூ றுளங்க

கொண்டுகூட்டு: *நீல் நிறக குனறின் (நின்று) நெடிதினில தாழந்த நீததம் வெள அருவியின, நிமிாநத பால நிறப பட்டின மாலை(யாத தரித்த) உத்தரியம் பணபு உற, பசும் பொன ஆரததின மால நிற மணிகள இடை உற, (அவை பொனனுடன) பிறழநது வரு கதிா இள வெயில் பொருவச, சூல நிறக கொணமூக் கிழிதது (அதன) இடை துடிக்கும் மின் என, மார்பில் நூல துளஙக (அவன வநதான).*

பொருள்: *நீல நிறமுடைய மலையினின்று நீளமாக இறஙகு கினற வெள்ளை அருவிபோல, நீண்ட பாலின் நிறம படைத்த (வெண்) பட்டு மேலாடை (அவனுடைய கரிய பெரிய தோள் களில்) அணியப்பெற்று (அவ்வருவியின்) அழகை உற, (அவன மார்பில் அணிநத) பொன மாலையிலே, பேரொளியுடைய இரத் தினங்கள் இடையே (கோககப்படடு) உற, (அந்த இரத்தி னஙகள் பொன்னுடன்) பிரகாசித்து உண்டாம ஒளி இளவெயில் போலக், கரு(க்கொண்டு கரு) நிறம் படைதத மேகததைக் கிழித் துக் கொண்டு (வெளிப்பட்டு அம மேகததின) நடுவிலே துடிக் கினற மின்போல, அவனுடைய (கரிய) மாாபிலே (அணிந்துள்ள) பூணூலானது அசைய அவன வநதான்.*

நீல - நீலம். நீததம் - வெளளம். நிமிாநத - நீணட.—புறப் பொ. வெண். மாலை. *மாலை - ஒழுஙகு. உததரியம - மேலாடை - அஙக வஸதிரம. பணபு - அழகு*—தி. அ. *மால - பெருமை. நிறம - ஒளி. பிறழநது - பிரகாசிதது. வரு கதிா - உண்டாகும ஒளி. பொருவ - ஒப்ப. கொணமூ - மேகம். இடை - நடு. துளஙக - அசைய.* (சஉ)

[*அவன் அரையில் அணிந்திருநத பொன்னுடை மலையை வளைந்த மஞ்சள் வெயில்போல விளங்கக், கறபகக் கொம்புகள்*

பூத்தாறபோல இருபது கைகளிலும் செம்பொன் மோதிரங்கள் திகழ, அரககியர் இயக்கியர் அரம்பைய ராதியோர் கூட்டம் மலை யைச சார்ந்த மயிறகூட்டம் போல அவனைச சூழ்ந்துவர, வாததிய முழககமும் வாயப்பாட்டோசையும பேதமினறி இனிது கலந் தொலிக்கும் இனனிசையானது விடம் கக்கும் நாகங்கள் அமிழ்தம் உமிழும்படி செயய, 'மேகம் வரககண் டுளங்களிததது விரிக்குந் தோகை மயிலாட'ல் போலக் கார்நிறம் படைதத அவனைக் கண்டு களித்து மயில்போன்ற நடன மாதர் நடிததுச செல்ல, அவன் தேகததில மன்மத பாணங்கள் துளைதத புண்களிலே காய்ச்சிய வேல் புகுந்தாற் போலச சந்திர கிரணங்கள் நுழைய, அப் புண் களிலே உருக்கிய செம்புத துளிகள்போலச செநதேன் துளிகளைத் தென்றறகாறறு மலர்களிலிருநது வாரிக் கொண்டுவந்து தெறிக்கப், பூமாலை முதலிய நறுமணப் பொருள்கள், ஆடல்பாடல், நிலவு, தென்றல் ஆகிய காமோத்தீபகமானவைகளால் விரக வேதனை மிகுதியாக வளர வந்தான்.

வேண்டுவார யாவரேனும் எதிர்ப்படுவரேல், அவர்க்கு ஈதற்குப் பூமாலை, சநதனம், களபம, பொன்னணிகள், இரத்தி னாபரணங்கள், பொற்காசுகள் முதலியவற்றை ஏந்தி ஏந்திழையார் எண்ணிறநதோர் பின் தொடாநதுவரக், கரிய மலைமீது வெள்ளிய பாறகடல் அலை வீசிப் பரநதாற்போல இருபது தோள்களின் மேல் உலாவும்படி வெண்சாமரைகளை மெல்லியலார் பலர் வீசி வரக், கருஙகடல்மேல் விளங்கும் களங்கமற்ற பூரண சந்திரன் போல வெண்கொறறக் குடை பிடிக்கப்பட்டு வரத, தாடகையினும் பலம மிகுநத தையலார் பலர் பலபல ஆயுதஙகளைத் தாங்கிப் புடை சூழ்ந்துவரச, சீதை யிருந்த இடந் தெரிந்திருநதும் காம பரவசததால் திகைப்புறற சிந்தையனுய்த் தனக்குச் சீவாதார மான மாணிக்கததை யிழநத பலதலைப் பாம்புபோலப பல இடங் களினுஞ் சென்று தேடி யலைந்து வநதான்.]

அனுமான் சீதைக்கு அருகே சென்று மறைவாயிருத்தல்

[அப்போது அவனைக் கண்ட அனுமான், கூர்நது நோக்கி, அவனுடைய வஞ்சனையும் செய்கையும் அவற்றால் விளையும வினை வும அவ்விடத்தே விளங்குமென்றெண்ணிச, சீதை யிருந்த விடத் துக்குச் சமீபத்திலே சென்று மறைவா யிருந்தான்.]

இராவணன் வருகையைக் கண்டு சீதை அஞ்சுதல்

43. ஆயிடை யரக்க னரம்பையா குழுவு
மல்லவும் வேறய லகல
மேயினன் பெண்ணின் விளக்கெனுந் தகையா
ளிருந்துழி யாண்டவள் வெருவிப்
போயின வுயிர ளாமென நடுங்கிப்
பொறிவரி யெறுழ்வலிப் புகைக்கட்
காய்சின வுழுவை தின்னிய வந்த
கலையிளம் பிணையெனக் கரைந்தாள்

கொண்டுகூட்டு: *ஆயிடை, அரக்கன், அரம்பையா குழுவும் அல்லவும் வேறு அயல் அகல்ப, பெண்ணின் விளக்கு எனும் தகையாள் இருந்துழி மேயினன். ஆண்டு, அவள், வெருவி, உயிர்போயினளாம் என நடுங்கிப், பொறி வரியும், எறுழ் வலியும், காய்சினம் புகைக் கண்ணும் உடைய உழுவை, (தன்னைத்) தின்னிய வந்த கலைஇளம் பிணை எனக், கரைந்தாள்.*

பொருள்: *அப்போது, இராவணன், (தன்னுடன் வந்த) தேவமாதா கூட்டங்களும், (இயக்கியர் முதலிய மற்றப் பெண்கள் கூட்டங்களும், அவை) அல்லாத(வைகளான, சீதையைக் காவல் செய்திருந்த, அரக்க மடவார்) கூட்டங்களும் (அவனைவிட்டு) வேறாகிப் பக்கங்களிலே (விலகித் தூரமாக) நீங்கத, (தனியனாய்ச்) சீதை யிருந்த இடத்தை அடைந்தான். (அடையவே,) அவள், அஞ்சி, உயிர்போகின்றவள் போல நடுங்கி, (தன்னைத்) தின்னுதற்கு புலி (நெருங்கி) வரப்பெற்ற மான் போல (உடல் ஒடுங்கி) மெலிவுற்றாள்.*

ஆயிடை - அவ்வேளையில். குழு - கூட்டம். அல்லவும் - அல்லாதனவும் - அல்லாத கூட்டங்களும். வேறு அயல் அகல - வேறாக(ப் பிரிந்து) பக்கங்களிலே (தூரமாக விலகிப்போய்) நீங்க. மேயினன் - மேவினன் - சேர்ந்தான். பெண்ணின் விளக்கு - பெண்ணாகிய விளக்கு - பெண்களுள்ளே (அழகு மிகுந்து) விளங்குகின்றவள். இன், சாரியை. மிதிலைக் காட்சிப் படலம் ௪௦-ம் பாட்டில் பாம்பாகிய மணித்தாம்பு என்பது "பாம்பின் மணித்தாம்பு" என்பப்பட்டது போலப் பெண்ணாகிய விளக்கென்பது இங்கே பெண்ணின் விளக்கு எனப்பட்டது. தகை - அழகு. இருந்துழி - இருந்த உழி - இருந்த இடம். ஆண்டு - அங்கே. பொறி - வரி —சிந்தா

பொறி, வரி, என்ற இரண்டு சொறகளும மீ, மிசை போல ஒருபொருள் குறிததவை. பொறி வரி போல எறுழ வலி, இரணடும ஒருபொருள் குறித்தவை. காய சினம - கோபிககினற கோபம். சொல வளம குறிதத ஒரு வகை நயம தோனறப பொறிவரி எறுழவலி காயசினம என அடுககிக கூறினா. புகை - கோபத் தீயின புகை. உழுவை - புலி. தின்னிய - தினன. கலை - குலைகினற. பிணை - பெண மான. (சுந)

அப்போது இருவர் நிலைமையையும் அனுமான் பார்த்தல்

44. கூசி யாவி குலைவுறு வாளையும்
ஆசை யாலுயி ராசழி வானையும்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்
ஊச லாடி யுளையு முளத்தினன்

கொண்டுகூட்டு: கூசி ஆவி குலைவு உறுவாளையும் ஆசையால உயிர ஆசு அழிவானையும (அனுமான்) காசுஇல (தன்) கண் இணை சானறு எனக கணடனன். (காணவே), ஊசல ஆடி உளையும உளததினன (ஆனான).

பொருள்: (உயிரினுஞ் சிறந்த கற்புக்கு ஆபத்து வருமோ வென்று) பயப்பட்டு (உடலேயன்றி) உயிரும் நடுங்குகின்ற சீதா தேவியையும, காமத்தால் விரைவாக உயிர் அழிகின்ற இராவணனையும் அனுமான், தன இரண்டு கண்களும் சாட்சியாக நேரே கண்டான். (காணவே, அவள் இணங்கா ளாதலால் கொன்று விடுவானோ வென்ற சந்தேகத்தினால்) ஊஞ்சல் போல ஆடி வருநதுகினற மனத்தினன் ஆனான்.

கூசி, இஙகே நாணி யென்று பொருள்படாமல் பயப்பட்டு எனறு பொருள்பட்டு நின்றது. கூசசம் - அசசம்: கூசுதல - பயபபடல்.—சூ. அ. ஆசு - விரைவு. ஆசின் - விரைவாக. — பெருங்கதை. காசு - குறறம். சானறு - சாட்சி. உளையும் - வருநதும்.

ஊசலாடி யென்றது சீதையின கறபைச் சந்தேகித்தன்று: 'காசுண்ட கூந்தலாள் கற்புநு காவலும் - ஏசுணட தில்லையால்: அறததுக் கீறுண்டோ!' எனறு முன் (காட்சிப படலம் 68-ம பாட்டில்) அனுமான தெளிந்து கூறியதுகொணடு தெரிந்து கொள்க. (சுச)

இராவணன் சீதையை இணங்கும்படி வேண்டுதல்

45. இன்றி றந்தன நாளை யிறந்தன
என்றி றந்தருந் தன்மை யிதாலெனைக்
கொன்றி றந்தபின் கூடுதி யோகுழை
சென்றி றங்கி மறந்தரு செங்கணாய்

கொண்டுகூட்டு: *'குழை (அளவு) சென்று இறங்கி மறம் தரு செங் கண்ணாய்! இன்று இறந்தன, நாளை இறந்தன, என இறத்தில (நீ) தரும தன்மை இது ஆ(கையா)ல், (நீ) என்னைக் கொன்று (நான்) இறந்தபின் கூடுதியோ?*

பொருள்: *'(இன்றைத்தினம் நீ இசைவாய், இன்றைத் தினம் நீ இசைவாய் என்று யான் எண்ணியிருந்த பல) இன்றைத் தினங்கள் (என் எண்ணம் முற்றுப் பெறாமல் வீணே) கழிந்தன; (அவ்வாறே, நாளைத்தினம் இணங்குவாய், நாளைத்தினம் இணங்கு வாய் என்று யான் எதிர்பார்த்திருந்த பல) நாளைத்தினங்களும் (பயன் தராமல்) ஒழிந்தன;* ஐயோ! என் விஷயத்தில் நீ அருளும் இயல்பு இவ்வாறு யிருக்கின்றபடியால், (உன் காதல் காரணமாக நான் சாகும்படி) நீ என்னைக் கொன்று நான் இறந்து பட்டபின்புதான், நீ என்னைக் கூடுவாயோ? (உன் இரக்கமின்மை யிருந்தவாறு என்னே!)*

குழை - காது. குழை சென்று இறங்கி மறம் தரு செங்கணாய - காது (வரையும்) சென்று பாய்ந்து (கண்ட காளையர் காமுற்றுத் துன்பம் அடையும்படி) கொடுமை செய்கின்ற சிவந்த கண்களை யுடையாளே! (சரு)

46. உலக மொன்றோ டிரண்டோருங் கோம்புமென்
அலகில் செல்வத் தரசிய லாணையில்
திலக மேயுன் றிறத்தனங் கன்றரும்
கலக மல்ல தெளிமையுங் காண்டியோ

கொண்டுகூட்டு: *'திலகமே! ஒன்றொடு இரண்டு உலகங்களையும் ஒருங்கு ஓம்பும் என் அலகுஇல் செல்வத்து அரசில் இயலுகின்ற ஆணையில், அனங்கன் உன் திறத்துத் தரும கலகம் அல்லது (வேறு) எளிமையும் காண்டியோ?*

---

* *முதலடிக்கு, 'இன்றை வரையிலும நாள்கள் கழிந்தன; இனியும் அவ்வாறே கழிவதா யிருக்கின்றன' என்பது முந்திய உரை.*

பொருள் : ' மூன்று உலகங்களையும் ஒரு சேர முழுதும அரசாட்சி செய்கின்ற எனனுடைய அளவிலாத ஐசுவரியமுடைய இராசாங்கததிலே (தடையில்லாமல) செல்லுகின்ற ஆககினை யிலே, (இதுவரை என் எதிர் நிறகும வலியில்லாதிருந்த) மன மதன் உன் அழகு வலியினுல் செய்கின்ற போர்க் கலகம (காரண மாக நான் எளிமைப்படுதல்) அல்லாமல், வேறு எநத எளிமைப் பாட்டையும் காண்கின்ருயோ?

ஒன்ருெடிரணடு - மூன்று. ஒருஙகு - ஒரு சேர. ஓம்பும் - காவல் செயயும். அலகு இல - அளவு இலலாத திலகமே - திலகம் போலச சிறநதவளே! உன திறதது - உன விஷயததில், உன் வலியினுல்.

இஙகே, ' சீதையே, "உன்திறத் தனஙகன் தரும் கலகம்" ' என்றது போலப பொழிலிறுத்த படலம் 40-ல் ' சந்திரனே, "சீதை துயககினு லென்னைச சுட்டாய்" ' என வருதல் காணக. (சகு)

47. பூந்தண் வார்குழற் பொற்கொழுந் தேபுகழ்
ஏந்து செல்வ மிகழ்ந்தனை யின்னுயிர்க்
காந்தன் மாண்டிலன் காடு கடந்துபோய்
வாழ்ந்த வாழ்வது மானுடர் வாழ்வன்ருே

கொண்டுகூட்டு : ' பூந்தண வாாகுழல பொன கொழுந்தே! (என்) புகழ் ஏந்து செல்வததை இகழநதனே. (உன்) இன் உயிாக காந்தன் மாண டிலன (ஆயக) காடு கடநதுபோய வாழும் வாழ்வு மானுடா வாழவு அன்ருே!

பொருள் : ' என்னுடைய உயர்ந்த செல்வத்தை (அவ மதித்து வேண்டாமென்று) தள்ளிவிட்டாயே. (அச் செல்வத்தை யாருக்காகத் தள்ளிவிட்டாயோ, அந்த) உனது இனிய பிராண நாயகன் (மிருகங்களாலோ, அரக்கராலோ கொல்லப்பட்டு இறநது விடுவான்;) இறவாதவனுய (உயிர் தப்பிப் பிழைத்து, நீண்ட பதி னன்கு வருட வனவாசம் முடிந்து, கடத்தற்கரிய) காட்டைக் கடந்துபோய், (அயோததியை அடைந்து முடிசூடி அரசனுகி வாழ்நதாலும், அவனோடு நீ) வாழப்போகிற வாழ்வு (கேவலம் அற்பமான) மனித வாழ்வுதானே!

பூந்தண் வாா குழற் பொற் கொழுந்து - அழகிய குளிர்ந்த நீண்ட கூந்தலையுடைய பொன்னின கொழுநது போன்றவளே. ஏநதுதல் - உயாதல். இகழுதல் - அவமதிததல், தளளுதல்.—ச. அ. காந்தன - கண வன். 'வாழும் வாழ' வென்பது செயயுளாதலால 'வாழுநத வாழ்' வெனப பட்டது: காலவழுவமைதி. (சஎ)

48. நோற்கின் றூர்களு நுண்பொரு ளுண்ணிதின்
பார்க்கின் றூரும் பெறும்பயன் பார்த்தியேல்
வாாக்குன் றூமுலை யென்சொன் மவுலியால்
ஏற்கின் றூரோ டுடனுறை யின்பமால்

கொண்டுகூட்டு: 'வாா (அணிநத) குன்று ஆம முலை! நோறகின்று ரும் நுண பொருள் நுணணிதின பாககின்றூரும் பெறும் பயனை (நீ) பாாத் தியேல், என் சொலலை மவுலியால் ஏறகின்றூரொடு உடன உறை இனபம (அன்றி வேறில்லை).

பொருள்: 'கசசு (அணிந்த மலைகள் உளவேல், அந்த) மலைகள் போலும் தனங்களையுடையவளே! (யோகிகளாய்த்) தவஞ்செய்வோரும், (ஞானிகளாய ஞான நூலகளிற் கூறப்படும்) சூக்குமமான தததுவப் பொருள்களைக் கூர்மையாக ஆராய வோரும் அடையும் பலன்களை (நீ கவனஞ்செலுத்திக்) காண்பா யானல், (அந்தப் பலன்கள்) என் கட்டளைகளைத் தலையால் ஏற்றுச் செய்கின்ற (பிரமேநதிராதி தே)வர் (உறையும் உலகங்களில் அவர்)களுடன் வசிக்கும இன்பமே (யன்றி வேறில்லை யென்று தெரிவாய. நீ இணங்கினல், அப்படிப்பட்ட என் பெருஞ செல்வத்தை அநுபவிபபவளாவாய்).

நோற்றல் - தவஞ் செயதல். பாாததியேல - பாாப்பாயாளுல். வாா - கச்சு. ஆம் - போலும். வாாக குன்று, இல்பொரு ளுவமை. மவுலி - முடி; முடி சூடிய தலையை யுணாததியது (சஅ)

49. பொருளும் யாழும் விளரியும் பூவையும்
மருள நாளு மழலை வழங்குவாய்
தெருளு நான்முகன் செய்ததுன் சிந்தையின்
அருளு மின்மருங் கும்மரி தாக்கியோ

கொண்டுகூட்டு : 'பொருளும, யாழும், விளரியும், பூவையும் மருள நாளும மழலை வழஙகுவாய! தெருளும் நான்முகன (உன்னைச) செயதது, உன் சிந்தையின் அருளும, (உடமபின்) மின மருஙகும அரிது ஆககியோ?

பொருள் : 'பிரமன் உன்னைப் படைததது, உன் மனத்தில் இரக்கமும், உடம்பில் இடையும் இல்லையாகச் செய்துதானோ?

பொருள் - பிள்ளை: 'தம்பொருள் என்ப தம்மககள.'—குறள். விளரி - இரஙகினோர பாடும் பண். —சிலப். பூவை - நாகணவாயப புள். மருள - மயஙக. நாளும் - எபபொழுதும. மழலை - இளஞ்சொல, (குழந்தைகளின்) நிரம்பா மென்சொல். தெருளும் - தெளியும். அருள் - இரககம. மின் மருஙகு - மின போலும் இடை. அரிது, இன்மை குறிததது. முதலிரண டடிய பொருள்,'குழந்தைகளின் குரல், யாழின் இசை, விளரிப பண்ணொலி, நாகணவாயப பறவைத் தொனி ஆகிய இவைகள் மயஙக (இவை யெலலா வறறிலும இனிமையான) குதலைச் சொறகளை(ப் பிளளைப பருவததிறபோல) எலலாப பருவததிலும் மொழிகின்றவளே !' என்பது.

'மருளும்' என்ற பாடத்துககு, 'நாளும் மருளும் மழலை' யென்றுவது, 'மருளும் மழலை நாளும்' என்றுவது கூட்டிய பொருள் கொள்க.

'உனககு இரககமில்லை யாதலால், எனக்கு இரஙகி யருள்கின்றுயில்லை. உனனைப் படைத்தவன் உன் உடம்பில் மறறெல்லா உறுபபுககளையும் படைதது இடையை மட்டும் படைகக மறந்ததுபோல, உன் மனததில் மற றெலலா நறகுணஙகளையும படைதது இரககததை மட்டும் படைகக மறநது விட்டானோ?' என்னும் நயமுடைய பொருள் பினனிரணடடியில் அமைந் துளளது.

பாட பேதம் : மருளும். (௬௧)

['(காலம் என்னும் அளவுகாரன் சூரியன் என்னும் நாழி யால் அளக்க) ஆயுள் நாள்கள் தினமும் சிறிது சிறிதாகக் கழிந் தொழிந்து போகின்றன. அவை சென்றன சென்றனவன்றி, ஒன்றும் திரும்புவதில்லை. அப்படிப்பட்ட ஆயுள் நாளிலே, இன் பத்தை அநுபவித்தற்குரிய யௌவன பருவத்திலே அநுபவியா மல் எப் பருவத்தில் அநுபவிக்கப்போகின்றுய்? கிழப் பருவத் திலோ? நீ இணங்காயானல், என் உயிர்க்கு இறுதி நேரும். அது நேரினும் நேருக. அதைப் பொருட்படுத்தி அதற்கு வருந்து கின்றேனில்லை. பின் எதறகு வருந்துகின்றே னெனில், யான இறந்தபின் உன் இளமையையும் அழகையும் அநுபவிக்கத் தக்கா ரில்லையே யென்று வருந்துகின்றேன்.]

50. பெண்மை யும்மழ கும்பிற ழாமனத்
திண்மை யும்முதல் யாவையுஞ் செய்யவாய்க்
கண்மை யும்பொருந் திக்கரு ணைப்படா
வண்மை யேன்கொல் சனகரின் மாண்டவா

கொண்டுகூட்டு : 'பெண்மையும் அழகும் பிறழா மனத் திண்மையும் (இவை) முதல் (ஆன) யாவையும் செய்யவாய (இருக்கவும்), கண்மையும் கருணை பொருந்திப் படா வண்மையும் சனக (வம்சத்தா)ரில் மாண்ட ஆறு என்கொல ?

பொருள் : '(சனகன் குலத்திற் பிறந்ததற் கேற்ற) பெண் தன்மையும்,(அதற்கேற்ற) அழகும், (இவ்விரண்டுக்கும் ஏற்றதாய) வேறுபடாத மன உறுதிப்பாடும், இவை முதலாக எல்லா நன் மைகளும் செம்மையானவையாக உனக்கு இருக்கவும், தாட் சிணியமும அருள் பொருந்தி (அதனால்) நிகழும உதார குணமும் சனக வம்சத்தாரிடத்தில் (இதுவரையும இருந்தவை இப்போது) ஒழிந்துபோனவாறு யாது காரணமோ?

கண், கண்மை, கண்ணோட்டம, தாட்சிணியம, நாகரிகம என்பன ஒரு பொருள மொழிகள். கண்ணோட்டம் 'தனனொடு பயினறாரைக கண்டால அவா கூறியன மறுககமாட்டாமை' எனபா பரிமேலழகா. கருணை, கிருபை, அருள, இரககம என்பனவும் ஒரு பொருள மொழிகள். பழகினா பால் செலுததபபடுவது தாட்சிணியம. பழகினருளபபட இரஙகுதற குரி யாா யாவா மாட்டும செலுததபபடுவது இரககம். வண்மை - ஈகை. மாண்டவாறு, மாணடவா என ஈறு தொககு நினறது.

'(எல்லாராலும்) விரும்பததகக தாட்சிணியததை(த தமககு உடைமை யாக) வேணடுவோா, (தமமொடு பழகியவா தமக்கு உணணக கொடுககும உணவிலே, அவா) நஞசை இட(த தாம கணணா)க கணடிருநதும (அப பழகியவா வெறுததலுக்குக காரணமான மறுததலைச் செயயமாடடாராய், அநத நஞசிடபபடட உணவை) உணடு, (பினனும சாகுமளவும அவரொடு நட்பாயப) பொருநதியிருபப' ரெனறு பொருளபடும்

பெயக கணடும நஞசுணடமைவா நயததகக
நாகரிகம வேணடு பவா

என்ற குறளில தாட்சிணிய முதிர்ச்சியின பயனும், ஒரு புறவின பொருட் டுத தன் உடமபின் மாமிச முழுதும் அரிநது கொடுதத சிபிச் சககரவாததி

கதையில இரகக முதிராசசியின பயனும் அறியபபடும. இந்தக கருத்துக் கொ உடகொணடு கமபா, இராவணன சீதையை நோககிப, 'பழகின எனது வேணடுகோளை மறகக மாடடாத தாடசிணியங் காரணமாகவாவது, யான் உன காதலால இறநது படுவேனெனறு இரஙகும் இரககம் காரண மாகவாவது நீ இணஙகுகின்றாயிலலை யாதலால, மறறெலலா நறகுணங் களோடு தாடசிணியம இரககமெனற இவவிரணடு குணஙகளும உளள சனக வமிசததில அவையெலலாம இருபபவும இவை யிரணடுமடடும் இலலா தொழிந்து போனதறகுக காரணம யாதோ?' எனறு னெனறு ரெனக. (ருo)

51. வீட்டுங் காலத் தலறிய மெய்க்குரல்
கேட்டுங் காண்டற் கிருத்திகொல் கிள்ளைநீ
நாட்டுங் கானெடு நல்லறத் தின்பயன்
ஊட்டுங் காலத் திகழ்வ துறுங்கொலோ

கொண்டுகூட்டு: 'கிளளை! (இயமன், உன காதலால் என்னை) வீட்டும காலதது அலறிய மெயககுரல கேட்டு நீ (என மரண வேதனை) காணடறகு இருததிகொல்? நாடடுமகால, நெடு நல அறததின பயனை (விதி) ஊட்டும காலதது (அதனை) இகழவது உறுமகொலோ?

பொருள: '(யான் திக்குவிசயஞ் செய்தபோது எனக்குத் தோறற இயமன், உன காதல் காரணமாக, எனனை) வதைக்குங் காலததில் நான் வருந்தி வாய்விட்டு அலறும கூக்குரலைக் கேட்டு (என் மரண வேதனையை)ப் பார்ப்பதறகு இருக்கின்றாயோ? (இல்லையேல, இணங்குவாயனறே. உண்மையைக கூறி நிலை)நாட்டு மிடத்தில், (யான் உன அடிமையாய், என இராசசியம் உன்னை அடைவதாகிய) மிகச் சிறந்த புண்ணிய பலனை விதி அநுபவிக் குமபடி செய்யப் புகும்போது அதனை வேண்டா என்று வெறுத துத தள்ளுவது தகுமோ?

வீட்டல் - கொலலல். மெயக குரல - (நடிபபாக வன்றி) உணமை யாக (வருததபபடடுக) கூவும் கூககுரல. கேடடும எனபதில உம்மை இசைநிறை. நெடுமை, மிகுதி குறிததது. ஊடடும எனபதன் முன் 'விதி' சொல்லெசசமாக வருவிததுப பொருள கூறபபடடது, 'கறறதனாலாய' எனனும குறளிற 'கறறதனால்' என்பதன் முன் 'நூல' வருவிததுப பொருள கூறபபட்டது போல. உறும் - பொருநதும. கொல, அசைநிலை. ஓ, வினா இடைச சொல: எதிாமறைப பொருள குறிததது.

' "நான் உன்னைக் கொணர்தற்கு முன்னமே, உனது கணவனாகிய இராமன் மாண்டுபோனான், அவன் இறக்கும்போது, "ஹா ஸீதே! லக்ஷ்மணா!"' என்று கூறியதையும் நீ காதாரக் கேட்டிருக்கின்றாய், அப்படி யிருக்க, அப்பொழுது நீ கேட்ட குரலைப் பொய்க் குரலென்று கருதி, இராமனைக் கூடவேண்டு மென்று கருதுகின்றாயே! இஃது என்ன பேதைமை! உனது நல்விதி என்னை உன்னிடத்தாகக் கூட்டியிருக்க, அந்த நற்பயனை அவமதித்து நீ என்னை உபேக்ஷிப்பது தகுதியோ?" என்று இராவணன் கூறினனெனக்' என்பது முந்திய உரை. இவ்வுரை இப் படலம் 69-70-ம் பாட்டுக்களில், 'மனிதர் தம்மை அடுகிலேன் அவரை ஈண்டுக் கூவி நின் ஏவல் கொள்வேன்', 'இருவரை ஒருகையாலே பற்றினன் கொணருந் தன்மை காணுதி' என இராம லக்ஷ்மணர் உயிரோடிருப்பவராக இராவணன் சீதையை நோக்கிக் கூறும் கூற்றுக்களோடு பொருந்தவில்லை. (ருக)

['நீ இணங்கினால், யான் உயிர் தரித்திருப்பேன்; என் செல்வமும் நிலைத்திருக்கும்; இணங்காயேல், இறப்பேன்; இறக்கவே, என் செல்வம் விரைவில் அழிந்துவிடும். சீதை வந்து இராவணன் செல்வம் ஓங்கி வளர்ந்த தென்னும் புகழைப் போக்கி நீங்கி யழிந்த தென்னும் பழியைக் கொள்வாயோ?]

52. தேவர் தேவியர் சேவடி கைதொழும்
தாவின் மூவுல கின்றனி நாயகம்
மேவு கின்றது நன்கண் விலக்கினை
யாவ ரேழையர் நின்னி னிலங்கிழாய்

கொண்டுகூட்டு: 'இலங்கு இழாய்! தேவர் (அவர்) தேவியர் (உன்) சே அடி கைதொழும் தா இல் மூ உலகின் தனி நாயகம் நன்கண் மேவுகின்றதை விலக்கினை! நின்னின் ஏழையர் யாவர்?'

பொருள்: '(நீ கும்பிடும்) தேவரும் தேவ மாதரும் (உன்னைக்) கும்பிடும்படியான திரிலோகாதிபத்தியம் (அதனை உடைய என்னை ஆட்கொண்டாயானால் உன்னுடைமையாக) உன்னிடம் சேர்வதை (வேண்டாமென்று) விலக்கினாய்! உன்னிலும் அறிவிலர் யார் உளர்?'

தேவியர் - தெய்வப் பெண்கள்; (தேவர்) மனைவியரென்றலுமாம். சே - சிவப்பு: சே அடி - சிவந்த பாதம். கைதொழல், ஒரு சொல், கை கூப்பி வணங்கல் என்னும் பொருட்டு. 'தா' என்பது இங்கே குற்றம், கேடு,

பகை என்னும் பொருள்களை உணர்த்தி நின்றது. தனிநாயகம் - (வேறொருவருக்கும் பொதுவாக வைத்த) தனியாக ஆளும் தலைமை. நுனக்கண் - உன்னிடத்தில். ஏழைப்பா - அறிவிலா. இலங்கு இழை - விளங்கும் ஆபரணம் (உடையவள்). இழை, வினையால் இழாயென வாயிற்று.

பாட பேதம் : *கைதொழுத: ஏவ ரேழையா.* (௫௨)

53. குடிமை மூன்றுல குஞ்செயுங் கொற்றத்தென்
அடிமை கோடி யருளுதி யாலென
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்விழுந் தான்பழி பார்க்கலான்

கொண்டுகூட்டு: *பழி பார்க்கலான் (ஆய், இராவணன்), 'மூன்று உலகும் குடிமை செய்யும் கொற்றத்து என் அடிமை கோடி அருளுதி!' என முடியின்மீது முகிழ்த்து உயர் கையினனாய்ப் படியின்மேல் விழுந்தான்.*

பொருள்: *(பிறர் மனைவியரை விரும்புதலும் பெண்கள் காலில் விழுதலும்) பழி யென்று பாராதவனாய், (இராவணன்), 'மூன்றுலகத்தாரும் (எனக்குத் தாழ்ந்துநின்று ஏவல் கேட்கும்) குடிகளாகச் செய்த வெற்றியையுடைய என்னை அடிமையாகக் கொண்டருள்வாயாக!' என்று தலைமீது (கும்பிட்டுக) குவிந்து உயர்ந்த கையினனாய்த் தரைமேல் (சாட்டாங்கமாக) விழுந்து வணங்கினான்.*

குடிமை - குடி: மை, பகுதிப் பொருள் விகுதி. கொள்வாய் என்னும் பொருள் உள்ள கொள்தி, கோடி யென விகாரமாயிற்று. அருளுதி - அருள்வாய். ஆல், அசை. என - என்று. முகிழ்த்தல் - குவிதல். படி - பூமி.

பாட பேதம் : *படியின் மேற்படிந் தான்பழி பார்க்கிலான்.* (௫௩)

சீதை இராவணனைக் கடிந்து கூறல்

[*இராவணன் சொன்ன வசனங்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்பு நாராசங்கள் போலச் சீதாதேவி செவியுட் சென்று தீக்க, அவள் கடுங் கோபங்கொண்டு, அவனைத் துரும்பாக மதித்து, அவனை நோக்காமல், அவன் முன் கிடந்த ஒரு துரும்பை அவனாக முன்னிலைப்படுத்தித், தான் கூறும் வார்த்தைகளால் தன் உயிர்க்கு ஆபத்து நேரு மென்பதைப் பொருட்படுத்தாளாய்க் கூறுதலுற்றாள் :*

'நீ சொன்ன சொற்கள் கற்புடைய மாதர்பாற் கூறத் தகாதன. யான் கூறும் கடுமொழிகள் இறப்பிறந்த மாதருக் கேற்றவை யல்ல, ஆயினும் உன் மனம் மாறுபடும்பொருட்டு அவைகளைக் கூறக் கடவேனாய்க் கூறுகின்றேன்; கேள். மேரு மலையை ஊடுருவவேண்டுமென்றாலும், விண்ணைப் பிளந்து மேற்செல்லவேண்டுமென்றாலும், உலகங்களனைத்தையும் ஒருமிக்க ஒழிக்கவேண்டுமென்றாலும் இராமனுடைய அம்புகள் எளிதிலே செய்யவல்லன. நீ இதனை அறிந்திருந்தும், அறிவில்லாயாதலால், தகாத வார்த்தைகளைச் சாற்றித் தலைகள் பத்தும் தகர்படக் கடவையானாய்.]

54. அஞ்சினை யாத லானன் னாரிய னற்ற நோக்கி
வஞ்சனை மானொன் றேவி மாயையான் மறைத்து வந்தாய்
உய்ஞ்சனை போதி யாயின் விடுதியுன் குலத்துக் கெல்லாம்
நஞ்சினை யெதிர்ந்த போது நோக்குமே நினது நாட்டம்

கொண்டுகூட்டு: '(இராமனை நீ) அஞ்சினை ஆதலான், அன்று, வஞ்சனை மான் ஒன்றை ஏவி (விட்டு), ஆரியன் அற்றம் நோக்கி மாயையால் மறைத்து வந்தாய். உய்ந்தனை போதி ஆயின் விடுதி. உன் குலத்துக்கு எல்லாம் நஞ்சினை [- இராமனைப் (போரில்)] எதிர்ந்தபோது (அவனை) நினது நாட்டம் நோக்குமே!

பொருள்: '(நீ இராமனை எதிர்தற்கு) அஞ்சினாயாதலால், ஒரு மாய மானை (அவன் எதிரே செல்ல) ஏவிவிட்டு, (அதனைத் தொடர்ந்து அவன் சென்றானாக,) அவன் இல்லாத சமயம் பார்த்து உன் மாய வித்தையால் (நீ யாரும் நம்பும் சந்நியாசியாகி அந்த மாறுவேடத்துள்ளே) மறைந்து (என்னை வஞ்சித்துக் கவர) வந்தாய். (இப்போதாயினும் உனக்கு நற்புத்தி தோன்றி நீ) பிழைத்துப் போவாயானால், (என்னை நாடும் இந்தத் தீய எண்ணத்தை) விட்டுவிடு. உன் குலத்தாரெல்லாருக்கும் (மரணமுண்டு பண்ணும்) நஞ்சுபோன்ற இராமனைப் போரில் எதிர்ந்தபோது (நீ அவனை எதிர்த்துப் போர் செய்வது கிடக்க, பயத்தால் அவனை) உன் கண்கள் பார்க்கவேமாட்டா!

அஞ்சினை - பயந்தாய். ஆரியன் - பூசித்தற் குரியவன், இராமனைக் குறித்தது. 'அற்றம் - இல்லாமற் போன சமயம். (உ-ம்.) "அருந்தவன்

தந்தையை அறறம நோககியே" இராமா. திருவவதார. 41.' வஞ்சனை - மாயை.—பிங்கல உயஞசனை, உயநதனை யெனபதன மரூஉ. உயஞசனை, உயநது (- பிழைதது) என்ற பொருளபட நிறறலால முறறெசசம். போதி - போவாய. விடுதி - விடுவாய. நோககுமே யெனபதில ஏகாரம் எதிரமறை.

'விடுதி' யெனபதறகு, '(என்னை இராமபிரானிடததிற கொணடு போய) விட்டிடு' என்றும, 'நஞ்சினை எதிாநதபோது நோககுமே நினது நாட்டம்' எனபதறகு, 'உனது குலம முழுதுககும நஞசுபோன்ற என்னை எதிரில வநதபோது உனது கணகொணடு கூசாது பாாககக கடவையோ? ... என்னை நோ கினறு பாாததால உன குலத்துககே நாசம விளையும்' என்றும உரைகள உள்ளன. (ருச)

['கிழப் பறவையாகிய சடாயுவின் தாக்குதலையே தாங்க மாட்டாமல் சாயநது தரையில் விழுநத நீ, இராமனை யெதிர்த்துப போாசெயயும் தாழுடையையோ! உனது பத்துத தலைகளும இருபது தோள்களும் உயிரற்ற சிததிரததிலுள்ளவை போலச செயலறறவைகளாய், அவன அலட்சியமாக விளையாட்டாக எய தற்கேறற குறியா மன்றிப், போரிலே பொருட்படுத்தி எயதற்குத் தகுதியான இலககாகா.]

55. தோற்றனை பறவைக கன்று துள்ளுநீா வெள்ளஞ் சென்னி
ஏறறவன் வாளால் வென்று யன்றேனி னிறத்தி யன்றே
நோறறநோன் புடைய வாழுள் வரமிவை நுனித்த வெல்லாம்
கூற்றினுக் கன்றே வீரன் சரத்திற்குங் குறித்த துண்டோ

கொண்டுகூட்டு: 'அன்று பறவைககுத தோறறனை. துள்ளும் நீா வெள்ளம சென்னி ஏறறவன (- சிவன) வாளால (அப பறவையை) வென்றுய; அன்று எனின அன்றே இறததி. (நீ) நோறற நோனபும, (அதனுல பெறறு) உடைய வாழுநாள் வரமும, இவை (போலப பலமுடையனவாக நீ) நுனிதத எல்லாமும (அழிககான எனக,) கூறறினுககு(க குறிதத வரமபு) அன்றே? வீரன சரததிறகும (வரமபு) குறிததது உணடோ?

பொருள்: ' (நீ சடாயு தாக்குதலால் மூாச்சித்து வீழ்ந்த) அக்காலததில் அந்தப் பறவை(யாசனு)க்குத் தோறறுப்போனுய. (தேகபலததாற் செயிகக முடியாத அவனை வரபலத்தால வெல்லச சூழ்சசி செயது நீ சிவன்பால வரமாகப் பெறற சநதிரகாச மென் னும) வாளால் (அவனை வெட்டிக் கொன்று) வெற்றியுறறுய்; இல்லை யானுல் அப்போது இறநதிருப்பாய். நீ செய்த தவமும், (அதனுல்

நீ பெற்று) உடைய (மூன்றரைக் கோடி) ஆயுள் நாளும், ஆகிய இவைகளும் (இவைகள் போல உனக்குப் பலமானவைகளாக நீ) கூர்ந்தாராய்ந்து கொள்ளப்பட்டிருப்பவை யாவும் (இவைகளின் எல்லை நாள் முடியுமுன் இவைகளைக் காலன் அழிக்காதிருக்கக் கடவனெனக்) காலனுக்கு(க் குறித்த வரம்புகள்) அல்லவா? இராம பாணத்துக்கும் (இன்ன காலத்தில்தான் அழிக்கலா மென ஒரு வரம்பு) குறிக்கப்பட்டதுண்டோ? *

துளளும நீா வெள்ளம - குதித்துப் பாயும (கஙகை) நீரப் பெருக்கு. அனறெனின - இலலையானால. அனறு, ஏ அசைகள. 'அன்றே' என்ற தொடா 'அலலவா' என்று பொருள்கொள்ளுமபடியும நிறகின்றது. நோறறல - தவஞ்செயதல. நோனபு - தவம. துணிததல - கூாந்தாராய்தல. —மணிமேகலை.

அரசனுக்குக கீழ உள்ள அதிகாரிகளின கட்டளைகள அவாகளுக்குக கீழ்பபட்ட அதிகாரிகளைக கட்டுபபடுத்துவன வனறி அரசனைக கட்டுப படுததா. அவவாறே (இப படலம 49-ம பாட்டில),

'செஙகணமால நானமுகன சிவனென றேகொலோ
எஙகள நாயகனையும நினைநதது?...'

எனச சீதை கூறப்பெறற இராமனுக்குக கீழான பிரமன முதலியோா அளித்த வரஙகள இராமன சரந தொடுககும வரையே நிலைபபன வெனபது கருததது. இக கருத்து இதறகடுதத பாட்டில,

'.................. மலரயன முதலோா வாாததை
விற்றொடை யிராமன கோததது விடுதலும் விலககுண டெலலாம
இறறுடைந திறுதன மெய்யே விளககினமுன னிருளுண டாமோ?'

என்று அநுவதிககப்பட்டிருததல காணக. (ருக)

பெற்றுடை வாளு நாளும் பிறந்துடை யுரனும் பின்னும்
மற்றுடை யேவையுந் தந்த மலரயன் முதலோர் வாாத்தை
விற்றொடை யிராமன் கோத்து விடுதலும் விலக்குண் டெல்லாம்
இறறுடைந் திறுதன் மெய்யே விளக்கின்முன் னிருளுண் டாமோ

* இப்பாட்டின பின இரண்டடிகளுக்கும முநதிய உரை வருமாறு. 'செயத தவததின பயனாக (உனக்குக) கிடைதத (கோடிககணக்கான) ஆயுள நாளும, பின னும வரபலஙகளும (ஆகிய) குறித்துக கூறிய இவை யாவும யமதேவனால உனக்கு ஒரு துன்பமும நேரிடாமலிருததறகு அலலவோ' (அந்த உனது வரஙகள முழுதும) இராமபிரானது அமபுகளாலும யாதொரு தீஙகும நேராமலிருப்பதைக் குறிபபன வாகுமோ?' — வை. மு. கோ.

கொண்டுகூட்டு: '(நீ) பெற்று உடைய வாளும் நாளும், பிறந்து உடைய உரனும் மற்றுப் பின்னும் உடைய எவையும் (உனக்கு) மலர் அயன் முதலோர் தந்த வார்த்தை எல்லாம் இராமன் வில் தொடை கோத்து விடுதலும் விலக்குண்டு இற்று இடைந்து இறுதல் மெய்யே: விளக்கின் முன் இருள் உண்டாமோ?

பொருள்: '(நீ சிவனிடம்) பெற்றுடைய சந்திர வாளும், மூன்றரைக் கோடி ஆண்டு அளவான ஆயுள் நாளும், (உன்னோடு கருவில் உதித்து நீ பிறக்கும்போது உன்னோடு கூடப்) பிறந்து உனக்கு உடையதான அபூர்வ தேக பலமும், (ஆகிய இவைகளும், இவைகள்) அல்லாமல் (இவைகளினின்றும்) வேறாக (நீ தவத்தால் பெற்று) உடைய பேறுகள் யாவையும் (உனக்குப் பரமன்) பிரமன் முதலோர் அருளிய வார்த்தையான வரங்கள் இராமன் வில்லில் அம்பைத் தொடுத்துவிட்டவுடனே (அவைகளுக் கேற்படுத்தப்பட்ட முடிவு காலம்) மாற்றப்பட்டுக் கெட்டு அழிந்து ஒழிந்துவிடுதல் நிச்சயமாகச் சத்தியம்: விளக்குக்கெதிரே இருள் நிற்குமோ? (நின்றால், இராமன் அம்பின்முன் மேற்கூறிய வரங்கள் முதலியவைகள் அழிவுறாமல் நிற்கும்).

பெற்றுஉடை, பிறந்துஉடை, மற்றுடை என்பவைகளில் 'உடைய', 'உடை' என ஈறுதொக்கு நின்றது. உரம் என்பதன் விகாரமாகிய உரன், பெலம் என்னும் பொருட்டு. பின்னும் - அன்றியும். பின்னும், இன்னும், அன்றியும், அல்லதூஉம், மற்றும், வேறும் என்பவை ஒருபொருட் பன்மொழிகள்: (காஞ்சிப் புராணம், வீராட்டகாசப் படலம் ௩௪, ௩௬-ம் பாட்டுக்களைப் பார்க்க). மலர் அயன் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். வார்த்தை, வார்த்தையால் வழங்கிய வரங்களைக் குறிக்கும். 'மலர் அயன் முதலோர் வார்த்தை(யால்) தந்த எல்லாம்' என்று கூட்டிப் பொருள் கூறலாம். இது கடுங் கொண்டுகூட்டு. தொடை - அம்பு. வில் தொடை கோத்து - வில்லில் அம்பைத் தொடுத்து. விலக்குதல் - மாற்றுதல். — பிங்கல. உடைதல் - அழிதல், தகாதல். இறுதல் - கெடுதல்; அறுதல், முடிதல். இற்று, உடைந்து, இறுதல் என்ற ஒத்த பொருளுடைய சொற்களின் தொகுதி அழிதலை வற்புறுத்தியதாம்.

இதன்பின் 60-ம் பாட்டில் இராவணனை நோக்கிச்,

> 'செங்கணமால் நான்முகன் சிவனென் றேகொலோ
> எங்களநா யகனையும் நினைந்த தேழைநீ?'

என்று இராமன் மும்மூர்த்திகளுக்கு மேலானவ னென்பாள், (கீழதிகாரிகள் தீர்ப்புகளை மேலதிகாரிகள் மாற்றவல்லரா யிருத்தல் போல,)

பிரமன முதலியோா வரஙகளை இராமன் மாறறவலலனு யிருததலால, 'அயன முதலோா வாாதததை விடமெருடை இராமன கோதணட விடுதலும விலககுண டெலலாம, இறறுடைந திறுதல மெயயே' எனமுளா.

பாட பேதம் : பெறறுடை வரனும : இறறிடைந திறுதல. (ரு௬)

57. குன்றுநீ யெடுத்த நாடன் சேவடிக கொழுநதா லுன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரம் துரந்த மேரு
என்றுணைக் கணவ ஞற்றற குரனிலா திற்று வீழ்ந்த
அன்றெழுந் துயர்ந்த வோசை கேட்டிலை போலு மம்மா

கொண்டுகூட்டு : 'நீ குனறு எடுதத நாள, தன சே அடிக கொழுந் தால உன்னை வெனறவன், புரஙகள வேவத, தனிச் சரம துரநத மேரு(ஆகிய வில), என் துணைக கணவன் ஆறறறகு உரன இலாது இறறு வீழநத அனறு எழுந்து உயாநத ஓசை கேட்டிலை போலும! அம்மா!

பொருள் : 'நீ கயிலாய மலையை (வேரோடு பெயாதது) எடுத்த காலத்தில், தனது காற் பெருவிரலினுல உனனை அழுத்தி வென்ற சிவன, திரிபுரங்கள் எரிந்துபோம்படி, அமபு தொடுதது விட்ட மேரு மலையாகிய வில், என் உயிர்த் துணையான என் நாயகனது வலிமைக்கு (எதிராகத தாங்கும) வலிமையில்லாமல் ஒடிநது விழுந்த தற்சமயததில் உணடாகிய (உலகமெலலாம் கேட்ட) பேரொலியை நீ (மாத்திரம) கேட்கவில்லை போலும!

நாள - காலம. சே அடி - சிவநத பாதம். துரநத - செலுததிய. தனி சரம - ஒபபிலலாத அமபு. துணை - ஆதரவு, உயிாததுணை, உறற துணை யெனக கொள்ள நின்றது. ஆறறல - வலிமை. உரன - வலிமை: உரம், உரன் என விகாரபபட்டு நினறது. இறறு - ஒடிநது. கேட்டிலை - கேட்டாயில்லை. போலும, அம்மா அசைச சொறகள: போலும, ஒபபில் போலி, அமமா, அதிசயக்குறிபபு எனலுமாம.

'திரிபுர சஙகார காலததில் மேருமலை சிவபெருமானுககு விலலாக அமைந்ததனுல, சீதா விவாக காலததில கயாசுலகமாக ஏறபட்ட சிவ தனுசையும அபேதமாக அம மேருவாகவே கூறினுள.' *

'அறபமான ஒரு புழுவை நசுககுதல போல ஒரு விரலால உனனை நசுககிய பரமசிவனுடைய பாரமான வில என நாயகன வளைககப பொறுக காமல், ஒடிந்தபோது உணடாகிய உரதத ஓசை, உலகமெஙகும ஒலிததது.

* வை. மு. கோ.

நீயும் கேட்டிருப்பாய். அவன் ஆற்றல் எங்கே! உன் ஆற்றல் எங்கே! அப்படியிருக்கவும், இப்போது உன் வீரத்தை நீயே மெச்சிய நெடுமொழியை நோக்கினால் அந்தப் பேரொலி உன் காதுக்குமட்டும் எட்டவில்லை போலும்!' என்பது கருத்து.

இப் பாட்டில் 'சேவடிக் கொழுந்து' என்ற அருமையான பிரயோகம் ஆராயத்தக்கது. கால் விரலை ஆனந்தபரவச மடையும்படி புலப்படுத்துகின்ற, கம்பசிருட்டியாகிய, 'சேவடிக் கொழுந்து' என்ற, யாம் முன்னூல்களுள் எந் நூலுள்ளும் கண்டிராத, புத்தம்புதிய, நனியினிய சொற்றொடர், கம்பரது அரிய பாவனை வன்மையையும் இன்சொற் றொடுக்கும் திறத்தையும் ஏக காலத்தில் இனிது விளக்குகின்றது. 'குன்று' என்று ஆரம்பித்த அடிக்கு மோனை அமைக்க முயன்ற முயற்சியின் பயனாக, இந்த விழுமிய தொடர்மொழி, கம்பர் கருத்தில் உதித்த தென்பது, இதன் இறுதிச் சொல்லாகிய 'கொழுந்து' மோனைத் தானத்தில் நிற்றலால் விளங்குகின்றது. கொழுந்து, கொம்பு கொடிகளின் முடிவில் தோன்றும் இளந் தளிர். அது போலப் பாதத்தின் முடிவில் விரல் இருத்தலைப் பாவனையிற்கொண்டு செந்தீ யொத்த சிவந்த திருமேனியுடைய சிவபரஞ்சோதியின் சிவந்த பாதத்தின் முடிவில் செந்தீக் கொழுந்து போலத் திகழும் செவ் விரலைச் சீதை 'சேவடிக் கொழுந்து' எனச் செப்பினா ளென்ற நயம் பாராட்டற்பாலது. வேத முடிவில் உள்ளவ னென்பது குறிக்கும் 'மறைக் கொழுந்து' என்ற பெயர், சிவ நாமங்களுள் ஒன்றாயிருத்தல், இங்கே நினைவுகூரத்தக்கது. (ருஎ)

58. மலையெடுத் தெண்டிசை காக்கு மாக்களை
நிலைகெடுத் தேனெனு மாற்ற நேருநீ
சிலையெடுத் திளையவ னிற்கச் சேர்ந்திலை
தலையெடுத் தின்னமு மகளிற் றாழ்தியோ

கொண்டுகூட்டு: '"மலை எடுத்து எண் திசை காக்கும் மாக்களை நிலை கெடுத்தேன்!" என்னும் மாற்றம் நேரும் நீ, இளையவன் சிலை எடுத்து நிற்கச் சேர்ந்திலை. (நீ) இன்னமும் தலை எடுத்து மகளின் தாழ்தியோ?

பொருள்: '"கயிலாய மலையைப் பேர்த்து எடுத்தேன், அஃதல்லாது இந்திரன் முதலிய அட்டதிக்குப பாலகரை நிலை கெடச் செய்தேன்!" என்னும் வீர வார்த்தைகளை (இறுமாப்போடு ஆடம்பரமாக) வழங்குகின்ற நீ, இலக்குமணன் வில்லேந்தி (என்னைக் காத்து) நிற்க, (யான் இருந்தபோது, என்னைக் கவர) வந்தாயில்லை; (ஆண்மையின்றிப் பேடிபோல வஞ்சனை செய்து என்னைக் கவர்ந்தாய். இவ்வாறாக இழிவடைந்த) நீ, இன்னமும் (வீரன்

போலத் தலை நிமிர்ந்தவாயானால், அதிக இழிவடைவா யென்பதை யறியாமல) தலை நிமிர்ந்து (ஆண்மகனான நீ) பெண்மகளினும் (கேவலமாகத்) தாழ்வாயோ ?

மாற்றம் - வார்த்தை. நோதல - தருதல. சிலை - வில். மகளின தாழ்தியோ - பெண்ணினும கீழாவாயோ 'எண்திசை காக்கும் மாக்களை' எனபதற்கு அஷ்ட திக்கஜங்களை என்றும் பொருள் கூறுவா.

'தலையெடுத்து' என்ற வினையெச்சத்தைத் 'தாழ்தியோ' என்ற வினைமுற்றைக்கொண்டு முடிவதாகக்கொண்டு மேற் உரை கூறப்பட்டது. அவ்வாறு கொள்ளாமல, அந்த வினையெச்சம் 'சோர்ந்திலை' யென்ற வினைமுற்றைக் கொண்டு முடிவதாகக் கொண்டால, 'தலையெடுத்துச் சோர்ந்திலை' யென மாற்றிக்கொண்டு, 'இலக்குமணனை பெதிராகத் தலை நிமிர்ந்து வந்தா யிலலை, (அதனால ஆண்மை யிழந்து பெண் போன்றாய்,) இன்னமும (அதிக இழிவாக நடந்து) பெண்களினும கீழாவாயோ?' என்று பொருள் கூறலாம.

'மகளிரத் தாழ்தியோ' என்ற பாடம் கொண்டார், 'பெண்கள் காலினும வீழ்க்கடவாயோ?' என்று பொருள் கூறினார். *

பாட பேதம் : மகளிரத் தாழ்தியோ. (ருஅ)

59. ஏழைநின் னொளித்துறை யின்ன தாமென
வாழியெங் கோமக னறிய வந்தநாள்
ஆழியு மிலங்கையு மழியத் தாழுமோ
ஊழியுந் திரியுமுன் னுயிரோ டோயுமோ

கொண்டுகூட்டு : 'ஏழை! நின் ஒளித்த உறை(யுள்) இன்னது ஆம என எம கோமகன அறியவந்த நாள், (அவன் கோபம) இலங்கையும் ஆழியும அழியத் தாழுமோ ? உன உயிரொடு ஓயுமோ ? ஊழியும் திரியும.

பொருள் : 'அறிவிலலாய ! (நீ ஒளித்துக்கொண்டிருக்கும) மறைவிடம இதுவாமென்று எங்கள் கோமான் (ஆன இராமன்) தெரியவந்த காலத்தில் (உன்னை அழித்தற்கு உண்டாகும் அவன கோபம, உனக்கு அரணான இந்த) இலங்கையும (இதற்கு அரணாக இதனைச் சூழ்ந்துள்ள) கடலும அழிய(ச் செய்து, அமமட்டோடு) தணியுமோ ? (தணியாது; இலங்கையையும இலங்கையை வளைந்த கடலையும் அழிப்பது உனனை அழித்தற பொருட்டாதலால் அவைகளை அழித்துப், பின்பு உன்னை அழித்து,) உன உயிர் போனதோடு

* வை. மு. கோ.

(ஆயினும்) தீருமோ? (தீராது: அக்கோபத்தால்) ஊழியே மாறுதலுற்று (உலக முழுதுமே முடிந்து)விடுமே.

ஏழை - அறிவிலான். ஒளித்துறை - ஒளித்து உறையும் இடம் - மறைவிடம். வாழி, அசை. — சிந்தர். கோமகன் - தலைவன். ஆழி - கடல். தாழ்தல் - தணிதல். ஊழி - உக முடிவு காலம். திரிதல் - மாறுதல். தாழும், ஓயும் என்ற வினைமுற்றுக்களுக்கு இராமன் கோபம் தோன்ற எழுவாய். அதுவே அடுத்த பாட்டில் வீயும் என்ற வினைமுற்றுக்கும் எழுவாய்.

'ஊழியும் திரியும்' என்றது, 'நெடுங்காலம் கழித்து வரற்பாலதாகிய ஊழி (தான் வரவேண்டிய காலம்) மாறி (முன்னதாகவே வந்து)விடும்; வந்துவிடவே, இலங்கையும் இலங்கை சூழ்ந்த கடலு மல்லாத ஏனைய நிலங்களும் கடல்களும் உட்பட உலக முழுவதும் அக் கோபத்தால் அழிந்துவிடு' மென்றபடி. இப் பாட்டில் இக் கருத்து இருப்பது இதற்கடுத்த பாட்டினால் விளங்குதல் காண்க *

பாட பேதம்: ஒளித்துறை இன்னிடத்தென: அறிந்து வந்த நாள்: ஊழியுந் தீயும். (௫௯)

60. வெஞ்சின வரக்கரை விளித்து வீயுமோ
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தால்
எஞ்சலி லுலகெலா மெஞ்சு மெஞ்சுமென்
றஞ்சுகின் றேனிதற் கறனுஞ் சான்றரோ

கொண்டுகூட்டு: '(அவ் வெகுளி) வெம் சினம் (உடைய) அரக்கரை விளித்து வீயுமோ? நீ வஞ்சனை செய்ய வள்ளல் சீற்றத்தால் எஞ்சல் இல் உலகு எலாம் எஞ்சும்! எஞ்சும்! என்று அஞ்சுகின்றேன். இதற்கு அறனும் சான்று.

பொருள்: '(அந்தக் கோபம், உன்னைக் கொல்வதனோடு தீராமல் உன்னைச் சார்ந்த) இராக்கதரைக் கொன்று அம்மட்டோடு தீருமோ? (தீராது.) நீ ஒருத்தன் வஞ்சனை செய்துவிட (- கபடஞ் செய்து என்னைத் திருடிவிட,) அதனால் உண்டாகிய இராமபிரான் கோபத்தால் (இப்போது) குறைவில்லாதிருக்கின்ற உலகம் முழுதும் அழிந்துவிடுமே யென்று அஞ்சுகின்றேன்!

---

* 'ஊழியும் தீயும்' என்ற பாடங்கொண்டு மூன்றுமடிக்கு 'ஊழிக்காலத்துத் தோன்றுகின்ற காலாக்கினியையும் தீர்ந்துபோம்படிச் செய்ய வல்ல, (மிக்க பராக்கிரமமுள்ள) உனது உயிரையும் வாங்கித்தான் அடங்குமோ?' என்பது மூந்திய உரை.

யான் இவவாறு அஞ்சுதல் உண்மை யென்பதற்கு (என் நெஞ் சனறி)த தருமதேவதையும சாட்சியாகும்.

வெம் சினம அரககா - கொடிய கோபத்தையுடைய இராககதா். விளிதது - கொனறு. வீயும் - நீஙகும்: 'வீநீககம பூபபுளசாவாம'. எஞ சல - குறைதல. எஞசும - இறககும - அழியும். எஞசும எஞசும எனற அடுக்கு அழிவது திணணமெனத துணிவு குறிததது. அறன் எனறது அறககடவுளே. சானறு - சாட்சி. அரோ, ஈறறசை. (கூ0)

61. அங்கண்மா ஞாலமும் விசும்பு மஞ்சவாழ்
வெங்கணாய் புன்றொழில் விலக்க மேற்கோளாய்
செங்கண்மா னான்முகன் சிவனென் றேகோலோ
எங்கணா யகனையு நினைந்த தேழைநீ

கொண்டுகூட்டு: 'அமகண மாஞாலமும் விசுமபும் அஞச வாழ வெஙகணாய! புன தொழிலை விலகக மேறகொளாய செஙகண மால, நானமுகன், சிவன எனறேகொலோ எஙகள் நாயகனையும நினைநதது! நீ ஏழை.

பொருள்: 'மண்ணுலகிலுள்ளோரும விண்ணுலகிலுள்ளோரும அஞசும்படி(யாக அவர்களுக்குத் துன்பம் செய்து கொண்டு) வாழ்கினற கொடியோனே! (நீ செய்கினற) இழி தொழிலை நீக்குதலைத தொடங்குகின்றாயில்லை. (உன் அக்கிர மங்களை அடகக இயலாமலிருக்கினற) திருமால், பிரமன், சிவன் (போனற சாமானியன்) எனறேறு எங்கள தலைவனான இராமனையும எண்ணினாய்! நீ அறிவில்லாதவன் (ஆதலால அவ்வாறு எண்ணி னாய. திரிமூர்ததிகளுக்கும மேலானவன இராமனெனறு தெரிநது கொளவாயாக).

அம் கண மாஞாலம - அழகிய இடமுடைய பெரிய பூமி. விசும்பு - விண, விணணுலகததைக குறிததது. ஞாலமும விசும்பும ஆகுபெயராய அவவிடஙகளில் வாழவாரை உணாததின வெஙகண் - கொடுமை. புனமை - ஈனம். புனதொழில - ஈனமான செயகை. மேறகொள்ளல - தலைபபடல - தொடஙகல. மேற்கொளாய் என்பதறகு மேறகொளவாயாக வென்றும் மேறகொள்கினறாயில்லை யெனறும் பொருள கூறலாம்.

இராமன, பரம்பொருளின் கூறுகள் சிலவே யுடைய முத தேவாபோ லனறி, அவாகளிடததுள்ள கூறுக ளனைததும ஒருசேர உள்ளவன் எனபது பின்னிரணடடிக கருதது. இராமனுக்கு மும்மூர்ததிகளும் 'அளவி

ஒப்பாவரே யன்றி .. .. ..தனித்தனி கிடைப்ப ரோதுணை '* என வருதல் காணக. (கூக)

62. இருவரேன் றிகழ்ந்தனை யென்னின் யாண்டெல்லை
ஒருவனன் றேயுல கழிக்கு மூழியான்
செருவருங் காலையென் மெய்ம்மை தேர்தியால்
பொருவருந் திருவிழந் தநாயம் பொன்றுவாய்

கொண்டுகூட்டு : 'இருவர் என்று இகழ்ந்தனை என்னின், உலகை யாண்டு எல்லையில் அழிக்கும் ஊழியான ஒருவன் அன்றே? செரு வரும் காலை என் மெய்ம்மை தேர்தி. (அப்பொழுது) பொரு அரும் திரு இழந்து அநாயமாகப் பொன்றுவாய்.

பொருள் : '("யானோ அளவற்ற படைத்துணை யுடையேன். இராமனுக்குத் துணை இலக்குமணன் ஒருத்தனே. ஆக, இவர்கள்) இருவர்தானே!" யென்று அலட்சியஞ் செய்வாயானால், (யான் சொல்வதைக் கேள்: பிரமன் முதலிய தேவர்கள் அளவற்றோருடன் கூடிய) உலகத்தை உக முடிவில் சங்காரஞ்செய்யும் ஊழி முதல்வன் ஒருவனேயன்றோ? இனிப் போர் நிகழும்போது நான் உண்மையே உரைத்தேனென்பதை நீ தெளிவாகத் தெரிவாய். (போரில் தோல்வியடைந்து உனது) ஒப்பில்லாத செல்வத்தை யிழந்து போவதல்லாமல், அருமையான உயிரையும் அநியாயமாக இழந்துவிடுவாய்.

யாண்டு எல்லை - ஆண்டுகளின் எல்லை - (யுகங்களின்) ஆண்டுகளின் (முடிவாகிய) எல்லை - யுகாந்த காலம். ஊழி - யுகமுடிவு. ஊழியான - ஊழி(யில் நிகழும் சர்வசங்காரத்து)க்கு உரியவன் - சங்கார கர்த்தா - சங்கரன். பொரு அரும் - ஒப்பில்லாத. திரு - செல்வம். அநாயமாக என்பது அநாயம் எனச் சுருக்கிக் கூறப்பட்டது. நாயம் அநாயம் என்பவை நியாயம் அநியாயம் என்பவற்றின் மரூஉ. பொன்றுதல் - சாதல்.

இங்கே 'அநியாயமாகச் சாவாய்' என்றது, 'நெறி வழுவாதிருந்தால் நெடுங் காலம் வாழ்வதற்குரிய நீ நெறி வழுவி அகால மரணம் அடையப் போகின்றாயே!' என்ற பரிதாபத்தால் கூறியது, அக்கிரமஞ் செய்வதனால் சாபவனது சாவு நியாய மன்றென்று கூறியதன்று. தீய வழியிற் செல்வானை 'அநியாயமாகக் கெட்டுப்போகிறானே!' என்று பரிதபித்துக் கூறும் உலக வழக்கு இங்கே கருதத்தக்கது.

* கிட்கிந்தா காண்டம், கலன்காண் படலம் — கக.

இறுதி யடிக்கு, 'உன் அநியாயத்தால் உன சொத்தையும் உயிரையும் இழப்பாய்' என்று பொருள் கூறுதலும் உண்டு. இப் பொருளுக்கு அநாயத் தால் என்பது அநாயம் என உருபு தொக்கதாகக் கொள்ளல்வேண்டும்.

பாட பேதம் : விலக்கி : ஆவி பொன்றுவாய். (கூஉ)

63. பூவிலோ ஞாதி யாகப் புலன்கள்போ நெறியிற் போகாத்
தேவரோ வவுணர் தாமோ நிலைநின்று வினையிற் றீர்ந்தார
ஏவலெவ் வுலகுஞ் செய்யச் செல்வநிற் கிசைந்த தென்றால்
பாவமோ முன்னீ செய்த தருமமோ தெரியப் பாராய்

கொண்டுகூட்டு : வினையின் தீர்ந்து நிலைநின்றா புலன்கள் போம் நெறியில் போகாப் பூவிலோன் ஆதியாக (உள்ள) தேவரோ ? அவுணர் தாமோ ? எவ்வுலகும் ஏவல் செய்யச் செல்வம் நிறகு இசைந்தது என்றால், நீ முன் செய்த தருமமோ ? பாவமோ ? தெரியப் பாராய.

பொருள் : 'பாவங்களினின்று நீங்கி (அழியாமல்) நிலைத் திருப்பவர்கள், மனத்தை அடக்கி ஐம்புல வழியிலே செல்லாத பிரமன் முதலாக உள்ள தேவர்களோ, (அவ வழியிலே சென்ற) அசுரர்களோ? (என்று நான் கேட்பதற்கு மறுமொழியாக, "நான் மனத்தை அடக்காமல் என் இட்டப்படியே நடக்கின்றேன். நீ தீவினை என்று கூறும் வினையினின்றும் நீங்கிலேன். ஆயினும் நான் மூன்றுலகத்தையும் ஆளும் பாக்கியமுடையேனா யிருக்கி றேன்" என்று நீ கூறலாம். நீ கூறுமாறு) எல்லா உலகத்தோரும் நீ இட்ட கட்டளையைச் செய்யும்படியாகச் செல்வம் உன்னை அடைந் திருக்கின்றது என்றால், அப்படி அடைந்திருப்பது, நீ (பிரமன் முதலிய பெருந்தேவரைக் குறித்து அருந்தவஞ்) செய்த நல்வினை யினாலோ, (நீ இப்போது மேற்கொண்டிருப்பது போன்ற) தீவினை யினாலோ? எதனாலென்று தெரியும்படி ஆலோசித்துப் பார்ப்பா யாக ! (ஆலோசித்துப் பார்த்தால், நலவினையால் ஐசுவரியம் அடைந்து இன்புறுகின்றாயென்றும், தீவினையால் செல்வமிழந்து துன்புறுவாயென்றும் தெரிந்துகொள்வாய். யான் ஏன் இதன் முன் "வெங்சரணுய, புன்றொழில் விலக்க மேற்கொளாய" என்றே னென்பது நன்கு விளங்கும்.)

பூ இ(ல்)லோன் - தாமரைப் பூவை வீடாக (- இருப்பிடமாக) உடை யவன் - பிரமன். புலன்கள் - சுவை, ஒளி, ஊறு (பரிசம்), ஓசை, நாற்றம்

(மணம்) என்ற ஐம்புலன்கள். அவுணர் - அசுரர். தீர்தல் - நீங்குதல். ஏவல் - கட்டளை - ஆணை நிறகு - நினைக்கு - உனக்கு. 'நிலைநின்று வினையிற நீரநதார்' என்பதை 'வினையிற நீரநது நிலைநின்றார்' என்ப பொருளுக்குப் பொருத்தமாக விகுதி பிரித்துக் கூட்டியிருக்கிறது காண்க.

'இரணியன் முதலிய அசுரர்கள் தீவினை யுடைமையால் நிலைத்திராமல இறந்தொழிந்தனர். அவ அசுரர்கள் வாழ்நதபோது அவர்களுக்கு அடிமைகளா'யிருந்த தேவர்களோ, தீவினை யின்மையால் நிலைத்திருக்கின்றனர். தம்மை அடிமைப்படுத்திய அசுரர இறந்த பின்னும் வாழ்வாராயுள்ள தேவர்கள அவர்களை அடிமைகளாக உடைய நீ இறந்த பின்னும நிலைத்திருப்பர்' என முற்பாதிக் கவிக்குப் பொருள் விரித்துரைக்கலாம். (௬௩)

['அகத்தியனாதி முனிவர்கள் எம்பெருமானிடம வந்து, "யாங்கள இராக்கதர் இயற்றும் கொடுமைகளைத் தாங்கமாட்டாமல் வருந்தித் தவஞ் செய்யமுடியாம விருந்துவருகின்றோம். அவர்களைக் கொன்று எங்களைக் காத்தருள்வாயாக. உன்னால் அவர்கள ஒழிந்துபோவது உறுதியாக உண்மையே!" என்று கூறியதை நான் நேரே கேட்டேன். அதற்கிசைவாக நீ என்னைக் கவர்ந்து அவனுக்கே கொடுமை செய்தாய். அம் முனிவர்கள் கூற, உன் வரலாறு முழுவதுங் கேட்டு, உன் வலிமை, நெடிய ஆயுள், பெரிய சேனை முதலிய எல்லாவற்றையும் நன்கு தெரிந்து கொண்ட பின்பே, எங்கோன், உன் தங்கை மூக்கு முதலிய உறுப்புக்களையும உன் தம்பியர் கரசரனாதி அவயவங்களையும சின்ன பின்னங்களாகச் சேதித்திருக்கின்றான்' என்று கூறிச் சீதை பின்னும் கூறுகின்றாள்.]

64. ஆயிரந் தடக்கை யானின் னைந்நான்கு கரமும் பற்றி
வாய்வழி குருதி சோரக் குத்திவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத் தோள்க ணித்தவன் றொலைந்த மாற்றம்
நீயறிந் திலையோ வேகு நெறியறிந் திலாத நீசா

கொண்டுகூட்டு: 'ஏகும் நெறி அறிந்திலாத நீசா! (தனது) ஆயிரம் தடக் கையால நின் ஐந் நான்கு கரமும் பற்றி வாய்வழி குருதி சோரக் குத்தி வான் சிறையில் வைத்த தூயவனது வயிரத் தோள்களைத் துணித்தவன் (- பரசுராமன) தொலைந்த மாற்றம் நீ அறிந்திலையோ?

பொருள்: '("உன் நாயகனை பெண்பாலான என் தங்கையையும் சிறுவரான என் தம்பியரையும் வலி தொலைத்ததுபோல என்னையும் வலி தொலைக்க வல்லாயோ?" என்பாயேல், கூறுகின்றேன். கேள்.) தனது ஆயிரங் கைகளால் உனது இருபது கைகளையும் (இறுகப்) பிடித்து உன் வாய்வழியே இரத்தம் வழியக் குத்திச் சிறையிலிட்ட கார்த்தவீரியார்ச்சுனனுடைய (ஆயிரம்) தோள்களை வெட்டியெறிந்த பரசுராமனை (என் நாயகனால் வலி அழிந்து) தொலைந்த செய்தியை (உலகமெல்லாம் அறியுமே;) நீ (ஒருவன் மட்டும்) அறியவில்லையோ! (இராவணனை வென்றவனை வென்றவனை வென்ற இராமன் இராவணனை வெல்வது மிகவும் எளிதினும் மெளிதென்றபடி).

தடக்கை - விசாலமான கை - பெரிய கை. கரம் - கை. குருதி - இரத்தம். சோர - வடிய. வான சிறை - பெரிய சிறைச்சாலை. தூயவன - சுத்தன் - களங்கமற்றவன. வயிரத் தோள - வயிரம்போல வன்மையுடைய தோள்கள். துணித்தவன - வெட்டியெறிந்தவன். மாற்றம் - சொல: சொற்களால தெரிவிக்கப்படும் செய்தியை உணாத்தியது. ஏகும் நெறி அறிந்திலாத நீசா - செலலுதறகுரிய நலவழியைத் தெரிந்துகொள்ளாத இழிந்தோனே.

பாட பேதம்: அன்று ஐங்கானகு: நீதி நெறியறிந் திலாத. (கூச)

65. கடிக்கும்வல் லரவுங் கேட்கு மந்திரங் களிக்கின் றோயை
அடுக்குமீ தடாதென் றுன்ற வறிவினை லேதுக் காட்டி
இடிக்குந ரில்லை யுள்ளா ரெண்ணிய தெண்ணி யுன்னை
முடிக்குந ரென்ற போது முடிவன்றி முடிவ துண்டோ

கொண்டுகூட்டு: 'கடிக்கும் வல் அரவும் மந்திரம் கேட்கும். களிக்கின்றோயை "ஈது அடுக்கும், (ஈது) அடாது" என்று ஆன்ற அறிவினை ஏதுக் காட்டி இடிக்குநா இல்லை. உள்ளாா, (நீ) எண்ணியது (தாம்) எண்ணி உன்னை முடிக்குநா என்றபோது, (உனக்கு) முடிவது முடிவு அன்றி (வேறு) உண்டோ?'

பொருள்: 'கடிக்கப் புகுந்த பாம்பும் மந்திரம் கூறினால் கேட்டுக் கடியாமல் அடங்கும். [நீயும் தக்க மந்திரம் (-ஆலோசனை) கூறுவா ரிருந்தால், கேட்டுச் செயயப்புகுந்த தீச்செயலைச் செய்யாமல் அடங்குவாய.] "இது தக்கது, இது தகாதது" என்று

தமது நிறைந்த அறிவினால் (அறிந்து, எந்தக் காரணத்தினால் எதனையும் தக்கதென்றோ தகாததென்றோ தாம் கண்டார்களோ அந்தக்) காரணத்தைக் (குறைந்த அறிவுடைய நீயும் தெரிந்து கொள்ளும்படி) காட்டி உறுதிகூறுவார் ஒருவரும் இல்லை. இருக்கிறவர்களோ, (தாங்கள் நன்மை தீமைகளை ஆராய்ந்து தெளிந்து உனக்கு நற்புத்தி புகட்டாராய், நீ) நினைப்பதைத் தாங்களும் நினைந்து உன்னை முடிவு (-சாவு) அடையச் செய்பவரானால், உனக்கு இறுதியாக நேர்வது மரணமன்றி வேறு உண்டோ? (இல்லை)' என்று சீதை தான் சொல்லவேண்டியதைச் சொல்லி முடித்தாள்.

மந்திரம் - (செபிக்கும்) மந்திரம்; ஆலோசனை. களிக்கின்றோயை - மதாத்துத் திரிகின்ற உன்னை. ஈது - இது. 'ஈது அடுக்கும், (ஈது) அடா' தெனப் பொருத்திப் பொருள் கொள்க.

உணர்மை யுள்ள துயிரில்லை ஊனஉண்ண
அணர்துதல செயயா தளறு

என்ற குறளில 'ஊன' போல 'ஈது' 'மததிமதீபம்' என்னும் அலங்காரததுக்கும் தாபபிசைப பொருள்கோளுக்கும் உதாரணமாம். ஏது - காரணம். இடித்தல - உறுதி கூறல. முடித்தல - சாகச் செய்தல. முடிக்குநா - சாகச் செய்கிறவா. எனறபோது - எனறால: குகப படலத்தில 'தாயுரை' என்ற பாட்டில 'என்றபோது' 'என்றால' என்று பொருள்பட வருதல காண்க. 'முடிவது (- இறுதியாக நோவது) முடிவன்றி (- சாவலலாமல) உண்டோ' என இயைக்க.

பாட பேதம்: அடாத தீதென றறிவினால் ஏது: ஏதுவோ டறிவு: இல்லை நீயே. (சுங)

இராவணன் காமத்தினும் கோபம் மிகுதல்

66. என்ற றத்துறை கேட்டலு மிருபது நயனம்
மின்றி றப்பன வொத்தன வெயில்விடு பகுவாய்
குன்றி றத்தெழித் துரப்பினன் குறிப்பதென் காமன்
தன்றி றத்தையுங் கடந்தது சீற்றத்தின் தகைமை

கொண்டுகூட்டு: என்று அறத் துறையை (இராவணன்) கேட்டலும் இருபது நயனம் மின் திறப்பன ஒத்தன; வெயில் விடு பகு வாய குன்று இறத் தெழித்து உரப்பினன், (அவன்) சீற்றத்தைக் குறிப்பது என்? அதன் தகைமை காமன்தன் திறத்தையும் கடந்தது.

பொருள் : என்று சீதை கூறிய வாசகங்களை இராவணன் கேட்டவுடனே (கடுங் கோபமுண்டானதனால், அவனுடைய) இருபது கண்களும மின்னலகளை வெளிபபடுத்துவன போல்வன (வாயக கோபத தீயைக் கொட்டுவன) வாயின ; (பறகள் வெள) ஒளி வீசுகின்ற பத்து வாய்களாலும மலைகளும் தகர்ந்துவிடும்படி அதிர்சசியுண்டாக அதட்டி ஆரவாரித்தான ; (அவன கோபத்தின் உக்கிரத்தைக்) கூறுவானேன் ! அநதக் கோபததின் தன்மை, மன்மதன் வன்மையையும் மீறிவிட்டது !

அறத துறை - தரும மார்க்கம் : (' துறைதிறம் பாமற காக்கத தோன் றினன்.' வாலிவதைப படலம்—௭௪). வெயில - ஒளி. பகு வாய - பிளநத வாய - (திறககபபட்டு) அகன்ற வாய. இறுதல் - ஒடிதல. தெழித்தல - அதட்டல. உரபபல - உரததொலிததல். குறிததல் - சொல்லுதல : (' கொணடு போகநின் இவுளியென் றுறறனன குறிததான் '. அகலிகைப் படலம—௪௧). தகைமை - தனமை. ' எனறறததுறை ' எனபது எனற அறததுறை என்பதன தொகுதத லெனலுமாம்.

கரிய இராவணன் காரமேகமாகவும, அவன கணணினறு கோபத தீசசுவாலை புறபபடல் மேகததினகணணினறு மினனல வெளிபபடலாக வும, அவன் அதட்டி ஆரவாரிததல் மேகம குமுறி யிடிததலாகவுங கொள ளுமபடி கவி இராவண கோபவருணனை செயதிருபபது பாராட்டததககது.

இராவணனது வாய அதட்டுமுன, அவனுடைய கண கோபத தீச் சுவாலை வீசியதென்றது, மேகததின இடியோசை கேட்கபபடுமுன், அதன் மினனொளி காணபபடும இயறகை நிகழசசியோ டொததிருககும் பொருத தம கவனிககததககது.

இராவணனுககுச சீதையைபபறறி யுண்டாகிய காம வுணாசசியிலும் மிககதாக எவவகை யுணாசசியும தோனறுமென எவரும எணணியிரார. ஆதலால, இது எதிர்பாராத அதிசய மெனனுமபடி ' காமன் தனதி றததை யும கடநதது சீறறததின் தகைமை ' என்ற காமபீரிய கவிநயம பாராட்டத தககது. (௬௬)

இராவணன் கோபமும் காமமும் சமமாதல்

67. வளர்ந்த நாணினன் மாதிர மனைத்தையு மறைவித்
தளந்த தோளின னனல்சொரி கண்ணின னிவளைப்
பிளந்து தின்பனேன் றுடன்றனன் பெயர்ந்தனன் பெயரான்
கிளர்ந்த சீற்றமுங் காதலு மெதிரெதிர் கிடைப்ப

கொண்டுகூட்டு : (இராவணன, சீதை நிந்திபபினுல) வளாநத நாணி னனுயக, (கோபததால) மாதிரம அனைததையும மறைவிதது அளாநத தோளினனுய, அனல சொரி கணணினனுய, 'இவளைப பிளநது தினபன!' எனறு உடனறனன. பெயாநதனன, பெயரான, ஊாநத சீறறமும காத லும எதிா எதிா கிடைபப(தால).

பொருள் : (இராவணன் தன் குறைகளைச் சீதை கூறியத ஞல்) மிகுகின்ற நாணமுடையவனுய், (அபபடி நாணசசெய்தாளே யென்று கொணட கோபததிஞல் வீராவேச முண்டானதால்,) திசைக ளெல்லாவற்றையும் மூடி அளக்கின்ற(ன போலப் பூரித்த) தோள்களுடையவனுய்க, கோபத் தீயைக் கொட்டுகின்ற கண்க ளுடையவனுய், 'இவளைப் பிளந்து தின்பேன்!' என்று சொல் லிக கோபிததான். (சொல்லியபடி செயதறகு அவளை நோக்கிச் செல்ல ஓர் அடி) பெயர்ந்தான், (இரண்டாம அடி) பெயராஞன், (ஏனெனில், அவன மனததுள, அப்போது, திடீரென) எழுந்த கோப மொரு பக்கமும (நெடுநாளாக உளள) காம மொரு பக்கமும் (ஒன்றுக்கொனறு பின்வாங்காமல்) எதிர்த்துப் போராடியதஞல் (என்பது).

மாதிரம - திசை. மறைவிதது - மறையசசெயது - மூடி. உடலல் - கோபிததல் பெயாதல் - (அடி) பெயாதல - காலெடுத்து வைததல். கிடைததல் - எதிாததல. கிடைபப : கிடைத்தலால் எனப பொருளபடும் காரணப பொருளதாகிய செயவெனெசசம்.

'தினபனெனறு' எனபதில 'என்று' எனபது, என்றெண்ணி யென் றும் எனறுகூறி என்றும் பொருள்படுமாயினும், என்றுகூறி எனபதே கவி கருதிய பொருளென்பது, அடுதத பாடடில 'சொன்ன நீசன்' என வருவத ஞல் தெளிவாம.

முநதிய பாட்டில தொடஙகிய இராவண கோப வருணனை இபபாட் டில தொடுததுக கூறி முடிககபபெறறது.

முன, கோபம மிகுநது காமததை வெனறதாகக கூறிஞா. இபபோது, அது குறைநது காமததோடு சமமாயின தெனருா. இனி, அது அதிகமாகக குறைநது தோறற தெனபதை 'ஆணடவாள்' எனற கவியில, கோபாககினி காமவெளளததால அவிநததென நயமபடக கூறுவதனுல் அறியலாம்.

இராவணன சீதைமீது நெடுங்காலமாகக கொணடிருநத காமததுககும, அவன அவளமீது திடீரெனக கொணட கோபத்துககும், நிகழ்நத போராட டததின இறுதியில் காமமே வென்ற தென்றதனுல, காமம் கோபத்தினும் மிகக பலமுடையதா யிருநததெனபது பெறபபட்டது. முந்திய கவியில

'காமன்—தன்திறத்தையும் கடந்து சீற்றத்தின் தகைமை' யென்றதனாலும் இந்தக் கவியில் 'பெயர்ந்தனன்' என்றதனாலும் எதிர்பாராது கோபத்தால் திடீரென எதிர்க்கப்பட்ட காமம், சிறிது பின்னிடைந்து கோபத்துக்கிடங் கொடுத்ததும், 'பெயரான்' என்றதனால், சக்தியில் தாக்கப்பட்டதனால் ஏற்பட்ட தடுமாற்றம் தவிர்ந்த தற்சமயத்தில் காமம் மேற்கொண்டு பின்னுக்குத் தள்ளப்படாமல் சமாளித்துக்கொண்டு தாவரித்து நிலைநின்றதும், அதன் பின்பு பிந்திய 'ஆண்டவாள்' என்னும் கவியில் 'மூண்ட காலவெந் தீயென முற்றிய சீற்றம்—நீண்ட காதலின் நீத்தத்தின் வீவுறு நிலையில்—மீண்டு நின்று' என்றதனால், காமம் தன் அதிக பலத்தை உபயோகித்தாக, கோபத்தைப் பின்னிடையச்செய்து, தான் முன் இழந்த இடத்தை மீட்டுத் தன் பூர்வநிலை யடைந்ததும், இயற்கை நிகழ்ச்சிகளாய தன்மைநவிற்சி யணிக்கு இனிய உதாரணமா யிருத்தல் நோக்கி நுகரத்தக்கது (கூஎ)

அப்போது அனுமான் ஆலோசித்தல்

[*மரத்தின்மேல் மறைந்திருந்த அனுமான், 'இவளைப் பிளந்து தின்பன்' என்று இராவணன் கோபித்துக் கூறியதைக் கேட்டு, ஒருகால் சொல்லியபடி செய்துவிடுவானோ வென்று அஞ்சி, 'அவ்வாறு செய்யப் புகுவானானால், அவன்மேற் குதித்து மிதித்துக் கொன்றுவிடுவே' னென்று எண்ணினான்.*]

இராவணன் கோபம் தணிதல்

[*ஊழித்தீப்போலக் கதித்தெழுந்த கோபம் உகாந்த வெள்ளம் போலப் பெருகிய காமத்தால் அவியாநிற்க, இராவணன், குறித்த காரியம் கோபத்தால் கெட்டுப்போமே யனறிச் சித்தியாகா தென்று கருதிச், சீதை கூறியவைகளுக்குச் சமாதானம் கூறுகின்றான்.*]

இராவணன் சீதைக்கு எதிர்மொழி கூறுவானாய்த் தன் வெற்றி தோல்விகள் விளையாட்டால் விளைந்தன எனல்

68. கொல்வெனென்ன றுடன்றே னுன்னைக்
கொன்றிலேன் குறித்துச் சொன்ன
சொல்லுள வவற்றுக் கெல்லாங் காரணந்
தெரியச் சொல்லின்
ஒல்வதீ தொல்லா தீதென் றெனக்குமோன்
றுலகத் துண்டே
வெல்வதுந் தோற்ற றானும் விளையாட்டின்
விளைந்த மேனாள்

கொண்டுகூட்டு: ""உன்னைக் கொல்வென" என்று உடன்றேன்: கொன்றிலேன். என்னைக் குறித்துச் சொன்ன சொல் (மெய்யாக) உள, அவற்றுக்கு எல்லாம் காரணம் தெரியச் சொல்லின், எனக்கு "ஈது ஒல்வது, ஈது ஒல்லாது" என்று ஒன்று உலகத்து உண்டோ? மேல்நாள் (நான்) வெல்வதும் தோற்றலதானும் விளையாட்டில் விளைந்த.

பொருள்: '(நீ என்னைப் பழித்ததனால்) "உன்னைக் கொன்றிடுவேன்" என்று கோபங்கொண்டேன்; ஆயினும் கொன்றேனில்லை: (பழிமொழி கூறிய உனக்கு எதிர்மொழி கூறவேண்டியிருந்ததலால்.) நீ என்னைக் குறித்துச் சொன்ன பழிச் சொற்கள் (தோற்றத்தில் மெய்யாக) இருக்கின்றன: (உண்மையில் அப்படியில்லை.) (அச்சொற்கள் மெய்யானவை யல்லவென உரூபிக்கும்) காரணத்தை விளங்கச் சொன்னால், (என்னாலாகாத காரியமொன்றுமில்லை யாதலால்,) எனக்கு "இந்தக் காரியம் செய்ய முடியுமானது, இந்தக் காரியம் செய்ய முடியாதது" என (எடுத்துக் கூறக்கூடிய) ஒரு காரியம் உலகத்தில் இல்லை. ("என் சிலருக்குத் தோற்றாய்?" எனபாயேல், கேள்.) முன்னாளில் நான் வெற்றிகள் பெற்றதும் தோல்விகள் உற்றதும் விளையாட்டிலே நிகழ்ந்தவைகள். ("விளையாட்டுக் கருதத்தோடு உன் பலத்தை வேண்டுமென்றே உபயோகிக்காமல் நீ தோற்றிருக்கலாம். '"வெல்வதும் விளையாட்டின் விளைந்தது"' என்றாயே. அஃது என்னை?" யெனில், யான் கோபங்கொண்டு எதிர்த்தற்குரிய பலமுடையார் எவரும் எங்கும் இலராதலால், புலி புலியை எதிர்த்தல்போலன்றிப பூனையை எதிர்த்தல்போல, என் பகைவரை வீரமாக எதிர்க்காது விளையாட்டாக எதிர்த்து வென்றேன் என்பது.)

உடலல் - கோபித்தல். ஒல்வது - இயல்வது. உண்டே என்பதில் ஏகாரம் எதிர்மறை.

இராவணன் தான் எல்லாம் வல்லான் என்றும் தன் வெற்றி தோல்விகள் விளையாட்டில் விளைந்தன வென்றும் கூறியது, உள்ளீடு ஒன்றுமில்லாத பகட்டுரையாகக் கருதற் கிடமாயுள்ளது. அது ஆடம்பரமான வெற்றுரை யன்றென உரூபித்தற் குரியதாகத் தான் கருதிய நியாயத்தை உடனே கூறாமல் மனத்துள் வைத்துக்கொண்டு, வேறுசில சொல்லிவிட்டுப், பின்பு 'வென்றேரும்' என்ற கவியிற் கூறுகின்றான். அவன் அவனுடைய தற்புகழ்ச்சி யுரையை ஒப்புக்கொள்ளச்செய்யத் தக்க நியாய மில்லாததனால் அந்த நியாயத்தைக் கூறவில்லை யெனச் சீதையை முடிவுசெய்யச் செய்து,

அதன் பின்பு அந்த நியாயத்தைக் கூறுவது, ஆதியிலேயே கூறுவதினும் விசேட நயம் பயப்பதாகவும் சிறந்த அதிசயம் விளைப்பதாகவும் இருத்தல் குறிக்கத்தக்கது.

பாட பேதம் : உன்னைக் கொல்கிலேன் : உலகத் துணையோ. (கூஅ)

சீதையை வஞ்சித்துக் கவர்ந்ததற்கு நியாயம் கூறல்

ஒன்றுகே ளுரைக்க நிற்கோ ருயிரென வுரியோன் றன்னைக்
கொன்றுகோ ளிழைத்தா னீநின் னுயிர்விடிற் கூற்றங் கூடும்
என்றனு ருயிரு நீங்கு மென்பதை யியைய வெண்ணி
அன்றுநான் வஞ்சஞ் செய்த தாரெனக் கமரி னோவார்

கொண்டுகூட்டு: 'ஒன்று (நான்) உரைக்க (நீ) கேள். அன்று நான் வஞ்சம் செய்தது, நிற்கு ஓர் உயிர் என உரியோன் தன்னைக் கொன்று (உனக்குக்) கோள் இழைத்தால் நீ நின் உயிர் விடில், (என்பால்) கூற்றம் கூடும், என்தன் ஆருயிரும் நீங்கும் என்பதை இயைய எண்ணி(யதால்). எனக்கு அமரில் நோவார் ஆர்(உளர்)?

போருள்: '(உன்னை வஞ்சகத்தாற் கவர்ந்தேனென்றாய். ஏன் அவ்வாறு செய்தேனெனில்,) உண்மையை நான் சொல்ல நீ கேட்பாயாக. அந் நாளில், உன்னைக் கவர நான் வஞ்சகஞ் செய்தது, உனக்கு ஒப்பற்ற உயிர்போல உரியோனான இராமனைக் கொன்று உனக்குத் தீமை செய்தேனானால், (நீ உயிர்விடுவாய்,) நீ உன் உயிரை விடுவாயானால், (அத் துன்பந் தாங்கமாட்டாத என் பால்) எமன் வந்து சேர்வான், என் அருமையான உயிரும் நீங்கி விடும் என்பதை யெண்ணியே (யன்றி, இராம லக்குமணரோடு போர்செய்தற் கஞ்சி யன்று): என்னைப் போரில் எதிர்ப்பார் யார் உளர்? (ஒருவருமில்லை.)

ஒன்று - உண்மை.—த. அ. கோள் - தீமை. இழைத்தல் - செய்தல். கூற்றம் - யமன். கூடும் - (வந்து) சேர்வான். இயைய - பொருந்த. அமர் - போர். நோதல் - எதிர்த்தல்.

'கொன்றுகோள் இழைத்தால்' என்பதற்கும் 'நீ நின் உயிர்விடில்' என்பதற்கும் இடையே 'நீ உயிர்விடுவாய்' என்பதைக் கூறாமற்கூறிய நயம் நோக்கத்தக்கது. இது, நூலழகுகள் பத்துள் முதன்மையான 'சுருங்கச் சொல்லல்' 'விளங்கவைத்தல்' என்னும் இரண்டு வனப்புகளை ஒருசேர உடையதாகவுள்ளது. (கூகூ)

'அறியாமையால் கேவலம் மானிடரானவர்
உன்னை மீட்க வருவர் என்று எதிர்பாராதே!' எனல்

மானென்ப தறிந்து போன மானுட ராவார் மீண்டு
யானென்ப தறிந்தால் வாரா ரேழைமை யெண்ணி நோக்கல்
தேனென்ப தறிந்த சொல்லாய் தேவர்தாம் யாவ ரேயெங்
கோனென்ப தறிந்த பின்னைத் திரும்புவா குறையி னல்லால்

கொண்டுகூட்டு. *'தேன் என்பது அறிந்த சொல்லாய்! மான் என்பது அறிந்து போன மானுடர்ஆவார் யான் என்பது அறிந்தால் மீண்டு வாரார். (உன்) ஏழைமையால் எண்ணி (அவர் வரவை) நோக்கல். "எம்கோன்" என்பது அறிந்த பின்னை (வாழ்நாள்) குறையின் அல்லால் திரும்புவார் தேவர் தாம் யாரே (உளர்)?*

பொருள்: *'தேனபோலும் (இனிய) மொழியினாய், (யான் இருக்குமிடந் தெரிந்தவுடனே, இராம லக்குமணர் வந்து என்னை அதஞ்செய்து உன்னை மீட்டுவிடுவார்கள் என்று உண்மை யறியாது கூறினாய். மாரீச மாய மானை உண்மை) மானென்று பின் தொடர்ந்து போன கேவலம் மனிதர் ஆன இராம லக்குமணர்கள், (உன்னைக் கவர்ந்துகொண்டு போனவன்) யான் என்று தெரிந்தால், ("ராசா கையைப் பிடித்தால் விதிவசம்" என்ற பழமொழியை நினைவுகூர்ந்து,) திரும்பி (உன்னை மீட்க) வரமாட்டார்கள். உன் அறியாமையால் அவர்கள் வருவார்களென்று எண்ணி அவர்கள் வரவை எதிர்பாராதே. (தேவர்களே, அவர்கள் தேவியர்களை யான் கொண்டுவந்தால், கொண்டுபோனவன்) "எங்கோன்" (என்று அவர்கள் ராசபத்தியோடு கூறிக்கொள்ளும் யான்) என்று (தெரியுமுன் மீட்க எண்ணுவார்களேயன்றி) தெரிந்த பின்பு (அவர்களுக்கு முடிவு காலம் நெருங்கி ஆயுள்நாள்) சுருங்கினாலல்லாமல் (மீட்க எண்ணும் தவறு செய்யார். அப்படித்) தவறு செய்வார் தேவருள் யாவரே உளர்? (ஒருவருமே யிலர்).*

ஏழைமை(யால்) - அறியாமை(யால்). நோக்கல் - எதிர்பாராதே: அல் லீற்று எதிர்மறை ஏவல் வினைமுற்று. 'வருவிருந்து பார்த்திருப்பான்' (குறள் 87) என்பதில் 'பார்த்தல்' எதிர்பார்த்தலை யுணர்த்தியது போல, இங்கே 'நோக்கல்' எதிர்பார்த்தலை யுணர்த்தியது. 'ஏழைமை எண்ணி நோக்கல்' என்பதற்கு '(வருவாரென்று) எண்ணி எதிர்பார்த்தல்

அறியாமையாம' என்றும் பொருள் கொளளலாம. திறம்புதல - தவறுதல். தாம, சாரியை. ஏ, வினை அசைநிலை. பிரிநிலை.

சிறிது ஊன்றி நோக்கினால தெரிந்துகொளளக்கூடிய சொறகளும சொறறொடர்களும சொலலபபடாது விடபபட்டிருத்தலைக் கமபராமா யணத்திற பல கவிகளில காணலாம இந்தக கவியில 'குறையினலலால' என்பதன முன 'வாழநாள' என்பது கூறாது விடபபட்டிருக்கிறது. 'வாழநாள'தான கூறபபடவிலலை யென்பது, பின்வரும 'பாளை நீர' என்ற கவியில, 'குறைந்த வாழநாளுடையவளே!' என்று பொருள்படும 'குறைந்த நாளோய' என்பதனால தெளிவாம. (எ0)

71. வென்றோரு மிருப்ப யாாசகு மேலவர் வீளிவி லாதோர்
என்றேரு மிருப்ப வன்றே யிந்திர னேவல் செய்ய
ஒன்றுத வுலக மூன்று மாள்கின்ற வொருவன் யானே
மென்றோளா யிதற்கு வேறோ காரணம் விரிப்ப துண்டோ

கொண்டுகூட்டு: 'மென தோளாய' (என்னை) வென்றோ (ரென்று நீ கூறினவ)ரும இருபப, "யாாககுய மேலவா வீளிவு இலாதோா" என்றோரும இருபப, இந்திரன் ஏவல செயய, ஒன்றாத மூன்று உலகமும ஆளகின்ற ஒருவன யான் அன்றே? இதறகு வேறு ஓா காரணம விரிபபது உணடோ?

பொருள்: 'மென்மையான தோள்களையுடையாளே! (யான் "இதன் முன் வெல்வதும் தோறறல்தானும விளையாட்டில் விளைந்த மேனாள்" என்றதை நீ ஒப்புக்கொணடிராவிட்டால, இபபோது சொலவதைக் கேள். வென்றவரன றித தோறறவா அரசாள் வரோ?) வென்றவர்களென்று நீ சொல்லியவர்க ளிருககவேயும், (அவர்க ளல்லாமல்,) "எல்லாருக்கும மேலானவர்கள் சாவில்லாத வர்கள்" என்று சொல்லப்பட்டவா(களான, நீ என்னை வென்றவ னென்ற சிவனை யுள்ளிட்ட திரிமூாத்தி)க ளிருக்கவேயும், இந்திரன் பணிவிடை செய்யாநிறக, மூன்றுலகத்தையும் ஆள்கின்ற ஏகாதி பதியாக இருக்கின்றவன் யானல்லவா? இபபடி (யான் திரி லோகாதிபதியாக) இருப்பதறகு (உணமையில என்னை வென்றவ ரொருவரு மிலலாதிருப்பதன்றி) வேறொரு காரணம சொல்ல வேண்டியதுண்டோ?

விளிவு - சாவு. ஒன்றுதல் - நெருங்குதல். ஒன்றாத உலகம் மூன்றும் - (ஒன்றுக்கொன்று தூரமாய்) நெருங்கியிராத மூன்று உலகங்களையும். ஒருவன் என்றதால், உலகங்களைப் பொது நீக்கித் தானொருவனே தனியாக ஆள்பவன் என்ற பொருளை உணர்த்தி நின்றது. விரித்தல் - சொல்லல் —நாம நிக. 652.

'அன்றே' என்பதை 'யான அன்றே' என இயைத்துப் பொருள் கூறப்பட்டது. அப்படி இயைக்காமல் 'இருப்ப அன்றே' என்றிருக்கிறபடியே வைத்து, 'வென்றேரும்... .. ...விளிவிலாதோ ரென்றேரும் இருக்கவும் மல்லவா, உலக மூன்றும் ஆள்கின்ற ஒருவன் யான (ஆக உளனேன)' என்று பொருள் கூறலுமாம்.

'யாரும் மேலவா விளிவிலாதோா என்றேரும் என்பதற்கு - திரி மூர்த்திகளினும் உயர்ந்தவராய(ப் பகைவர்களால்) அழிவில்லாதவ ரென்று நீ கருதுகின்ற ராம லக்ஷ்மணரு மென்று கூறினுமாம்.' *

சீதை, இராவணனை நோக்கி, 'உன்னைக் காலவிர லொன்றா லழுத்திக் கதறச்செய்த சிவன் வில்லை முறித்தவனும், உன்னை வென்ற கார்த்தவீரியனைக் கொன்ற பரசுராமனைப் பங்கப்படுத்தியவனுமான வீராதி வீரன் இராமன்' என்று கூறியதை இராவணன் எவ்வாறுகவும் மறுக்க முடியாதென யாரும் இயல்பாக எண்ணியிருப்பார். அவர்களையெல்லாம் இந்தக் கவி பரமாச்சரியபரவசராக்கும் பான்மையதா யிருத்தல் பெரிதும் பாராட்டத் தக்கது.

இந்தப் படலத்தில் இராவணனும் சீதையும் நிகழ்த்திய இனிமையான வாதப் பிரதிவாதங்க ளடங்கிய கவிகளின் முடிவாகவும் முடியாகவும் † முள்ள இந்தக் கவி கம்பரது வழக்குத் திறத்தை விளக்குங் கவிகளுள்ளே சிறந்த ஒன்றாயிருத்தல் சிந்திக்கத்தக்கது.

பாட பேதம் : *மூன்றும் உணர்கின்ற.* (எக)

'இராம லக்ஷுமணரை ஏவல்கொள்வேன்' என்ல்

[**'இன்றே சென்று என் இருபது கைகளிலே ஒரு கையாலேயே இராம லக்ஷுமண ரிருவரையும் ஒருசேரப் பிடித்துக் கொண்டுவந்து உன் கண்ணெதிரே ஏவல் கொள்வேன், காண்பாயாக.**]

---

* வை. மு. கோ. † முடி - மகுடம் - கிரீடம்.

'உன்னவர் அனைவரையும் உன்னையும் கொல்வேன்' எனல்

72. பள்ளநீ ரயோத்தி நண்ணிப் பரதனே முதலி னோரால்
உள்ளவா தம்மை யெல்லா முயிர்குடித் தழித்துத் தீயின்
வெள்ளநீர் மிதிலை யோரை வேரறுத் தெளிதி னெய்திக்
கொள்வனின் னுயிரு மென்னை யறிந்திலை குறைந்த நாளோய

கொண்டுகூட்டு: 'குறைந்த நாளோய! பள்ளம் நீர் அயோத்தி நண்ணி, ஆண்டு உள்ளவரான பரதனே முதலினோர் தம்மை எல்லாம் உயிர் குடித்து, அழித்த தீயின், வெள்ளம் நீர் மிதிலையோரை வேர் அறுத்து, எளிதின் (இங்கு) எய்தி, நின் உயிரும் கொள்வன், என்னை (நீ) அறிந்திலை.'

பொருள்: '(சாமநாள் நெருங்கி) வாழ்நாள் சுருங்கியவனே! (என் கருத்துக்கு இசையாயாயின், இராம லக்ஷ்மணரைக் கொன்றிடுவேன். அவர்களைக் கொன்றமையோடு நின்றமையாமல், அவர்கள் பிறந்த ஊராகிய) அயோத்திமா நகரத்தை அடைந்து, அங்குள்ளவரான பரதன் முதலியோரெல்லாரையும் கொன்று, உகாந்த காலாக்கினி போல (அங்கு நின்று சென்று, நீ பிறந்த ஊராகிய) மிதிலாபுரி(யில் உள்ள உன் தந்தை சனகன் முதலி)யோரைக் குடியோடு அடியோடு ஒழித்து நிர்மூலமாக்கி, இங்கே வந்து உன்னுயிரையும் வாங்கிவிடுவேன்! (இவ்வளவும் செய்யும் வன்மையுடையவனென) என்னை அறிந்தாயில்லை.'

பள்ள நீர் - ஆழமுடைய நீர். ஆண்டு - அங்கு. உயிர் குடித்தல் - கொல்லல். தீயின் - தீபோல. வெள்ளநீர் - பெருக்குநீர். நாள் - வாழ்நாள் - ஆயுள்.—த. அ. எளிதின் - எளிதாக. எய்தி - அடைந்து - வந்து சேர்ந்து.

'பள்ளநீர், வெள்ளநீர்' என்பவை முறையே அயோத்திக்கும் மிதிலைக்கும் அருகே செல்லும் ஆறுறு நீர்களேயேனும் அந் நகரங்களைச் சூழ்ந்துள்ள அகழி நீர்களேயேனும் குறிப்பனவாம்.

'குறைந்த நாள்' என்றது அப் பொருளுடைய 'அற்பாயுசு' என்னும் வடமொழித் தொடரை நினைவுறுத்துகின்றது. 'குறைந்த நாளோய' என்றது, கோபத்திற் கூறியதாயினும், அது, கோப உணர்ச்சியல்லாமல் 'இளமையும் அழகும் பாழ்படும்படி அகால மரணம் அடையப்போகின்றாயே!' என்னும் பரிதாப உணர்ச்சியையும் புலப்படுத்தும் நயம் நோக்கி நுகரத்தக்கது. (எஉ)

'இரண்டு மாதம் கழியுமுன் இணங்காயாயின் இறப்பாய்!' எனல்

[இராவணன், இவ்வாறு கூறி மிகவும் கோபித்தது, தன் வாளைப் பார்த்து, ('இதற்கு இரையாக்குவேன்' எனச் சீதைக்குக் குறிப்பித்து,) 'நீ இணங்குவாயல்லையானால், உன்னைக் கொல்லக் குறித்த காலம், இன்னும் இரண்டு மாதங் கழிந்தவுடனே வந்து விடும். அப்போது நேரவிருக்கிறதை ஆலோசித்துப் பார்!' என்று கூறிவிட்டு அப்புறம் போனான்.]

இராவணன், சீதையைக் காக்கும் அரக்கியரை அவளை வசப்படுத்தும்படி வற்புறுத்தல்

[போனவன், சீதையின் காவலாளரான அரக்கிமாரை நோக்கிச, 'சீதையைப் பயமாகவாவது நயமாகவாவது வசப்படுத்தி, அதனை என்னிடம் வந்து சொல்லுங்கள். அவளை வசப்படுத்தீராயின், உங்களைக் கொன்றிடுவேன்!' என்று கூறித் தன இருப்பிடம் நோக்கிச் சென்றான்.]

இராவணன் போனபின், இராட்சசிகள் சீதையைத் துன்புறுத்தல்

[இராவணன் துன்புறுத்திவிட்டுப் போகப்பெற்ற சீதை, இராகு விழுங்கி உமிழ்ந்த சந்திரன் போன்றாள். அவன் போன பின், அரக்கியர்கள், அவளை அச்சுறுத்துவாராய்க், கண்களினின்று நெருப்புப் பொறி பறக்கப் பார்த்து, வாள்களையும் வேல்களையும் உயரத் தூக்கிக்கொண்டு, 'கொல்லுங்கள்! தின்னுங்கள்!' என்று கூறினார்கள். பின்பு, 'கொடிய பெண்களெவரினும் கொடியவளே! பிரமதேவனுக்குப் பேரன மகனும், வேத விற்பன்னனும், மாதவஞ் செய்து தீவினை தீர்ந்தவனுமான இராவணேசுரன் உன்பால் மெய்யன்பு வைத்ததன்றி வேறு பிழையில்லாதவன். அப்படிப்பட்டவன் மனம் வருந்தும்படி புண்ணிற் கோலிட்டாற் போன்ற பொல்லாத வார்த்தைகளைச் சொல்லி, நீ பிறந்த குடியும் புகுந்த குடியும் ஒழிந்து கெடும்படி செய்தாய். நீ இணங்காயாயின், இப்போதே கொன்றிடுவோம்: இனி வாழாய்!' என்று அதட்டி வற்புறுத்திக் கூறினார்கள்.]

திரிசடை சீதையைத் தேற்றல்

[சீதை, இராவணனும் இராட்சசிகளும் கொல்லப் புகுந்ததனால் ஒரு சிறிதும் மனம்பொறுக்கக் குறைவுறுதவளாய்த் துன்பக் கண்ணீர் சொரிந்து துடைபச சிரிப்புச சிரித்தாள். அது கண்ட திரிசடை, 'அம்மா, நான் கண்ட கனவின் நற்பயன்கள் இன்னவையென யான் முன்னம் சொன்னதை நினைந்து வருந்தா திருப்பாயாக. உன் மனத்தைக் கலங்கவிடுதல் உன் அறிவுக்கு அடுத்ததன்று' என்று தேறுதல் வார்த்தை கூறினாள். திரிசடை கூறிய கனா விவரத்தை அரக்கியர் விசாரித்துத் தெரிந்து, நல்லுணர்வுற்றாக, கோபம் நீங்கிச், சீதையை அச்சுறுத்துவதை நிறுத்தினார்கள். அவள் சிறிது துன்பம் நீங்கி உயிர்தரித்திருந்தாள்.



5. உருக்காட்டு படலம்

[அனுமான் சீதையைக் கண்டு, இராமனைத் தான் அறிந்ததைத் தெரிவித்து, ராமமுத்திரை மோதிரத்தைக் கொடுத்துத் தன் இயற்கை யுருவத்தைக் காட்டுவதைக் கூறுவது]

அனுமான் அரக்கியர் தூங்கும்படி மந்திரித்தல்

[அனுமான், 'சீதையிடம் சென்று பேசுதற்கு இதுவே சமயம். அதற்கு இடையூறாயிருக்கும் இராட்சசிகள், சீதையை வயப்படுத்தும்படி சற்றுமுன் தான், இராவணனால் பயப்படுத்தப்பட்டவர்களாதலால், தாமாகத் தூங்கார். இச்சமயம் இதுவே செய்யத்தக்கது' என்று ஒரு மந்திர வித்தை செய்தான். அவர்கள் செந்நாரொத்தாராயத் தூங்கலானார்கள்.]

சீதை, இருந்தலோ, இறந்தலோ நன்றென்று வாதித்து, இறக்கத் துணிதல்

[சீதை. இராவணனும் இராட்சசிகளும் தன்னைக் கொன்றே விடுவார் போன்று அச்சுறுத்தியதனால் அடைந்த அத்தியந்த மனவேதனையைப் பொறுக்கமுடியாமல், வாயவிட்டரற்றுதற்கும்

அவ் வேதனையினின்று விடுதலையுறத் தன்னை மாய்த்துக்கொள்ளு தற்கும் தடையாயிருந்த இராட்சசிக ளெல்லாரும் தூங்கக் கண்டு, ('இப்போது யாரும் என சொற்களைக் கேட்கவேணும் என் செயல் களைக் காணவேணும் செயடார்' என்று நெஞ்சுள நினைந்து, வாழ்த லில் வெறுப்பும் மாய்தலில் விருப்பும் உடையவளாய், தன்னைக் கண்டு பேச முயன்றுகொண்டிருக்கும் அனுமான் அருகே மரக்கிளைமே லிருப்ப தறியாதவளாய்,) வாய்விட்டுப் புலம்பு கின்றாள் :

'கார்மேகமும் கருங்கடலும் கரிய இருளும் உருவுகொண்டா லொத்த திருமேனியையுடைய என் நாயகனைப் பிரிந்ததனால் வருந்தி யிறந்துபோகிற என உயிரை நிலைபெறச்செய்ய, அவன் இலங்கைக்கு வருவானோ? வந்தவுடனே, பகைவர் திடுக்கிடும்படி பேரிடிபோல முழங்கும் அவன் கோதண்ட நாணொலியைக் கேட் பேனோ? விதியே, விளம்புவாயாக !

'சந்திரனே, சந்திரிகையே, இரவே, இருளே, உங்களில் ஒரு வர் போதாதோ, என் உயிரை ஒழித்தற்கு ? நீங்க ளெல்லீரும் சேர்ந்து என்னை ஒருத்தியையே வருத்துகிறீர்கள். என்னை நினை யாத அவனை வருத்தியிருந்தால், அவன் என்னைத் தேடி வந்திருப் பானே !

'நாத! நீ வந்தேதீருவா யென்ற உறுதியான நம்பிக்கையினால் அளவற்ற துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு இறவா திருந் தேன் அவ்வாறிருந்தது, ஆசைமிகுதியால் உன் பழைய கொடுமையை நினைவுகூராமையாலேயே. "காட்டுக்கு வந்தால், வருந்துவாய்; வீட்டில் இரு : சில நாளில் திரும்பிவிடுவேன்" என்று பதினாலு வருடம் பிரிய ஒருப்பட்ட பேரருளாளனன்றோ, நீ! உன் அருள இருந்தவாறு இஃதாதலால், இப்பொழுது என்னை மீட்க வாராமல் கொன்றுவிடுவாயபோலும்!]

73. பேணும்முணர் வேயுயி ரேபெருநாள்
நாணின்றுழல் வீர்தனி நாயகனைக்
காணுந்துணை யுங்கழி வீரலிர்நான்
பூணும்பழி யோடு பொருந்துவதோ

கொண்டுகூட்டு: 'பேணும் (என்) உணர்வே! உயிரே! பெரு நாள் நாண இன்று உழல்வீர். தனி நாயகனைக் காணும துணையும கழிவீரலீர். நான (இறவாமல்) பூணும பழியோடு பொருந்த(தியிருப்ப)தவோ (உம விருப்பு!)

பொருள்: '(என் நாயகனைப் பிரியுமுன் என்றால்) பாது காக்கப்பட்டிருந்த என உணர்வே, என உயிரே, (அவனை யான பிரிந்தவுடனே என் தேகத்தைவிட்டு நீங்கியிருக்கக் கடவீரான நீங்கள், பிரிந்தபின) நெடுங் காலம் (நீங்கி யொழியாமல் என தேகத்தினுள்ளே) வெட்கமில்லாமல் சுழன்றுகொண் டிருக்கின் றீர்கள். என் நாயகனை யான் காணும்வரையும் நீங்கள் ஒழிவீ ரல்லீர். (நீஙகள் ஒழியாதவரை) நான (இறவாமல்) பழியோடு பொருந்தி (யிருக்கவேண்டியிருக்கிறது. அப்படி) யிருப்பதோ (உங்கள் விருப்பு? நன்று, நன்று. நீங்கள் இனபததோடு வாழ்தற் காக, நான் துன்பத்தோடு சாவாதிருக்கவேண்டும்போலும!)

பேணுதல் - பாதுகாததல். பேணும் என்பது, உணாவுககே யன்றி உயிருககும அடையாகக கொளளும்படி நின்றது. நாண - வெட்கம். இன்று, இல்லாமல் எனனும பொருளுடைய இனறி எனனும் எதிாமறைக குறிபபு வினையெசசததின விகாரம உழலல - சுழலல. தனி நாயகன - ஒபபறற தலைவன. துணை - அளவு. கழிதல - நீஙகுதல.

'நான்காமடிககு — "நான அடையும பழியை நீஙகளும் அடையப் போகிறீாகளோ?" எனறும கருத்துக கொளவா.' *

இபபோது வாழவை வெறுககும் நிலையிலுள்ள சீதை, முன வாழ்வை விருமபும் நிலையிலிருநத தன்னைப பழிபபதாக இக கவிக கருததைக கொள ளல் வேணடும்.

இப பாட்டில், சீதை, தான் வேறு, தன் உணாவும் உயிரும் வேறு போலக கூறும விசேடம் ஆழநது ஆராயதறகுரியது. கமபா, துன்பு, இனபு, அனபு முதலிய உணாசசிகள அசாதாரணமாக அதிகபபட்டால அவைகளை நன்கு புலபபடுத்தறகு ஒருவரை இருவராகவும் இருவரை ஒருவ ராகவும் அவவவ வமையததுககுப பொருத்தமாகப புனைந்துரைப்பா:

கழிபெருந் துனபததை விளகக, ஒருவரை இருவராகக கூறியதை இநதப பாட்டிலும், இறபபவும விஞசிய இன்பததைப் புலபபடுதத ஒருவரை இருவராகக் கூறியதை இராமன அயோததிககுத திருமபி வருவதைத தெரிந்த பாதன் மெயபபாட்டை யுணாததும,

---

* வை. மு. கோ.

வேதியர் தமைத்தொழும்; வேந்தரைத்தொழும்;
தாதியர் தமைத்தொழும், தன்னைத் தான்தொழும்
ஏதுமொன் றுணர்குறு கிருக்கும்; நிற்குமால்.
காதலென் றதுவுமோர் கள்ளின் தோற்றமே!

என்ற மீட்சிப் படலப் பாட்டிலும், உச்ச அன்பை உணர்த்த இருவரை ஒருவராகக் கூறியதை,

உருந்தேரி தன்மைய உயிரும் ஒன்றுதம்
அருத்தியும் அதனிணை ஆய நீரினார்,
ஒருத்தியும் ஒருத்தனும் உடம்பும் ஒன்றெனப்
பொருத்தினர் ராமனப் புலவி னாரரோ *

என்ற உண்டாட்டுப் படலச் செய்யுளிலும் காணலாம்.

இந்தப் பாட்டிலும் இதனைத் தொடர்ந்து வரும் பாட்டுகளிலும் சீதையின் வாழ்வை விரும்பும் எண்ணங்களோடு வாழ்வை வெறுக்கும் எண்ணங்கள் வாதாடி வென்றதன் பயனாகச் சீதை தன்னை மாய்க்கத் துணிதல் இயல்பான முடிவாயிருத்தல் காண்க. (எங)

74. முடியாமுடி மன்னன் முடிந்திடவும்
படியேழு நெடுந்துயர் பாவிடவும்
மடியாநெறி வந்து வனம்புகுதுங்
கொடியான்வரு மென்று குலாவுவதோ

கொண்டுகூட்டு: 'முடியா முடிமன்னன் முடிந்திடவும், படி ஏழும் நெடுந் துயர் பாவிடவும், மடியா நெறி வந்து வனம் புகுதும் கொடியான் வரும் என்று (நான்) குலாவுவ(து தகுதியான)தோ?

பொருள்: '(தன் பிரிவாலன்றி வேறெந்தக் காரணத்தாலும்) சாவாத தசரத சக்கரவர்த்தி சாகும்படியாகவும், ஏழுலகங்களிலும் மிகுந்த துன்பம் பரவும்படியாகவும், இரக்கமின்றி வனத்துக்கு வந்துவிட்ட கொடியோன் (யான் ஒருத்தி துன்புறுதற் கிரங்கி என்னைச் சிறைமீட்க) வருவானென்று யான் மகிழ்ந்து வாழ்வது தகுதியோ? (வாரானென்று நிச்சயித்துச் சாவதே தகுதி)

படி - உலகம். பாவுதல் - பரவுதல். மடியா நெறி - (போகப் போகத்) தொலையாத (நெடு) வழி. புகுதுதல் - பிரவேசித்தல். வரும் - வருவான். குலாவல் - மகிழ்தல்

* இது, க. ரா. சா. பாலகாண்டம் 170-ம் பாட்டு. அதன் உரையைப் பார்க்க.

'கொடியார் வரும்' என்று பாடங் கொண்டார், '"கொடியார்" என்றது நிஷ்டூர வார்த்தை, கோபத்தினால் ஆண்பால் பலர்பாலாகக் கூறப்பட்ட பால்வழுவமைதி, இச் சொல், சொல்லாற் பலர்பாலாயினும் பொருளால் ஆண்பாலாதலால், "வரும்" என்னும் செய்யுமென் முற்றைக் கொண்ட வழாநிலையேயாம்' என்பர்.

பாட பேதம்: கொடியார். (எச)

['உயிர் உண்டெனில் துயரும் உண்டு. உயிரொழிந்தாலன்றித் துயரொழியாது. உயிரைப் போக்கலால் துயரைப் போக்கலேயன்றிக், கற்பைக் காக்க உயிரை நீக்கினேனென்னும் புகழைப் பூண்டேனுமாவேன்.]

75. பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணு மாசையால்
நிறையிரும் பல்பக னிருதர் நீணகர்
சிறையிருந் தேனையப் புனிதன் றீண்டுமோ

கொண்டுகூட்டு: 'அறை இருங் கழலவனைக் காணும் ஆசையால் பொறை இருந்து (துன்பம்) ஆற்றி என் உயிரும் போற்றினேன். நிறை இரும் பல பகல் நிருதர் நீள் நகரில் சிறையிருந்(ததால் புனிதம் இழந்)தேனை அப் புனிதன் தீண்டுமோ?

பொருள்: 'என் நாயகனைக் காண விரும்பியதனால் (அவனைப் பிரிந்தபின் நெடுங்காலம்) பொறுமையோடிருந்து (எல்லாத் துன்பங்களையும்) சகித்து(ப் பலமுறை போகத் துணிந்த) என் உயிரைப் (போகவொட்டாது தடுத்துப்) பாதுகாத்து வைத்துக் கொண்டிருந்தேன். மிகவும் நீண்ட காலம் இராக்கதர் ஊரிலே சிறையிருந்த(தனால் அசுத்தையாய்த் தீண்டத்தகாதவளாய் விட்ட) என்னை அந்தப் பரிசுத்தமூர்த்தி தீண்டுவானோ? (தீண்டான். ஏற்றுக்கொள்ளமாட்டான்.)

பொறை இருந்து - பொறுமை(யோடு) இருந்து: மூன்றும் வேற்றுமைத் தொகை. ஆற்றுதல் - சகித்தல் - பொறுத்தல். கழல் - வீரர் காலில் அணியும் ஆபரணம். அறை இருங் கழலவன் - ஒலிக்கின்ற பெரிய வீர கண்டையை யுடையவன் (ஆன இராமன்). பல பகல் - பல நாள் - நெடுங் காலம். நிருதர் - இராக்கதர். (எரு)

76. உன்னினா பிறரென வுணர்ந்து முய்ந்தவர்
சொன்னன சொன்னன செவியிற் றூங்கவும்
மன்னுயிர் காத்திருங் காலம் வைகினேன்
என்னின்வே றரக்கியா யாண்டை யாரகொலோ

கொண்டுகூட்டு : 'பிறர் (என்னை) உன்னினர் என உணர்ந்தும் உய்ந்து, அவர் சொன்னன சொன்னன செவியில் தூங்கவும், மன் உயிர் காத்து இருந்த காலம் வைகினேன். (ஆதலால்) என்னின் வேறு அரக்கியர் யாண்டையார்கொல் !

பொருள்: 'அன்னியர் (என்னைப்பற்றிக் காமாதுரமான) எண்ணங்கொண்டார் என்று தெரிந்த பின்பு உயிரைவிடாமல் பிழைத்திருந்ததோ டமையாமல், அவர்கள் (காதலாகச்) சொன்ன வைகளெல்லாம் (காதிலே விழுந்து நெடித்து) தங்கி நிறகவும், (அவர்களது கெட்ட எண்ணந் தெரிந்தவுடனே விட்டுவிடாமை யால்) நிலைத்திருந்த உயிரை (அவர்கள் சொன்னவைகளைக் கேட்ட வுடனேயாவது விட்டுவிடாமல்) பாதுகாத்து நெடுங் காலம் வாழ்ந்தேன். (ஆதலால் யானே இராட்சசி.) என்னைத் தவிர வேறு இராட்சசிகள் எங்கே உள்ளார்! (எங்கும் இலர்.)

உன்னுதல் - எண்ணுதல். உய்தல் - சீவித்தல் - உயிர் வாழ்தல். சொன்னன - சொன்னவை. 'சொன்னன சொன்னன' என்ற அடுக்கு, சொன்னவைகளெல்லாம் என்றும், திரும்பத் திரும்பப் பல முறை சொன்ன வைக ளென்றும் பொருள்கொள்ள நின்றது. தூங்குதல் - இடையறாது விழுதல்; ஒலித்தல். — தூ. அ. மன் - நிலைத்த. இருமை - பெருமை, இங்கே நெடுமை குறித்தது. இரும் காலம் - நெடுங்காலம்: அரக்கியர், வன்னெஞ்சுடையார் என்ற பொருளை யுணர்த்திநின்றது. யாண்டை - எவ் விடம் : யாண்டு, யாண்டை யென ஐகாரச் சாரியை பெற்று வந்தது.

சீதைபாற் காமுற்றுக் காதல் வார்த்தைகள் கூறினவன் இராவண னொருவனே யாதலால், 'உன்னினர் பிறர்' 'அவர்' என்பவை சொல்லாற் பன்மையாயினும் பொருளால் ஒருமையேயாம். பின் 78-ம் பாட்டில் வரும் 'பிறரமனை' என்ற பாட்டில் உள்ள 'பிறர்' என்பதும் அது. (எசு)

77. சொற்பிரி யாப்பழி சுமந்து தூங்குவேன்
நற்பிறப் புடைமையு நாணு நன்றரோ
கற்புடை மடந்தையர் கதையு ளோர்கடாம்
இற்பிரிந் துய்ந்தவர் யாவர் யானலால்

கொண்டுகூட்டு : 'சொல் பிரியாப் பழியைச் சுமந்து தாங்குவேன். (என்) நல் பிறப்பு உடைமையும் நாணும் நன்று! (இக் காலத்தில்) யானல்லால் (முற்காலத்தில்) கதையில் உள்ளார்களான கற்பு உடை மடந்தையார் தாம் இல்(லாளனைப்) பிரிந்து உய்ந்தவர் யாவர் (உளர்?)

பொருள் : 'பழியைப் (நீக்கித் தள்ளிவிடாமல்) ஏற்றுக் கொண்டு (அதை நீக்க முயலாது) சோம்பியிருக்கின்றேன். என் உயர்குடிப் பிறப்புடைமையும் நாணுடைமையும் மிக நன்றாயிருக்கின்றன! யானொருத்தி யல்லாமல் (இக்காலத்துக் கற்புடையார் எவரும் கணவனைப் பிரிந்தபின் வாழ்ந்தவரில்லை.) கதைகளிற் கூறப்பட்ட முற்காலத்துக் கற்புடையோர்தாம் கணவனைப் பிரிந்தபின் பிழைத்திருந்தவர் யாவர் உளர்? (எவரும் இலர்.)

சொல் - பேச்சு.—தன் அச் சொல் பிரியாப் பழி - ('சீதை கணவனைப் பிரிந்தபின் செத்தாளில்லை' யென்று சனங்கள் கூடிக் கூடிப்) பேசும் பேச்சினின்று பிரியாத நிந்தை. நல் பிறப்பு - நல்ல (குடிப்) பிறப்பு. 'நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தாராயினும்' என்பதிற்போல 'நல்' என்பது உயர்ந்த என்ற பொருள்பட நின்றது. நன்று, இகழ்ச்சி குறித்தது. வழக்கமாக இல்லாளை யுணர்த்தும் 'இல்' என்பது, இங்கே, இல்லாளனை யுணர்த்தியது. உய்தல் - உயிர்வாழ்தல். (எஎ)

78\. பிறர்மனை யெய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல தென்றுயிர்க் கிறைவன் றீர்ந்தனன்
புறனல ரவனுறப் போது போக்கியான்
அறனல தியற்றினே னென்கொண் டாற்றுகேன்

கொண்டுகூட்டு : 'பிறர் மனை எய்திய பெண்ணைப் (பின்னும்) பேணுதல் திறன் அலது என்று (என்) உயிர்க்கு இறைவன் தீர்ந்தனன். புறன் அலர் அவன் உற, யான் போது போக்கி அறன் அலது இயற்றினேன். என் கொண்டு ஆற்றுகேன்?

பொருள் : 'அன்னியன் வீட்டை யடைந்த பெண்ணை(த் திரும்ப வீட்டுக்குக் கொண்டுவந்து) ஆதரித்தல் தகாதென்று என் பிராண நாயகன் (என்னை மீட்குதலை) விட்டுவிட்டான். (அப்படி அவன் விட்ட பின்பு, 'அவன் மனைவி அயலான் மனையிலிருக்கின்றாள்' என்று) பக்கத்துள்ளார் தூற்றும் பழிச்சொல்லை அவன்

அடையா நிற்க, (யான் இறந்து அப் பழிச்சொல்லுக்கு ஆதார மில்லாததாகச் செய்யாமல், எனக்கு நன்மையின்றி அவனுக்குத் தீங்கு செய்கின்றவளாய அவப்) பொழுதுபோக்கி (அயல் மனை வாழ்க்கையாகிய) அதர்மத்தைச் செய்துகொண்டிருந்தேன். (யான் உயிர்விடுதலன்றி) வேறு) என்றோ (அவன் பழியடைதலை) நீக்கு வேன்? (அவன் பழியடைதல் நீங்கச் சாவேனாக!)

பேணுதல் - பாதுகாத்தல். திறன் - திறம் (என்பதன் போலி) - தகுதி. உயிர்க்கு இறைவன் - பிராண நாயகன் - கணவன். தீர்தல் - விடுதல் நீங்குதல் புறன் - பக்கம், பக்கத்துள்ளாரை யுணர்த்தியது. அறன், அறம் (என்பதன் போலி) - தருமம். அறன் அலது - தருமம் அல்லாதது - அதர்மம். என் - எது ஆற்றுதல் - தணித்தல், நீக்கல்.—சு. அ.

பாட பேதம்: அறனல தியற்றி வேறு. (எஅ)

79\. எப்பொழு திப்பெரும் பழியி னெய்தினேன்
அப்பொழு தேயுயி றுறக்கு மாணையேன்
ஒப்பரும் பெருமறு வுலக மோதயான்
துப்பழிந் துய்வது துறக்கந் துன்னவோ

கொண்டுகூட்டு: 'எப்பொழுது இப் பெரும் பழியின் எய்தினேன், அப்பொழுதே உயிர் துறக்கும் ஆணையேன். உலகம் ஒப்பு அரும் பெரு மறு ஓத, யான் துப்பு அழிந்து உய்வது, துறக்கம் துன்னவோ?

பொருள்: 'எப்பொழுது (பிறன் மனை வாழும்) பெரும் பழியை அடைந்தேனோ, அப்பொழுதே உயிரைவிட வேண்டிய கடமையுடையேனானேன். உலகத்தார் (என்னைக் குறித்துக்) குற்றங் கூற நிற்க, நான் மரியாதை கெட்டு உயிர்வாழ்தல், நற்கதியடைதற்கோ? (நரகம் அடைவதற்கேயாம்.)

ஆணை - ஆன்றோர் மரபு, கடமை, நியதி. துப்பு - மரியாதை: மரியாதை யற்றவனைத் 'துப்புக் கெட்டவன்' என்பது உலக வழக்கு. துப்புக்கேடு - சீர்கேடு.—ந. பெ அ. உய்தல் - உயிர் வாழ்தல். துறக்கம் - சுவர்க்கம். துன்னுதல் - அடைதல். (எகூ)

80\. அன்பழி சிந்தைய ராய வாடவர்
வன்பழி சுமக்கினுஞ் சுமக்க மற்றுயான்
துன்பழி பெரும்புகழ்க் குலத்துட் டோன்றினேன்
என்பழி துடைப்பவ ரென்னின் யாவரே

கொண்டுகூட்டு : ‘அன்பு அழி சிந்தையர் ஆய ஆடவர் வல் பழி சுமக்கினும் சுமக்க. துன்பு அழி பெரும் புகழ்(ச் சனகன்) குலத்து உள தோன்றினேன் (ஆன) யான், என் பழியை(த் துடைப்பதன்றி) என்னின் யாவர் துடைப்பவர்?

பொருள் : ‘(யான் புகுந்த குடியினரான) இராம லக்குமணர் (அவர்களது க்ஷத்திரிய குலப் பெருமை கெட, அவர்கள் வீட்டுக்கு வந்த பெண்ணைக் கவர்ந்தவனைக் கொன்று அவளை மீட்காத) கொடும் பழியை ஏற்றுக்கொண்டாலும் கொள்ளட்டும். (அது, அவர்கள் காரியம்; அதற்கு நான் பொறுப்பாளி யன்று.) மிக்க கீர்த்தியையுடைய (சனக மகாராசனது) குலத்திலே தோன்றிய யான், என் (பிறந்த குலத்துப் பெருமை கெடப் பிறர் மனை வாழும்) பழியை (ஒழிக்குங் கடமையுடையேன். அப் பழியை) யானல்லாமல் யாவர் நீக்குவார்? (இராம லக்குமணர் என்னைச் சிறைமீட்டாலும், அப்பழி யொழியாது. அது யான் செத்தால் தான் ஒழியும். ஆதலால் சாதலே தக்கது.)

அன்பழி சிந்தையர் - அன்பற்ற நெஞ்சினர், இராம லக்குமணர் தன்னைச் சிறை மீட்காமையால் கோபத்தால் தன் பக்கல் ‘அன்பழி சிந்தையர்’ என்றாள். துன்பு அழி - (துன்ப காரணங்களை விலக்கியதனால்) துன்பம் நாசமான - துன்பத்தை யறியாத. துடைத்தல் - நீக்குதல்.

பாட பேதம் : *சுமக்க வானுயர்.* (அ०)

81. வஞ்சனை மானின்பின் மன்னனைப் போக்கியேன்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென்று
நஞ்சனை யானகம் புகுந்த நங்கையான்
உய்ஞ்சனெ னிருத்தலு முலகங் கொள்ளுமோ

கொண்டுகூட்டு : ‘வஞ்சனை மானின்பின் மன்னனைப் போக்கி, என் மஞ்சனை வைது, “பின்வழிக் கொள்வாய்” என்று (அனுப்பி), நஞ்சு அனையான் அகம் புகுந்த நங்கை (ஆகிய) யான், உய்ஞ்சனென் இருத்தலை உலகம் கொள்ளுமோ?

பொருள் : ‘கபடமுடைய (மாரீசனான மாய) மான் பின்னே என் நாயகனைப் போகச்செய்து, என் பிள்ளை போன்ற (என் அன்புக்குப் பாத்திரமான) இலக்குமணனைக் கடுஞ்சொற் கூறி, “என் நாயகனைப் பின்பற்றிப் போவாயாக” (என்று சொல்லி அனுப்பி

என்னைக் காப்பவரை அகற்றி, யானே எனக்குச் செய்த தீங்கினால்) நஞ்சுபோலும் கொடியவான (அந்த இராவணனால் கவரப்பட்டு அவன்) வீட்டுக்கு வந்த பெண்ணாகிய நான் (செத் தொழியாது) உயிர்வாழ்தலை உலகத்தார் (இழிவாகக் கருதுவாரே யன்றி) ஏற்றுக்கொள்வாரோ? (கொள்ளார். ஆதலால் நான் உயிர்விடக் கடவேன்.)

மன் - கணவன். —த்து அ மஞ்சன, மைந்தன் (- மகன்) என்பதனைப் போலி நங்கை - பெண்ணிற் சிறந்தாள், இங்கே பெண்ணிற் கடைப்பட்டா ளென்ற எதிரிடைப் பொருள் பயந்து இகழ்ச்சி குறித்தது. உயஞ்சனென, உயந்தனென (- பிழைத்திருந்தேன்) என்பதனைப் போலி. 'கொள்ளுமோ', 'ஏற்றுக்கொள்ளுமோ? ஒப்புக்கொள்ளுமோ? பொறுத்துக்கொள்ளுமோ?' என விரித்துப் பொருள்கொள்ள நின்றது. (அக)

82. வருந்தலின் மானமா வனைய மாட்சியார்
பெருந்தவ மடந்தையார் முன்பு பேதையேன்
கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வனூர்
இருந்தவ ளிவளென வேச நிற்பெனோ

கொண்டுகூட்டு: 'மானமா அனைய(ரும்), வருந்தல் இல(லாதவரும்), மாட்சி(யுடை)யாரும் (ஆன) பெருந்தவ மடந்தையார் முன்பு, பேதையேன், 'கருந் தனி முகிலினைப் பிரிந்து கள்வர் ஊர் இருந்தவள் இவள்!'' என (அவர்கள்) ஏச (உயிர்தாங்கி) நிற்பெனோ?

பொருள்: '(தன் திரண்ட மயிர்க்கற்றையில் ஒரு மயிர் போனாலும் உயிரை விடுகின்ற) கவரிமான் போன்ற (உத்தம மான முடைய)வரும், (குற்றம் நேர்ந்தால், இறந்தலன்றி உயிரோ டிருந்து) வருந்துதல் இல்லாதவரும், (வேறேயும் சிறந்த) மேம்பா டுடையவருமான (கற்புப்) பெருந்தவம் படைத்த (அயோத்தி மாநகர) மாதர் முன்னே, அறிவிலியான நான் (சிறைமீட்கப்பெற் றுச் சென்றேனாலே, அவர்கள், என்னைச் சுட்டி,) "ஒப்பற்ற கார் மேகம் போன்ற இராமபிரானைப் பிரிந்து கள்ள அரக்க னூரிலே வாழ்ந்தவள் இவள்!" என்று (தங்களுள்ளே பேசி என்னை ஏசுவார் களே. அவ்வாறு அவர்கள்) ஏச(க் கேட்டபோது இறந்துவிடு வேனேயன்றி, உயிர் தாங்கி) நிற்பேனோ! (அப்போது சாதலினும் இப்போது சாதல் நன்று.)

மானமா - கவரிமான்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

என்ற குறட் கருத்து இங்கே யெடுத்தாளப்பட்டது. மாட்சி - பெருமை - மேன்மை. பேதை - அறிவிலி. தனி - ஒப்பற்ற. முகில் - மேகம்.

தன்னைக் காக்கும் இராமலக்குமணரைத் தன்னைவிட்டுப் பிரியச்செய்து, காப்பிழந்து, கவரப்பட்டுச், சிறைப்பட்டது கருதித் தன்னைப் 'பேதையேன்' என்றாள். (அஉ)

83. அற்புத னரக்கர்தம் வருக்க மாசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டநாள்
இற்புகத் தக்கிலை யென்னின் யானுடைக்
கற்பினை யெப்பரி சிழைத்துக் காட்டுகேன்

கொண்டுகூட்டு: 'அற்புதன் (இங்கு வந்து) அரக்கர்தம் வருக்கம் ஆசு அற, வில் பணி கொண்டு, அரும் சிறையின் (நின்று என்னை) மீட்ட நாள், "இல் புகத் தக்கிலை!" என்னில், யானுடைய கற்பினை எப் பரிசு இழைத்துக் காட்டுகேன்?'

பொருள்: '(இங்கேயே சாக நேருவதை யெண்ணிப்பாராமல், அயோத்திக்குப் போனபோது சாகநேரு மென்கிறேன்.) அதிசய வீரனா (ஆன என் நாயகனா இங்கே வந்து) இராக்கத வமிசம் சிறிதுமில்லாமல் அடியோடு அற்றுப்போம்படி வில்லின் தொழிலை மேற்கொண்டு, மீட்டற்கரிய சிறையினின்று என்னை மீட்டபோது, "என் வீட்டுக்குள்ளே புகுதற்குத் தகுதியுடையை யல்லை!" என்றால், என்னுடைய கற்புடைமையை எவ்வாறு நிரூபணஞ்செய்து காட்டுவேன்? (காட்டுமாறு இல்லையாதலால், அப்போது விடக் கடவதாகிய உயிரை இப்போது விட்டுவிடுதல் நல்லது.)'

வருக்கம் - வமிசம். ஆசு - அற்பம். விற்பணி - விற்றொழில். எப்பரிசு - எவ்விதம். இழைத்தல் - செய்தல்: 'இழைத்தல்' என்பது, இங்கே, நிற்கும் இடத்தின் ஆற்றலால், நிரூபணஞ்செய்த லென்ற பொருள்கொள்ள நின்றது. நிரூபணஞ்செய்தல் - உருசுப்படுத்தல் - மெய்ப்பித்தல். (அங)

சீதை தற்கொலைசெய்யப்புக்க இடத்தில் 'ராமதூதன்' என்று சொல்லித் தொழுது அநுமான் தோன்றல்

[சீதை இவ்வாறு புலம்பிச் சாக முடிவுசெய்து, அதுவே இறந்துபடற்கேற்ற இடமென்று ஒரு குருக்கத்தி மரச்செறிவை அடைந்தாள். (அவள் புலம்பியதைக் கேட்டுக்கொண்டிருந்த) அநுமான், அவள் கருத்தை ஊகித்துணர்ந்து, அவள் தற்கொலை செய்யத் தொடங்கிவிட்டால், தொட்டுத் தடுக்கவேண்டி வருமென்று அஞ்சி, தற்கொலை தொடங்கு முன்னேயே தடுத்தற்கு உபாயம் தான் ராமதூதனெனத் தெரிவித்தலே யென்று கருதி, 'ராமதூதன் அடியேன்!' என்று சொல்லிக் கும்பிட்டுக்கொண்டு அவளெதிரே போய் நின்றான்.]

இங்கே, சற்று நின்று, கம்பர் இந்தச் சுந்தர காண்டத்தில், இதுவரை, நாம் ஊகித்துணரும்படி, குறிப்பித்திருப்பவை எவையெவை என ஆராய்தல் தகுதியாயிருக்கின்றது:

அநுமான் இலங்கை புகுந்தது முதல் சீதை தற்கொலை செய்யத் துணிதல் வரை கவி அமைத்துள்ள நாடகப்பாங்கான காட்சிகள் *

(ஊர்தேடு படலத்தில், அநுமான் சீதையைத் தேடும்போது, இராவணனைத் தம் உயிருக்குயிராகக் கொண்ட அவனுடைய பல சாதி மனைவிமார் அவன் தம்பால் வருதற்கு அளவற்ற விருப்புடனிருக்க, அவன் அவர்களை யொதுக்கி அவர்களையும் தன்னையும் களிப்புறச்செய்யும் அறநெறி யகன்று, மறநெறி புகுந்து, தனைத் துரும்பென மதித்த பிறன் மனைவிபால் விரும்பும் பெரும் பேதைமையை அநுமான் கண்கூடாகக் காண்பதையும், காட்சிப் படலத்தில், கலிவிடுக்கில் முளைத்து மழைத்துளி கண்டறியாத அருமருந்த† சஞ்சீவி மூலி‡ போல வாடி, 'மென்மருங்குல் போலவே யுள்ள அங்கமும் மெலிந்து,' இராமனைப் பிரிந்ததை எண்ணி வருந்தி, அவனொடு கூடிவாழ்ந்த காலத்து நிகழ்ந்தவைகளை யெல்லாம் நினைந்து, நொந்து பிரலாபித்து அதிதீவிர துக்கத்தை யடைந்து, கொடும் புலிக்கூட்டத்தின் நடுவே யகப்பட்ட மான் போலக், கரிய பெரிய விகார வடிவமும் கடிய கொடிய கோர கிரியையுமுடைய இராட்சசிகளிடையே யுள்ள சீதையைக் கருத்த

* கீழே இருதலைப் பிறைக்குட்பட்ட பகுதி ஆசிரியர் முந்திய பல படலங்களின் உட்கோள் அறிந்து கூறும் ஆராய்ச்சியுரை.

† அருமருந்தனை. ‡ மூலி - மூலிகை - செடி.

மேக படலத்தைக் கிழித்து வெளிப்படும் மின்னைப்போல அனுமான் கண்ட அச்சமயத்தில இராவணன வருதலையும, சிந்தனைப் படலத்தில், அவன பலவாறு நயமொழி புகன்றும பயமொழி பகர்ந்தும் அவளை இணங்கும்படி வேண்ட, அவள வெறுத்து மறுக்க, அவன கொடுங் கோபங்கொண்டு 'இணங்காயேல இறப்பாய!' என அவளையும, 'இணக்கிரேல இறப்பீர!' என அவளைக் காக்கும் அரக்கியரையும் பயமுறுத்திவிட்டுப புறப்பட்டுப்போதலையும, இந்த உருக்காட்டு படலத்தில், முன்னமே உயிர்விடு மெண்ணம் உதிக்கு மளவுக்கு ஒருபடியே குறைந்த உச்சத் துன்பத்தை உற்றிருந்த சீதைக்கு, இராவணனும அவனுக்குப் பின்பு இராட்சசிகளும் உறுத்திய வருத்தத்தினால் உயிரைவிடு மெண்ணம உண்டாயிருந்த சமயத்தில் அனுமானது மந்திரத்தினால அரக்கியர் உறக்கமுற, அவள் கண்டு, சாகச் சமயம் வாய்த்ததை அறிந்து, இருந்தவினும் இறந்தலே நன்றென்று, அவன் காதுகேட்கப் பலபட புலம்பி, அவன் கண்காணச் சாகப்போவதையும கம்பா இனிது புனைந்துரைத்திருப்பது, — இரவில நெடுநேரம இலங்கை மாநகரமெங்கும் இலைப்புரை கிளைத்துப பார்த்துச் சடைந்து இறுதியில் அசோகவனத்தை அடைந்து சீதையைக் கண்ட அனுமான் சிறிது நேரம் தாழ்த்து அங்கே வந்திருப்பாரானால், ஆங்கு நிகழ்ந்த அதிமுக்கியமான செய்திகளைத் தெரிந்திருக்கமாட்டான்; அச் செய்திகளின் இயற்கை முடிவும அத்தியந்த முக்கியமுமான சீதை தற்கொலையைத் தடுத்திருக்கவு மாட்டா னென்ற எண்ணத்தை நம் மனத்துள் எழுப்பி, அனுமான் நேராகக் கண்ணாலும காதாலும் தெரிந்துகொள்ளும்படி முன்னமே சித்தஞ்செய்துவைக்கப்பட்ட இனியினிய நாடகக் காட்சிகளை நாம் மனக்கண் கொண்டு காண நடித்துக்காட்டுவது போன்றிருக்கின்றது.)

இராமன் வாராமை எதனாலெனல்

84. ஈண்டுநீ யிருந்ததை யிடரின் வைகுறும்
ஆண்டகை யறிந்தில னதற்குக் காரணம்
வேண்டுமே யரக்கர்தம் வருக்கம் வேரொடும்
மாண்டில வீதலான் மற்றும் வேண்டுமோ

* துடப்பமாகத் தேடி.

கொண்டுகூட்டு : 'நீ ஈண்டு இருந்ததை, இடரின வைகுறும் ஆண தகை அறிநதிலன. அதறகுக காரணம வேணடுமே! அரககாதம வருககம வேரொடு மாணடில. ஈது அலால, மறறும் (காரணம) வேணடுமோ?'

பொருள் : 'நீ இங்கேயிருப்பதை இராமன் அறிந்தானில்லை. (எதறகும காரணம வேண்டியிருப்பதுபோல) அதறகுக் காரணம் வேண்டுமன்றோ! (அது நீ அறிந்ததே. ஆயினும கூறுகின்றேன். அக் காரணம்,) அரக்க வமிசங்கள் (அனைத்தும்) அடியோடு அழியவில்லை யென்பதே. (இதுவே போதிய காரணம.) வேறேயும (காரணம்) வேண்டுமோ?' (வேண்டியதில்லை யென்றபடி.)

ஈண்டு - இஙகே. இடா - (சீதையைப பிரிநத) துனபம வைகுதல - தஙகுதல. ஆணடகை - ஆணதகை - ஆணதனமை - ஆணமை - வீரம்: வீரமுடையானுன இராமனைக குறித்தது. மறறும - வேறு (காரணமு)ம்.

சீதை இலஙகையிலிருபபதை இராமன அறிதலாகிய காரணததுககும அவன அரகக ரனைவரையும் அழிததலாகிய காரியததுககும இடையே யுள்ள காலம மிகவும குறைவானதா மெனபதை உறுதியாக உணாததறகு அநதக காரண காரியஙகளை முனபினனுக மாறறி வியபபும் நயபபும விளையக கூறினன. இது, காளிதாச மகாகவி சாகுநதல நாடகததில் ஒரு சநதாபபத தில காரணம் காரியததுககுப பிநதியதாகச சமதகாரமாகக கூறியதை நினைபபூட்டுகினறது. அது வருமாறு:

'துஷ்யந்தன (மாரீச முனிவனை நோககிக கூறுவது), "பெருமானே! முதலிற குறிததது நிறைவேறியதும், பிறகு தஙகள தரிசனமும கிடைதத மையால தஙகள அனுக்கிரகம் ஒபபில்லாததா யிருககின்றது. என்னை? முதலில் மலா தோன்றுகினறது, அதன்பின கனி உணடாகின்றது, முதலில காா எழுகின்றது, அதனபின் மழை பொழிகினறது. இதுதான் காரண காரிய முறை. மறறு இஙகோ, தஙகள் அனுககிரகம பெறுதறகு முனனரே செல்வம வரலாயிறறு!"'

பாட் பேதம்: காரணம் வேணடுமோ: ஈதலால் மாறு வேறுணடோ.

(அச)

அனுமான், தான் உண்மையாக இராம தூதனெனச் சீதை நம்புமாறு கூறுதல்

[அனுமான், சீதையின் முகக்குறியால், அவள் தன்னைச் சநதேகிக்கின்றாளென்று உணர்ந்து, 'சந்தேகிக்காதே, என்னிடத் தில இராமபிரான் கொடுத்தருளிய அடையாளப் பொருள்

இருக்கின்றது. அன்றி, உனக்கும் அவனுக்குமே தெரிந்த சில நிகழ்ச்சிகள் அவன் என்னிடம் கூறியருளினவும் உள்ளன' என்று சொல்லிக் கீழே விழுந்து வணங்கி எழுந்து ஏகதூபமாக நின்றான். அவள், அவன் வராததையும் தோற்றத்தையும் அனுமனைக் காட்டுவனவாகக் கருதியதனால் அருளும், ஒருகால் அரக்கன் வஞ்சகமுடையனாய்ப் புறத்தே அன்புடையான் போல நடிக்கின்றானோ எனக் கருதியதனால் கோபமும் கொண்டு, பின்பு அவனைக் கூர்ந்து நோக்கி, 'இவன் உள்ளத்துள்ள நல்லெண்ணங்கள் இவன் முகத்தில் பிரதிபலித்தலால், இவன் தேவனாகவாவது முற்றத் துறந்த முனிவனாகவாவது இருக்கவேண்டு'மென்றெண்ணினாள்.]

அனுமான் ராமநாமம் கூறியதால் சீதை நன்றி உணர்தல்

85. அரக்கனே யாக வேறோ ரமரனே யாக வன்றிக்
குரக்கினத் தொருவ னேதா னாகுக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரா னாமஞ் சொல்லி
உருக்கின னுணர்வைத் தந்தா னுயிரிதி னுதவி யுண்டோ

கொண்டுகூட்டு. '(இவன்) அரக்கனே ஆக, வேறு ஓர் அமரனே ஆக; அன்றி, குரங்கு இனத்து(ள்) ஒருவனேதான் ஆகுக, (இவனால் விளைவது) கொடுமை ஆக, இரக்கமே ஆக. இங்கு வந்து எம்பிரான் நாமம் சொல்லி (என்) உணர்வை உருக்கினன், (அதனால் என) உயிர் தந்தான். இதின் (மேலான) உதவி (வேறு) உண்டோ?'

பொருள்: '(நான் சந்தேகித்தபடி இவன் குரங்குபோல வஞ்சகமாக வேடம்பூண்ட கொடுமையுடைய) இராக்கதனேயானாலு மாகட்டும்; (அன்றி, எனக்கு நன்மைசெய்ய இரங்கிக் குரங்கு வேடங்கொண்டு வந்த) தேவனேயானாலு மாகட்டும்; (வேடதாரிகளான இவ்விருவரும்) அல்லாமல் (தோற்றப்படியே உண்மையிலேயும்) குரங்குக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனேயானாலுமாகட்டும்; (இவன் இராக்கதனாயிருந்தால், இவன் செய்யக் கருதியது கொடுமையாம். அப்படிக்) கொடுமையானாலு மாகட்டும்; (இவன் தேவனாயிருந்தால், இவன் வந்த காரணம் என் மீது கொண்ட இரக்கமாம், அப்படி) இரக்கமானாலு மாகட்டும்: (இவன் அரக்கனாயினும் அமரனாயினும், இவன் செய்தது நன்மையே. *

* நன்மை, ராமநாமோச்சாரணத்தைக் குறித்தது.

இவன், தான் இருக்குமிடத்திலிருந்து எவ்வளவோ தூரம் கடந்து நானிருக்கும்) இவ்விடத்துக்கு வந்து எம்பிரானுடைய திருநாமத்தை உச்சரித்து என் உணர்வை உருக்கினான். அதனால் என் உயிரைச் சாவாமல் காத்து உதவினான். (எல்லா உதவிகளினும் உயர்ந்த உயிருதவியாகிய) இந்த உதவிக்கு மேலான உதவி யுண்டோ? (இல்லை.)' என்று சீதை யெண்ணினாள்.

'உணர்வை உருக்கினன், உயிர் தந்தான' என மாறுக. 'இதின' என்பது அடுத்து வரும் 'உதவி' என்பதனுல 'இந்த உதவியினும்' என்ற பொருள்பட்டு நின்றது. தேவர், அரக்கருக்கு மாறானவ ராதலால் 'அரக்கனே ஆக' என்றபின் 'வேறோர் அமரனே ஆக' என்றாள். 'அரக்கனே ஆக' 'அமரனே ஆக' எனக் கூறியிருக்கும் வரிசைக் கியைய, அவர்கள் தன்மைகளைக் 'கொடுமை ஆக' 'இரக்கமே ஆக' என நிரல்படக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

'இச் செய்யுளினுல, சீதை இராமபிரானிடத்துக் கொண்டுள்ள பேரன்பு நன்கு விளங்கும்.' (அரு)

அனுமான் தன் வரலாற்றைச் சீதைக்குத் தெரிவித்தல்

[சீதை, மேலே கூறியவாறு கருதி, 'இவன் பேச்சு வஞ்சக மற்றது. இவன் உள்ளத்தே உள்ளதை உள்ளவாறே உரைக்கின்றான். இவன் யாவன் என விசாரித்தற்குரியன்' என்றெண்ணி, 'வீரா, நீ யார்?' என வினவ, அவ் வினைவைக் கூப்பிய கையோடு தலைமேற்கொண்டு, விடை கூறுவானானான்: 'தாயே! இராமபிரான் உன்னைப் பிரிந்த பின்பு தெரிந்தெடுத்துக்கொண்ட சினேகன், சூரிய குமாரனும் வானர ராசனுமான சுக்கிரீவனென்பவன், அவன் தமையன், இராவணனைத் தன் வாலிற் கட்டித் தூக்கிக் கொண்டு அநாயாசமாக அட்ட திக்குக்களினும் பாய்ந்த அசகாய சூரன். அவன், தேவர்கள் வேண்டிக்கொள்ள, மந்தர மலை மத்தாக, வாசுகிப் பாம்பு கடைகயிறாகத், திருப்பாற்கடலைக் கடைந்து அமுத மெடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்த அபாரமான தோள்வலி படைத்தவன். அப்படிப்பட்ட வாலியை உன் நாயகன், ஒரே அம்பினால் உயிர்வாங்கி, அவன் இராச்சியத்தை அவன் தம்பி சுக்கிரீவனுக்கு அளித்து, அவனைத் துணையாகச் சேர்த்துக்கொண்டான். அந்தச் சுக்கிரீவ மகாராசனுடைய மந்திரிகளுள் அடியேன் ஒருவேன். அனுமனென்னும் பெயரினேன். எங்கள் அரசன்

சேனை, எழுபது வெள்ளமென்னும் பெருந்தொகை கொண்டது. அந்தச் சேனை வீரர் ஒவ்வொருவரும் கடல் கடக்க வல்லவர். அவர்களெல்லாரும் எந்தக் காரியத்தையும் உன் நாயகன் குறிப்புப்படி செய்து முடிக்க மனமொருப்பட்டவராய் அவன் கட்டளைப்படி உன்னைத் தேடுதற்கு எல்லாத் திசைகளிலும் சென்றிருக்கின்றனர். அவர்கள் உன்னை இவ் அண்டத்துள்ளே காணவிட்டால், வெளியே உள்ள அண்டங்களெல்லாவற்றிலுஞ் சென்று தேடப் போயிருக்கிறார்கள்.

'உன்னை இராவணன் வான்வழியாகக் கொண்டுபோனபோது, நீ ஆடையிற் பொதிந்து பூமியில் எறிந்த நகைமுடிப்பு எங்கள் மலைமேல் நாங்களிருந்த இடத்தில் விழுந்திருந்ததை இராமபிரானுக்குக் காட்ட, இராவணன் தென்முகமாகச் சென்றானென்றதை அப்பெருமான் மனத்துட்கொண்டு, அடியேனைத் தனியாக ஓர் ஏகாந்தமான இடத்துக்கு அழைத்துப்போய்ச் சொல்லவேண்டியவைகளைச் சொல்லி, "நீ தென்றிசை சென்று தேடிக் காண்பாயாக!" என்று செப்பியருளினான். அவன் அருள் பழுதுபடாத் தன்மையால், உன்னைத் தேடச் சென்ற எத்தனையோ கோடியருள் ஒருவனான எளியேன் உன் திருவடி தெரிசிக்கும் பேறு பெற்றேன்.*]

'நீ அவமதித்துக் கழற்றியெறிந்த நகைகளே
உன் மங்கலியத்தைக் காத்தன' எனல்

கொற்றவற் காண்டேக் காட்டிக் கொடுத்தபோ தடுத்த தன்மை
பெற்றியி னுணாதற் பாறஞே வுயிாிலை பிறிது முண்டோ
இற்றைநா ளளவு மன்று வன்றுநீ யிழித்து நீத்த
மற்றைநல் லணிகள் காணுன் மங்கலங் காத்த மன்றே

* குறிப்பு: சீதை, 'நீ யார்?' என வினவிய வினாவுக்கு விடையளிக்கும் இடையில், அநுமான், இராவணனைத் தோள் வலியாலன்றி வால் வலியாலேயே வென்ற வாலியைப் பல அம்புகளாலன்றி ஓரம்பாலேயே இராமன் கொன்றானென்ற, இடைப்பிறவரலாகக் கூறிய மெய்ம்மைக் கூற்றும், சுக்கிரீவனது சேனை வீரருள் தான் ஒருவனே கடல் கடக்க வல்லவனாயிருக்க, ஒவ்வொரு வீரரும் அத்தகையரென்றும், அவர்கள் சீதையை இந்த அண்டத்திற் காணவிடில் பகிரண்டங்களினும் தேடச் சென்றிருக்கின்றாரென்றும் கூறிய பொய்ம்மைக் கூற்றும், முறையே மறவென்று விரித்தல் பொய்யுரைத்தல் என்னும் குற்றங்களாகத் தோன்றினும் உண்மையில் அவ் இருவகைக் கூற்றுக்களும், உயிர்விடுமளவுக்கு அதைரியமடைந்திருந்த சீதைக்குத் தைரியமுண்டாக்குவதாகிய 'புரைதீர்ந்த நன்மை பயக்கும்', பொருட்டுக் கூறியனவாதலால் நிர்தோஷமானவை யென்னலாம்.

கொண்டுகூட்டு: 'அன்றே! கொற்றவற்கு ஆண்டு (அந் நகைகளைக்) காட்டிக்கொடுத்தபோது (உன் நாயகன்பால்) அடுத்த தன்மை (நான் கூறும்) பெற்றியின்றல (நீ) உணர்தல் பாற்றோ? (அவையன்றி) உயிர்நிலை பிறிதும் உண்டோ? அன்று நீ இழித்து நீத்த மற்றை நல அணிகள் இற்றைநாள் அளவும் உன் மங்கலம் காத்த.

பொருள்: 'தாயே உன் நாயகனுக்கு அவ்விடத்தில்—நாங்களிருந்த மலையிலே — (அந்த நகைகளைக் கொண்டுவந்து) காட்டிக் கையிலே கொடுத்தபோது, உன் நாயகன்பால் நிகழ்ந்த மெய்ப்பாட்டுத் தன்மை நான் சொல்லும் விதத்தினால் நீ தெரியும் இயல்பின தன்று. (அது கண்டோர் அறியக்கூடியதா யிருந்ததன்றிக் கேட்டோர் அறியக்கூடியதா யிருக்கவில்லை. உன் பிரிவாற்றாமையால இறக்குந் தறுவாயி லிருந்த உன் நாயகனுக்கு அந்த நகைகள் உயிர் போய்விடாமல் நிலைக்கச் செய்தன. அவைகளைக் கண்டிரா னேல், இறந்திருப்பான். ஆதலால், அந்த நகைகளே அவன் உயிர்நிலையா யிருக்கின்றன. அவனுக்கு அந்த நகைகளன்றி) உயிர்நிலை வேறு இல்லை. (அவைகளைப் பார்த்தும் பரிசித்தும் இன்றளவும் இறவாதிருக்கிறான். உன்னை இராவணன் கொண்டு போன நாள் எந்த நாளோ,) அந்த நாளிலே, நீ, ("நாயகனைப் பிரிந்திருக்கின்ற நமக்கு மங்கலிய மல்லாத மற்ற நகைகள் தகாதன" வென வெறுத்து) அவமதித்து (உன் திருமேனியினின்று) நீக்கி யெறிந்த மற்ற நகைகளே இன்றைத்தினம்வரையும் உன் மங்கலியத்தை (எனவே உன் நாயகன் உயிரை)க் காப்பாற்றின. (நீ சுமங்கலியாயிருப்பது — உன் நாயகன் உயிரோடிருப்பது — நீ கட்டியிருக்கும் மங்கலியத்தா லன்று, கழற்றி யெறிந்த மற்ற நகைகளால் என்பதை அறிவாயாக என்றபடி.)

கொற்றம் - வெற்றி. கொற்றவன் - வெற்றியுடையவன் - இராமன். ஆண்டு - அவ்விடத்தில் - சுக்கிரீவன் அனுமான் முதலியோர் இருந்த ரிசியமுக மலையில். பெற்றி - விதம், தன்மை. இழித்தல் - தாழ்த்தல், அவமதித்தல். நீத்தல் - துறத்தல் - நீக்குதல். இற்றைநாள் - இன்றைத்தினம். அன்றே - அன்னையே - தாயே: 'ஐஇறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும் உருபாம்' என்றபடி அன்னை விளியேற்கும்போது அன்றே என்றாயது. அம்மையை அம்மா என அழைக்கும் உலகவழக்கு இங்கே கருதத்தக்கது. காண், முன்னிலையில் வரும் ஓர் உரையசை. மங்கலம் என்பது இரட்டுற மொழிதலாய், மங்கலியத்தையும் மங்கலியம் எதன் அறிகுறியோ, அதுவாகிய

சுமங்கிலித்துவத்தையும் (அதாவது ஒருத்தி கட்டுக்கழுத்தியாய் — கணவன் உயிரோ டிருக்கப்பெற்றவளாய் — இருக்கும் தன்மையையும்) உணர்த்தி நின்றது. காத்தல் - (தீங்கு நேராமல்) தடுத்தல். மங்கலம் காத்த - மங்கலி யத்துக்குக் (கழுத்தினின்று களையப்படும்) கேடு நேராமல் தடுத்த. மன, ஓ, அசைநிலைகள்.

நான்காம் வேற்றுமைத் தொகையாகிய 'கொற்றவற் கொண்டு' என்ற பாடத்துக்கு, 'கொற்றவனுக்கு (அந்த நகைகளை)க் கொண்டு(வந்து)' எனப் பொருள் கொள்க.

ஏனைய ஆபரணங்களுக்கு இல்லாத 'திரு' என்ற அடையுடன் திருமங்கலி யம் என வழங்கப்பெற்ற மங்கலத்துக்கு அடை கொடாது வெறுமனே 'மங்கலம் காத்த' எனக் கூறி, மற்ற அணிகளை 'மற்றை நல் அணிகள்' என விசேடித்துக் கூறியது, இராமன் உயிரை முன்னையது காவாமலிருக்கப் பின்னையவை காத்தன வென்பது குறிக்க என்னலாம்.

'உன் நாயகன் சாவாமற் காத்தன' என்றது. 'உன் மங்கலங் காத்த' என்றது மங்கலவழக்கு.

'இராமன் இறந்துபடுவ னென்பதை வாயினற் சொல்லக் கூசி "உன் மங்கலங் காத்த" என வேறுவகையாற் கூறினது-பிறிதினவிற்சியணி.' *

பாட பேதம்: கொற்றவற் கொண்டு. (அக)

அனுமான், தான் இலங்கைக்கு வந்தவாறு கூறுதல்

['உன் ஆபரணங்களால் இராமபிரான் உயிர்தரித்திருக்கின் றான். அவன் ஆணையைச் சிரமேற்கொண்டு உன்னைத் தேடும் பணிசெய்யப் புறப்பட்ட வானர சேனபதிகளுள்ளே வாலி குமார னும் இளவரசனுமான அங்கதன், இரண்டு வெள்ளம் சேனையுடன் தென்திசைக்கு வந்திருக்கின்றான். அந்தச் சேனையைச் சேர்ந்த யான் இலங்கைக்கு வந்தேன்.']

சீதை வேண்ட, அனுமான் இராமனை வருணித்தல்

[அது கேட்ட சீதை, 'எம்பெருமான் திருமேனி யிலக்க ணத்தை நீ தெரிந்தவாறு செப்புவாயாக!' என, அனுமான் கூறுவானான்:]

* வை. மு. கோ.

இராமன் அங்கவருணனை எளியதன் றெனல்

['அழகிற் சிறந்த மற்றைய ஆடவர்களுடைய அங்கங்களுக்கு உயர்ந்த உவமானங்களாகத் தெரிந்தெடுத்துக் கூறும் பொருள்கள் யாவையும் இராமபிரான் அங்கங்களுக்குத் தாழ்ந்தவைகளாயிருக்கின்றன. அவன் திருமேனியைச் செவ்வையாகத் தெரிந்த நீ, என் வருணனையை அடையாளமாகக் கொண்டு தொடர்ந்து, உன் ஞாபகமும் மனோபாவனையும் துணையாக, அவன் அங்கலக்ஷணங்களனைத்தையும் அறிந்துகொள்வாயாக' என்று இராமன் மேனியை அடி முதல் முடி யிறுதியாக அனுமான் வருணிப்பானானான் :]

இராமனது பாதாதிகேச வருணனை

['அணியிலக்கணம் வல்லார், பாதத்துக்குத் தாமரை மலர் உவமான மென்பர். அம் மலர் உவமான மாகவொண்ணாத உயர்வுடையது இராமபிரான் ஸ்ரீபாதம். அந்தப் பாதத்தின் செந்நிறத்தை நோக்கச் செம் பவளம், கருங் குவளை யென்னும்படி கரியதாய்விடும். விரல்களுக்குக் கேவலம் கற்பக தருவின் அரும்பையும் பவளக்கொடியையும் உவமையாகக் கூறலாமோ? உதயசூரியனது சிவந்த கிரணங்கள் ஒப்பென்று கூறலாமேயன்றி வேறு கூறலாகாது. பதினைந்து திதிகளில் பதினைந்து வடிவமாகத் தோன்றும் சந்திரன், சிறியனவும் பெரியனவுமாக விளங்கும் நகங்களுக்கு உவமான மாகவேண்டுமானால், (அந் நகங்கள் போலச்) சிறுத்தும் பருத்தும் பளபளத்தும் தோன்றுதல் மட்டும் போதாது, பதினைந்து வடிவமின்றிப் பத்து வடிவமுடையதாதலும் வேண்டும்; அன்றியும், மறுவின்றியும் இருத்தல் வேண்டும். திரிவிக்கிரமாவதாரத்தில் உலகமெல்லாம் பரவிய * புறவடிக்கு அப் பெருமையில்லாத புந்தகம் ஒத்ததெனலாமோ? தொடைகளுக்கு உவமானமாக வொண்ணாமையினால், எட்டுத் திக்கு யானைகளின் துதிக்கைகளும் நாணமடைந்தனவாதலால், அத் தொடைகளுக்கு இவ்வுலகத்தில் உவமையில்லை. மேலுலகத்திலுள்ள தருமசொரூபியாகிய கடபகவானது பெரிதே உவமான மாதற் குரியது.]

---

* எல்லா உலகங்களிலும் வியாபித்த, எல்லா உலகோரும் வணங்கிய.

87. பொருவரு மரகதப் பொலங்கொண் மால்வரை
வெருவுற விரிந்துயா விலங்க லாகத்தைப்
பிரிவற நோற்றில ளென்னிற் பின்னையத்
திருவினிற் றிருவிலார் யாவர் தெய்வமே

கொண்டுகூட்டு : '*பொருவு அரு பொலம் கொள் மால் மரகத வரை வெருவு உற விரிந்து உயர்(வுற்றதும், இலக்குமி) விலங்கல (பெற்றதுமான) ஆகத்தைப் பின்னை பிரிவு அற நோற்றிலள் என்னில், தெய்வமே! அத் திருவினில் திரு இலார் யாவர் (உளர்!)*

பொருள் : '*ஒப்பற்ற அழகுடைய பெரிய மரகதமலை அஞ்சும்படி அகன்று மேன்மையுற்றதும் இப்போது இலக்குமி பிரிந்திருக்கின்றதுமான இராமபிரானுடைய மார்பை அந்த இலக்குமி (எப்போதும்) பிரிதலில்லாதிருக்கும்படி தவஞ் செய்திலளென்றால், தெய்வமே! (அந்த இலக்குமியான) செல்வியினும் செல்வமில்லாதவர் யாவர் உளர்!*

'பொருவு அரு பொலம்கொள் மால மரகதவரை' என இயைக்க. உயர்தல் - மேன்மையுறுதல். விலங்கல் - விலகுதல். ஆகம் - மார்பு. விலங்கல ஆகம் - (திருமால இராமனாக அவதரிக்கும்போது இலக்குமி) விலகினமையை யுடைய மார்பு - (இலக்குமி) பிரிந்த மார்பு. பின்னை - இலக்குமி. 'பின்னை பிரிவற நோற்றில ளென்னில்' என மாற்றுக. முதல் திரு செல்வத்துக்கு அதிதேவதையாயச் செல்வி யெனப்பெற்ற இலக்குமியையும், இரண்டாம் திரு செல்வ மெனனும் பாக்கியத்தையும் உணர்த்தின்றன. மனநிறைவும் குறைவுமே உண்மைச் செல்வமும் வறுமையு மாதலால், 'திரு இலார்' என்பதன் உள்ளுறை பொருள் 'மனநிறைவு இல்லார்' அல்லது 'மனக்குறைவுடையார்' எனபதா மெனபது காண்க. 'தெய்வமே!' என்றது, தாம் துன்புறுவாரும் பிறர் துயரம் கண்டு இரங்குவாரும், 'தெய்வமே! இந்தக் கதி நேரலாமோ?' என்று கூறும் உலகவழக்கை அனுசரித்துக் கூறியதெனக: 'தெய்வம்போலவாளே!' எனச் சீதையை விளித்த தெனலுமாம். 'பிரிவற நோற்றனள்' 'திருவினிற் றிருவுளார்' என்ற பாடங்கள் கொண்டார், 'விலங்கல் ஆகத்தை' என்பதற்கு 'மலைபோன்ற (எதற்கும் சலியாத) இராமபிரானுடைய திருமார்பை' என்றும், 'தெய்வமே!' என்பதற்குக் 'குலதெய்வம் போன்றவளே!' என்றும் பொருள் கூறியிருத்தல் காண்க.[1]

பிறவிக் குருடர் துன்பத்தினும் பிறவிதொட்டுக் கண் உடையராயிருந்தவர் கண் இழக்க நேர்ந்தபோது அடையும் துன்பம் மிகவும் அதிகமா

---

　　* வை. மு. கோ.

யிருத்தலபோலத், தான் (இலககுமி) திருபபாறகடலிலே பிறந்ததுதொட்டுத திருமால மாாபில வீறறிருககும பிரவி - செலவமுடையவளான இலகுமி, திருமால இராமனாக அவதரிககும அவதாரததில அவன மாாபைவிட்டு விலகிப பிரிநதிருககுமபடி நோநததனால அநதச செலவததை இழநதது, அவன மாாபை அடைய ஆசைபபடும அநகிய மாதா அடையுந துனபததி னும மிகக துன்பு விளைககும நிாபபாககியமா மெனபதை வறபுறுதத, (உணமையில, பாககியமே தானான) இலகுமியினும நிாபபாககிய ரெவரு மிலலை யெனபாா 'திருவினிற றிருவிலாா யாவா? தெயவமே!' எனறாா. இவவாறு, எலலாருககும பாககிய மளிககும் பாககியலகுமியைப பாம தரிததிரிபோலச சமதகாரமாகக கூறியது, 'தீயினும குளிாசசிமிகக பொருள் யாது? பனிககட்டியினும் வெபபுடையது எபபொருள ?' என்ற போல, அதிசயம பயபபதா யிருததல நோககி நுகாததககது.

பாட பேதம்: பிரிவற நோறறனள: திருவினிற றிருவுளாா (அள)

['ஆசானுபாகு'* வென முழந்தாளவரை நீண்ட கைகளுக்கு ஐராவத மெனனும யானையின் துதிக்கை ஒரு சிறிது ஒபபாகு மெனலாம். கழுததுக்குத திருமாலின செங்கையில் தங்கும் சங்கை யன்றி மறறைச சஙகுகளை யேனும் கமுகையேனும உவமை கூறுதல ஒண்ணாது. முகம செநதாமரை மலாபோலு மென்றால், அம மலரே உவமானமாக கண்ணுக்கு வேறு உவமை யாது உளது? பூரணசந்திரன், தேய்தலுறுதலால், அது, என்றும் பூரணமான பொலிவோடு கூடிய முகத்துக்கு எதிராகமாட்டாது. அமிழ்தம் போல இனிய மொழிகளைக் கூறுதேபோனாலும் புன்னகை பூத்தலேனும் புரியாத பவளததை எவ்வாறு செவ்வாயக்கு உவமையாகக் கூறலாம்? முத்துக்களோ, அமிழ்தத திரள்களோ, தருமம† விததுக்களின் முளைகளோ, சத்திய† விருட்சத்தின அரும்புகளோ, இத்தொகுதிகளுள் எதத்தொகுதி பல வரிசைக்கு ஏறற உவமை யென்று பகர்வேன்? நீல ரத்தினத்தின் ஒளிக் கொழுந்தும மரகத மணியின் கிரணத் திரளும போன்ற நிறமுடையதாகிச் சிவநத அதரத்தை அடுத்து விளங்கும மூககுக்குத தமபலப்பூச்சியைக் கௌவச் சார்நத பச்சோநதி உவமையாதறகுப் போதாதெனில், வேறே உவமானங் கூற லொண்ணுமோ?]

* ஆசானுபாகு - முழநதாளளவும நீணட கையுடையோன.

† தருமமும சததியமும வெணணிறமுடையவை யெனல மரபு.

பனிக்கச் சுரத்துக் கரன்முதலோர் கவந்தப் படையும் பல்பேயும்
தனிச்கைச் சிலையும் வானவரு முனிவோர் குழுவந் தனியறனும்
இனிக்கட் டழிந்த தரக்காதல மென்னுஞ் சுருதி யிரண்டும்
குனிக்கக் குனித்த புருவத்துக் குவம நீயே கோடியால்

கொண்டுகூட்டு: 'சுரத்துக் கரன் முதலோர் பனிக்க, (அவர்களது) கவந்தப் படையும், (அவற்றை உண்ண வந்த) பல பேயும், (தனது) தனிச் கைச் சிலையும், அரக்கர் குலம் இனிக் கட்டு அழிந்தது என்னும் வானவரும், முனிவர் குழுவும், தனி அறனும், ஈர் இரண்டு சுருதியும் குனிக்கக், குனித்த புருவத்துக்கு நீயே உவமம் கோடி.

பொருள்: 'போர்க்களமான தண்டகாரணியத்திலே கரன் முதலிய இராக்கதர்கள் அச்சத்தினால் நடுங்க, அவர்களது தலை யறுபட்ட உடல்களும், (அந்த உடல்களை உண்ண வந்த) பேய் களும், இராமனது கோதண்ட மென்னும் வில்லும், இராக்கத குலம் இனி அடியோடு முழுதும் அழிந்தது என்று (களிப்போடு) எண்ணுகின்ற தேவர், முனிவர், தருமதேவதை, வேதபுருடன் ஆகியவர்களும் குனிக்கும் (- கூத்தாடும்)படி இராமன் கோபத் தால் குனித்த (- வளைத்த) புருவத்துக்கு நீயே உவமையைத் தேடிக்கொள்வாயாக. (என்னால் கூற முடியாது).

பனித்தல் - நடுங்குதல். 'சுரத்துக் கரன்முதலோர் பனிக்க' என மாறுக. கவந்தம் - தலையற்ற உடல். 'சேனையில் மிகப் பெருந்தொகை யிறந்தபொழுது கவந்தம் எழுந்து கூத்தாடு மென்றல் மரபு.' படை, இங்கே தொகுதிக்கு இலக்கணை. தனி - ஒப்பின்மை. சிலை - வில். குழு - கூட் டம். அறன் - அறம் என்பதன் போலி - தருமம். கட்டழிதல் - முழுதும் அழிதல். சுருதி - வேதம். தருமமும் வேதமும் இங்கே அவற்றின் அதி தேவதைகளான தருமதேவதையையும் வேதபுருடனையும் குறித்தன. குனித் தல் - கூத்தாடல், வளைத்தல். உவமம் - உவமை. கோடி - கொள(ளுதி) - கொள்வாய்.

'"இனிக்கட் டழிந்த தரக்காகுல மென்னும்" என்ற விசேடணத்தை வானவர் முதலிய மூன்றுக்கும் கூட்டுக' இராமன் கோபத்தால் புருவத்தைக் குனித்தல் காரணமாகவும், கவந்தமும், பேயும், வில்லும், தேவரும், முனிவ ரும், தருமமும், வேதமும் குனித்தல் காரியமாகவும் இருத்தல் காண்க புருவமாகிய ஒருபொருட் குனிப்பால் அடுக்கிய பல்பொருட் குனிப்பு நிகழ்ந்ததாகக் கூறிய நயம் பாராட்டத்தக்கது.

பாட பேதம்: குனிந்த புருவம். (அஅ)

வருநாட் டோன்றுந் தனிமறுவும் வளர்வுந் தேய்வும் வாளரவம்
ஒருநாட் கௌவு முறுகோளு மிறப்பும் பிறப்பு மொழிவுற்றால்
இருநாற் பகலி னிலங்குமதி யலங்க லிருளி னெழினிழற்கீழ்ப்
பெருநா ணிற்பி னவனெற்றிப் பெற்றித் தாகப் பெறுமன்றே

கொண்டுகூட்டு: 'இருநால பகலின் இலஙகு மதி, வரு நாள (உடன்) தோனறும் தனி மறுவும, வளாவும, தேயவும, ஒரு நாள வாள அரவம கௌவும உறுகோளும, இறபபும், பிறபபும ஒழிவு உறறு அலஙகல இருளின எழில நிழல கீழ் பெரு நாள நிறபின, அவன நெறறியின் பெறறித்து ஆகபபெறும.

பொருள்: '(அர்தத சந்திரனை) அட்டமிச் சந்திரன, உதய மாகுங் காலத்திலேயே உடன் தோன்றுவ தொரு களங்கமும், (சில காலங்களில்) வளர்தலும், (சில காலங்களில்) மெலிதலும், சில காலங்களில் கொலைத்தொழிலையுடைய (இராகு வென்னும்) பாம்பினாற் கௌவப்படும் (துர்ச) சம்பவமும், (உதயமாகிய) பிறப்பும, (அத்தமனமாகிய) இறப்பும் நீங்கப்பெற்று, (அதனோடு) இருளின்கீழ் நெடுங்காலம் நிற்குமானால் இராமனது நெற்றியின் தன்மையைப் பெறுவதாகும்.

நாள - காலம. —தி. அ 'வருநாள்' என்பதற்கு (அமாவாசை யன்று இறந்தா னென மறைந்த சந்திரன் அந்த அமாவாசையை அடுதது) வருநாள் ஆன (சுக்கிலபட்சதது பிரதமையும், அநத மறைநத சநதிரன முதல்முதல தோனறும நாளுமாகிய,) பிறநத நாளிலேயே என்றும் பொருள கூறலாம். ஒரு நாள, கிரகணம நேரும காலததைக குறிததது. மறு - களஙகம. வாள - கொலைததொழில. —கலி. வாள அரவம் - கொலைததொழிலை யுடைய பாம்பு: வாளபோலக கொடிய பாம்பு எனறும பொருளகூறுவா. உறுகோள் - சம்பவம். — தி. அ., - நிகழ்சசி — இ. அ. பகல - நாள. இரு நால பகல - எட்டாம நாள - அட்டமித திதி அலஙகல் - அசைதல, மாலை. 'அலஙகல இருள' எனபதறகு அசையும் இருளென உவமானததுக குப பொருததமாகவும, மாலையையுடைய இருள்போலக கறுத்த தலைமயி ரென உவமேயததுககுப பொருததமாகவும் பொருள கொள்க. எழில - அழகு. பெறறி - தனமை. பெற்றிதது - தன்மையுடையது.

இராமன் நெறறி, எபபோதும் ஒரு தன்மையா யுளளது: உலகோா நெறறிககு உவமானமாகக கூறும் சந்திரனோ, சில காலம வளாதல, சில காலம தேயதல், ஒரோா காலம் பாம்பு கௌவப்படுதல், தோன்றல, மறைதல்

ஆகப் பல காலங்களில் பல தன்மைகளை அடைதலுடையது: ஆதலால், அதற்கு இது ஒப்பாகாது. அன்றி இராமனுடைய தலைமயிரை அடுத்திருக்கின்றது: இருளோ, தான் தோன்றிய பொழுதே அழிவதாகிய இருளை அடுத்திருத்தல் இயலாததாயினது. ஆதலாலும் அதற்கு இது உவமையாகாது என்பது கருத்து. (௬௬)

நீண்டு சுருண்டு நெய்த்திருண்டு நெறிந்து செறிந்து நெடுநீலம்
பூண்டு புரிந்து சரிந்துகடை குழன்று புகையு நறும்பூவும்
வேண்டு மல்ல வென்றதெய்வ வெறியே கமழு நறுங்குஞ்சி
யீண்டு சடையா யினதென்றுந் மழையென் றுரைத்த லிழிபன்றே

கொண்டுகூட்டு: 'நீண்டு, சுருண்டு, நெய்த்து, இருண்டு, நெறிந்து, செறிந்து, நெடுநீலம் பூண்டு, புரிந்து, சரிந்து, கடை குழன்று, புகையும் நறும் பூவும் வேண்டும் அல்ல என்ற, தெய்வ வெறியே கமழும் நறுங் குஞ்சி, ஈண்டு சடை ஆயினது என்றாலும், (அதனை) மழை என்று உரைத்தல் இழிபு அன்றோ?'

பொருள்: 'நீண்டு, சுருண்டு, மினுமினுத்துக், கறுத்து, நெளிந்து, நெருங்கி, (கருமைக்கு அனுகுணமான) நீலநிறமும் பொருந்தி, முறுக்குற்று, (தலைக்குப் பின்புறம்) தாழ்ந்து, நுனி (மற்றைப் பாகத்திலும் அதிகச்) சுருளுற்று, (அகில்) புகையும் வாசனைப் பூக்களும் வேண்டப்படுவன அல்ல (அனுவசியகம்) என்னும்படி, தெய்வீகமான இயற்கை மணம் கமழுகின்ற இராமனது தலைமயிர் (வனவாச காலமாகிய) இப்போது சடையாயிருக்கின்ற தென்றாலும், அதனை மேக மென்று கூறுதல், (புகழ்ச்சியாகாமல்) இகழ்ச்சியாமன்றோ?'

நெய்த்தல் - (நெய் பூசினாற்போல) மினுமினுத்தல். நெறிதல் - நெளிதல் செறிதல் - நெருங்கல். நெடும் நீலம் - மிக்க நீல நிறம். புரிதல் - முறுக்குறல். முதல் 'நறுமை' வாசனையையும், இரண்டாம் 'நறுமை' நன்மையையும் உணர்த்தி நின்றன. குஞ்சி - ஆண்மக்கள் தலைமயிர். ஈண்டு - (வனவாசம் செய்யும்) இக் காலத்தில். 'என்றால்' என்பதன் பின் உம்மை தொக்கது. இழிபு - இகழ்ச்சி.

இராமன் தலைமயிர் சடையானால், என்? சடையான நிலைமையினும், அதனை மேகமென்றல் இழிவுபடுத்தியதா மென்பது கருத்து. இயல்பான நிலைமை மாறிச் சடையான இராமன் தலைமயிரை மேகமெனலே இகழ்தலா மெனின், அவனது இயற்கை மாறாத தலைமயிரை மேகமெனல் அதனை

இடைச்சொல்லும் எதனையோ அதிகமாகக் குறைவுபடுத்துவதா மென்பது குறிப்பு.

இராமனுடைய கேசத்தின் பலவகை அழகுகளும் ஒருசேர நன்கு விளங்க, 'நீண்டு' முதலாகக் 'குழன்று' இறுதியாகப் பத்து விசேடண விசேடணங்களை இனிது அடுக்கிக் கூறி, அவ் விசேடணங்களின் மகுடமாகப் 'புகையும் நறும்பூவும் வேண்டு மல்ல வென்னத் தெய்வ வெறியே கமழும் நறுங்குஞ்சி' என முடித்த கவிசாதுரியம் பாராட்டத்தக்கது.

பாட பேதம்: நீண்டு குழன்று: கடை சுருண்டு: புகையு நறும்பூ வேணயவும்: இழிவாமால். (௯௦)

இராமன் சொன்ன அடையாளச் செய்திகளை அநுமான் சீதைக்குக் கூறுதல்

[மேற்கூறியவாறாக, இராமனது அடி முதல் முடி யிறுதியான அவயவங்களின் இலக்கணங்களை இனிதெடுத்துக் கூறிய அநுமான், 'இராமனது நடை, தசரத சக்கரவர்த்தி "நாடாளுவாயாக!" என்றபோதும், கைகேயி தேவி "காடேகுவாயாக!" என்றபோதும் ஒரே தன்மையதாய, (எய்தும் இன்ப துன்பங்களுக் கேற்றபடி மாற்றமடையும்) இடப நடை யானை நடை யிரண்டும் இணையாகாததான ஏற்றமுடையது' என்று கூறக் கேட்டு, வெந்தீயிலிட்ட மெழுகுப் பாவை போல உருகித் தன்வசமிழந்து, பரவசமடைந்து, தன்னை மறந்து, செயலற்றிருந்த சீதையை நோக்கி, 'நீ என்னை ஐயப்படாமல் அறிந்துகொள்ளுமாறு இராமபிரான் என்னிடம் கூறிய, அடையாளச் செய்திகளிருக்கின்றன. அவைகளைச் செவியேற்பாயாக!' என்று செப்புகின்றான்:]

91. நடத்தலரி தாகுநெறி நாள்கள்சில தாயர்க்
கடுத்தபணி செய்திவணி ருத்தியென வச்சொற்
குடுத்ததுகி லோடுமுயி ருக்கவுட லோடும்
எடுத்தமுனி வோடுமய னின்றதுமி சைப்பாய்

கொண்டுகூட்டு: ' " நெறி நடத்தல் அரிது ஆகும். (நான் வனம் போய்வரும்) நாள்கள் சில. (நீ என்) தாயர்க்கு அடுத்த பணி செய்து இவண் இருத்தி என, அச் சொற்கு உடுத்த துகிலோடும், உயிர் உக்க உடலோடும், எடுத்த முனிவோடும் அயல் நின்றதை இசைப்பாய்!" (என்றான் இராமன்.')

பொருள்: ' "நான் போகும் காட்டு வழி (உன் மெல்லிய பாதங்கள்) நடத்தற் கரிய கடினமுடையதாகும். (நான் காட்டில் கழிக்கவேண்டிய) நாள்கள் சிலவே. (அந்த நாள்களில் நீ என்) தாயமார்க்குச் செய்தற்குரிய பணிவிடைகளைச் செய்துகொண்டு இங்கே அயோத்தியிலே இருப்பாயாக" என்று சொல்ல, அந்தச் சொல்லுக்கு(த் தான் சொல்லும் மறுமொழி இதுதான் என்பாள்போல, மாளிகையினுள்ளே சென்று வனத்துக்குப் போவதற்கென்) உடுத்திய மரவுரிச் சேலையோடும், (இங்கே தடுத்துவிடுவானோ என்ற அச்சத்தினால்) உயிர்போனது போன்ற உடம்பினோடும், (தன்னை எப்படி விட்டுப்போக எண்ணினான் என) என்மேற் கொண்ட கோபத்தோடும் (என் பின்னே வந்து என் கையைப் பிடித்துக்கொண்டு) அருகே நின்றதைக் கூறுவாயாக!" என்று இராமபிரான் என்னிடம் சொன்னான்.'

உகுதல் - இறத்தல்.—த. அ. உக்க - இறந்த - இறந்தாற் போன்ற. உவமை, இசைநிறை, பின்வரும் இரண்டு பாட்டுக்களுடன் இணைத்தால், எதிரது தழீஇய எச்ச உவமையாம்.

நகர் நீங்கு படலத்தில்,

கல்அ ரகும் கடுமைய அல்லவின
சில்அ ரகுண்ட சேவடிப் போதென்றுன (உஉரு)

என்பதும்,

அனைய வேலை அகல்மனை எய்தினள்,
புனையும் சீரம் துணிந்து புனைந்தனள்,
நினைவில* வள்ளல்பின் வந்தயல் நின்றனள்,
பனையின் நீள்கரம் பற்றிய கையினள் (உஉஅ)

என்பதும் இங்கே நினைவுகூரத்தக்கவை. (கக)

[' "அவள் என்னுடன் காட்டுக்குப் புறப்பட்டு அயோத்தி நகரத்துக் கோட்டைவாயிலைக் கடந்தவுடனே, (நகரை அடுத்துக் காடு இருக்குமென அவள் எண்ணியிருந்தபடி இல்லாமை கண்டு,) '"எங்கே காடு?"' என்று கேட்டதையும், எங்களைத் தேரிலேற்றிக் காட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்த சுமந்திரன் அயோத்திக்குத் திரும்பிப் போக விடைபெற்றபோது, '"என் தங்கையர்க்கு யான் வளர்த்த கிளிகளையும் நாகணவாய்ப் பறவைகளையும் வளர்த்துப் பாதுகாக்கச் சொல்"' என்று (நாடுவிட்டுக் காடு

* நினைவில - நினையுமளவில.

ரோடும் வருந்த மறியாது) பிள்ளைத்தனமாகச் சொன்னதையும் தெரிவிப்பாயாக!' என்றான்' என்று அனுமான் கூறிப் பின்னும் கூறுகின்றான்.]

இராமன் மோதிரத்தை அனுமான் காட்டச் சீதை காணல்

92. மீட்டுமுரை வேண்டுவன வில்லையென மெய்ப்பேர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தன னென்றுநெடிய கையால்
காட்டினனோ ராழியது வாணுதலி கண்டாள்

கொண்டுகூட்டு: "மீட்டும் உரை(க்க) வேண்டுவன இல்லை" என, "(என்) மெய்ப் பேர் தீட்டியது; தீட்டு அரிய செய்கையது, (ஆகிய) இதை(ச் சீதை கையில்) செவ்வே நீட்டு!" என நேர்ந்தனன் என்று, (அனுமான்) நெடிய கையால் ஓர் ஆழி காட்டினன். அதை வாள் நுதலி கண்டாள்.

பொருள்: '"இன்னமும் சொல்லவேண்டியவைகள் (ஆன அடையாள வார்த்தைகள்) இல்லை" என்று சொல்லி, "எனது மெய்யான பேர் எழுதியது; சொல்லுதற்கரிய வேலைப்பாடமைந்தது; ஆகிய இதைச் சீதை கையில் நேராகக் கொடு!" என்று கொடுத்தான்' என்று சொல்லி, அனுமான் தனது நீண்ட கையினால் ஒரு மோதிரத்தை எடுத்துக் காட்டினான். அதைச் சீதை கண்டாள்.

மீட்டும் - மீளவும், மேலும் அல்லது இன்னமும் என்ற பொருள்பட நின்றது. உரை - உரைத்தல் - சொல்லல்: முதனிலைத் தொழிற்பெயர். தீட்டுதல் - சித்திரித்தல், சொல்லல்.—ந. அ. செய்கை - வேலைப்பாடு. தீட்டரிய செய்கையது - சித்திரித்தற்கரிய வேலைப்பாடுடையது (இந்த மோதிரம்போலச் சித்திர மெழுதுவதே யரியதென்றால் உருப்படி செய்வது அதிகமாக அரியதென்றபடி), சொல்லுதற்கரிய வேலைப்பாடுடையது (காட்டி யறிவிக்கக்கூடியதன்றிச் சொல்லி யறிவிக்கக்கூடாத வேலைப்பாடுடையதென்றபடி). செவ்வே - நேராக. நீட்டுதல் - கொடுத்தல். நேர்தல் - கொடுத்தல். ஆழி - மோதிரம். வாள் நுதலி - ஒளி பொருந்திய நெற்றியையுடையவள். இப் பாட்டில் 'மீட்டும் உரைவேண்டுவன இல்லை' என்பதும் 'மெய்ப்பேர் தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே நீட்டிது' என்பதும் இராமன் கூற்றாக அனுமான் கூறியவை, 'என' இரண்டும் அனுமான் கூற்று; எஞ்சியது கவிக்கூற்று. (கூஉ)

இராமன் மோதிரத்தைக் கண்ட சீதை தன்மை

93\. இறந்தவர் பிறந்தபயன் எய்தினர்கொ லென்கோ
மறந்தவ ரறிந்துணர்வு வந்தனர்கொ லென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலிந் நன்னுதலி செய்கை

கொண்டுகூட்டு : *இந் நன்னுதலி (-சீதையின்) செய்கையை, இறந்தவர் பிறந்த பயனை(த் தாம் செய்யலாய்) எய்தினர் என்கோ? (ஒன்றை) அறிந்து மறந்தவர் (அதன்) உணர்வு வந்தனர் என்கோ! (உடலைத்) துறந்த உயிர் இடை வந்து (அதனைத்) தொடர்ந்தது என்கோ! (அவள் செய்கைத்) திறம் தெரிவது என்னை?*

பொருள் : *(இராமன் மோதிரத்தைக் கண்ட) சீதையின் மகிழ்ச்சியை, (இம்மை மறுமை இன்பங்களாகிய பிறந்ததனாலாம் பயன்களை அடைய முடியாமல் வீணே காலங்கழித்து) இறந்து போனவர்கள் அந்தப் பிறந்த பயன்களை(க் கிடடுமென எதிர் பாராதிருக்க) அடையப்பெற்றார் (ஆயின், அவர்கள் அடையும் மகிழ்ச்சியைப்போலும்) என்பேனோ! (அறிதற்கரிய ஒரு பொருளை) அறிந்து பின்பு மறந்தவர் திரும்ப அப் பொருளைப் பற்றிய அறிவு வரப்பெற்றார் (ஆயின், அவர் அடையும் ஆனந்தத்தை நேரும்) என்பேனோ! உடலைவிட்டு நீங்கிப்போன உயிர் திரும்ப அந்த உடலினிடத்தே வந்து தொடர்புற்றது (ஆயின், அதன் உவகையை ஒக்கும்) என்பேனோ! அந்த மகிழ்ச்சியின் தன்மையைத் தெரிந்து சொல்வது எவ்வாறோ? (அறியேன்).*

'கொல்' நான்கும் அசைநிலை. உவமேயத்தில் 'நன்னுதலி செய்கை' என்பதற்கியைய, உவமானங்களில் 'எய்தினார் செய்கை' 'வந்தனர் செய்கை' 'தொடர்ந்ததுவின் செய்கை' என மூன்று செய்கைகள் வருவித்துக் கொள்க. மகிழும் செய்கை, 'செய்கை' யெனச் சுருக்கிக் கூறப்பட்டது. பயன் என்பது, இம்மை மறுமைப் பயன்களைக் குறித்தலால், சாதியொருமைப் பெயர். 'துறந்த' 'இடை' என்பவைகளின் முன் 'உடல்', அவாய்நிலையால் வந்த சொல். பின்வரும் 'பிறந்த பயன் எய்தினர்' என்பதனால், 'இறந்தவர்' என்பதற்குப் 'பிறந்த பயன் எய்த முயலாமல் இறந்தவர்' என்று பொருள் கூறப்பட்டது. பொருள்செய்தற்குப் பொருத்தமாக, 'மறந்தவர் அறிந்து' என்பது, 'அறிந்து மறந்தவர்' எனப் பின்முன்னாக மாற்றப்பட்டது.

அறுத்தல் - நீங்குதல். இடை - இடம். நன்மை - நலம் - அழகு.—தி. அ. நுதல் - நெற்றி. நல் நுதலி - அழகிய நெற்றியை உடையவள். செய்கை - (மகிழும்) செயல்.

முதலடிக்குப் 'போன உயிர் திரும்பவும் வரப்பெற்றவர்' என்ற பொருள் பொருந்தாது, அதே பொருளுடைய மூன்றும் அடி கூறியது கூறலா மாதலால்.

பாட பேதம்: இறந்தனர்: மறந்தனர். (கூங)

94. இழந்தமணி புற்றர வெதிர்ந்ததென லானாள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதோ ருயிர்ப்பொறையு மொத்தாள்

கொண்டுகூட்டு: (இன்னும், சீதை,) இழந்த மணியை எதிர்ந்தது (ஆன) புற்று அரவு (உவமை) என்ன ஆனாள்: இழந்தன(வான) பழந் தனம் (மீண்டும்) படைத்தவரை ஒத்தாள்: குழந்தையை உயிர்த்த மலடிக்கு உவமை கொண்டாள்: விழி (இழந்து) உழந்து (அதனைத் திரும்பப்) பெற்றது ஓர் உயிர்ப் பொறையும் ஒத்தாள்.

பொருள்: சீதை, மகிழ்ச்சியடைந்த தன்மையில், காணாமற் போன நாகரத்தினத்தைக் காணப்பெற்றதான நாகம் உவமை என்று சொல்லத்தக்கவளானாள்: இழந்தனவான பழைய செல்வங்களைத் திரும்பப் பெற்றவரைப் போன்றாள்: குழந்தையைப் பெற்ற பிள்ளையில்லா திருந்தவளை ஒத்தாள்: கண்ணிழந்து வருந்தித் திரும்பக் கண்ணைப் பெற்ற உடலை உடையவரை நேர்ந்தாள்.

உயிர்த்தல் - ஈனுதல். உழத்தல் - வருந்தல். உயிர்ப்பொறை - உடம்பு: உயிர்ப்பொறை, உயிர்ப்பொறையை உடையவர்களுக்கு ஆகுபெயர்.

'குழந்தையைப் பெற்ற பிறகு மலடித் தன்மை நீங்கியதாயினும், "மலடி" என்று கூறினது, முன்னிருந்த தன்மையை நோக்கி, இது, பூதபூர்வ வியவஹார மெனப்படும்.' *

இதற்கு முந்திய பாட்டிலும் இதனிலும் இராமன் மோதிரத்தைக் கண்ட சீதை அடைந்த கழிபெருங் களிப்பு மிகவும் நன்றாகப் புலப்படுமாறு, கவி, தொடுத்து ஏழு உவமானங்களை இனிதெடுத்தாண்டிருக்கின்றார்.

---

* வை. மு. கோ.

இராமனைப் பிரிந்து வருந்தி, இனி அவனை அடைதல் கூடுமோ வென்று ஏங்கியிருந்த சீதை, அவன் மோதிரத்தைக் கண்டவுடனே, அவனைத் திரும்பவும் அடைந்ததாகக் கருதி மகிழ்ந்தாள். ஆதலால், அவள் அடைந்த மகிழ்ச்சி, முன் எய்தியிருந்தோர் இனிய பொருளை இடையே இழந்து நெடிது வருந்தித் திரும்பப் பெற்றார் அடையும் மகிழ்ச்சியாம். மேற்குறித்த ஏழு உவமானங்களுள் முதலாவதாகிய இறந்தவர் பிறந்த பயன் எய்திய மகிழ்ச்சியும், ஆறாவதாகிய மலடி குழந்தையைப் உயிர்த்த மகிழ்ச்சியும், முன் அடையாதிருந்த இனிய பொருளை அடையும் மகிழ்ச்சியாதலால் சீதையின் மகிழ்ச்சிக்கு முழுதும் ஒவ்வாது ஒரு பகுதியே ஒத்திருத்தலும், ஏனைய ஐந்து உவமானங்களிற் குறித்த மகிழ்ச்சிகள் யாவும் முழுதும் ஒத்திருத்தலும் கவனிக்கத்தக்கவை. உவமான உவமேயங்கள் முழுதும் ஒத்திருப்பது முற்றுவமை அல்லது பூரண உவமை யென்றும், சில பாகமட்டும் ஒத்திருப்பது ஒருபுடை யுவமை அல்லது ஏகதேச உவமை யென்றும் கூறப்படும். (கச)

இராமன் மோதிரத்தை வாங்கிய சீதை செய்கை

95. வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கணிணை யொத்தின டடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதும்போ
டேங்கின ளுயிர்த்தன ளிதென்னதென லாமே

கொண்டுகூட்டு: (மோதிரத்தைச் சீதை) வாங்கினள், (தன்) முலைக் குவையில் வைத்தனள்; (பின்) சிரத்தால் தாங்கினள், மலர்க் கணிணைச் ஒத்தினள், தடந் தோள் வீங்கினள், மெலிந்தனள், குளிர்ந்தனள், வெதும்பபோடு ஏங்கினள், உயிர்த்தனள். இது என்னது எனலாமே?

பொருள்: (தன் குழந்தையைக் கையில் வாங்கும் தாய் போல, இராமன் மோதிரத்தைச் சீதை கையில்) வாங்கினாள்; (வாங்கினவள், அதைத்) தன் தனங்கட்டிலே வைத்துக்கொண்டாள்; பின்பு தலைமேலே ஏந்திக்கொண்டாள்; அதன்பின் கண்களிலே ஒற்றிக்கொண்டாள்; (அதனைத் தான் அடைந்தது இராமனையே அடைந்ததாகக் கருதி மகிழ்ந்து உடம்பு பூரித்ததனால், இயல்பாசப்) பெருத்த தோள்கள் அதிகமாகப் பெருத்தாள்; (உண்மையில் இராமனை அடையாமை கருதி உடம்பு) மெலிந்தாள்; (திரும்பவும் அவனை எய்தியதாக எண்ணி உடம்பு) குளிர்ந்தாள்; (அவனை மெய்யாகப் பெறுமையை மீண்டும் நினைந்து உடல்)

வெதும்பி ஏக்கமுற்றுப் பெருமூச்செறிந்தாள்: அவள் அடைந்த இந்த நிலைமை எப்படிப்பட்ட தென்னலாம்? இப்படிப்பட்ட தென்று (மனத்தினால் உணரலாமே யன்றி வாயினால்) சொல்ல லாகாததா யிருந்தது.

குவை - மேடு. உயிர்த்தல் - மூச்செறிதல். ஏகாரம், எதிர்மறை. வீங்கல் மெலிதலும், குளிர்தல் வெதும்பலும் முரண் தொடைகள்.

இதற்கு முந்திய இரண்டு பாட்டுக்களில் இராமன் மோதிரத்தைக் கண்ணுற்ற கண்ட சீதை தன்மை வருணிக்கப்பட்டது. இந்தப் பாட்டிலும் அடுத்த பாட்டிலும் அதைக் கையில் வாங்கிய அவள் செய்கை விதந் துரைக்கப்படுகின்றது.

சீதை இராமனைப் பிரிந்ததை நினைந்து வருந்தியபோது வெதும்பும் அவனை அடைந்ததாகக் கருதியபோது குளிர்ச்சியும் எய்தினதாக இங்கே கவிக்கூற்றாகக் கூறிய கம்பர், இக் கருத்தையே, விசேட நயம்பட, அனுமான் கூற்றாகத் திருவடி தொழுத படலத்திற் கூறுவது அறிந்து ஆனந்திக்கத் தக்கது. அது வருமாறு:

'ஒருகணத் திரண்டு கண்டேன். ஒளிமணி ஆழி ஆன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள், வைத்தலும், செல்வ! நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னால்வெந்
துருகிய துடனே ஆறி வலித்தது; குளிர்ப்புள் ளூற!'

சில அலைகள் தொடுத்து அடித்து அமர்வதற்கும், திரும்பச் சில அலைகள் விடாது வீசி ஓய்வதற்கும் இடையே தோன்றும் நித்தரங்க சமுத்திரத்* தோற்றம்போல, 'முலைக்குவடு வைத்தல்' முதல் 'உயிர்த்தல்' ஈறாக நிகழ்ந்த இப்போது கூறிய செயல்களுக்கும், இனிக் கூறும் 'மோத்தல்' ஆதியாக 'விழுங்கல்' அந்தமாக நிகழ்ந்த செயல்களுக்கும் இடையே காணப்பட்ட, சீதை மகிழ்ச்சி மேலீட்டால் தம்பித்துச் செயலற்றிருந்த ஆனந்த நிலைமையை 'இது' என்பதனால் உய்த்துணரவைத்தார்.

இங்கே சீதை உற்ற செயலற்ற ஆனந்த நிலைமையை 'இது' என்றது போல, உரைத்தற்கரிய பொருளெதனையும் 'இது' எனச் சுட்டிப்போதல் கம்பர் கவிமுறை என்பதற்கு உதாரணமாக, இராமனது நலங்களை வாலி வாயிலாகக் கூறுங்கால்,

---

* நித்தரங்க சமுத்திரம் - அலையில்லாத கடல்.

'குலம் இது; கல்வி ஈது; கொற்றம் ஈ துற்று நிற்ற
நலம் இது; புவனம் மூன்றும் நாயகம் உன்ன தன்றே?
வலம் இதில் வுலகம் தாங்கும் வண்மை ஈது;'

என்றதனைக் காண்க. பின்வரும் 'பாழிய' என்ற 101-ஆம் பாட்டுரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற 'அறிவும் ஈதே' என்ற பாட்டையும் பார்க்க.

சீதையின் செயலற்ற தன்மை இப்படிப்பட்ட தென்று உணரலாமே யன்றி உரைக்க லாகா தென்பார் 'இதென்ன தெனலாமே?' என்றார்.

ஆகவே, கவி, 'சீதை செயலற்றிருந்த நிலைமையை உன்னி உணர்ந்து உவகையுறுகின்றேன், ஆயின், உரைக்கமாட்டுகிலேன்' என்றாராவர். யாமோ, உரைக்கமாட்டாமையே யன்றி, உணரமாட்டாமையும் உடையேமா யுள்ளேம்.

இம் மாட்டாமையை ஒருவாறு பின்வருமாறு விளக்கலாம்:

கவி, இராமன் மோதிரத்தைப் பெற்ற சீதை உற்ற இன்பமாகிய மலையின் உன்னதத்தை நாம் கண்டுகொள்ளும்படி அந்த மலைமேல் நம்மைக் கூட்டிக்கொண்டு ஏறுகின்றார். ஏறியவர், இனி ஏறமுடியா தென்ற உயரத்தை எய்தியபோது, அங்கிருந்து அந்தரத்தே தாவி, அந்த மலையுச்சியை அடைந்து ஆனந்தபரவச ராகின்றார். மேற்கூறிய உயரத்தை அவரைப் பின்தொடர்ந்து அடைந்த யாம், அப்பாற் செல்லமாட்டாமல், (தாண்ட வல்லான் தாண்டி அக்கரைத் தருக் கனியை அருந்தாநிற்கத் தாண்ட மாட்டாதான் தயங்கிநிற்றல் போல,) மயங்கி நிற்கின்றேம்.

பாட பேதம்: இன்ன தெனலாமே. (கரு)

96. மோக்குமுலை வைத்துற முயங்குமொளிர் நன்னீர்
நீக்கிநிறை கண்ணிணை ததும்பநெடு நீளம்
நோக்குநுவ லக்கருது மொன்றுநுவல் கில்லாள்
மேக்குநிமிர் விம்மலள் விழுங்கலுறு கின்றாள்

கொண்டுகூட்டு: (அவள் அம் மோதிரத்தை) மோக்கும், (தன்) முலை வைத்து உற முயங்கும், ஒளிர் நல் நீரை, (அது) நிறை கண் இணை(யி னின்று) நீக்கி(ப் பின்னும் அது) ததும்ப நெடு நீளம் நோக்கும்; நுவலக் கருதும்; ஒன்றும் நுவலகில்லாள், மேக்கு நிமிர் விம்மலளாய் விழுங்கல் உறுகின்றாள்.

பொருள்: (தாய் குழந்தையைப் பாராட்டுதல்போல அவள், அந்த மோதிரத்தை) மோந்துபார்ப்பாள்; (முன் தனங்களில்

வைத்த செயலை அன்பு மேலிட்டால் திரும்பவும் செய்வாளாகித்) தனங்களில் அழுந்தத் தழுவுவாள்; (அதைப் பார்த்தற்குத் தடையாகச் சுரந்த ஆனந்தக்) கண்ணீரை அந்நீர் நிறைந்த கண்களினின்று துடைத்துப் பின்னும் அந்தக் கண்ணீர் நிரம்பி வழியாநிற்க, நெடுநேரம் பார்ப்பாள்; அந்நேரொடு பேச உன்னுவாள்; உன்னியபடி ஒரு சிறிதும் பேசமாட்டாதிருப்பாள்; மேலே எழுகின்ற தொண்டை விம்மலுடையவளாய (அவ் விம்முதலால் பேசுசுக்குத் தடையாக உண்டாகிய தொண்டை யடைப்பைக் கீழே தள்ளுவாள் போல,) விழுங்கும் முயற்சி செய்வாள். *

'மோக்கும்' 'முயங்கும்' 'நோக்கும்' 'கருதும்' என்பவை பெண்பாற் படர்க்கையில் வந்த 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள். உற - பொருந்த. நெடுமை, மிகுதி குறித்தது. நீளம், இடநீட்சியைக் குறியாது கால நீட்சியைக் குறித்தது. நெடுநீளம் - மிக நீண்ட பொழுது. நெடிது என்பது, கைந்நெடிது என்பதில் நீண்டது என்றும், நெடிது நோக்கினேன் என்பதில் நீண்ட காலம் என்றும் பொருள்படுதல் காண்க. நுவல்கில்லாள் - சொல்மாட்டாள். மேக்கு - மேலே. நிமிர்தல் - மேலும் மேலும் மிகுதல்.

'நன்னீர் [- (ஆனந்தக்) கண்ணீரை] (அது) நிறை கண்ணிணை (நின்று) நீக்கி(ப் பின்னும் அது) ததும்ப' என இயைக்க. துக்கக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீர் என்பவைகளில் இப்போது சீதையிடம் தோன்றிய கண்ணீர் ஆனந்தக் கண்ணீரென்பது நன்கு விளங்கப் பெரும்பாலும் துன்பக் குறியான 'கண்ணீர்' என்னாது 'நல் நீர்' என்றார்போலும்.

நீடு, நீளம், நெடுமை, நெடுகுதல், நீளுதல், நீளித்தல், நீடுதல், நீடித்தல், நீட்டித்தல் ஆகியவை நெடுங் காலம் குறிக்கும். 'நெடு' என்பதை 'நெடுக' என்பதன் செய்யுள் விகாரமாகக் கொண்டு 'நெடு(க) நீள நோக்கும்' என்பதற்கு 'மிக நெடு நேரம் பார்ப்பாள்' என்றும் பொருள் கூறலாம்.

பேசவொட்டாதபடி கண்டம் விம்மித் தொண்டையடைப்பு உண்டாகுதல், அளவு கடந்த சந்தோஷமேனும் துக்கமேனும் அடைந்தார்மாட்டுக் காணப்படும் மெய்ப்பாடு. †

---

* இறுதி யடிக்கு, 'மேன்மேன் மிகுகின்ற பூரிப்பை யுடையவளாய் (அதனை வாயால்) விழுங்கத் தொடங்குவாள்' என்பது முந்திய உரை.

† மெய்ப்பாடு - 'உள்ளத்தின் நிகழ்ச்சி புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்.'

தன்னை நெடுநேரம் பிரிந்திருந்த குழந்தையை 'இனிக் காணப் போமோ!' வென ஏங்கியிருந்த தாய, தன்னிடம் ஒருவர் அதைக் கொண்டுவந்து கொடுத்தபோது ஆவலுடன் கையில் வாங்கி, உச்சிமோந்தும், மார்பில்வைத்து அணைத்தும், தலைமேல் வைத்தும், கண்களில் ஒற்றிப் பாராட்டி, அது பிரிந்ததை நினைந்து வெதும்பி, ஏங்கி, நெட்டுயிர்த்து, அது திரும்ப வந்துசேர்ந்ததை நினைந்து தேகமும் மனமும் பூரிப்பும் குளிர்ச்சியும் அடைந்து, அதைக் கண்குளிரப் பார்த்துக் களித்தற்குத் தடையாக ஆனந்தக் கண்ணீர் பெருக, அதனைத் துடைக்க, அது மீண்டும் பெருகாநிற்க, நெடு நேரம் தன் குழந்தையை இன்புற நோக்கி, அதனோடு பேச விரும்ப, உவகை மிகுதியால் ஒன்றும் பேசவொட்டாதபடி கண்டம் விம்மித் தொண்டையடைப்புண்டாக, அத் தொண்டையடைப்பைக் கீழே தள்ளுவாள் போல மீண்டும் மீண்டும் விழுங்கா நிற்பாளன்றே? அந்தத் தாய் செயல்போல, இராமன் மோதிரத்தை அனுமான் கொடுக்கக் கையில் வாங்கிய சீதை செயலக் விருந்தன வென, மேலே உரையில் 'தன் குழந்தையைக் கையில் வாங்கும் தாய்போல' எனச் சுருங்கக் கூறியதன் விரிந்த பொருளைத் தெரிந்துகொள்க.

பாட பேதம் : நெடு நன்னீர். (கூ௬)

97. நீண்டவிழி நேரிழைதன் மின்னினிற மெல்லாம்
பூண்டதொளிர் பொன்னனைய பொம்மனிற மெய்யே
ஆண்டகைதன் மோதிர மடுத்தபொரு ளெல்லாந்
தீண்டளவில் வேதிகைசெய தெய்வமணி கொல்லோ

கொண்டுகூட்டு : நீண்ட விழி நேரிழைதன் (- சீதையின்) மின்னின் நிறம் எல்லாம் ஒளிர் பொன் அனைய பொம்மல் நிறம் பூண்டது. மெய(யாக) ஆண்தகைதன் மோதிரம் (தன்னை) அடுத்த எல்லாப் பொருளையும் தீண்டு அளவில் வேதிகைசெய் தெய்வமணிகொல் ?

பொருள் : (இராமன் மோதிரம் பட்டதனால்) சீதையின் தேக முழுதும் பொன் போன்ற பொலிவுடைய நிறத்தை அடைந்தது. இராமனுடைய மோதிரம் தன்னைச் சேர்ந்த எல்லாப் பொருள்களையும் தான் பட்டமாத்திரத்தில் (மாற்றுயர்ந்த பொன்னாக) மாற்றுகின்ற தெய்வீக ரசமணிதானோ ?

நேர்மை - நுண்மை , திருத்தம். இழை - ஆபரணம். நேரிழை - நுண்மையான வேலைப்பாடமைந்த ஆபரணம் (பூண்டவள்), திருத்தமான வேலைப்பாடமைந்த ஆபரணம் (பூண்டவள்). மின் - ஒளி. நிறம் - தேகம்.

மின்னின் நிறம் - ஒளியையுடைய தேகம். முந்திய 'எல்லாம்' முழுதும் என்ற பொருளினும், பிந்திய 'எல்லாம்' யாவையும் என்ற பொருளினும் வந்தன. பொம்மல் - பொலிவு. மெய்யே - மெய்யாகவே. 'மெய்யே' என்பதைத் தாப்பிசையாகப்* 'பூண்டது' என்பதனோடும் 'வேதிகை செய்' என்பதனோடும் பொருத்திப் பொருள்கொள்ளலாம். வேதிகை - வேறுபடுத்தல். தெய்வமணி - பரிசவேதி யென்னும் இரசமணி. இது இரச குளிகை யெனவும்படும்.

சீதையின் தேகம் இராமனுடைய மோதிரத்தால் பொன்னிறம் பூண்டது, அந்த மோதிரத்தின் பொன்னொளி பரவியதனு லென்றும், அம் மோதிரத்தால், சீதை இராமனை பிரிவை நினைவுகூரப் பசலை† பூத்ததனு லென்றும் கூறலாம். (கூஎ)

98. இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்துமமு தாகிய தறத்தவரை யண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி

கொண்டுகூட்டு: (சீதைக்கு அம்) மணி ஆழி, பசியால் இடர் உழந்து இருந்தவர்கள் எய்தும் அருந்தும் அமுது ஆகியது, (இல்) அறத்தவரை அண்மும் விருந்தும் எனல் ஆகியது, வீயும் உயிர் மீளும் மருந்தும் எனல் ஆகியது, (அது) வாழி!

பொருள்: சீதைக்கு அந்த மோதிரம், பசியினால் துன்பம் அனுபவித்துக்கொண்டிருந்தவர்கள் பெற்ற அமுது போன்றது; இல்லறம் நடத்தும் தருமவான்களை அடுத்த விருந்தினையும் ஒத்தது; சாகப்போகும் உயிரைச் சாகாமல் மீளச்செய்யும் மிருத சஞ்சீவினி‡ மருந்தையும் நேர்ந்தது.

இடர் - துன்பம். உழத்தல் - அனுபவித்தல். எய்தல் - அடைதல். அருந்தல் - உண்ணுதல். அமுது - உணவு, அமிர்தம்; பால்: இம் மூன்று பொருளும் பொருந்துதல் காண்க. இங்கே, 'அறத்தவர்' என்றது

* தாப்பிசைப் பொருள்கோள் - பாட்டில் இடையில் நின்ற சொல் முன்னும் பின்னும் சென்று கூடும் பொருள்கோள்.

† பசலை - பசப்பு - பொன்னிறம். அது மாதர்க்குப் பிரிவாற்றாமையால் உண்டாகும் நிற வேறுபாடு.

‡ மிருத சஞ்சீவினி - மாண்டுபோனதை உயிர்ப்பிக்கும் மருந்து.

கிருகஸ்தாச்சிரம தருமிக ளென்னும் இலைறத்தாரை. அணைமுதல் - அணைறு தல - அடுததல். விருந்து - விருநதினன - விருநதாளி. வீதல - சாதல. வாழி - வாழததது.—இ அ மணி - அழகு, இரததினம. வாழி மணி ஆழி - வாழததுசகுரிய அழகிய (அலலது இரததினம பதிதத) மோதிரம. 'வாழி' எனபதறகு (அநத மோதிரம) 'வாழவதாக' என்ட பொருள கூறுவதும உணடு. 'இருநது பசியால இடருழநதவர்கள' என்பதை விகுதி பிரிததுப பொருததிப 'பசியால இடருழநது இருநதவாகள' எனவும, 'பசியால (நடககமாட்டாமல - வேறிடததுககு உணவு தேடிச செலலச சகதியில்லா மல இருநத இடததே) இருநது இடருழநதவா' எனவும இயைககலாம.

இராமன மோதிரம சீதைககுப பெறலரும பொருளாயப பேருவகை விளைததறகு 'அமுது', 'விருநது', 'மருநது' ஆகிய மூன்றும் உவமை யாதலும், அது அவளுககுப பிராணோபாயததைத தவிாததறகு 'அமுதும்' 'மருநதும' உவமையாதலும காணக. (௬௮)

சீதை அனுமானை அருமையாக விளித்துப் பேசுவாளாதல்

99. இத்தகைய ளாகியுயி ரேமுறவி ளங்கும்
முத்தநகை யாள்விழியி னாலிமுலை முன்றில்
தத்தியுக மென்குதலை தள்ளவுயிா தந்தாய்
உத்தமவே னவினைய வாசகமு ரைத்தாள்

கொண்டுகூட்டு : இததகையள் ஆகி, உயிா ஏமுற, விளஙகும் முதத நகையாள (- சீதை), விழியின் ஆலி முலை முனறில தத்தி உக, மெல் குதலை தள்ள, 'உயிா தந்தாய! உததம!' எனறு இனைய வாசகம் உரைததாள்.

பொருள் : இபபடிப்பட்ட தன்மையுடையவளாகி, (அள வற்ற துன்பம அடைந்திருநத தனது) உயிர் (அளவற்ற) இன் பம அடையா நிற்க, (உண்டாகிய மகிழ்சசி காரணமாகப் புன் னகைபூததலால் சிறிது வெளிபபட்டு) விளங்கிய முத்துக்களை ஒதத பறகளையுடைய சீதை, ஆனந்தக் கண்ணீர்த துளிகள தன முகட்டில் (முத்துக்கள் போல) உதிராநிற்க, (முன உறறிருந்த பேசசுத தடை ஒருவாறு நீங்கப்பெற்றுப் பேசத் தொடஙகிக் குழந்தைகளது மழலைமொழிகள் போல) இனியமொழிகள் சூழறு நிறகப், 'பிராணோபகாரியே! புருஷோததமனே!' என்று அனு மானை விளித்துப பின்வரும் வசனங்களைச் சொன்னாள்.

ஏமம் - மகிழ்ச்சி. ஏமுறுதல் - மகிழ்வுறுதல்: காமம் உறுதல் காமுறல் என வருதல்போல, ஏமம் உறுதல் ஏமுற லென வந்தது. நகை - பல். ஆலி - துளி - திவலை. முன்றில - முனனிடம். தததல - ததும்புதல. உகுதல - உதிாதல. குதலை - இனிய மொழி.—நீ அ. தளளல - தடுமாறுதல. உயிா தநதாய - உயிரைக கொடுததாய எனறும, உயிா கொடுததோனே எனறும இரு பொருளபட நின்றது. வாசகம - வசனம்.

'ஒனறும நுவலகிலலாள' ஆக இருநதவள பேசத தொடஙகியபோது சொறகள குழறுதல இயலபாதலால, 'மென்குதலை தளள உரைததாள்' என றது தனமைநவிறசியணி. நாறகாலிககுக கால நானகு, முககாலிககு மூனறு கால எனபவை போனற தனமை நவிலவன வெலலாம, வெறுந் தனமை நவிறசியாமே யனறித் தனமைநவிறசியணி ஆகா. மேறகூறிய 'மெனகுதலை தளள உரைததாள' எனபது போல, இனிய பொருளுடையனவாயத தனமை நவிலவனவே தனமைநவிறசியணி யெனற குரியனவா மெனபது கவனிககததககது. தனனைச சாவாமற காதத சிறியதிருவடி யென்னும அனுமானை நோககிச, சீதை, 'உயிாதநதாய' என்றது, 'ஆவியோ நிலையிற கலஙகிய தியாககை யகதததோ புறதததோ' * எனனுமபடி நாகபாசததாற கடடுணடு குறறுயிராயக கிடநத இலககுமணனதியரை எழுநதிடசசெயத பெரியதிருவடி யெனனும கருடனை நோககி, இராமன, 'உணடிலை யெனன நினற உயிாதநத உதவியோனே' † என உரைதததை நினைவுறுததுகிறது. (கக)

சீதை அனுமானுக்கு நன்றியறிவு கூறி முகமன் மொழிதல்

மும்மையா முலகந் தந்த முதல்வற்கு முதல்வன் றூதாய்ச்
செம்மையா லுயிர்தந் தாய்க்குச் செயலென்ற லெளிய துண்டே
அம்மையா யப்ப ஞய வத்தனே யருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானு நல்கினை யிசையோ டென்றாள்

கொண்டுகூட்டு: 'மும்மை ஆம் உலகம தநத முதல்வறகும் முதல்வன தூது ஆய, செமமையால உயிா தநதாயககு, எனறல செயயல் எளியது (ஆன கைம்மாறும்) உணடே? அமமை ஆய அபபன் ஆய அததனே! அருளின் வாழவே! (எனக்கு நீ) இமமையே மறுமைதானும் இசையோடு நல்கினை' என்றாள.

பொருள்: '(சொர்கக மத்திய பாதாளம் என்னும) மூன்று லோகங்களையும படைதத தலைவ(ஞகிய பிரமதேவ)னுககுத்

* பாரதம், கனனபருவம - உசo. † நாகபாசப படலம - உகக.

(தந்தையாம் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானது) தலைவனுடைய தூதுவனாகி, நற்குணத்தினால் எனக்கு உயிரை உதவிய உனக்கு என்னால் எதிர் செய்யக்கூடியதான பிரதியுபகாரமும் உண்டோ? எனக்கு அம்மையாகி அப்பனுமான கடவுளே! கருணைக்கிருப்பிடமானவனே! (இறந்தே போவேனாயிருந்த என்னை இறவாமற் காத்து என் நாதனை யான் திரும்ப அடைதற்குக் காரணனாகி) இகலோக இன்பங்களையும், (என் நாயகனைப் பிரிந்ததனால் இடையே தடைபட்டிருந்த இல்லறத்தை அவனைத் திரும்ப அடைந்து நடத்துதற்குத் துணைபுரிந்து,) பரலோக இன்பங்களையும் (மாற்றாரால் சிறைப்பட்டு மீட்கப்பெறாமற் செத்தார் என்னும் வசையை நீக்கி அம் மாற்றார் ஒளித்துறையும் இருப்பிடத்தை எம்பிரானுக்குத் தெரிவித்து அவனால் அவர்கள் நாசமாதற்கு ஏதுவாகி 'என்னை ஒறுத்தாரைக்* குலத்தினோடும் வேரறுத்தலே'† என்னும்) கீர்த்தியையும் எனக்குக் கொடுத்தாய்' என்று சீதை அனுமானை நோக்கிச் சொன்னாள்.

'மும்மை,' மூன்றுயிருக்குந் தன்மை எனப் பொருள்படாது, மூன்று என, 'மும்மைத் தமிழ்' என்பதிற்போலப் பொருள்பட்டு நின்றது. தூது, தூதுவனுக்கு ஆகுபெயர். செம்மை, செம்மைக் குணங்களுக்கு ஆகுபெயர். 'செயல் என்னால் எளியதுண்டோ?' என்பதை 'என்னாற் செ(ய்)ப்பல் எளியது (ஆன கைம்மாறும்) உண்டோ?' என இயைக்க. அத்தன் - கடவுள். தெய்வம் மானுட ரூபமாய் உதவிசெய்கிறதென்னும் ஐதிகம் பற்றிச் சீதை அனுமானைக் 'கடவுளே!' யென்றாள். வாழ்வு - வாழ்தற்குரிய இடம்.—இ. அ. முறையே இகலோகம் பரலோகம் என்னும் பொருள்களையுடைய 'இம்மை' 'மறுமை' ஆகிய இரண்டு சொற்களும் ஆகுபெயர்களாய், இகலோக இன்பங்கள், பரலோக இன்பங்கள் என்ற பொருள்களைத் தந்து நின்றன. நல்குதல் - கொடுத்தல். இசை - கீர்த்தி. 'உண்டே' என்பதில் ஏகாரம், எதிர்மறைப் பொருள்பட நின்ற வினா இடைச்சொல். 'அத்தனே' 'வாழ்வே' என்பவைகளில் ஏகாரம், விளி(க்கும்போது பிரயோகிக்கப்படும்) இடைச்சொல். 'இம்மையே' என்பதில் ஏகாரம், எண்ணிடைச்சொல்.

அனுமான் சீதைக்குச் செய்த உதவி, 'இறுதிவந்த எல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம்' என்னும் 'காலத்தினாற் செய்த நன்றி'யாம், அன்றித் 'தனக்கு முன் ஓர் உதவிசெய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவி' என்னும் 'செய்யாமற் செய்த உதவி'யும், 'இவர்க்கு இது செய்தால் இன்னது

* ஒறுத்தாரை - வருத்தப்படுத்திய இராக்கதரை. † இப்படலம் கஉ௬.

பயப்பற் றாராய்த லிலராய்ச் செய்த உதவி' என்னும் 'பயன்தூக்கார் செய்த உதவி'யும் ஆம்.

அனுமான் செய்த நன்றியைச் சீதை இவ்வாறு உணர்ந்தா ளென இந்த மிகவும் இனிமையான கவியிற் கூறியிருப்பது போல நயமாக, நன்றியறிவு வேறெங்கும் கூறப்பட்டிருப்பதைக் காணப் தரிது.

முந்திய பாட்டில், சீதை, அனுமானை, நன்றியறிவோடு, 'பிராணோப காரீ! புருடோத்தமா!' என்ற பொருள் உள்ள 'உயிர்தந்தாய்!' 'உத்தம!' என்றும், இந்தப் பாடல், ஊனையும், உளளையும், உயிரையும், உணர்வையும் உருக்கி அந் நன்றியறிவு மிக்கூர விளைந்த பேரன்புப் பெருக்கால், 'அருளுக காதாரனே! அம்மையாகவும் அப்பனாகவும் அருளுருக்கொண்டருளிய ஆதி பகவனே!' என்ற கருத்துடைய 'அம்மையாய் அப்பனாய அத்தனே! அருளின் வாழ்வே!' என்றும் விளித்த அருமையினும் அருமையான விழுமிய விளிகள் மிகவும் பாராட்டத்தக்கவை.

ஒருவர் முதன்முதலாகத் தாயை அறிந்து வழிபட்டுத், தாய் அறிவிக்கத் தந்தையை அறிந்து வழிபட்டுத், தந்தை (வித்தியா குருவாய்க் கல்வி கற்பித்து, ஞான குருவாய்க் – கற்றதனாலாய பயன் ஆன – கடவுளுணர்மை யறிவையும் வழிபாட்டையும்) அறிவிக்கக், கடவுளை அறிந்து வழிபடுதல் முறை யென்ற கருத்துடைய 'அன்னையும் பிதாவும் முன்அறி தெய்வம்' என்னும் அறிவுரைப்படியே, 'முதல் தெய்வமான தாயையும், இரண்டாந் தெய்வமான தந்தையையும், மூன்றாவதாய முடிவான தெய்வமான கடவுளை யும் போல்வோனே' என்ற பொருள்பட, அவ் அறிவுரை முறைவைப்பை அனுசரித்து, 'அம்மையாய அப்பனாய அத்தனே' என்று சொன்னலாம்.

'அத்தன்' என்பதற்குப் பிதா என்னும் பொருளும் உண்டு. ஆதலால், 'அம்மையாய அப்பனான அத்தனே' என்பதற்கு 'அம்மையாய் அப்பனான அப்பனே' என்னும் பொருள் கொள்ளலாம். அப் பொருளின் பொருத்தம் விளக்குதற்குச் சீதை அனுமானுடைய அன்புமிகுதிபற்றி அவனைத் தாய் என்று சொன்றும், அறிவுமிகுதி குறித்துத் தந்தையென்று சொன்றும், அவன் ஆண்பாலா யிருத்தல் காரணமாகத் 'தாயும் தந்தையும் ஆன தாயே' என்றாவது 'தாயும் தந்தையுமான தந்தையே' என்று சொன்றும் கூறலாம்.

இப்போது, சீதை, தன்னைச் சாதலினின்று காத்த அனுமானை நனி சிறந்த நன்றியறிவுடையளாய், 'அம்மையாய அப்பனாய அத்தனே' என்றது, பின்பு, இந்திரசித்தின் பிரமாத்திரத்தினல் இலக்குமணனும் இறவாமலும், அவர் நிலை கண்டு துக்காக்கிராந்தனுகி மூர்ச்சையடைந்த

இராமன் இறுதியுறுமளவும், அவன் சஞ்சீவி மருந்து கொண்டுவந்து உயிர்ப்பித்தபோது, அவனை நோக்கி, இராமன், பரமகிருதஞ்ஞனாய்,* 'முன் தசரதன் வயிற்றில் பிறந்து செத்துப்போனேம், இப்போது உன் வயிற்றில் பிறந்திருக்கின்றேம்' என்று கருத்துப்பட, 'மன்னின்று முன்றினேம், முன்னம்; மாண்டுளேம். நின்னின்று முன்றினேம்' என்ற துதியத்தை நினைப்புறுத்துகின்றது.

பாட பேதம் : எளிய துணையோ : அத்தனுய அப்பனே. (௪௦௦)

சீதை அனுமனை வாழ்த்தல்

101. பாழிய பணைத்தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ள லேயான் மறுவிலா மனத்தே னென்னில்
ஊழியோர் பகலா யோதும் யாண்டெலா முலக மேழும்
எழும்வீ வுற்ற ஞான்று மின்றென விருத்தி யென்றாள்

கொண்டுகூட்டு : 'பாழிய பணைத்தோள் வீர! துணை இலேன் பரிவு தீர்த்த வள்ளலே! (நீ) வாழிய! யான் மறு இலா மனத்தேன் என்னில், ஊழி ஓர் பகல் ஆய் ஓதும் யாண்டு எலாம், உலகம் ஏழும் ஏழும் வீவு உற்ற ஞான்றும், இன்று என இருத்தி!' என்றாள்.

பொருள் : 'வலிமையுடைய பருத்த தோள்கள் படைத்த வீரனே! நிர்க்கதியாய் ஒரு துணையுமில்லாதிருந்த என்னுடைய துன்பத்தை நீக்கிய வள்ளலே! நான் களங்கமில்லாத கற்புடைய மனமுடையேனென்றால், கற்பகாலம் ஒரு பகலென்று சொல்லப்பெற்ற (பிரம) ஆண்டு (நூறு கொண்ட பிரமாயுசு காலம்) எல்லாம் ஈரேழுலகங்களும் இறுதியுற்ற காலத்தும், இன்று இருப்பது போலச், சிரஞ்சீவியாக இருப்பாயாக!' என்று சீதை அனுமானுக்கு வாழ்த்துக் கூறினாள்.

பாழி - வலிமை. பணை - பருமை. பரிவு - துன்பம். வாழிய, முன்னிலை யசைச்சொல். —நன்னூல் (இடையியல் ௨௧). வள்ளல் - கொடையாளன். மறு - குற்றம், களங்கம். ஊழி - (பிரமனுக்கு ஒரு பகலென்னும்) கற்பகாலம் : (கற்பம் - ஊழிகாலம். — சீ. அ.). வீவு - அழிவு. ஞான்று - நாளில் - காலத்தில். —த. அ.

அனுமான் இலங்கை நகரைச் சூழ்ந்த கடலரண், காட்டரண், அகழரண், மதிலரண்களைத் தாண்டி, அந் நகரின் புறத்தும் அகத்து முள்ள

---

* கிருதஞ்ஞன் - செய்ந்நன்றியறிபவன்.

அரக்கர் காவலைக் கடந்து தன்னை அடைந்த சாகசங் கருதித், தேக வைசிட்டமும் மனோதைரியமும் ஒருசேர உடையா னென்பது குறித்துச், சீதை, அவனைப் 'பாழிய பணைத்தோள் வீர' என விளித்தா ளெனலாம். 'பாழிய பணைத்தோள்' தேகபலத்தையும், 'வீரம்' மனோபலத்தையும் குறித்தல் தெளிவு.

'இன்றென இருத்தி என்றும்' என ஓர் அடியின் ஒரு பாதியாக உரைக்கக்கூடியதை,

'ஊழி ஓர் பகலாய் ஓரும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருந்தி' என்றாள்

என முழுத்த இரண்டடியாக வளர்த்து நீட்டிக் கூறியது, வாழ்த்தினால் ஆயுள் நீண்டதாகச் செய்ததுபோல, வாழ்த்தைக் கூறும் வாசகத்தையும் நீண்டதாகச் செய்ததுபோன்றிருத்தல் நோக்கத்தக்கது.

அசுவத்தாமன் முதலிய சிரஞ்சீவியர் எழுவருள் அநுமான் ஒருவ னென்றும், அவன் இப்போதுள்ள பிரமன் ஆயுசுக்குப் பின் அவனுடைய பதவியை அடைய வரம் பெற்றிருக்கின்றா னென்றும், யாதாயினு மொரு காரியசித்தியை அடையப் பொறுமையோடு காத்திருப்பா ரொருவனை அநுமான் பிரமபட்டத்துக்குக் காத்திருத்தல்போலக் காத்திருக்கின்றா னென்றும் சொல்வது சகசமானது. அதனால், 'ஆண்டு' என்றது, (ஊழிகால மென்னும்) கற்பகாலம் ஒரு நாளிற் பாதியான பகலேயாக, அதனோடு அது போல நீடித்த இரவும் சேர்ந்தான நாள் முந்நூற்றறுபது கொண்ட பிரம ஆண்டு என்றும், 'ஆண்டெலாம்' என்றது, பிரம ஆண்டு நூறும் அல்லது பிரமாயுசு காலம் முழுதும் என்றும் பொருள்படுதல் காண்க. இது புராணக் கொள்கை. இதன் விவரம் அடியில்வரும் காஞ்சிப்புராணப் பாட்டினால் (காரோணப் படலம்-௩) அறியலாம்:

எண்டேமா ரிருபா னாயிரந் தலையிட் டியன்றநாற் பத்துமூன் றிலக்க
யாண்டெனப் படுவ, நான்குகத் தளவை. இம்முறை யாயிர மிறந்தாற்
காண்டகு மயனுக் கொருபகல்; அதுவே கற்பமாம்; இரவுமத் துணைத்தவ்
வாண்டைக்கைக் கநான் முப்பதோர் திங்கள் அஃதொரு பன்னிரண் டாண்டே

ஒருவர், கூனாய், நொண்டியாய்க், குருடு செவி டூமையாய்க், குட்டம், க்ஷயம், குன்மம் முதலிய கொடிய நோய்கள் பலவற்றின் வாய்ப்பட்டுத் தளர்ச்சி மிகுந்த முதிர்ச்சியடைந்து, பொறுக்க முடியாத வருத்தம் வளர, அதனால் ஒரு நாள் ஒரு யுகம்போல நீள, இருத்தலினும் இறத்தல் நன்றென் றெண்ணும்படி வாழ்நாள்கள் தள்ளிக்கொண்டும் சிரஞ்சீவியாக வாழலாம். அப்படிப்பட்ட வாழ்விலுள்ள கேடுக ளனைத்தையும் விலக்கவும், இப்போது அநுமானிடத்துள்ள நலங்க ளெல்லாம் நிலைக்கவும், அவனைச் சீதை, 'என்றும் இன்றென இருத்தி' என்று வாழ்த்தினா ளென, 'இன்றென' என்பதில

கவி வெகு சாதுரியமாகப் பொதிந்து வைத்திருக்கும் பொருளை விரித்து அறிந்துகொள்க. இந்த 'இன்மேல்' என்பது, சொல்லால் வாமனனையும், பொருளால் திரிவிக்கிரமனையும் போலு மெனலாம்.

அனுமானுக்கு உள்ளளவான வாழ்நாள் ஏனைய மற்றைய நலங்களும் அதிகப்படுத்த வொண்ணாதவாறு சிறப்பாக அமைந்திருந்தன வாதலின், சீதை, அந் நலங்கள் இருந்தபடியே நிலைக்கவும், ஆயுள்மட்டும் அதிகப்படவும் வாழ்த்தினாள். அந் நலங்களையும் அவற்றால் அவன் அடைந்திருந்த மேம்பாட்டையும் அவள் அவனை நோக்கி யதிசயித்துக் கூறுதலால் அறியலாம். அக்கூற்று வருமாறு:

'அறிவும் ஈதே; உருவீதே; ஆற்றல் ஈதே; அரும்புலத்தின்
செறிவும் ஈதே, செயலீதே, தேற்றம் ஈதே, தேற்றத்தின்
நெறியும் ஈதே, வினைவீதே, நீதி ஈதே நியக்கென்றால்
வெறிய ரன்றோ?* குணங்களான் விரிஞ்சன் † முதலாம் மேலோரே!' ‡

இப்போது தொடுத்துப் பொருள்கூறப்பெற்ற 'இறந்தனர் பிறந்த' என்பது முதலிய ஒன்பது கவிகளும் நவவகை ஒளிகளுடைய நவமணிகளைப் போலப் பலவகைச் சுவைகளைப் பொருந்தியவைகள். பிராண நாயகனைப் பிரிந்த பெருந் துன்பத்துக்குமேல் பெருந் துன்பமாக இராவணனும் இராட்சசிகளும் இயற்றிய அளவற்ற துன்பங்களை ஆற்றமாட்டாளாய் ஆவி துறக்கும் நிலையிலிருந்த சீதை, அனுமானால் இராமன் மோதிரத்தைப் பெற்று, இராமனையே எய்தியதாக எண்ணி மகிழ்ந்த மகிழ்ச்சியை வியப்பும் நயப்பும் மிகுந்து விளைய விவரித்து வருணிக்கும் இக் கவிகள்போல உவகை மிகுதியை நயம்படத் தொடர்ந்து கூறும் வேறு கவிகள் தமிழ் நூல்களில் எங்குமில்லை யெனனும்படியும், பிறமொழி நூல்களுள்ளும் இருக்குமோ வென்பது ஐயப்பாடா மெனனும்படியும் முதலாறு கவிகள் இனி தமைந்திருப்பதும், — 'இத்தகையள்' என்ற ஏழாங் கவியில், உரைக்க உன்னியதை உவகை மேலீட்டால் உரைக்கமாட்டா திருந்த சீதை, ஒரு சிறிது உரைக்குந் திறம் உற்ற உடனே, உவகைக் கண்ணீராத துளிகள் ஒளிமிக்க முத்துக்கள் போல உதிராநிற்கவும், இனிய மொழிகள் இளங் குழந்தைகளின் குதலைச் சொற்கள்போலக் குழறுநிற்கவும், 'உயிர்தந்தாய்! உத்தம!' என அனுமானை அருமையாக அழைத்திருப்பதும், — 'மும்மையாம்' என்ற எட்டாங் கவியில், உள்ளன்பு சொல் லுருக்கொண்டு வெளிப்பட்டு விளங்கினாற்போன்ற நன்றியறிவுரையும் புகழ்மொழியும் நனி இனியனவாக நன்கு மொழியப்பட்டிருப்பதும், — 'பாழிய' என்ற ஒன்பதாங் கவியில், இந்த வாழ்த்துப்போல எந்த வாழ்த்தும் இல்லை யென வாழ்த்துக்க ளெல்லாவற்றுக்கும் மகுடமான

* வெறியர் - வெறுமையுடையவர். † விரிஞ்சன் - பிரமன்.
‡ உருக்காட்டு படலம் — ௧௧.

வாழ்த்து வாய்ந்திருப்பதும் பலமுறை படித்துப்பார்த்துப் பாராட்டற் பாலனவா யிருக்கின்றன.

பாட பேதம்: பாழியாம். வாழியாய். உற்ற அன்றும். (௧0௧)

அனுமான், சீதை பிரிந்தபின் நிகழ்ந்த செய்திகளைக் கூறல்

[சீதை, அனுமானுக்கு ஆசி* கூறியபின்பு, 'இரு வீரரும் எங்கிருக்கின்றார்கள்? எனக்கு நேர்ந்ததை யார் சொல்லத் தெரிந்தார்கள்?' என்று வினவ, அனுமான் கூறுகின்றான்:

'மாய மானாக வந்தவன், மாரீசனென்னும் மாயாவி.† அந்த அரக்கன், இராம பாணத்தால் இறக்கும்போது, "ஆ! சீதா! ஆ! லட்சுமணா!" என்று இராமன் குரலை அநுசரித்துக்‡ கூவி யிறந்தான். "இக்குரல் மெய்க்குரலன்று, பொய்க்குரலே யென்று வீறு குரலால், சீதா லட்சுமணர் ஐயஞ் செய்வேன்" என நினைந்து, இராமபிரான், கோதண்ட§ நாணொலி யெழுப்பிக்கொண்டு, நீ யிருந்த பாணசாலையை நோக்கி வேகமாக வரும்போது, இளைய பெருமாள் எதிரே வருகையைக் கண்டு, அவன் முகக் குறியால் உன்னைக் காப்பதாகிய தன் கட்டளையை உன் கட்டளையால் கடக்க நேர்ந்ததனால் அவன் கவலையுற்றிருந்ததை ஊகித்து, அவன் வந்த காரணத்தைத் தெரிவித்தபோது, தான் ஊகித்தது உண்மையா யிருந்ததே யென்று வருந்தி, விரைந்து சென்று, நீ யிருந்த இடத்தை அடைந்து உன்னைக் காணானபோது, அவனைக் கண்டோர் உயிர் இருக்கிறதோ, இல்லையோ என்று ஐயுறு நிலைமையனானான்.']

அனுமான், சீதையே இராமன் உயிர் என்று கூறி
அவளைத் தேற்றல்

102. தேண்டிநோ கண்டேன் வாழி தீதில னெங்கோ னாகம்
பூண்டமெய் யுயிரே போகப் பொய்யுயிர் போல நின்ற
ஆண்டகை நெஞ்சி னின்று மகன்றிலை யழிவுண் டாமோ
ஈண்டுநீ யிருந்தா யாண்டங் கெவ்வுயிர் விடுமி ராமன்

* ஆசி - வாழ்த்து. † மாயாவி - மாயை செய்பவன். ‡ அநுகரித்தல் - வேறொன்று செய்வதுபோலச் செய்தல். § கோதண்டம் - இராமன் வில்.

கொண்டுகூட்டு : '(நான்) தேடி (வந்த உன்னை) நேர் கண்டேன்! வாழி! எம் கோன் தீது இலன். (அவன்) ஆக்கம் பூண்ட மெய் உயிர் (ஆய நீ பிரிந்து) போகப், பொய் உயிர் போல நின்ற ஆண்தகை நெஞ்சில் நின்றும் (நீ) அகன்றிலை, (அவனுக்கு) அழிவு உண்டாமோ? நீ ஆண்டு இருந்தாய், இராமன் அங்கு எவ் உயிர் விடும்?

பொருள் : 'நான் தேடிவந்து (என் இரு கண்களின்) எதிரே (இராமபிரானுயிராயிருக்கிற உன்னைப் பிரத்தியட்சமாகக்) கண்டு கொண்டேன்! நீடு வாழ்வாயாக! எம்பெருமான் (இன்னுயிரான நீ சேமமாயிருக்குமளவும், அவன்) சாவில்லாதவனே. அவனுடைய உடம்பை யிடமாகக்கொண்ட, அவனுடைய மெய்யுயிரான நீ (புறப்பிரிவாகப்) * பிரிந்துபோகப், பொய்யுயிருடையவன்போல உள்ள அவனுடைய நெஞ்சினின்றும் நீ எப்போதும் நீங்கினையில்லை. (அவன் உயிரான நீ நீங்காதவரை அவனுக்குச்) சாவுண்டாமோ? நீ, (அவன் நெஞ்சில் இல்லையென்று வைத்துக்கொண்டாலும்,) இங்கே இலங்கையிலே இருக்கின்றாய் (அன்றோ? அப்படியிருக்க, உன்னையன்றி வேறுயிரில்லாத) அவன், அங்கே வனத்திலே எந்த உயிரை விடுவான்?

தேண்டி, தேடி என்பதன் விகாரம். வாழி - வாழ்வாயாக. தீது - மரணம். —சிந்தா. பொய் உயிர் - பொய்யுயிருடையவன்: ஆகுபெயர். அழிவு - சாவு.—இ. அ. ஆண்டு, அசைச்சொல்.—சீ. அ. 'ஆண்டு அங்கு' என்பதை ஒருபொருட் பன்மொழியாகவுங் கொள்ளலாம். விடும் - விடுவான்: ஆண்பாலில் வந்த செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

சீதை, சற்றுமுன்தான், இராமன் சேமமாயிருப்பதை அநுமான் கூறத் தெரிந்தவளாயிருந்தும், அவன் 'உன்னை இராமன் காணானபோது உயிருண்டோ இல்லையோ வென்னும் நிலைமையனானான்' என்றதைக் கேட்ட தக்கணத்தில் இராமன் உயிர் இல்லையானதோ என்று இயல்பாக ஏக்கமுற்றதை அவள் முகத் தோற்றத்தின் மாற்றத்தினாலறிந்து, அந்த ஏக்கத்தைப் போக்கி இன்பமுண்டாக்கும் நோக்கத்துடன், அவன், தான் கூறிவந்த வரலாற்றைத் தொடர்ந்து கூறாது நிறுத்திக்கொண்டு, இடைப்பிறவரலாகக் கூறியது, இக் கவியிற் கூறிய தெனக். 'தீதிலன்', 'அழிவுண்டாமோ?' 'எவ்வுயிர்விடும் இராமன்?' என, ஒருவகை இருவகையோடமையாமல் மூவகையாக இராமன் இறவாமையை உணர்த்தியது, அவ் ஏக்கத்தை நீக்கும் நோக்கத்தாலேயே எனலாம்.

---

* புறப்பிரிவு - உள்ளத்தைவிட்டுப் பிரியாமல் உடம்பைவிட்டுப் பிரிதல்.

இக் கவி, சிறப்பாக இக் கவியின் இறுதி அடி, கனியினிய அதி சாதுரிய வசனங்களை கிரமபிக் கழிபே ருவகை விளைப்பதா யிருப்பது கண்டு களிக்கத்தக்கது. ஈற்றடி, மிகவும் அசாதாரணமான அதி அற்புதக் கவிப் பகுதிகளுள் ஒன்று புள்ளது.

பாட பேதம்: மெய் உயிரே நீயப் பொய்யுயிர் போயே நினறுன: மெய் உயிரோ நீ. (க0உ)

அனுமான் இடையில் நிறுத்திய இராமன் செய்திகளைத் தொடர்ந்து கூறல்

103. அந்நிலை யாய வண்ண லாண்டுநின் றன்னை நின்னைத்
துன்னிருங் கானும் யாறு மலைகளுந் தொடர்ந்து நாடி
இன்னுயி ரின்றி யேகு மியந்திரப் படிவ மொப்பான்
தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயுவை வந்து சார்ந்தான்

கொண்டுகூட்டு: 'அன்னை! அந் நிலை ஆய அண்ணல், இன் உயிர் இன்றி ஏகும் இயந்திரப் படிவம் ஒப்பான (ஆய), ஆண்டு நின்று, துன் இருங் கானும், யாறும், மலைகளும் தொடர்ந்து நின்னை நாடி(ச் செல்லும் போது,) தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயுவை வந்து சார்ந்தான்.

பொருள்: 'தாயே! உன்னைக் காணாமையால் உயிர் இருக்கிறதோ, போய்விட்டதோ என்ற நிலையினனான இராமபிரான், உயிரில்லாமலே நடக்கும் சூத்திரப் பாவை போன்றவனாய்ப், பர்ண சாலை யிருந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு, மரங்கள் நெருங்கிய காடுகளிலும், ஆறுகளிலும், மலைகளிலும் இடைவிடாமல் தொடர்ந்து உன்னைத் தேடிக்கொண்டு செல்லும்போது, உயிரை விலையாகக் கொடுத்துப் புகழைப் பெற்ற சடாயுவினிடம் வந்து சேர்ந்தான்.

'அன்னை', அண்மை விளி. துன்னல் - நெருங்கல். கான் - காடு படிவம் - வடிவம். பதுமை அல்லது பாவை யென்ற பொருளுடைய 'படிமம்' என்று பாட மிருந்தால் சிறப்பாயிருக்கும். ஏடெழுதுவோரால் 'படிமம்' படிவம் என மயங்கி எழுதப்பட்டதுபோலும். 'வந்து சாடாயுவைச் சார்ந்தான்' என இயைக்க.

இராவணன் கவர்ந்த சீதையை மீட்க, அவனை எதிர்த்துப் போர் புரிந்து உயிரிழந்து புகழடைந்த பெரியோ னாதலால், சடாயுவைத் 'தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயு' என இனிது சிறப்பித்தார்.

'இராமபிரான் சடாயுவிடம் சென்று சோகையில் அவன் குற்றுயி ருடையவனாயினும் "உயிர் விற்ற" என்று இறந்தகாலத்தாற் கூறியது தெளிவினால்.'

பாட பேதம். அன்னரும். படிவ மெய்யான. படிவ மன்னான. (௩௦௩)

சடாயுவை இராமன் கண்டு பேசும்போது அவன் இறத்தல்

['இராமபிரான், சடாயுவிடம் வந்தபோது, அவன் இறகற்ப புண்டு இரத்த வெள்ளத்திடையே குற்றுயிராய்க் கிடப்பதைக் கண்டு, கொடுந் துன்பம் அடைந்து, "நீ இந்த நிலைமையை எய்து வானேன்?" என, அவன், இராவணன் உன்திறத்திற் செய்த கொடிய வஞ்சனையைக் கூறச், கோபாக்கினி கொதித்துக் கதித் தெழுந்திடக, இராமபிரான், "என் அம்பினால் எல்லா உலகங்களை யும் எரித்துவிடுவேன்!" என்று வில்லை நோக்கச், சடாயு, அவ் வாறு செய்துவிடாமல் தடுப்பானாய்ச், "சிறியோர் ஒருவன் செய்த தீங்குக்காக ஒரு குற்றமும் செய்யாத உலகோர் எல் லோரையும் ஒழிக்கலாமோ!" என்று சாந்தப்படுத்த, அமைதி அடைந்து, "இராவணன் எவ்வழி ஏகினன்? இருப்பிடம் யாது?" எனச், சடாயு, பேசத் தொடங்கியபோது பிராணன் நீங்கினன். இரு வீரரும், எல்லையற்ற துன்பமுற்றுத் தந்தை முறையினனான சடாயுவுக்குத் தகனம் முதலிய சரம கிரியைகள் சகலமும் முறை யாகச் செய்துமுடித்தார்கள்.]

சீதையைத் திரும்பவும் தேடல்

['பின்பு அவர்கள், திரும்பவும் உன்னைத் தேடுவாராகி, வழி முழுதும் விழி பொழியும் நீரால் சேறாக்க், காடுகளும் மலைகளும் கடந்துசென்றார்கள். இராமபிரான், உன்னை எங்கும் காணாமை யால், வெந் தீயினால் இளகும் மெழுகுப் பாவைபோலச் சோகத்தி னால் கரையும் தேகத்தனாய்ச், சித்தம் கலங்கிப், புத்தி மயங்கிச், "சீதாதேவியை நீ தாராவிடில், கோதாவிரியே! உன்னைக் கொளுத்தி விடுவேன்!" என்றும், "குன்றே! என் தேவியைக் காட்டா யெனில், இன்றே உன்னைக் குலத்துடன் எரித்திட இந்த அம்பு ஒன்றே போதும!" என்றும், மான்களை நோக்கிப், "பொன் மானால் என் மான் பிரிந்தாளாதலால், மானென்னும் பேரே யிராது வேரோடழிய மான்களை யெல்லாம் நாசஞ் செய்வேன்!"

* வை மு. கோ.

என்றும் புலம்பியபோது, இளையபெருமாள் இனிது மொழிந்த இதவசன மருந்தினால் மதிமயக்க நோய் மாறி மனந் தெளிந்தான்.]

சுக்கிரீவனுடன் சினேகஞ்செய்து சீதையைத் தேட வானர சேனைகளை விடுதல்

['பின்பு, நான் முன்னம் சொன்னபடி வாலியை வதஞ் செய்து, சுக்கிரீவனை அரசனாக்கி, உன்னைத் தேடும்படி வானர சேனைகளைத் திசைக ளனைத்திலும் செலவிடுத்தான். தென் றிசைக்கு வந்த சேனையைச் சேர்ந்த யான் இங்கு வந்தேன். இவைகளே நீ இராமபிரானைப் பிரிந்தபின்பு நிகழ்ந்த செய்திகள்' என்றான்.]

சீதை, 'எவ்வாறு கடலைக் கடந்தாய்?' என, அனுமான் கூறல்

[சீதை, இராமன் வருந்தியதை நினைந்து வருத்தமும், தன்னை மறந்துவிடாமையை எண்ணி மகிழ்ச்சியும் கொண்டு, துன்பக் கண்ணீரும் இன்பக் கண்ணீரும் ஒருங்கு சொரிந்து, 'அளவற்ற ஆழமும் அகலமும் உடைய கடலை எவ்வாறு கடந்தாய்?' என, அனுமான், 'உன் நாயகனுடைய திருவடிகளைத் தியானம் செய்யும் அன்பர்கள் தம் அறிவினால் மாயையாகிய பெருங் கடலைக் கடத்தல்போல, யான் என் காலினால் கருங் கடலைக் கடந்தேன்' எனச், சீதை, 'இவ்வளவு சிறிய நீ, எவ்வளவோ பெரிய கடலைக் கடந்தது, தவத்தினாலானதோ? சித்தியினாலானதோ? எதனாலானது? இயம்புவாயாக!' என்றாள்.]

அனுமான் தன் இயற்கை யுருவைக் காட்டல்

[அப்போது, அனுமான், கூப்பிய கையினனாகி, நிமிர்ந்து நின்றால் அண்ட முகடு மண்டையில் இடிக்குமென்று கூனிய உடலும் குனிந்த தலையும் உடையவனாய்த், 'தாயே, பார்! கடலைக் கடந்தது இந்தக் காலாலேதான்' என்று தெரிவிப்பானாய்ச், சீதைக்குத் தன் பேருருவைப் பிரத்தியட்சமாகக் காட்டி நின்றான். மகாமேரு பருவதத்தில் வளரும் மரங்களைச் சூழ்ந்து மின்மினிக் கூட்டங்கள் மொய்த்து மின்னிடுதல்போல, அனுமான் உடம்பில் வளரும் உரோமங்களைச் சுற்றி விண்மீன் ஈட்டங்கள் நெருங்கி விளங்கின.]

அனுமான் பேருருக் கண்ட சீதை மகிழ்தல்

[*சீதை, அனுமானுடைய இயற்கைப் பேருருவை நோக்கி, அதன் அடிகளையே முடியக் காண முடியாதவளாய், 'இனி இராக்கதரெல்லாரும் இறந்தவரே!' என்னும் எக்களிப்பு மிக்கவளாய், பிரிந்த நாயகனைத் திரும்ப மேவினறபோலும் பேருவகையுடையவளாய், 'இவ் உருவைக் காண அஞ்சுகின்றேன். இதனை ஒடுக்குவாய்' என, அவன், 'அன்னையின் ஆணைப்படி ஆகுக' என்று, எல்லாரும் காணத்தக்க பழைய வடிவினனானான். அப்போது, சீதை, அக மிக மகிழ்ந்து அவனுக்குப் புகழ்மொழி புகல்வாளானாள் :*]

சீதை அனுமானைப் புகழ்தல்

104. இடந்தா யுலகை மலையோடு
மெடுத்தாய் விசும்பை யிவைசுமக்கும்
படந்தா ழரவை யொருகரத்தாற்
பறித்தா யெனினும் பயனின்றால்
நடந்தா யிடையே யென்றாலு
நாணு நினக்கு நளிர்கடலைக்
கடந்தா யென்றா லென்னாகுங்
காற்று மன்ன கடுமையாய

கொண்டுகூட்டு: *'காற்றும் அன்ன கடுமையாய! உலகை மலையோடும் இடந்தாய, விசும்பை எடுத்தாய, இவை சுமக்கும் படம் தாழ் அரவை ஒரு கரத்தால் பறித்தாய எனினும் (உன பெருமைக்குத் தக்க) பயன் இன்று. (கடலின்) இடையே நடந்தாய என்றாலும் நினக்கு நாணும். (நீ) நளிர் கடலைக் கடந்தாய என்றால் என் ஆகும?*

பொருள்: *'பூலோகத்தை அதனிலுள்ள மலைகளோடு சேர்த்துப் பேர்த்தாயென்றாலும், தேவலோகத்தைத் தூக்கிப் பிடித்தாயென்றாலும், இவ் வுலகங்களை யெல்லாம் தாங்குகின்ற (ஆயிரம்) படங்களுடைய ஆதிசேடனை ஒரு கையாலேயே பற்றியிழுத்துப் பறித்தாயென்றாலும், (இவ் அரிய செயல்களுளெதுவும், உன் பெருமைக்குத்தக்க) பிரயோசனமில்லாததாம். (அப்படிப்பட்ட பெருமையுடைய நீ, "கருங்கடல் கடந்தனன் காலினால்" என்று கூறி உன்னை இழிவுபடுத்தினாய்.) கடலின் ஊடே*

(பிரயாசமின்றி அநாயாசமாக) நடந்தாயென்றாலும் அது உனக்கு நாணந் தருவதாம். ஆகவே நீ, கடலை (உழைப்பை உணாததும) கடத்தலைச் செய்தா யென்றால், அது (உன்னை மிக மிக இழிவு படுத்துவ தன்றி வேறு) யாதாம ?

காறறு ஆம அனன கடுமையாய - வாயுவேக முடையோனே. ஆம, சாரியை. அனன, உவம உருபு. இடத்தல - போததல. எடுத்தல் - தூககிப பிடித்தல்.—த அ. விசுமபு - தேவலோகம. பயன் - பிரயோசனம - பலன. நளிா - குளிா. 'எனினும' எனபதனோடு 'பறித்தாய' என்ற அணமைச சொலலேயன்றி 'இடநதாய' 'எடுததாய' என்ற சேயமைச சொறகளும் முடிதல் கவனிககததககது.

'காறறுமனன கடுமையாய' என்றது கடலைக் காறறானது வேகமாக வும் எளிதாகவும கடததலபோல, அனுமான கடந்தா னென்று குறிபபிபப தாகக கொளளலாம.

சறறுமுன காட்டபபட்ட அனுமானுடைய இயறகைப பேருடம் புடையா னெவனுககும பூமியைப போததல முதலிய மேறகூறிய பெருஞ செயலக ளெதுவும சிறு செயலாயப பெருமை யளியாததா மாதலால, அனு மான கடலைக கடந்ததாக அவன சொனனாலும பிறா சொனனாலும, அது, அவனை இழிவுபடுததுவதா மென்று சீதை அனுமானைப புகழநதா ளெனபது கருததது. (௧0௪)

105 ஆழி நெடுங்கை யாண்டகைதன்
னருளும புகழு மழிவின்றி
ஊழி பலவு நிலைநிறுத்தற்
கொருவ னீயே யுளையானுய்
பாழி நெடுந்தோள் வீராநின்
பெருமைக் கேற்பப் பகையிலங்கை
ஏழு கடறகு மப்புறத்த
தாகா திருந்த திழிபன்றே

கொண்டுகூட்டு : 'பாழி நெடும தோள் வீரா! ஆழி நெடும கை ஆணதகைதன அருளும புகழும அழிவினறிப பல ஊழி நிலைநிறுததறகு, நீ ஒருவன உளை ஆனாய. பகை இலஙகை, நின பெருமைககு ஏறப, ஏழு கடறகும அபபுறததது ஆகாது இருநதது இழிபு அனறோ!

பொருள்: 'இராமபிரானுடைய ஆணையும் கீர்த்தியும் (உலக முழுவதும் பரவிப) பலஊழி காலம நிலைபெறச செய்தறகு, (அநேகா அநாவசியக மெனனுமபடி) நீ ஒருவனே போதுமான வனாய் உள்ளாய். (ஒரு கடலுக்கே அபபாலுள்ளதாய) எதிரி யிடமான இலங்கை (ஏழு கடல்களையும தாண்டவல்ல) உன் பெருமை விளங்குதலுக்கு ஏறறபடியாக ஏழு கடல்களுக்கும அபபுறதததா யில்லாமறபோனது ஒரு (பெருந) குறையே!

ஆழி நெடும கை ஆணடகை - (அரசாககுரிய ஆஞ்ஞா) சககரததை யுடைய (முழந்தாளளவும) நீணட கையையுடைய வீரன: இதே கருததை 'ஆசானுபாகு' எனனும வடமொழித தொடா குறிததல காணக. அருள - ஆணை: சூளாமணிப படலததில 'ஏதும வெனறி' என்ற பாட்டில் * 'இராமன் ஆணை' யெனறு பொருளபட 'மன அருள்' எனபது வருதல் காணக. உளை - உளளாய. பாழி - வலிமை. பகை இலஙகை - பகைப புலம எனனும எதிரியிடமான இலஙகைத தீவு. இழிவு - தாழவு - குறைவு.

'ஆழி நெடுஙகை ஆணடகை' என்ற சொறறொடா, இராமன் அர சாளாமையினால, தசரதனைக குறிததததாகக கூறுவா ருளா. அத தொடா உபசாரமாக இராமனைக குறிததததாகக கொளளலாம; உண்மையாக இரா மனைக குறிதத தெனலுமாம. இதறகு நியாயம யாதெனில, தசரத சக்கர வாததியின ஆஞ்ஞா சக்கரம் கைகேயி கொணட வரததால் பரதனுடைய தானதை அவன இராமனிடம ஏறபிகக, 'இதை எனதாக நீகொணடு என வனவாச காலம் முடியு மளவும் அரசாளவாயாக' என்று இராமன தனதான சககரததைப் பரதனிடம திரும்ப ஏறபிததிருததலால, இராமனைச சீதை, 'ஆழி நெடுஙகை ஆணடகை' எனறாள் எனபது. இதனால அத தொடா இராமனைக குறிததததாகக கொளபவா 'ஆழி' எனபதறகுச 'சககரம்' என்ற பொருள பொருந்தவிலலை யெனறு கருதி 'மோதிரம்' எனறு பொருள் கூறுவது இனறியமையாத தனறாம. இராமன் கையில 'சக்காரேகை' யுணமைபறறி, 'ஆழி நெடுஙகை ஆணடகை' எனபபட்டா னெனலுமாம். முன் அனுமான, சுககிரீவனை நோககி, இராமனுககுச் 'சஙகு சக்கரக் குறி யுள தடக்கையில் தாளில்' † என்று கூறியிருபபது காணக.

'அனுமானே! இராமபிரான் வெறுததாரை அவன ஆணைபபடி அடககித தணடிததது அவனுககுப பிரதாபமும, அவன விருமபினாககு இதம்செய்து அவனுககுக கீாததியும் உணடாககி, அவ இருவகைப புகழ களும ஏழே முலகததும ஊழியூழி காலததும் நிலைபெறறு நினறு நிலவுமபடி

* இந்நூல் 111-ம பாட்டு. † நட்புககோட் படலம - எக.

செய்ய நீ ஒருவனே போதும். உன் துணை உள்ளதாக, இலக்குமணன் சுக்கிரீவன் முதலியோர் துணை-ம வானரசேனைத் துணையும் மிகையாய் அநாவசியகமா மெனனுமபடியான பெருமையை நீ உடையா யெனபதை உன் இயற்கைப் பேருருவங் கணடு தெளிவாகத் தெரியலானேன. உன் பெருமைக்குத் தக்கபடி இலங்கை ஏழு கடலகளுக்கும் அப்பாலா யிருந்திருந் தால், அத்தனை கடலகளையும் தாணடி அந்த இலங்கையை அடைந்திருப்பாய். அப்போது, உலகத்தோா, உன்னை ஏழுகடல தாணடுவோ னென மதித்திருப் பார். அதற கிடமில்லாமல, நீ ஒருகடலே தாணடுவோ னென மதிக்கப் படுமபடி, இந்த இலங்கை ஒரு கடலுக்கே அப்பாலுள்ளதாய, ஏழு கடலகளுக் கும அப்புறப்பட்டதா யிலலாமறபோனது இரங்குதற குரியதாய, உன பெருமையைக் குறைப்பதா 'புள்ளது' என்று சீதை அனுமானை வியந்து புகழ்ந்தா ளெனபது கருத்து.

இதன்முன் அனுமான் பெருமைக்கு அவன் கடலைக் கடந்தான் என்பது இழிவென்று கூறிப் புகழ்ந்தவள், இப்போது அவன தாணடிய கடல் ஏழா யில்லாமல் ஒன்று யிருந்தது அவன் பெருமைக்கு இழிவு என்று புகழ்ந்தாள்.

இராம லக்குமணருக்குத் துணையான அனுமான் பெருமையை அறியு முன், 'இவ்வளவு பெரிய கடலை நம்மை மீட்க வருவார் எவ்வாறு கடப்பார்? இது சிறிதா யிருந்த திலலையே!' என்று வருந்தியிருந்த சீதை, அவன பெருமையை அறிந்தபின், அக்கடல பெரிதா யிருப்பது போலப் பலவாயும் இலலாமற போயிற்றே யென்று இரங்கினு ளென்று இந்தக் கவியிலும், அவன பெருமை தெரியுமுன, 'எண்ணிறந்த இந்த இராக்கதப் பெருங் கூட்டத்தை, எத்துணைப் பராக்கிரம முடையரேனும இருவரேயான இராம லக்குமணா எவ்வாறு வெலவா' ரென்று ஏங்கியிருந்தவள், அவன பெருமை தெரிந்தபின், 'அவ் இராக்கத ரனைவரும எம்மாத்திரம்? இமைப பொழுதில அழிந்தொழிவா' என்று எக்களித்தா ளென்று 'மின்னே ரெயிற்று' என்ற 107-ஆம கவியிலும இனிது புனைந் துரைத்திருக்கும அதியற்புதக் கற்பனைத் திறம் பெரிதும் பாராட்டத்தக்கது.

பாட பேதம்: ஒழிந்த திகழ்வனரே. (கoரு)

அறிவு மீதே யுருவீதே யாற்ற லீதே யரும்புலத்தின்
செறிவு மீதே செயலீதே தேற்ற மீதே தேற்றததின்
நெறியு மீதே நினைவீதே நீதியீதே நினக்கென்றால்
வெறிய ரன்றோ குணங்களான் விரிஞ்சன் முதலா மேலானோர்

கொண்டுகூட்டு : 'நினக்கு, அறிவு ஈதே, உரு ஈதே, ஆற்றல் ஈதே, அரும் புலத்தின் செறிவு ஈதே, செயல் ஈதே, (மனத்) தேற்றம் ஈதே, தேற்றத்தின் நெறியும் ஈதே, நினைவு ஈதே, நீதி ஈதே என்றால், விரிஞ்சன் முதல் ஆம் மேலானோர் குணங்களான (உன்னோடு ஒப்பிட்டால்) வெறியர் அன்றோ!'

பொருள் : 'உனக்கு, விவேகம் இதுவே, சொரூபம் இதுவே, வல்லமை இதுவே, அடக்குதற்குரிய ஐம்புலன்கள் அடங்கியிருக்கும் தன்மை இதுவே, மனத்தெளிவு இதுவே, மனத்தெளிவுக்கேற்ற ஒழுக்கம் இதுவே, எண்ணம் இதுவே, நீதி இதுவே என்றால், (மனிதர்க்கும், அவரினும் உயர்ந்த தேவர்க்கும், அவர்களுள் உயர்ந்த தேவாதிபர்க்கும்) மேலான பிரமன் முதலியோர் (எல்லாச் சிறந்த குணங்களும் ஒருங்கே உடைய உன்னோடு ஒப்பிடப்படுங்கால்) ஒரு குணமும் இல்லாத தன்மையரே!

ஆற்றல் - வலி. செறிதல் - அடங்குதல்.—தொ. அ. தேற்றம் - தெளிவு. நெறி - ஒழுக்கம். வெறியர் - வெறுமையுடையார் - இல்லாதவர். விரிஞ்சன் - பிரமன்.

'இது' என்பதன் விகாரமாகிய 'ஈது,' 'நான (சீதை) கண்ட தன்மையுடையது' என்ற பொருளை உணர்த்தியது.

'ஈது,' 'ஈது' என வந்த ஒவ்வொன்றுக்கும், இத் தன்மையது என்று, கண்டவர் காட்டக், காணாதவர் கண்டறியக் கூடியதே யன்றிக், கண்டவர் சொல்லக், காணாதவர் கேட்டறியக் கூடாததாய்த், தனக்கு உயர்ந்ததில்லாததே யன்றி ஒத்ததும் இல்லாத பெருமையுடையதாய் உள்ளது என்று பொருள் விரித்துரைக்கலாம். (கoஎ)

மின்னே ரெயிற்று வல்லரக்கர் வீக்க நோக்கி வீரற்குப்
பின்னே பிறந்தா னல்லதோர் துணையி லாத பிழைநோக்கி
உன்னா நின்றே யுடைகின்றே னொழிந்தே னைய முயிருயிர்த்தேன்
என்னே நிருத ரென்னவர் நீயே யெங்கோன் றுணையென்றால்

கொண்டுகூட்டு : 'மின் நேர் எயிற்று வல் அரக்கர் வீக்கம் நோக்கி, வீரற்குப் பின்பிறந்தான் அல்லது ஓர் துணை இலாத பிழை நோக்கி, உன்னா நின்று (மனம்) உடைகின்றேன் (ஆன யான்) ஐயம் ஒழிந்தேன், உயிர் உயிர்த்தேன். (இனி எனக்கு) என்ன (குறை உளது?) நீயே எம்கோன் துணை என்றால் நிருதர் என் ஆவர்!

பொருள்: 'வலிய அரக்கர் பெருக்கத்தைக் கண்டு, இராம பிரானுக்குத் தம்பி ஒருவனே யன்றி வேறொரு துணையு மில்லாத குறைபாடு கருதி, (இருவர், இத்தனை இராக்கதரை எப்படி வெல்லப்போகிறாக ளென்ற சந்தேகங்கொண்டு,) சிந்தனையி லாழ்ந்து (மதந்தெறி தயிர்போல) மனமுடைந்துகொண்டிருந்த யான் சந்தேகம் முழுதும் நீங்கினேன். இத்துணைப் பெருமையுடைய நீயே எங்கோன துணையா யிருக்கும்போது இவ் இராக்கதா எமமட்டு! (அலட்சியமான அற்ப அளவின ரென்றபடி). யாதாவர்! (இருந்த இடந் தெரியாதபடி அழிந் தொழிவ ரென்றபடி).

எயிறு - பல். வீககம - மிகுதி. பிழை - குறைவு. — து. அ நோககி - கருதி: ('அறநோக்கி' என்ற குறளுரை). எனனே, இகழசசிக குறிபபு. என் - யாது.

'எனனே' எனபதறகு 'இது என்ன ஆச்சரியம்?' என்றும, '(எனக்கு இனி) என்ன குறைபுளது?' என்றும் பொருள் கூறுவா.

'நீயே' என்ற பாடம கொளளாமல் 'இவனே' என்ற பாடம கொண டால, அனுமானது இயற்கைப பெருவடிவம கணடு வியந்து அவனை முன் னிலைபபடுத்திப புனைந்து புகழ்ந்துகொணடிருந்த சீதை, தன சிறை மீட்சி யும பகைவா வீழ்ச்சியும் பறறிய நமபிககை ஓஙக, மகிழ்ச்சி மேலிட்டதனால, அவன எதிரே யிருப்பதை எணணாமல், தான் சொலவதை அவன் கேட்க வேணடு மென்று கருதாமல, அவன் கேடகுமபடியாகத் தனககுததான் கூறியவைகளாக இக கவியிலும அடுதத கவியிலும் கூறப்படடிருப்பவை களாக கொளளலவேணடும.

பாட பேதம்: இவனே எமகோன். (கOஎ)

108. மாண்டே னெனினும் பழுதன்றே
யின்றே மாயச் சிறைநின்றும்
மீண்டே னென்னை யொறுத்தாரைக்
குலங்க ளோடும் வேரறுத்தேன்
பூண்டே னெங்கோன் பொலங் கழலும்
புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டே னென்று மனமகிழ்ந்தா
டிருவின் முகத்துத் திருவன்னாள்

கொண்டுகூட்டு : 'இன்றே மாண்டேன் எனினும் பழுதன்று. மாயச் சிறை நின்றும் மீண்டேன், என்னை ஒறுத்தாரைக் குலங்களோடும் வேர் அறுத்தேன், எம்கோன் பொலம் கழலும் பூண்டேன், (இனிப்) புகழே அன்றிப் புன் பழி தீண்டேன்!' என்று மனம் மகிழ்ந்தாள், திருவின் முகத்துத் திரு அன்னாள் (ஆகிய சீதை).

பொருள் : 'இப்போதே, இறந்தேனாலும் குற்றமில்லை. (இராக்கதரது) வஞ்சகச் (செயலாலான) சிறையினின்றும் மீண்டேனாயவிட்டேன்; என்னை வருத்திய அரக்கர் வருக்கம் அனைத்தையும் அடியோடும் அழித்தேனாயவிட்டேன்; எம்பெருமான் பொன்னடிகள் (என் முடிமேற்) சூடினேனாயவிட்டேன், இனிப் புகழேயன்றி இழிவான பழி யாதும் தீண்டப்படவே மாட்டேன்!' என்று கூறிக் குதுகலித்தாள், (எவளென்றால்,) இலக்குமியினது (உறுப்புகளிற் சிறந்த) முகத்தின் அழகு உருவெடுத்தாற் போன்றவளாகிய சீதை.

ஒறுத்தல் - வருத்துதல். இன்று - இப்போது. — ச. அ. 'இன்றே' என்பது, 'மீண்டேன்' என்பதனோடன்றி 'மாண்டேன்', 'வேரறுத்தேன்', 'பூண்டேன்' என்பவைகளோடும் பொருந்துமபடி நிற்றல் கவனிக்கத்தக்கது. பொலம் - அழகு கழல் - கால். முந்திய 'திரு' இலக்குமியையும், பிந்திய 'திரு' அழகையும் குறித்தன.

இந்தப் பாட்டில் 'மாண்டேன்' என்பது முதலாகத் 'தீண்டேன்' என்பது இறுதியாக உள்ள பகுதியை, 'இன்றே, என்னை ஒறுத்தாரைக் குலங்களோடும் வேரறுத்தேன், மாயச் சிறைநின்று மீண்டேன், எங்கோன் பொலங்கழலும் பூண்டேன், புகழேயன்றிப் புன்பழியும் தீண்டேன்; மாண்டேனெனினும் பழுதன்றே!' என்று பொருந்திய பொருள்கொள்ளலும் பொருந்தும். அப் பொருளாவது :

'(உன் துணையுடைமையால், இராம லக்குமணர் இராக்கதரை அழிப்பது திண்ணமாதலால்,) என்னை வருத்திய இராக்கதரை இப்போதே அவர்கள் வமிசங்களுடன் நிர்மூல மாக்கினேனானேன், (இராக்கதர் அழிவு என் சிறை அழிவாதலால்) இப்போதே சிறையினின்று மீண்டேனானேன், (சிறை மீண்டேனாதலால்) இப்போதே (பிரிந்த என் நாயகனைத் திரும்ப அடைந்து) என் நாயகனது பொன் அடிகளை (என் முடிமேல்) அணிந்தேனானேன், (என் வாழ்க்கையின் இலட்சியங்களான சிறைமீட்சியும் என் நாயகன் திருவடி அடைதலும் சித்தித்தனவாதலால்) இப்போதே இறந்துபோனேனானாலும் குற்றமில்லை!' என்று சீதை கூறினாள் என்பது.

இவ்வாறு எதிர்கால நிகழ்ச்சிகளை இறந்தகாலத்தாற் கூறியது தெளிவு பற்றி. (கOஅ)

அனுமான் தன்னைத் தாழ்த்திக் கூறல்

[அனுமான், தன் பெருமையைச் சீதை பாராட்டியதற்கு நன்றி யறிகுறியாகவும், அவள் கொண்ட ஊக்கம் தளாதலின்றி வளர்தற் பொருட்டுத் தான் கூறப்போவதற்குப் பூர்வாங்கமாக வும், அவளுடைய பாதங்களில் விழுந்து பணிந்து, 'இராமபிரா னுக்கு என்னைப் போல ஏவின பணிகளைச் செய்யும் அடியவரான வானர சேனபதிகள் கடல் மணல் போலக் கணக்கற்றவர்கள் இருக்கின்றார்கள். அடியேன் அவருள் கடையேன' என்று கூறி வானரப் படைமிகுதியை வருணிக்கின்றான்:]

வானரப் படையின் பெருமை

வெள்ள மேழு பத்துளதால் வீரன் சேனை யிவ்வேலைப்
பள்ள மொருகைந் நீரள்ளிக் குடிக்கச் சாலும் பான்மையதோ
கள்ள வரக்கா கடியிலங்கை காணு தொழிந்த தாலன்றே
உள்ள துணையு முளதாவ தறிந்த பின்னு முளதாமோ

கொண்டுகூட்டு: 'வீரன் சேனை எழுபது வெள்ளம் உளது! ஒரு கை நீர் அள்ளிக் குடிக்க இப் பள்ள வேலை சாலும் பான்மையதோ? கள்ள அரக்கா கடி இலங்கை, உள்ள துணையும் உளது ஆவது (அது) காணாது ஒழிந்ததால் அன்றே? (அது) அறிந்த பின்னும் (அழியாமல்) உளது ஆமோ?

பொருள்: 'இராமபிரானுடைய வானரப் படை, எழுபது வெள்ள மென்னும் மிகப் பெரிய இலக்கமுள்ளது! அந்தப் படைவீரர் ஆளுக்கு ஒரு கைநீர் அள்ளிக் குடிக்க, ஆழமான கடல்நீர் அத்தனையும் காணுமோ? காணாது! (அவர்களுக்கு இலங்கை யிருக்குமிடம் தெரிந்திருந்தால், அழித்திருப்பார்கள்.) இலங்கை அழியாததாய் இருக்குமளவும் இருப்பதாகுவது அது இருக்குமிடம் தெரியப்படா தொழிந்ததனாலேயே: தெரியப் பட்ட பின்னும் (அழிக்கப்படாமல் அரைக்கணமும்) இருப்ப தாமோ? (இருக்கவே மாட்டாதென்றபடி.)' என்று அனுமான் கூறினான்.

வெள்ளம் - ஓரெண். 'பள்ளவேலை' யென இயைக்க. வேலை - கடல், ஆகுபெயராய்க் கடல் நீரை உணர்த்தியது 'வேலைப் பள்ளம்' என்பதை இருக்கிறபடியே கொண்டு, 'பள்ளம்' ஆகுபெயராய்ப் பள்ளத்துள்ள நீரை உணர்த்திய தெனலுமாம் நிந்தனைப் படலத்தில் 'பள்ளநீர்' என ஒரு கவி தொடங்கல் காண்க. சாலும் பான்மையதோ - போதிய தகுதியுடையதோ. கள்ளம் - வஞ்சகம். கடி - காவல். துணை - அளவு.

அனுமான், கடல் மணல் போலக் கணக்கிறந்த சேனைப் படைத் தலைவர் மிகுதியைப் பாரித் துரைத்தானென்றும், அதனினும் அதிக நயத்துடன் வினோதமுமாகக் கடல்நீர் முழுதும் ஆளுக்கொரு கைநீர் அள்ளிக் குடித்தற் காற்றாது (நீராயிருந்த கடல் நிலமாயவிடும்) என்று படையாளர்கள் மிகுதியை விதந் துரைத்தானென்றும் கூறிய கவிசாதுரியம், கழிபேருவகை விளைப்பதாயுள்ளது.

பாட பேதம் : வெள்ள மெழுப துளதனரோ: குடிக்கப் போதும். (கo௬)



6. சூளாமணிப் படலம்

[சீதை, தன்னைக் கண்டதற்கு அடையாளமாக இராமனிடம் கொடுக்கும்படி, தன் சூளாமணியை அனுமானிடம் கொடுத்ததைக் கூறுவது] *

அனுமான் சீதையை எடுத்துப்போய் இராமனிடம் விடுத்திட என்னுதல்

[அனுமான், தான் சீதையைக் கண்ட பின்பும், அவளைத் துன்புற்றுக்கொண்டிருக்க விட்டுப் போகலாகாதென்றும், அவளை இராமனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தலே செய்தற்பாலதென்றும் கருதி, அவளை நோக்கிக் கூறுகின்றான் :]

* இச் சூளாமணி, சீதை, தன்னை இராவணன் கவர்ந்து சென்றபோது கழற்றி யெறிந்த ஆபரணங்களுடன் சேர்ந்தெறியாமல், மங்கலியத்துக்கு அடுத்த அணியாக மதித்து அடக்கமாக வைத்திருந்த அணி. சூடாமணி யெனனும் வடமொழித் தொடர், ட ள ஒற்றுமைபற்றிச் சூளாமணியென வந்தது. சூளாமணி - முடிமணி - தலையணிகளுள் தலைமையான அணி.

அனுமான் சீதையை நோக்கிக் கூறுதல்

['என் விண்ணப்பத்தைக் கோபியாது செவியேற்றருள்வா யாக. இராவணனை "உன்னைக் கொல்வேன்" என்று பயங் காட்டியபடி கொன்றுவிடுதல்கூடும். அப்படி அவன் கொன்ற பின், அவனை வெல்வது, வீரியமாமேயன்றிக் காரியமாகாது. காரி யம் கெடாது காத்துக்கொண்டு வீரியஞ் செலுத்தல் விவேகிகள் செயல். உன்னைக் கொண்டுபோய் இராமபிரானிடம் சேர்ப்பேன். இச் சமயம் அதற்கு ஏற்றதாயிருக்கின்றது. நீ, இப்போதே, துன்பம் ஒழிய, என் தோள்மேல் ஏறுவையேல், இடையே எங் கும் தங்காமல், இமைப்பொழுதில் ஏகி, இராமபிரான் எழுந்தருளி யிருக்கும் குன்றிலே குதிப்பேன். அரக்கர் தொடர்வரேல், அவர் களை என் சினந்தீரக் கொன்று தொலைப்பேன். உன்னை உடன் கொண்டுபோகாமல் வெறுங் கையோடு திரும்பலாமோ? இராச னிடம் செல்வோன், ஏற்ற காணிக்கை கொண்டுசெல்லல் வேண் டும். இராசராசனான இராமபிரானுக்கு உயிருக் குயிரான உன்னி னும் உயர்ந்த காணிக்கை உண்டோ? உன் துன்பத்தை உடனே ஒழிக்காமல், எம்பெருமானிடம் போய், "உன் தேவி துன் புழந்துகொண் டிருக்கின்றாள்" என்று சொல்வேனேல், என் அடிமைத்தொழில் என்னும்? "தேவியைக் கொண்டுவந்தே" னென்று கூறாது, சும்மா, "கண்டுவந்தே" னென்று கழறு வேனோ?

'இராவணன் உன்னைக் கவர்ந்ததனால், கோபத்தோடுகூடிய வீராவேசமும் கொடுந் துன்பமும் குடிகொண்ட நெஞ்சினனான இராமபிரான், துன்பம் நீங்கித், தேவி சமேதனாய் இங் கெழுந் தருளி, இராக்கத ரெல்லாரையும் கொல்லுதல், உன் பிரிவுத் துன் புடன் அவர்களைக் கொல்லுதலினும் சிறந்த தென்று செப்பவும் வேண்டுமோ? "பிரிந்த ராம சீதையரைத் திரும்பச் சேர்த்தா" னென்னும் பேரும் பெருமையும் அடியேன் பெறும்படி இன் னருள்புரிந்து என் தோள்மேல் ஏறியருளுதி' என்றான்.]

சீதை அனுமான் வேண்டுகோளை மறுத்துக் கூறுதல்

['நீ சொல்லியபடி செய்தல் உனக்கு அருமையான தன்று; செய்துமுடிக்கவும் செய்வாய். ஆயினும், அது, எனது பெரிய

பேதைமையுடைய சிறிய பெண்புத்திக்குத் தக்க தன்றென்று தோன்றுகின்றது. என் சிறையை என் நாயகன் மீட்காமல், வேறெவரேனும் மீட்பரேல், அது, அவன் வில்லாண்மைக்கு வடுவாய் முடியாதோ? தேவர்க்குரிய அவியைத்* திருடிய நாய் போல, இராமபிரானுக்குரிய என்னை வஞ்சித்து வெளவிய நீசன் போல, நீயும் வஞ்சனைசெய்ய நினையலாமோ? என் நாயகனது விற்போரில் இராவணன் இறந்து வீழ, என்னைக் காமித்து நோக்கிய அவன் கண்களைக் காக்கைகள் உண்டபோதுதான், என் உயிர் உண்டு என்பதற் குரியதாம். வெற்றித் தொனி விளைக்கும் நாண் பூண்ட கோதண்டம் கொண்டு, இராமபிரான் இயற்றும் போரில், கருத்துநாணற்ற† அரக்கியர் கணவரை யிழந்து கழுத்துநாண் அறுதலன்றி, நாணினை உள்ளிட்ட நாற்குணங்களையுடைய‡ என் பெண்மை பெருமை யுடையதாகாது.

'என் கற்பின் மாண்பினால், இராக்கத சமூகமன்றி எல்லா உலகங்களையும், என் சொற் கொண்டு சுட்டிடுவேன். அவ்வாறு செய்தால், யான் பகைவனாற் கவரப்பட்டதனால் எம்பெருமான் வீரத்துக்கு உற்ற குற்றம் தீர, அவன் விற்றொழில் புரிந்து வெற்றிபெற்று, என் சிறையை மீட்டற்கு இடமின்றாய்விடு மென்று சும்மா இருந்தேன்.

'உன் வேண்டுகோளை யான் மறுத்ததற்கு வேறும் ஒரு காரணம் உண்டு. அது யாதெனில், ஆறி அவிந்த தீபோல, உன் ஐம்பொறிகளும் ஆறியமைந்தவைகளே யாயினும், சொல்லளவில் நீ ஆண் ஆதலால், ஆண்மக்களுள் என் நாயகன் ஒருவனே தீண்டுதற்குரிய என் தேகம் உன்னைத் தீண்டலாகா தென்பது. இராவணன் என்னைத் தொட முடிந்திருந்தால், இவ்வளவு நீண்ட காலம் உயிரோ டிருந்திரான். தீண்டலாகாமையா லன்றோ, அந்தக் கீழ்மகன், யான் இருக்கின்ற இந்த இலைக்குடிசையை அடியோடு போத்துக்கொண்டு வந்தான்? "மனமில்லாத மாதரைத் தொட்டால், மண்டை வெடித்திடக் கடவது" என்று பிரமதேவன் இராவணனுக்கு இட்ட சாபம் ஒன்று இருக்கின்ற

* அவி - தேவர்க்கு வேள்வித் தீயிற் கொடுக்கும் உணவு
† கருத்துநாண் - மனவெட்கம்
‡ நாற்குணம் - மடம், நாண், அச்சம், பயிர்ப்பு.

தென்று விபீடணன் மகள் திரிசடை என்பால் அன்பால் இயம்பியிருத்தலாலும், எம்பிரான் வில்வலியினால் என்னைச் சிறைமீட்க வேண்டுமென்று விரும்பினாலும், என் கற்பின் தூய்மையை உலகோர் அறிய மெய்ப்பித்துக் காட்டவேண்டுமென்று கருத்தினாலும் இவ்வளவு காலம் என் உயிரை விடாது வைத்திருந்தேன்.

'என் கற்பினால் இராக்கதரை அழியாமைக்குக் காரணம், யான் இறந்தேனானாலும், என்னை வருத்தினோரை என் நாயகன் வென்று அவனுடைய வில்லாண்மை கறைபடாமற் காக்கவேண்டுமென்று கருதிய தென்று முன்னே சொன்னேன்.

'யான் இருக்கின்ற இந்த இலைக்குடில் இளையபெருமாள் இயற்றிய தென்பதை, உண்மையை நுண்மையாக உணரும் உன் கண்கொண்டு, கண்டுகொள்ளுதி. என் நாயகனது பசிய திருமேனி போலப் பச்சிலைகள் எங்கும் பரவப்பெற்றும், அவனுடைய சிவந்த கண்ணும், வாயும், கையும், காலும் போலச் சிவந்த மலர்கள் இடையிடையே மலரப்பெற்றும் விளங்குகின்ற அந்தத் தாமரைத் தடாகத்தில் நீராடவும் பருகவும் போகும்பொழுதொழிய எப்பொழுதும் இந்த இலைக்குடிசையிலேயே இருந்து வருகின்றேன். நீ, என்னை எடுத்துச்செல்ல எண்ணிய எண்ணத்தைக் கைவிட்டு, இனி, இராமபிரானிடம் திரும்பிச் செல்வதே காரியமென்று கருதுவாயாக!' என்றாள்.]

அனுமான், இராமனிடம் யாது சொல்லவேண்டு மென்றல்

[அனுமான், சீதை சொன்னதை ஏற்றுக்கொண்டு, 'உலக நாயகனுடைய கோப்பெருந்தேவி யென்பதற்கு ஏற்பனவே கூறினாய்! எம்பெருமானிடம் யான் யாது தெரிவிக்கவேண்டு மென்பதைத் திருவாய்மலர்ந்தருள்க!' என்றான்.]

சீதை கூறல்

['யான், இங்கே, இன்னும் ஒரு மாச காலம் உயிரோடிருப்பேன். அதற்குள் இராமபிரான் வரவில்லையானால், அதன்பின் — அவன்மேல் ஆணை! — உயிரை விட்டுவிடுவேன். இதை உறுதியாக உன் உள்ளத்துள்ளே ஊன்றவைத்துக்கொள்வாயாக!' என்று சீதை பின்னுங் கூறுகின்றாள்:]

110. ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தானல ளேனுந் தயாவெனும்
ஈரந் தானகத் தில்லையே னுந்தன்
வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்

கொண்டுகூட்டு : *'ஆரம் தாழ் திரு மார்பற்கு அமைந்தது ஓர் தாரம் தான் அலள் எனினும், தயா எனும் ஈரம்தான் அகத்து இல்லை எனினும், "(உன்) வீரம் காத்தலை வேண்டு" என்று (நீ அவனை) வேண்டுவாய்.*

பொருள் : *'(யான் சிறையிடப்பட்டிருந்த தகுதியில்லேனாய) இராமபிரானுக்கு ஏற்ற இல்லாளல்லளாயப் போனாலும், (எத்தொடர்பும் இல்லாத எதிரியாயினும் இயல்பாக அவனுக்குள்ள) தண்ணளி (கூட என் திறத்தில்) இல்லை யென்று போனாலும் (—போகட்டும்—தன் காப்பில் இருந்தவளைக் கவர்ந்து சிறைவைத்தவனைக் கொன்று சிறைமீட்குதல் தன் வீரத்தைக் காத்தற் பொருட்டுச் செய்யக்கடவதாதலால்,) "அதைச் செய்து வீரத்தைக் காத்தலை விரும்புவாய்" என்று (என் வேண்டுகோளாக நீ அவனை) வேண்டிக் கொள்வாயாக.*

ஆரம் தாழ் திரு மார்பன் - மாலை தங்கிய அழகிய மார்பினனான இராமன். தயா - தயை. ஈரம் - குளிர்ச்சி. 'தண் (- குளிர்ச்சியான) அளி (- கிருபை)' என வழங்குவது, 'தயா எனும் ஈரம்' எனப்பட்டது. ஈரமென்றமட்டில் அமையாது, ஈரந்தான் என்றது, மனைவிக்குரிய காதலில்லாமற்போனாலும் மற்றவர்க்குரிய ஈரமும் எனப் பொருள்படலால், 'தான்' இழிவு சிறப்புப் பொருளுடையது.

சீதை, தன்னை வெறுத்துச் சிறைமீட்கவேண்டாமென்று இராமன் தீர்மானித்திருந்தாலும் அந்தத் தீர்மானத்தை அவசியமாக மாற்றும்படி, அவன் தன்னைச் சிறைமீட்கானேல், தன் வீரத்தைக் காவானாவானென்பதைக் குறிப்பித்து, அவனுடைய வீரம்பற்றிய மானவுணர்ச்சியைக் கிளர்வித்துச், சிறைமீட்சி முயற்சியைத் தீவிரமாகச் செய்யும்படி தூண்டி, அவன் தன்னைச் சிறைமீட்கவேண்டுமெனனும் விருப்பம் நிறைவேறும்படி சாதுரியமாகக் கூறிய நயம் பாராட்டத் தக்கது. (ககo)

111. ஏத்தும் வென்றி யிளையவற் கீதொரு
வார்த்தை கூறுதி மன்னரு ளாலெனைக்
காத்தி ருந்த தனக்கே கடனிடை
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய்

கொண்டுகூட்டு: 'ஏத்தும் வென்றி இளையவற்கு ஈது ஒரு வார்த்தை கூறுதி. (அதாவது) "இடை கோத்த வெம் சிறை வீடு, (இராம) மன் அருளால் எனைக் காத்து இருந்த தனக்கே கடன் என்று கூறுவாய்" (என்றேன் என்பது).

பொருள்: 'எல்லாராலும் புகழப்பட்ட வெற்றிப் பிரதா பத்தையுடைய இளையபெருமாளுக்கு இந்த வார்த்தையைச் சொல் வாய். (அது யாதெனில்,) "யான் அவன் பாதுகாப்பிலிருக்கு மத்தி யில் ஏற்பட்ட எனது கொடிய சிறையை விடுதலை புரிகுதல், இராமபிரானது ஆணைப்படி என்னைக் காத்திருந்த அவனுக்கே கடமையாம் என்று சொல்லுவாய்" (என்று யான் உன்னிடம் சொன்னேன் என்பது).

ஏத்துதல் - புகழ்தல். வென்றி - வெற்றி. அருள் - அருளிப்பாடு - ஆஞ்ஞை - கட்டளை. கடன் - கடமை

'ஏர்' என்பதற்கு எழுச்சி யென்றும், 'ஏர்த்த' என்பதற்கு 'எழுச்சியை யுடைய' வென்றும் பொருளுண்மையால், 'ஏர்த்த வென்றி' என்பது உண்மைப் பாடமா யிருந்திருக்கலா மென்றும், பிரதி யெழுதுவோர் அப் பாடத்தின் பொரு ளறியாமையால் 'ஆர்த்த வென்றி' யென்றும் 'ஏத்தும் வென்றி' யென்றும் மாற்றி யெழுதினா ரென்றும் தோற்றுகின்றது.

'ஏத்தும் வென்றி இளையவற் கீதொரு வார்த்தை கூறுதி' என்பதில் கம்பர் அமைத்திருக்கும் கட்டுரைச் சுவை கவனிக்கத்தக்கது.

இதன்முன் சீதை, தன் சிறைமீட்சியை இராமன் தீவிரமாகச் செய்யும் படி தூண்டுதற்குரிய நியாயத்தைச் சொன்னாள். இப்போது, தன்னைச் சிறைமீட்கும் பொறுப்பு, தன்னைக் காத்தலைத் தம்பியிடம் ஏற்பித்திருந்த இராமனுக் கிருப்பதைக்காட்டிலும் அதிகமாக, அக் காத்தலை ஏற்றுக்கொண் டிருந்த இலக்குமணனுக் குண்டென்னும் நியாயத்தை உரைத்தாள். இராம னுக்காகக் கூறியது ஒருவகைச் சாதுரியமும் இலக்குமணனுக்காகக் கூறி யது வேறுவகைச் சாதுரியமும் அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது.

பாட பேதம்: ஆர்த்த வென்றி: காத்தி ருந்தவற்கே கடனென் றிடை. (கககக)

112. திங்க ளொன்றிலென் செய்தவந் தீர்ந்ததால்
இங்கு வந்தில னேயெனின் யாணர்நீர்க்
கங்கை யாற்றங் கரையடி யேற்குத்தன்
செங்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய்

கோண்டுகூட்டு: 'திங்கள் ஒன்றில் என் செய்தவம் தீர்ந்தது. (அதற்குள்) இங்கு வந்திலன் எனின், அடியேற்குத் தன் செங்கையால் யாணர் நீர்க் கங்கை ஆற்றங்கரையில் "(இறுதிக்) கடன் செய்க' என்று செப்புவாய்.

பொருள்: '(இது முதலாக) ஒரு மாச காலத்தோடு (இராமபிரான் வந்து என்னைச் சிறைமீட்பதற்காக என் பிராணனை விடாதிருப்பேனென்று யான் மேற்கொண்ட) என் விரதம் முடிந்துவிடும். அதற்குள் அந்த எம்பிரான் வாரானேல், (யான் இறந்திடுவேன். இறந்த) எனக்கு அவன் (அயோத்திக்குத் திரும்பிப் போகும் வழியில்) கங்கைக்கரையில் (எல்லாரும் நீரும் இறைக்கும்) "அந்திய கருமத்தைச் செய்து முடித்திடுக" என்று செப்புவாய்.

திங்கள் - மாதம். செய்தவம் - (இராமன் வருதற்காக உயிரை விடாது வைத்துக்கொண்டிருக்கும்) விரதம். 'தவம்' என்பது ஆகுபெயராய்த் தவப்பயனை உணர்த்துவதாகக் கொண்டு, 'செய்தவம் தீர்ந்தது' என்பதற்கு, 'முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனுக்கு நான் ஆயுளோடிருக்குங் காலமே முடிந்துவிடு' மென்றும் பொருள் கூறலாம். யாணர் - அழகு, புதுமை. யாணர் நீர்க் கங்கை - அழகிய நீரையுடைய கங்கை, புது வருவாய் நீரையுடைய கங்கை. அடியேற்கு - (இராமனுக்கு) அடியவளாகிய எனக்கு. கடன் - அந்திய கருமம்.—சீ. அ. - சாச்சடங்கு.

சீதை, வாக்குவல்ல அனுமானுடைய மனோதைரிய மூட்டும் வசனங்களைக் கேட்டதனாலும், அவனுடைய, உலக முழுதையும் ஒருங் கொழித்தற்கு ஏற்ற இயற்கைப் பேருருக் காட்சியைக் கண்டதனாலும் அத்தியந்த தைரியமும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைந்திருந்தா ளென்பதை,

'மாண்டேன் எனினும் பழுதன்றே இன்றே மாயச் சிறையினின்றும்
மீண்டேன் என்னை ஒறுத்தாரைக் குலங்களோடும் வேரறுத்தேன்
பூண்டேன் எங்கோன் பொலங்கழலும் புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டேன்' என்று மனம் மகிழ்ந்தாள் திருவின் முகத்துத் திருஅன்னாள்

என்றதனால் தெரிந்தோம்.

மிக்க முயற்சி செய்தாரும், நீண்ட நேரம் விழித்திருந்தாரும், எதிர்ச் செயலாக*, முறையே, மிக்க தளர்ச்சியடைதலும் நெடிது துயிலுதலும் இயற்கை நிகழ்ச்சிகளா யிருத்தல்போல, மிக அதிகமான தைரியமும், நம்பிக்கையும், மகிழ்ச்சியும் அடைந்த சீதை எதிர்ச்செயலாக அதைரியமும் ஏக்கமும் துக்கமும் மிகவும் அதிகமாக அடைந்தா ளென்பதை இந்தக் கவியிலும்

* எதிர்ச்செயல் – Reaction.

இதற்கடுத்த ஆறு கவிகளில 'வந்தெனை' யென்ற தொழிந்தவற்றிலும் காண வோம (இந்த உள்ளத் தெதிர்ச்செயல் விவரணம் * , இயற்கை நிகழ்ச்சி வருணனையாய, மனத தத்துவத்தைப பற்றிக் கமபா நனகறிந்திருந்ததைத தெரிவிக்கின்றது)

'வந்தெனை' என்ற கவியும், தனககு எச செல்வததினும் சிறந்த செல்வமாய ஏனைய மாதெவளாலும் பகிர்ந்துகொள்ளப்படாததான தன கணவனது முழுக காதலாம விழுச்செல்வததைப பெற்று ஒருத்தி தான இறததலால அந்த அருமபெற்ற காதற்பயனை இழப்பதுபற்றி வருந்த முறுவதைக குறிப்பிப்பதால, அந்தக கவியும, அதன முன்னும பின்னு முள்ள கவிகளபோல, சீதையின துக்கததைத் தெரியச்செய்வதேயாம. அந்தக கவியிற கூறியதையும அவள துக்க உணர்ச்சியோடு தான் சொல வின்ளெனபது, இப்பிறப்பில இழந்த இராமன சோகதையை மறுபிறப்பில அடைய வரம வேண்டுதலை மொழியும 'ஈண்டுநான' என்ற அடுதத கவியினால் தெளிவாம.

தொடுத்தத துக்கத்தைச் சுரீரென நெஞ்சட பாயந்து நிறையச்செய யும இந்த 'திங்களொன்றில' என்ற கவி முதலான ஏழு கவிகளும வாசிப போர மனததைக கரைத்துக கண்ணீர வெள்ளமாகப பெருகச்செய்யும பரம துக்ககரமான பாடடுகக ளெனபது, அவைகளை அவரவர படித்து அநுபவித தறியககூடியதே யனறி, எடுததுச சொலலித தெரிவிகக வொண ணுததா யிருததல சொலலவேண்டியதிலலை. (கக௨)

113. சிறக்கு மாமியர் மூவர்க்குஞ் சீதையாண்
டிறக்கின் றுடோழு தாளெனு மின்னசோல்
அறத்தி ணுயகன் பாலரு ளின்மையால்
மறக்கு மாயினு நீமற வேலையா

கொண்டுகூட்டு : 'ஐயா, "சீதை ஆண்டு இறக்கின்றுள, சிறக்கும மாமியா மூவர்க்கும தொழுதாள" எனும இன்ன சொலலை இராமனிடம் சொல.) அறத்தின் நாயகனபால அருள இன்மையால (மாமியருக்குச சொலல அவன) மறக்கும் ஆயினும நீ மறவேல!'

பொருள் : '"சீதை, இலங்கையில் இறக்கின்றவள், மாமி மார் மூவர்களுக்கும் தெண்டம் சமர்ப்பித்தாள்" என்ற இந்த வார்த்தையை (நீ இராமபிரானிடம் சொல். எனதிறததில்,

* Description of mental reaction.

அந்தத்) தருமநாயகன்பால் கருணையில்லாமையால் (அவன், அதை, என மாமிமாருக்குச் சொல்ல) மறப்பானானாலும் (நீ அவனுடன் அயோத்திக்குச் சென்றபோது, அவர்களிடம் சொல்ல) மறந்திடாதே!' (என்று சீதை, மாமிமாரைத் திக்குநோக்கித் தெண்டனிட்டுக்கொண்டு சொன்னாள்.)

கோசலை கைகேயி சுமித்திரை மூவரும் தசரதனுடைய மற்றைய மனைவியர்போலாது பட்டமகிஷிகளாம் சிறப்புடையாராதலால், அம் மூவரையும் 'சிறக்கும் மாமியார்' என்றாள். மறவேல - மறவாதே. மறக்கும் - மறப்பான்: ஆண்பாற் படர்க்கையில் வந்த 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைச்சொல். (கக௩)

114. வந்தே னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த விப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தொ டேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்

கொண்டுகூட்டு: '(இராமன் மிதிலைக்கு) வந்து என்னைக் கரம் பற்றிய வைகல்வாய், "இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்ற செவ்வரம் தந்த வார்த்தையைத் திருச் செவி சாற்றுவாய்!'

பொருள்: '(இராமபிரான் மிதிலா நகரத்துக்கு) வந்து என்னைப் பாணிக்கிரகணம் பண்ணின தினத்தில், (என்னைத் தனியே சந்தித்தபோது,) "இந்தச் சென்மத்தில் உன்னையன்றி வேறொரு மாதையும் சிந்தையினாலுங்கூடத் தீண்டமாட்டேன்" என்ற நல்வரத்தை அளித்த செய்தியை(ப் பக்கத்துள்ளார் காதுகேளாமல்) அவன் காது மட்டும் கேட்கும்படி இரகசியமாகச் சொல்வாயாக!' (என்று சீதை சொன்னாள்.)

வார்த்தை - செய்தி. —த. அ 'தான் பிறன்கைப்பட்டமை பற்றி இராமபிரான் ஒருகால் தன்னை உபேக்ஷித்து வேறு மணஞ் செய்துகொள்வனோ வென்னும் ஐயத்தினால், சீதை, அப்பிரான் முன் கூறியுள்ள வார்த்தையை அறிவுறுத்துமாறு அனுமானுக்குக் கூறினள். கல்யாணத்திற்குப் "பாணிக்கிரகணம்" (கைப்பிடித்தல்) என ஒரு பெயருள்ளதனால் மணஞ் செய்துகொண்ட என்ற பொருளில் "கரம்பற்றிய" என்றார். சிந்தையால்

தொடுதல - எண்ணுதல், “அதனையும செயயே” னெனவே உடமபினுல் திணடாமை கைமுதிக நியாயததால * தானே பெறபபடும.’ †

சீதையை, அனுமான, இராமனிடம் யாது சொலலவேணடு மென்று கேட்டதறகு, அவள, அவன எதிரபாாததைச சொலலாமல, தன்னுடைய நமபிககையின்மை பறறியே கூறிவருகையில, இநதக கவியிற கூறியது, அனுமான அவளைக கணடதறகு அடையாளமாகக கூறததககதா யிருககினற தாயினும, அவள அவவாறு கருதிக கூறவிலலை யெனபது, முனனும பினனுங கூறியவைகளோடு சோததுப பாாததால தெளிவாம். அவளை அனுமான கணடதறகு அடையாளமாக இராமனுககுக கூறுமபடி அவள கூறியவை இபபடலததில ‘நாகமொனறிய’ எனற எ - ஆம கவி முதலிய ஏழு கவிகளிற கூறபபட்டவையே. (ககச)

115. ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னாடொழு தென்று விளம்புவாய்

கொண்டுகூட்டு: ‘நான ஈணடு இருநது இன உயிர் மாயினும், மீண்டு பிறநது வநது, தன மேனியைத தீணடல ஆவது ஓர் தீவினை தீர் வரம தொழுது வேணடினாள எனறு விளமபுவாய!’

பொருள்: ‘நான இஙகே (சிறைமீட்கப்படாமல்) இருந்து இறந்துபோனாலும, திருமபச சென்ம மெடுததுவநது எமபெருமான திருமேனியைத தீண்டுமபடியான நல்வரததைக் கும்பிட்டு வேண்டினேன் என்று கூறுவாயாக!’ (என்று இராமனிருநத திசை நோககித் தொழுதுகொண்டு சீதை சொன்னாள்.)

ஈணடு - இஙகே - இலஙகையிலே. ‘மீணடு பிறநதுவந்து’ என இயைகக.

சீதை, அனுமானை நோககி, ‘இராமபிரான, “இருமாதரைத தொடேன்” என்று எனககுச செயதுகொடுததிருககிற பிரதிககினைபபடி, வேறு மாதை மணஞ்செயயானாயினும், “பிறனமனை எயதிய பெணணைப பேணுதல் திறனலதென்று” எனனைச சிறை மீட்கானாயினன். அவன் வேண்டாத படி பழிபபுக கிடமாயவிட்ட இநதத தேகததைத துறநது, இறநது,

* கைமுதிக நியாயம - ‘அது அப்படியானல், மறறதனைப் பறறிக கூறுவ தேன’ எனனும வாத நெறி.— நு. அ.

† வை. மு. கோ.

மறுபிறப்புப பிறந்து, பழிப்பற்ற தேகத்துடன வளாந்து, அவன பிராதிக் கினைக்குப பங்கமின்றித திருமபவும அவன தேவியாகும வரத்தை வேண டினே னென்று அவனிடம தெரிவிப்பாயாக' என்று சொனனவாறு.

சீதை, இராமன தன்னைச சிறைமீட்கவில்லை யென்று வெறுத்து விச னப்பட்டுக கூறும மததியிலுங்கூட அவளுக்கு அவன்பா லிருந்த ஆழ்ந்த அன்பை அவ ளறியாமலே வெளிப்படுத்துவது இக கவியின உட்கிடைக் கருததாயிருத்தல காணக. (கக௫)

116. அரசு வீற்றிருந் தாளவு மாய்மணிப்
புரசை யானையின் வீதியிற் போகவும்
விரசு கோலங்கள் காண விதியிலேன்
உரைசெய் தென்பல வூழ்வினை யுன்னுவேன்

கொண்டுகூட்டு: '(இராமன்) அரசு (ஆக) வீற்றிருந்து ஆளவும, ஆய மணிப புரசை யானை (மீது) வீதியில போகவும், விரசு கோலங்களைக காண விதி இலேன், பல உரை செயது என? (என) ஊழவினை உன்னு வேன.'

பொருள்: '(இராமபிரான் சிங்காதனத்தில்) இராசனாக வீற் றிருந்து அரசாட்சிசெய்யவும, யானைமீது வீதியிலே பவனிபோக வும, கொள்ளும் கோலங்களைக் கண்டு களித்தற்குப் பூர்வ ஜென்மத தில் புண்ணியஞ் செய்யாத பாவியேன, பலபடச் சொல்லிப் பயன் யாது? (அவ இனிய காட்சிகளைக் காணக்கூடாமைபற்றி) என பழ வினையை நினைந்து வருந்துகின்றேன' (என்று சீதை சொன்னாள்)

அரசுவீற்றிருத்தல, ஒருசொல் நீர்மையுடையதாய், அரசாட்சி மண்டபத்தில, சிங்காதனத்தில, கிரீடம தரித்துச, செங்கோ லேந்தி, வெண கொற்றக குடை சாமர முதலிய அரசர்க்குரிய சின்னங்களுடன் கொலுவிருத தலை யுணாத்தியது. ஆய - தெரிந்தெடுத்த. மணி - யானை முதுகின இரு பக்கத்தும் தொங்கவிடும மணி. அம மணிகள், யானை வருவதன அபாயக குறியாக ஒலித்துச சனங்களை எச்சரித்துச சாக்கிரதைப்படுத்துவன.

ஆனைவரும பின்னே மணி ஓசைவரும முன்னே;
கேடுவரும பின்னே மதி கெட்டுவரும முன்னே

என்பது காணக. புரசை - புரோசை - யானைக கழுத்துக கயிறு. விரசுதல - கலத்தல, பொருந்தல். ஊழவினை - பழவினை. 'ஆளவும போகவும் விரசு கோலங்கள் காண' எனவும 'பல உரைசெய்தென' எனவும இயைகக.

பாட பேதம்: உரைசெய் தென்னையென. (கககு)

117. தன்னை நோக்கி யுலகந் தளர்தற்கும்
அன்னை நோயக்கும் பரதனங் காற்றுறும்
இன்ன ஞேயகதுமங் கேகுவ தன்றியே
என்னை நோக்கியிங் கெங்ஙன மெய்துமோ

கொண்டுகூட்டு : '(இராமன) தனனை நோககி உலகம் தளாதறகும, அனனை நோயககும, பரதன அஙகு ஆறறுறும இனனல நோயககும (விமோசனமாக) அஙகு ஏகுவது அனறி, எனனை நோககி இஙகு எஙஙனம எயதும ?'

பொருள் : 'இராமபிரான், தனனை(க் காட்டிலிருந்து நாட்டுக்கு எபபோது வருவா னென்று) எதிர்பாரத்துத் தனனுடைய குடிகள் வருநதுதலுக்கும், தாய துன்புறுதற்கும், பரதன் தவித்தலுக்கும (விமோசனமாக, — வடக்குநோககி —) அயோத்திக்குச செலலுவதலலாமல, யான ஒருததி துயருறுதலைக் கவனிதது(த தெறகு நோக்கி) இலஙகைக்கு எவ்வாறு வருவான் ?' (என்று சீதை சொன்னாள்)

உலகமெனறது இராம ராச்சியததை. அது, ஆகுபெயராய அந்த ராசசியததுக குடிகளை உணாததியது. ஆறறுதல - பொறுததல. இன்னல - துனபம. ஓ, அசைநிலை.

சீதை, தனனினும் எததனையோ அதிக உரிமையும, எவவளவோ நீணட பழககமும உடையாா பலா இராமன வருகையை எதிாபாாததிருககும் அயோததிககுச செலலாமல, அவன, தான ஒருததியைப பொருடபடுததி இலஙகைககு எவவாறு வருவான எனறன ளெனறவாறு. (ககஎ)

118. எந்தையாய் முதலிய கிளைஞா யார்க்குமேன்
வந்தனை விளம்புதி கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப்போய்
அந்தமி னெடுநகாக் கரசனுக் கென்பாய்

கொண்டுகூட்டு : 'எநதை ஆய முதலிய கிளைஞா யாாககும் என வநதனை விளமபுதி. "சுந்தரத தோளனை (- இராமனை) த தொடாந்து காததுப போய அநதம இல நெடு நகாககு அரசன (ஆக) ஆககு !" எனறு கவியின் மனனனுககு(ச் சொலவாய !)'

பொருள்: 'என் தந்தை தாய் முதலிய என் சுற்றத்தாரெல்லாருக்கும் என் வணக்கத்தைச் சொல்லு. "இராமபிரானை (நீங்காது) தொடர்ந்து காத்துக்கொண்டுபோய் அயோத்தியில் அரசனாக முடிசூட்டிவைப்பாய்!" என்று வானர ராசனான சுக்கிரீவனுக்குச் சொல்வாயாக!' (என்று சீதை சொன்னாள்.)

எந்தை - எனது தந்தை (சனகன்). ஆய - தாய். கிளைஞர் - சுற்றத்தார். கவி - குரங்கு. மன்னனை - மன்னனுக்கு: வேற்றுமை மயக்கம். சுந்தரத் தோளன் - அழகிய தோளையுடையவனான இராமன். அந்தம் இல - முடிவு இல்லாத. நெடுநகர் - பெரிய அயோத்தியாநகரம். 'அயோத்தி'க்கு யுத்தஞ்செய்யத்தகாதது (பகைவரால் யுத்தஞ்செய்து வெல்ல முடியாதது) என்ற பொருளுண்மை கருதி அதனை 'அந்தமில நெடுநகர்' என்றார் போலும். என்பாய் - என்று சொல்வாய். **என்று சொல்வாய்** என்பதைப் பிரித்து '**தோளனை** அரசனாக்கு **என்று** மன்னனுக்குச் **சொல்வாய்**' என இயைத்துப் பொருள் கொள்ளப்பட்டது.

மேற்கூறியவாறாகச் சீதை, தன்னை இறந்துவிடுவாளாகக் கருதி, இராமன் லக்குமணன் மாமிமாராகிய புக்கத்தாருக்கும், தாய் தந்தை சுற்றத்தாரான பிறந்தகத்தார்க்கும், தன் நாயகனது தோழன் சுக்கிரீவனுக்குமாகத் தன்னோடு எவ்வகையாகவாயினும் சம்பந்தமுடையார் எல்லாருக்கும் தன் இறுதிச் செய்தியைத் தெரிவிக்கும்படி அனுமானுக்குச் சொல்லியவைகளைத் தனித்தனியாகவும் ஒருசேரவும் நோக்குதற்குரியன. (௧௧௮)

திரும்பவும் சீதை தேறுமாறு அனுமான் கூறுதல்

[இவ்வாறு சீதை அதைரியமடைந்து, நம்பிக்கை யிழந்து, துக்கம் பொங்கச் சொன்னதைக் கேட்ட அனுமான், முன், அவள் தேறுமாறு கூறிய தேற்றல்முறை, இப்போதைக்கு ஏற்ற முறையன்றென்றெண்ணி, வேறொரு முறையைக் கையாள்வானாய், அவள் வருந்திக் கூறியதனோடு பொருந்தக் கூறுவான்போன்று, உடன்பாட்டுச் சொற்களால் எதிர்மறைப் பொருள் புலப்பட, அவள் திரும்ப மாறுதலுற்றுத் தேறுதலடையும்படி கூறுதலுற்றான்.]

119. வீவாய் நீயிவண் மெய்யஃதே
ஓய்வா னின்னுயி ருய்வானும்
போய்வா னந்நகர் புக்கன்றே
வேய்வான் மௌலியு மெய்யன்றே

கொண்டுகூட்டு: ‘நீ, இவண மெய(யாகவே) வீவாய(ஆம்)! ஓய வான(- இராமன) இன உயிா உயவான ஆம! (அவன் காடடைவிடடுப) போய அவ வான நகா புகககு மெளலி வேயவான அன்றே! (இவை) மெய அனறே!

பொருள்: ‘(நன்று நனறு.) நீ, இலங்கையிலே உண்மையாகவே இறநதுபோவாயாம! (உனனைப பிரிநது) தளரும் இராமபிரான, (நீ செத்தபின்னும) உயிரபிழைததிருப்பானும! (பிழைததிருநது காட்டைவிட்டு நாடடுக்குப்) போய் அயோததி நகரினுள்ளே (ஊாகோலமாகப்) பிரவேசிததுக் கிரீடம சூடுதலும செய்வானன்றோ! இவை யெல்லாம், உண்மையாக நிகழ்வன அலலவா! (ஒருகாலும் நிகழாதன என்றபடி.)

வீதல - இறததல. ஓயதல - தளாதல. உயதல் - பிழைததிருததல. வான - மகிமை வேயதல - சூடுதல மௌலி - கிரீடம. ‘நீ இவண மெயயே வீவாயாம! ஓய்வான (இராமன) உயவானும! அவன (காடடைவிட்டுப) போய அ(நத) வான் நகா புகககு மௌலி வேயவானனறே! (இவை) மெயயனறே!’ என்று கூட்டுக. இரணடாம அடி யீற்றிலுள்ள ‘ஆம’, அடுததுள்ள ‘உயவான’ எனபதனோடன்றித் தூரததுள்ள ‘வீவாய’ என்பதனோடும பொருநத நின்றது.

இபபாட்டுச சநதாபபததுக்குத தகக சநதமுடையதா யிருததல காணக.

இக கவியில் உடனபாடடுச் சொலலால எதிரமறைப பொருளை இனிது கூறியிருக்கும் நயம கொணடாடததககது.

‘இக கவியிலும, அடுதத கவியிலும் உள்ள “ஆம” எனனுஞ சொறகள - வியபபுப பொருளோடு அலடசியததையுங குறிக்கும். அஃதே என்றதில தேறறப பொருளுள்ள ஏகாரம — பிற குறிபபுவகையால எதிரமறை குறிததது இதிலுள்ள ஆயதம மெயபோல ஒலிததது, அலகிடடுக காணக.’ * (கககூ)

120. கைத்தோ டேஞ்சிறை சற்போயை
வைத்தோ னின்னுயிர் வாழ்வானும்
போய்த்தே வில்லிகள் போவாராம்
இத்தோ டொப்ப தியாதுண்டே

* வை. மு. கோ.

கொண்டுகூட்டு: '(யாரும்) கைத்து ஓடும் சிறையிலே) கறபோயை (- சீதையை) வைத்தோன இன உயிர் வாழ்வானாம்' விலலினர் பொயததே போவாராம்! இதனோடு ஒபபது யாதுண்டு!

பொருள்: '(தன்னுள்ளே — சிறையினுள்ளே — அகப்பட்டவர் யாவரும) வெறுத்து நீங்கி ஓடிப்போகுமபடி எண்ணும சிறையிலே உன்னை வைத்த இராவணன் (கொல்லப்படாமல) பிழைத்திருப்பானாம்! (அவனைக் கொல்லாமல்) இராம லக்குமணாகள் (தமக்குரிய க்ஷத்திரிய தருமம்) பொயத்துப் போவார்களாம! இதை யொப்பது, யாதிருக்கின்றது! (எதுவுமில்லை யென்றபடி.)

கைத்தல - வெறுததல். சிறை - சிறையில: ஏழனதொகை. கறபோயை - கறபுடையவளான உன்னை: வாலி வதைப படலத்தில இலக்குமணன வாலியை நோக்கி 'முறையிலோயை' என்றதை ஒத்தது இரணடும இரணடாம் வேறறுமையில வந்த முனனிலை யொருமைக குறிப்பு வினையாலணையும பெயாகள். (கஉ0)

['உன்னைத் துன்புறுத்திய இராவணனுதியிராக்கதரைக் கொல்லாத வில்லோடு, இராம லக்குமணா அயோத்திக்குச் செல்வாரோ! சுக்கிரீவ மகாராசன முதலான நாங்கள் துன்பக கடலில ஆழ்ந்து மாயந்து போகாமல், எங்களை இன்பக கரையேறறி யிரட்சித்த இராமபிரானுக்கு யாங்கள உன்னை மீட்டுக் கொடேமேல, எஙகளினும கடைபபட்டார யாரேனு முளராவரோ! முனனமே, இராக்கத ரெல்லவரையும கொல்லுவதாக மகரிஷிகளுக்கு வாக்களித்திருக்கிற இராமபிரான், அநத அரககர்கள் உன நிலை இத்தகையதாம் படி செயதபின் அவர்களைக் கொல்லாமல் அயோத்திக்குச் செல்வாரோ! அவன உன் பொருட்டு அரக்கரை அழிப்பதனால், தேவர் பகைவரை மாய்த்தலும தேவரைக் காத்தலுமாகிய துட்ட நிக்கிரக சிட்டபரிபாலனம் செயது தருமத்தைத் தாபித்தா னென னும் சறகீர்த்தியை அடைவாய் நீ, சிறிதுபொழுது சிறைபிலிருந்து வருந்தலால், நல்லா ரெல்லாரும நிலையாகத் துன்பம் நீங்கும பரமதருமததைச் செயதாயாவாய்.

'இராக்கதருககுப் பயந்து, இப்போது ஒளித்து வாழும் தேவர்கள், அநத இராக்கதருடைய இரதத வெள்ளத்திலே பேய்கள் குளித்தலைக் கண்டு, அச்சமற்று வெளிப்பட்டுக் களிப்புறறு வாழ்தலைக் காண்பாய். உகாந்த காலத்துப் பேரிடி போன்ற இராம

பாணங்களால இறந்த இராக்கதரது இரத்தக் கடல் பெருக்கெடுத்து ஏழு கடலகளோடு கலக்க, எட்டுக் கடல்களும ஒரே இரத்தக கடலாய அலை யெறிவதைக் காணபாய். கணவரை யிழந்த இராக்கதச சூலிகள கருவுற்ற பெருவயிற்றி லறைந்து கொண்டு களைந்தெறிந்த தாலிகள், வாவியும கடப்பரிய பெரிய மலைகளாகக குவிதலைக் காண்பாய. புண்ணிய காலத்திலே, உவா நீரக் கடலில் முழுகியவாகள் உவர் நீககி நன்னீ ராற்றிற குளித்தல் போல, போரக காலத்தில் இராக்கதரது இரத்தநீரக கடலில முழுகிய பேய்கள் இரத்தக் கறை நீககக இராட்சசிகளின கண்ணீ ராற்றிற குளிப்பதைக காண்பாய. இலங்கையிலே அரமபையா ஆடும் அரங்குகளிற குரங்குகள குதிப்பதைக காண்பாய்.

'இலங்கை நடுவே சிறையிருக்கும் உனது கற்புத்தீ, இராம பாணக காற்றினால் வளர்ந்து பரந்திடச், சுற்றியுள்ள கரிய இராக்கதக கூட்டமாகிய கரித்திரள் கனன்று எரிய, அந்த இலங்கையாகிய பொன் இளகி உருகுவதைக காண்பாய். இராவணன தலைகள் இராம பாணங்களால தறியுண்டு தரையில் விழ, அவன் உன்னைக் காமித்து நோக்கிய கண்களை, அந்தத் தலைகளமேலே தாவியிருந்து காக்கைகள மூக்கினால கௌவி யுண்பதைக் காணுகுவாய.' நீ, நீண்ட ஒரு மாச காலம பொறுத்திருக்கவேண்டிய தில்லை. நான விரைந்து திருமபிப்போய இராமபிரானைக் காண்பதுதான தாமதம். உடனே, இங்கு வந்துவிடுவான. உயிர் போய்விடவில்லை, இருக்கிறது என்று சொல்லத்தகக அளவே சீவித்திருக்கின்றான. அவன் உன்னைத் தேடித் திரிந்த திசைகளெங்கும், விரகத தீயால் வெதும்பும அவன் திருமேனி வெப்பத்தால் தீந்துபோகாத தளிரோ இலையோ, பூவோ பிஞ்சோ, காயோ கனியோ, செடியோ கொடியோ, மரமோ வனமோ யாதும இல்லை. இப்படிப்பட்ட நிலையிலிருப்பவன எப்படித் தாமதிப்பான!

இராம லக்குமணரும சுக்கிரீவாதியரும நீ சேமமாயிருப்பதைக கேட்ட சந்தோஷத்தை அனுபவித்தற்குககூடத தங்கியிராமல், வானர சேனையுடன் புறப்பட்டுக் கடலைத் தூர்த்துத் திடராக்கி இங்கு வந்து, இலங்கை மதிலை வளைந்துவிடுவார்கள். அப்போது, வானர சேனை ஆர்ப்பரிக்கும ஆரவாரத்தைக் காது குளிரக் கேட்பாய். அந்தச் சேனை மத்தியிலே, கருடாரூடனை

திருமாலைப் போல, என் தோள்மேல் வீற்றிருக்கும் இராமபிரானையும், உதயகிரிமீது தோன்றும் பாலசூரியனைப் போல அங்ஙனம் தோள்மேல் விளங்கும் இலக்குமணப் பெருமானையும் கண் குளிரக் காண்பாய். சிறையிருக்கும் துன்பமும், மீட்சியுண்டோ என்னும் ஐயமும், நாயகனைப் பிரிந்த தனிமையும் நீங்குவாய்.]

121. குராவருங் குழலிநிற் குறித்த நாளினே
விராவரு நெடுஞ்சிறை மீட்கி லானெனிற்
பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்
கிராவண னவனிவ னிராம னென்றனன்

கொண்டுகூட்டு: 'குரா வரும் குழலி! குறித்த நாளின் (இராமன்) நின்னை விராவரும் நெடும் சிறை மீட்கிலான் எனின், பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்கு அவன் இராவணன். (அவனை நோக்க) இவன் (- இராவணன்) இராமன்' என்றனன்.

பொருள்: '(வளர்த்துரைப்பானேன்! முடிவாகச் சுருக்கிச் சொல்லுகிறேன்: கேள். நீ முடிவெல்லையாகக்) குறித்த ஒரு மாச காலத்துக்குள்ளே, (தர்மவானான) இராமபிரான் உன்னைச் சிறை மீட்காமற் போவானானால், (அதர்மவானாகிய) இராவணனாவான். (அப்படி அதர்மவானான இராமனை நோக்க, இப்போது அதர்மவானாயுள்ள) இராவணன் (தர்மவானாகிய அதர்மவானாகாத) இராமனாவான்' என்றான். (சீதையை இராவணன் சிறைப்படுத்தியதினும் இராமன் சிறைமீட்காமை தீயதாமென்றபடி).

குராவரும் குழல் - குரவ மலர்மாலை அணிந்த கூந்தல். குரா மரத்தைக் குறிக்கும் 'குரா,' குரா மரத்தின் மலருக்கு ஆகுபெயராக, அது மாலைக்கு ஆகுபெயராய் நின்றது. 'வரும்,' எதுகையில் நிற்றலைப்பற்றி 'அணியும்' என்னும் பொருள் குறித்தது. 'குராவரும்' என்பதற்கு 'குரா மலர்கள் வாசனை வீசுகிற' என்றும் பொருள் கூறுவர். சீதை இராவணனாற் கவரப்படுமுன் குராமல ரணிந்திருந்தா ளென்பது கொண்டு 'குராவரும் குழலி' என்றான். விராவுதல் - விரவுதல் - கலத்தல். மூன்றும் அடி முற்று மோனை 'இராவணன் அல்லனே' என்ற பாடத்துக்கு, இராமன் உன்னைச் சிறைமீட்கா னெனில், (அவனைப்) பழியும் பாவமும் (பற்றும், அப்படிப்) பற்றுதற்கு (அவன்) இராவணன் அல்லனே (ஆதலால், அவன் உன்னைச் சிறைமீட்கவே செய்வான், ஒருகாலும் மீட்கா தொழியான்)' என்று பொருள் கொள்க.

பாட பேதம்: குழலியிக் குறித்த: இராவண னல்லனே. (கஉக)

அநுமான் இராமனிடம் கூறும்படி சீதை கூறிய அடையாள நிகழ்ச்சிகள்

[இவ்வாறு அநுமான் கூறியதைக் கேட்ட சீதை, சந்தேகம் தெளிந்து, சந்தோஷமடைந்து, இனி அவன் திரும்புதல் நன்றென்றெண்ணி, அவனை நோக்கி, 'யான் கூறும் நிகழ்ச்சிகளை நீ என்னைக் கண்டு பேசியதற்கு அடையாளமாக எம்பெருமானிடம் கூறுவாய்' என்று அவைகளைக் கூறினாள்.]

ஏகாந்தத்தில் நிகழ்ந்த காகாசுர விருத்தாந்தம்

['நாங்கள் (சீதா ராமா) சித்திரகூட பருவதத்தி லிருந்த போது, இந்திரன் மகன் சயந்தன் காகமாக வந்து என் மார்பைக் கொத்த, எம்பெருமான், ஒரு புல்லைப் பிடுங்கி அம்பாக அமைத்து, மந்திரியாகச் சென்று தாக்கும்படி ஏவ, அதனால் தொடரப்பட்ட அந்தக் காகம் பிரமன் பரமன் முதலிய தேவ தேவர்களிடம் சென்று அபயமிட, அவரெல்லாரும் அடைக்கல மளிக்க அஞ்சி மறுக்க, வேறு கதி யேது மில்லை யென்று மீண்டு வந்து எம்பிரானைச் சரணடைய, இரங்கி, "அந்தப் புல்லாயுதம் உன் உயிரோடு போகாமல் ஒரு கண்ணோடு போக: நீ வடிவு கொண்ட காக்கை வருக்கம் இன்றுமுதல் இரு கண்களுக்கும் ஒரு கண்மணியே உடையதாகுக!" என்றருளினன்.]

இராமன், சீதை கைக்கிளிக்குக் கைகேயி பேரிடச் சொன்னது

['நாங்கள் அயோத்தியில் வாழ்ந்த காலத்திலே, "என் அருமைக் கிளிக்கு யார் பெய ரிடல்வேண்டும்?" என்று யான் கேட்டபோது, "என் அன்னை கைகேயி பேரிடு!" என்றான்' என்று சீதை கூறி, அவ் அடையாள மொழிகள் போதுமென்றெண்ணித், தான் இராவணனால் அபகரிக்கப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டபோது, வழியிலே மற்ற அணிகளைக் கழற்றி யெறிந்தபோது, 'இது ஒன்றுமட்டு மிருக்கட்டும்; ஒருசமயத்தில் உதவு' மென்று, சேலையில் முடித்து வைத்திருந்ததை அவிழ்த்து வெளியே எடுத்தபோது, அதன் பேரொளியால் இரவு பகல்போ லாயிற்று: சூரியகாந்தக் கற்கள் தீயுமிழ்ந்தன; தாமரைகள் மலர்ந் தன ; சக்கரவாக * ஆண் பெண்கள் கூடின; இராக்கதர், 'இஃது

* இப் பறவைகள் இரவிலே பிரிந்து பகலிலே கூடு மென்பர்.

என்னே! ஆச்சரியம்! இரவிலே இரவி உதயமாயினன்! அப்படி உதயமானது கிடக்க; எப்படி அவன், இராவணனுக்கு அஞ்சி எப்போதும் இலங்கைக்குத் தெற்கேயும் வடக்கேயும் விலகிப் போகுதல் போலப் போகாமல், இன்று அஞ்சாமல் இலங்கை மத்தியிலே வந்தான்! இராவணனினும் வலியவனொருவனையோ துணையாகக் கொண்டிருக்கின்றனே!' என்று ஐயமும் அச்சமுங் கொண்டார்கள்.

இவ்வாறு பகல் நிகழ்ச்சிகள் இரவில் நிகழ்தற்குக் காரணமான அந்த அணியைச் சீதை அனுமான் கையிற் கொடுத்து, 'என் சிரசிலே சூடப்பெற்ற இந்தச் சூடாமணியை எம்பெருமான திருவடிகளிற் சேர்ப்பாய்' என்று கூறிச், 'செம்மையாய்ச் செல்வாயாக!' என்று ஆசியுடன் விடைவழங்கினள். அவன் அதனைத் தன் வஸ்திரத்தில் பத்திரமாக முடித்துவைத்துக்கொண்டு வணங்கி அகன்றனன்.]

---

7. பொழிலிறுத்த படலம்

[அனுமான், இராவணன் காவற்காடாகிய அசோகவனத்தை அழித்ததைக் கூறுவது] †

அரக்கரைப் போர்மூட்ட, அனுமான் அசோகவனத்தை அழித்தல்

[சீதையிடம் விடைபெற்றுச் சென்ற அனுமான், அவள் இருந்த அசோகவனத்தினின்றும் இராமன் இருந்த வடதிசை நோக்கி வரும்போது ஆலோசனையில் ஆழ்ந்து, 'யான் இதுவரை செய்தன யாவும் எளியனவே. அரக்கரை அழித்து, இலங்கையை இடந்து ‡ கடலிலெறிந்து, சீதாபிராட்டியை இராமபிரான் திருவடிகளிற் சேர்த்தேனல்லேன். இது, எம்பிராட்டி விலக்கிய செயலாதலால், கிடக்க. இராவணனுடைய ஒருபது தலைகளையும்

---

* 'கையிற்கொடுப்பா' யென்பது கருத்து
† பொழில் - சோலை; இறுத்தல் - ஒடித்தல்.
‡ இடந்து - பெயர்த்து.

இருபது தோள்களையும் ஒருசேர என்னுடைய வாலினால் இறுக்கிப் பிணித்து நொறுக்கினேனில்லை. இராவணனை அழித்தல் இராமபிரான் செய்தற்பாலது ஆதலால், இதுவும் கிடக்க. இராவணனெதிரே, அவனுடைய பட்டத்தரசி மந்தோதரியைக் கூந்தலைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய்ச் சிறைவைக்கவும் செய்யவில்லை. இது, அவன் பிராட்டியைக் கவர்ந்த இழிசெயல்போலவதாமாதலால், இதுவுமே கிடக்க. இச்செயல்கள் போலன்றி, எதிரிகளான இராக்கதரைக் கொல்லுதல், எவ்வாற்றும் ஆட்சேபத்துக்கும் இடமில்லாதது. ஆதலால், அது செய்வேன். அதற்கு அவரை அறைகூவிப் போர்மூட்டும்பொருட்டு இந்த அசோகவனத்தை அழிப்பேன். அழிக்கும் ஆரவாரங் கேட்டு, அவர் வந்து எதிர்ப்பர். அப்போது, அவரெல்லாரையும் அழிப்பேன்!' என்றெண்ணினன்.

அவ்வாறெண்ணியவன், தனது இயற்கைப் பெரு வடிவத்தை யெடுத்து அந்த அசோகவனத்து மரங்களைத் தனது மிகப் பெரிய கால்களால் துவைத்திடுவானாயினன்.]

மரங்கள் அடைந்த பலவகை அழிவுகள்

122. முடிந்தன பிளந்தன முரிந்தன நெரிந்த
மடிந்தன பொடிந்தன மறிந்தன முறிந்த
இடிந்தன தகர்ந்தன வெரிந்தன கரிந்த
ஒடிந்தன வொசிந்தன வுதிர்ந்தன பிதிர்ந்த

கொண்டுகூட்டு: (சில மரங்கள்) முடிந்தன, பிளந்தன, முரிந்தன, நெரிந்த மடிந்தன; பொடிந்தன, மறிந்தன, முறிந்த, இடிந்தன, தகர்ந்தன, எரிந்தன, கரிந்த, ஒடிந்தன; ஒசிந்தன, உதிர்ந்தன, பிதிர்ந்த.

பொருள்: அநுமானுடைய காலால் துவைக்கப்பட்டுச் சில மரங்கள் அழிந்தன; சில பிளந்தன; வேறு சில வளைந்தன; மற்றும் சில நெரிந்தன; மேலும் சில மடிந்தன; விஞ்சிய சில பொடிந்தன; மீட்டும் சில மடங்கின; பெயர்த்தும் சில முறிந்தன; பின்னும் சில இடிந்தன, இன்னும் சில உடைந்தன; அன்றியும் சில எரிந்தன; அல்லாத சில கரிந்தன; மற்றைய சில ஒடிந்தன; பிற சில துவண்டன; ஏனைய சில உதிர்ந்தன; எஞ்சிய சில பிதிர்ந்தன.

முரிதல - வளைதல. மறிதல - மடஙகுதல. ஒசிதல் - துவளல.

இப பாட்டில, மரஙகள பலவகைக கேட்டைடநததைக குறிததறகு எதுகைததொடை மலிய எடுததாளபபட்டிருககும தொடுப்பான சொல லடுககு வியந்து பாராட்டததககது.

இநதக கவி நானகடியும் தனநதன தனநதன தனநதன தனநத என்ற சநதககுழிபபினபடி அமைநத செயயுளா யிருபபது கவனிககததககது.

(கஉஉ)

வீசியெறிந்த மரங்களால் விளைந்த விநோத சம்பவங்கள்

[அனுமான் விண்ணில வீசியெறிந்த விருக்கங்களால் தாக்கப் பட்டுத் தேவலோகதது நநதனவனம சிதைவடைநதது. அவன் கடலில் எறிநத மரஙகளுடன் சென்ற தேன, மலர், காய், கனி, வண்டு, பறவைகளைக் கண்டு மேலெழுந்து உண்ட மீனகள், அம மரங்கள் தாக்க மடிந்தன. அம் மரங்களால தூர்ககப்பட்டதனால், முன், விண்வழியாக அவன் கடநத கடல், மண்வழியாகக் கடக்கக் கூடியதாயிற்று. அவன் பிடுங்கி யெறிந்த மரஙகளால இடிநத இலங்கை மாளிகைகள, இடி விழுநது தகர்நத மலைகள் போன்றன.

அவன் விசையாக வீசிய விருக்கவருக்கம, விண்ணாட்டில் மேவி விளங்கியது, அந நாட்டிலும் அசோகவன முள்ள தென் னும்படி யிருந்தது. விண்ணவர், அவ வினையால் மண்ணிற் பிறந்து தங்கித் தவ வினையால் மீண்டும விண்ணடைநதாற் போலத, தேவ தருக்கள், இராவணனால் தேவலோகததிலிருந்து கொணர்நது இலங்கையில் அசோகவனததில் நடப்பட்டிருநதவை, அனுமானால் மீண்டும தேவலோகத்தை அடைந்தன. பல வகைப் பறவைகள் பயந் தொலிக்கும ஒலியும், மரங்கள முறிந் ததிரும அதிர்சசியும, அனுமான ஆரவாரிக்கும ஆரவாரமும் எங் கும் பரவின.

அனுமானால் அந்தரத்தில் எறியப்பட்ட பொன்னாலும் மணியாலும் இயன்ற மரங்கள், உறபாதமாக* இரவிலே வானத் தில் இடப்பட்ட இநதிர விலலை ஒதது விளங்கின.† அவன்

* உறபாதம - தீககுறி.

† வாரமுர சிருந்துவறி தேயதிரு மாலோ
வநதிரவில இந்திரவில வாளிடு மாலோ. (கலிஙகத்துப்பரணி).

சினந்து வீசியெறிந்த மரங்களிலிருந்த பறவைகள் கூட்டுடனே விண்ணுலகடைந்தன: அவன கோபமே, கூட்டுடன் சுவர்கக பதவியை அடைவிக்குமானால், அவன் கருணை, எததுணை உயர் பதவியை எயதுவிக்கு மென்று எவர்தாம சொல்லவல்லர்!

சீதை தங்கியிருந்த மரம் ஒன்றே யொழிய, அசோக வனத்து மரம அனைத்தும் அழிந்தது, பிரளய காலததில் திரு மால் உறையும் ஆலமர மொன்றே யொழிய அகில உலகமுமஅழிந்ததை ஒத்தது.]

சூரியோதய வருணனை

123. உறுசுடர்ச் சூடைக் காசுக் கரசினை யுயிரொப் பானுக்
கறிகுறி யாக விட்டா ளாதலான் வறிய ளந்தோ
செறிகுழற் சீதைக் கென்றோர் சிகாமணி தெரிந்து வாங்கி
எறிகட லீவ தென்ன வெழுந்தன னிரவி யென்பான்

கொண்டுகூட்டு: 'உறுசுடாச் சூடைக காசுக்கு அரசினை உயிா ஒப்பானுக்கு அறிகுறி ஆக (அனுபபி)விட்டாள். ஆதலான், அந்தோ! வறியள்!' என்று, எறி கடல், செறி குழல சீதைககு ஓா சிகாமணி தெரிநது வாஙகி ஈவது என்ன, இரவி எனபான் எழுந்தனன.

பொருள்: '(இலக்குமியான சீதை, மற்றைய அணிகளைக் களைந் தெறிநதபோது, எறிந்துவிடாமல் பாதுகாத்து வைத்திருந்த) சூடாமணியை(த தன்னை அனுமான் கண்டதற்கு) அடையாளமாக (அவனிடம கொடுத்து) இராமனுக்கு அனுப்பிவிட்டாள். ஆதலால், ஐயோ! (இப்போது ஒரு நகையு மில்லாமல்) ஏழையா யிருக்கின்றாள்!' என்று — (இலக்குமியைப் பெற்ற) கடல் எண்ணி, (அந்த இலக்குமியான) சீதைக்கு ஒரு சிகாமணியைத் தேடி யெடுத்துக் கொடுப்பது போன்று கடலினின்று சூரியன் தோன்றினான்.

உறுதல் - மிகுதல். சூடை - முடி. காசு - இரத்தினம் - மணி. சூடைக் காசு - முடிமணி - சூடாமணி. சூடைக் காசுககு அரசு - சிறந்த சூடாமணி. சூடாமணி, சூளாமணி, முடிமணி, சிரோரததினம், சிகாமணி என்பவை ஒரு பொருள குறிததவை. விடுதல் - அனுப்புதல். வறியள் - வறுமையுடையவள் - வெறுமையுடையவள் - (ஓர் ஆபரணமு மில்லாத) ஏழை. இரவி - சூரியன்.

சிறிது நேரத்துக்குமுன் நிகழ்ந்த, சீதை அனுமானிடம் சூடாமணி கொடுத்த வரலாற்றை மிக இனிமையாகச் சூரியோதய வருணனைக்கு உப யோகமாக எடுத்தாண்டிருக்கும் இனிய கவிசாதுரியம் பாராட்டத்தக்கது.

பாட பேதம்: காசவ வுயிரினை: காசை யுயிரினுக்கு. (கஉரு)

அசோகவனத்தை அழித்த அனுமான் தோற்றமும் சீதையைக் காத்த அரக்கியர் ஓட்டமும்

[அசோகவனத்தை அழித்துவிட்டு வெறு வெளியில் தனிய னாக நின்ற அனுமான், திரிலோகங்களையும் அளந்த திரிவிக்கிர மனையும், அமுத மதன காலத்தில் ஆழி நடுவே நின்ற மந்தர மலையையும், உகாந்த காலத்து உருத்திரமூர்த்தியையும் ஒத்துத் தோன்றினன். அவனுடைய விளைசையினால் விழிப்பொழிந்து உறக்கமுற்றுக் கிடந்த இராட்சசிகள் அசோகவனம் அழிக்கப் பட்ட அதிர்ச்சியினால் விழிப்படைந்து, எழுந்து, அவன் பெரு வடிவைக் கண்டு பிரமித்து, 'இந்த மாய வடிவம் யாதென அறி வாயோ?' என்று சீதையைக் கேட்க, அவள், 'மாயம் வல்ல அரக்கர் அறியா ரெனின், யா ரறிவார்?' என, அவர்கள் அஞ்சி யோடி யொளித்தனர்.]

அனுமான் ஒரு செய்குன்றைப் பிடுங்கி இலங்கைமே லெறிதல்

[இராவணனது ஏவலின்படி, பிரமதேவன், வேறெவரை யுங்கொண்டு செய்வியாமல், தானே நிர்மாணஞ்செய்ததும், பொன்னாலும் மணியாலும் இயன்றதுமான மிகப் பெரிய செய குன்று ஒன்று நின்றதை அனுமான் கண்டான். கண்டவன், தான் முன் கேட்டிருந்தவாறு, இராவணன் வெள்ளி மலையை வேரோடு பிடுங்கினது இழிவுபடும்படி மேருகிரியைப் பேர்ப்பான்போல, அச் செய்குன்றைப் பிடுங்கி இலங்கைமீது எறிந்தான்.]

அசோகவனம் அழிந்ததைக் காவற்றேவர் இராவணனுக்குத் தெரிவித்தல்

[அவ்வப் பருவங்களிற் காணப்படும் அழகிய மலர்களும் இனிய கனிகளும் எல்லாப் பருவங்களிலும் காணப்படுமாறு இராவணனேவலின்படி செய்துகொண்டு அசோகவனத்தைக் காத் துக்கொண்டிருந்த, ஆறு பருவங்களுக்கும் அதிதேவதைகளான

பருவத தேவர்கள், பீதியாகிய பெருநெருபபிட்ட உள்ளததின ராய, அப் பீதியினுல சிறுநீரிட்ட உடையினராய, அனுமான எறிநத மரக கிளைகளால் பீறிட்ட உடலினராய், ஒனறோடொன்று பின்னித தள்ளாடிய காலினராய், ஊளையிட்ட வாயினராய், ஒடி; இராவணனை அடைநது, காலில் விழுநது, 'மலைபோலுமதோளு டைய வானரமொன்று, அசோகவனததைக் கையாலும் காலாலும் துகைத் தழிததுச, செய்குன்றைப் பிடுங்கி யெறிந்து, இலங்கை நகரம் பெரும்பாகம் அழியும்படி செய்திட்டது!' எனறூர்கள்.]

தேவர் கூறியதை யாவர் நம்புவா ரேன்று இராவணன் சிரிக்கும்போது எல்லாரும் நம்பும்படி அனுமான் ஆரவாரித்தல்

[அந்தக் காவற் றேவரை நோக்கி, இராவணன், 'தனிப்பட்ட ஒரு குரங்கு நீஙகள் காதத அசோகவனம் அனைத்தையும் அழிதத தன்றி, அரக்கர் காக்கும பெருதத செய்குன்றைப் பிடுங்கி யெறிநது இலங்கையையே சிதைத்தது என்றீரகள்! இது ஆச சரியம! இப்படிப்பட்ட பேசசை மூடரும மொழியார். இதை யாா நம்புவார்?' என்று பெருநகை செயயத், தேவர்கள, 'அநத வானரனை மூவரில் ஒருவ னென்னலாம. அவன் வலிமையை நீ இப்போதே காண்பாய' என்றனர். அப்போது, பூமி பிளக்கவும், எட்டுத் திக்குங் காக்கும் தேவர்களும திசையானைகளும் நிலைகெட் டோடவும், அஞ்சாத அரக்கக் கருப்பிணிகள் அஞ்சிக் கருப்பங் கலங்கவும், அண்டமே விண்டதோ வென்று அயிர்பபுண்டாகவும் அனுமான் ஆரவாரிததான்.]

---

8. கிங்கரர் வதைப் படலம்

[கிங்கர ரேன்னும் ஒரு வகுப்பு இராக்கதரை அனுமான் கோன்றதைக் கூறுவது] *

இராவணன் அனுமானைப் பிடித்துவரும்படி கிங்கரரை ஏவல்

[அனுமான் செய்த ஆரவாரம், பிரளய காலத்துக் கடலின் பெருமுழக்கத்தையும் இராமன் சிவதனுசை முறித்த பேரோசை

---

* கிஙகரர் - கிஙகிலியா - ஏவலர்.

யையும் போன்று, குகைக்குள் இடி யிடித்தாற்போல, இராவணன் செவிக்குள் இடித்து, இடி விழுந்த மலைகள் குலுங்குதல்போல, அவனுடைய முடி புனைந்த தலைகள் நடுங்கச்செய்தது. அவன், 'இது குரங்கின கூப்பாடா!' என்று குறுமுறுவல் புரிந்து, 'என் ஆர்ப்பரிப்புக்கும் மேற்பட்டதா யிருக்கிறதே!' என்று பொறுமை கொண்டு, பக்கத்தில் நின்ற கிங்கரரை நோக்கி, 'இந்தக் குரங்கு எப்படியாயினும் தப்பிவிடாதபடி நாற்புறமும் மேற்புறமும் வளைந்து பிடித்துக் கொன்றுவிடாமற் கொண்டுவாருங்கள்!' என்று கட்டளையிட்டான.

அவர்கள், சர்வாயுததாரிகளாய், நிறத்தாலும், கொலைத் தொழிலாலும், பரப்பாலும் ஆலகால விஷத்தையும் யுகாந்த காலத்துக் கடல்வெள்ளத்தையும் ஒத்தது, தலைகள் நிமிர்ந்து வானத்தை முட்டத், தோள்கள் விரிந்து திக்குக்களைத் தட்டத், தாள்கள் நடந்து மலைகளை எற்ற, அனுமானைப் பற்றச் சென்றார்கள். அவர்கள், பிறை யென விளங்கும் கோரப் பல்லும் பேரிகை யென முழங்கும் வீரச் சொல்லும் உடைய பிலம்போலும் பெருவாயினர்கள்; 'போர் உண்டு' எனின், தேனுண்டது போலக் களிக்கும் சிந்தையர்கள்: கூட்டத்திற் காட்டையும், ஆரவாரத்தில் அலைகடலையும், ஆகிருதியில் மேரு மலையையும் மிஞ்சியவர்கள்: முன் தேவரையும் அசுரரையும் சிறு பகையெனச் செயித்தவர்கள். அப்படிப்பட்டவர்கள், இப்பொழுது, மாமிசபட்சணிகளான தாங்கள் பலர், சாகபட்சணியான தனிமைப்பட்ட அற்பக் குரங்கைப் பொருட்படுத்தி அமர்புரியும்படி யாயிற்றே யென்ற நாணம் மனத்தை வருத்த, முன்செல்வார் முதுகு தீயும்படி பின்செல்வார் மார்பு தாக்க முடுகிச்சென்று, மாருதத்தால் மேக மொழிந்து வெறுமையான வானம்போல, மாருதியால் மரங்கள் அழிந்து பாழான அசோகவனத்தை அடைந்து வளைந்தார்கள்.]

அனுமான் கிங்கரரைக் கொல்லல்

[அவர்களைக் கைலை மலைபோல நின்ற அனுமான் கண்டான. கண்டு, தன்னால் தள்ளுண்டு பக்கத்திற் கிடந்த பருமர மொன்றைக் கையிற்கொண்டு, கடலைக் கலக்க அதன் நடுவில் நின்ற மந்தர மலைபோல, அரக்கரைக் கலக்க அவர் நடுவே நின்றான். மலைகளைத் தாக்கும் இடியும் பின்னிடைய, அம் மரத்தால் அரக்கவீரர்

தலைகளையும் தோள்களையும் தாக்க, மலைகளிலிருந்து அருவிகள் பெருகுதல்போல, அவர்கள் தலைகள் தோள்களினின்று இரத்தம் சொரிய, அவர்கள் தரையில் விழுந்து மரணமடைந்தார்கள். கதை கொண்டும் கணைகொண்டும் பொருதவர்கள், உதையுண்டு சிதையுண்டு மடிந்தார்கள். அவன் எடுத்து வீசியெறிந்ததனால், பலர் மலையிலும் பலர் கடலிலும் விழுந்து உடலையும் உலகத்தையும் ஒருங்கு பிரிந்து வீரசொர்க்கம் மேவினார்கள். கை கால்கள் இழந்து முண்டமாகக் கிடந்த இராக்கதருடல்கள், இந்திரனால் சிறகறுப்புண்டு நிலைபெயராது கிடந்த மலைகள்போன்றன. அவன் கையாலும், தோளாலும், காலாலும், வாலாலும் தாக்குண்டு பலர் செத்தார்கள். அடிக்கப்பட்டழிந்தார் அனேகர். இடிக்கப்பட்டிறந்தார் எண்ணிலர். பிடிக்கப்பட்டொழிந்தார் பெருந்தொகையினர். அச்சத்தால் மாய்ந்தார் அளவிலர். அவன் அவர்களைக் கையாலும், மெய்யாலும், காலாலும், வாலாலும் நெருக்கி யிறுக்கி நெறித்தான். அப்போது, அவன் உடல் ஆலையும், அவர்கள் உடல்கள் கரும்புகளும், அவர்கள் இரத்தம் கருப்பஞ்சாறும், இரத்தம் போய்ச் சேரும் கடல் கருப்பஞ்சாறு வீழும் கூனையும் போன்றன.

வீரவெறிகொண்டு அரக்கர் தம் தோல்வி யறியாராய், அநுமானைச் சூழ்ந்தனர். அப்போது, அவர்கள் மேகமும் அவன் மேகஞ் சூழ்ந்த சூரியனும் போலவும், அவர்கள் கடலும் அவன் கடல் நடு நின்ற மந்தரமும் போலவும், அவர்கள் அரவங்களும் அவன் கருடனும் போலவும், அவர்கள் யானைகளும் அவன் சிங்கமும் போலவும் ஆனார்கள். அவர்கள் எய்தும் கொய்தும், எறிந்தும் பிளந்தும், பறறியும் எற்றியும், வளைத்தும் துளைத்தும் செய்த புண்கள் அளவற்றனவாயிருந்தும், அவன் அவைகளை அலட்சியஞ் செய்து, அவர்களைப் பொருது தொலைத்தான்.

அவன் வெற்றிபெற்றது கண்டு அவன்மீது தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். அப்போது, 'பூவும் புண்களும் தெரிந்தில மாருதி புயத்தில்' என்னும்படி அரசகரும் அமரரும் முறையே செய்தனவும் சிந்தியனவுமான புண்களும் பூக்களும், 'இது புண், இது பூ' எனப் பகுத்தறிய வொண்ணாதபடி யிருந்தன.]

கிங்கரர் அழிந்தது இராவணனுக்குத் தெரிவிக்கப்பட்டது

[அசோகவனத்தைக் காவல் காக்கும் தேவர் கூட்டத்தினர், கிங்கரர் இறந்ததைச் சொல்லினும் சொல்லாவிடினும் இராவணனுக்குக் கோபம் வந்திடுமே யென்று திகைப்புற்ற சிந்தையராய், அச்சம் பிடர்பிடித்துத் தள்ளக், காலொடு கால் பின்னத், தள்ளாடி நடுங்கி நடந்து, பிணங்கள்மேல் இடறி விழுந்து எழுந்து சென்று அவனை அடைந்தார்கள். அடைந்தவர்கள் நடந்ததைச் சொல்ல நாவெழாமல், ஊமர் போலக் கைகளினாற் சைகைசெய்து தெரிவித்தார்கள். அவன், 'யான் ஏவிய கிங்கரர் இறந்தனரோ? ஓடியொழிந்தனரோ? யாதுற்றது? வாய்விட்டுக் கூறுங்கள்!' என, அவர்கள், 'அனைவரும், அஞ்சாது போர்புரிந்து பொய்ச் சாட்சி புகல்வார் குலங்கள் நிர்மூலமாவது போல இறந்தார்கள்' என்றார்கள்.]



9. சம்புமாலி வதைப் படலம்

[அனுமான், சம்புமாலி யென்ற படைத்தலைவனை அவன் படையுடன் கொன்றதைக் கூறுவது]



இராவணன் அனுமானைப் பிடித்துக் கொணரும்படி சம்புமாலியை ஏவல்

[இராவணன், அருகே, கும்பிடு கையனாய் நின்ற சம்புமாலியை நோக்கி, 'நீ சேனையோடு சென்று அந்தக் குரங்கைக் கொன்றுவிடாது பிடித்துக்கொண்டுவா!' என்று கட்டளையிட்டான். அவன், 'வல்லோர் பல்லோ ரிருக்க, "இது செய்யத்தக்கவன் இவனே" என்று எம்பெருமான், இந்தக் கட்டளையை எனக்கிட்டான். என்னினும் தன்னியன் * இல்லை!' யென்று சொல்லி, இராவணனது உயுத்த கோபமே உருக்கொண்டு புறப்பட்டாற்போலத், தன் சேனையோடும் தன் தந்தையும் பிறரும் தந்த சேனைகளோடும் புறப்பட்டுப் போனான்.]

* தன்னியன் - பாக்கியவான்.

சேனைத் தூளும் தோகையும்

[சேனை செல்லுதலால், இலங்கை நகரின் பொன் தரையி னின்று எழுந்த தூள்கள் பறந்து பரந்து படிய, மேரு மலை போல வேறு மலை யாவையும் பொன்மலைகளாயின. சம்புமாலி செல்லும் தேரைச் சூழ்ந்து பதினாயிரந் தேர்களும், அவற்றின் இரட்டி ஆனைகளும், அவற்றின் இரட்டி குதிரைகளும், அவற்றின் இரட்டி காலாட் படையும் சென்றன.]

அனுமான் போருக்கு ஆயத்தனாய் ஆரவாரித்தல்

[அனுமான் அசோகவனத்துள்ளே செல்லும் வழிமுகப் பிலே யுள்ள தோரண வாயிலிலே, இராக்கத சேனை எதிர்வரு கையை நோக்கி நின்றான். அவன், மேகங்கள் வெருவி இடிகளைக் கக்க, நாகங்கள் நடுங்கி உயிரும் விடமும் ஒருங்கு கக்க, அரக்கர் கள் திடுக்கிட, ஆரவாரித்தான். திடுக்குற்றமை தீர்ந்தவுடன் இராட்சச சேனை எதிராரவாரம் செய்தது.]

சம்புமாலி படைவகுப்பும் அனுமான் படைவகுப்பும்

[சம்புமாலி, தன் படையை முற்படை, பக்கப்படை, பிற் படைகளாக அணிவகுத்து அனுமான்மீது போர்புரிவானானான். அனுமானும், தன் நெற்றியே * நெற்றி யென்னும் முன்னணிப் படையாகக், கைகளே கைக ளென்னும் பக்க அணிப்படைகளாகக், கூழையே (- வாலே) கூழை யென்னும் பின்னணிப் படையாகத், தானே அணிவகுத்த சேனையாக, அமர் † புரிதற்கு ஆயத்த னானான்.]

அரக்கர் சேனை அழிதல்

[இராக்கத வீரர் அனுமான்மீது படைக்கலங்களை விடுத்தனர். அவன், அவைகளை அடித்தும் ஒடித்தும் அப்புறப்படுத்தினான். பின்பு, அவன், இராசன் செங்கோல் இராச்சிய மெங்குஞ் செல்லு தல் போலவும், இருவினைகளை வென்ற ஞானவான்களின் அறிவு எங்கும் வியாபித்தல் போலவும், இராட்சச சேனையெங்கும

* நெற்றி, கை, கூழை யென்பன படைவகுப்புகளின் பெயர்கள்: கூழை வாலுமாம்.

† அமர் - போர்.

சென்று, காற்றுடி போலவும் வேசையர் மனம் போலவும் ஓரிடத்தும் நில்லாது சுழன்று, ஒருவரையும உய்யவிடாமல், எல்லாரையும இருபபுததண்டு கொண்டு அடிததுக் கொன்ருன்.]

சம்புமாலி சாதுதல்

[சமபுமாலி தனியனுகிக், கொடுங் கோபங்கொண்டு, அனுமானை எதிர்த்தான். அனுமான 'உன்னுடன வந்தாரைக் காக்க மாட்டாதுபோனுய். ஒருதவியு மின்றி ஒருவனு யுள்ளாய். உன்னைக் கொல்லாது விடுகின்றேன். திரும்பிப்போ' என்ருன். அவன், 'செத்துப்போனுருள் ஒருவன்போல என்னை எண்ணினுயோ!' என்று சீறி, ஒன்று பத்து நூறுயிரமாக அம்புகளை எய்தான். அனுமான், அவைக ளனைத்தையும் இருப்புத் தடியால் விலக்கினுன். அதனை அரக்கன் அம்பினுல் அறுத்தான். அறுக்கவே, அனுமான, அவன் தேரிலே பாய்நது, அவன் வில்லைப் பிடுங்கி, அவன் கழுததில் மாட்டி யிழுக்க, அவன வாய்பிளநது, அலறி விழுந்து மடிநதான்.]

சம்புமாலி சாவை அசோகவன் காவலர் இராவணனுக்கு அறிவித்தல்

[அசோகவனத்தைக் காக்கும் தேவர்கள், இராவணனிடம் போய்ச, சம்புமாலி சேனையோடு செத்துப்போனதைச் செப்ப மாட்டாராய், விககி விமமி அழ, அவன் சிரித்து, 'நடுஙகாமல் நடந்ததைச் சொல்லுங்கள்' என, அவர்கள், 'சம்புமாலி உள்பட நம்மவ ரெல்லவரும் நாசமானுர்கள். நாசஞ்செயத குரங்கு ஒன்றே!' என்ருர்கள்.]

சேனைத்தலைவர் தேரிவித்தல்

[இராவணன், 'அந்தக் குரங்கை யானே போய்ப் பிடிப்பேன்' என்ருன். அப்போது அங்கு நின்ற பஞச சேனுபதிகளென்ற ஐநது படைத்தலைவர்கள் அறிவிப்பாரானுர்கள்.*]

* அவர்கள் அறிவிப்பு, அடுத்த படலத்தின ஆரமபத்திலுள்ளது.

10. பஞ்ச சேனுபதிகள் வதைப் படலம்

[பஞ்ச சேனுபதிக ளென்னும் படைத்தலைவர் ஐவர்களைப் படைகளோடு அனுமான் அழித்ததை உரைப்பது]

[மேற்கூறிய பஞ்ச சேனுபதிகள், 'அந்தக் குரங்கை யானே பிடிப்பேன்' என்றெழுந்த இராவணனை நோக்கிக், 'கருடபகவான கொசுகினுடனே பொருதல் செயல்போல், நீ ஏழைக் குரங்கை யெதிர்ப்பையானால், அருவிநீரற்ற பருவதம்போல உன்னால் மத நீர் மாறிய திசையானைகள் பயம தொலைந்து மதம் பொழிவன வாம். உன்னை உன்னி உள்ளம் நடுங்கும் வெள்ளி மலை எள்ளளவு அச்சமும் இல்லாததாய்விடும். உன்னை எதிர்தலால் எய்துவது இழிவேயன்றி இலாபமில்லை யென்று எண்ணி மூலைகளில் முடங்கி யிருக்கும் மும்மூர்த்திகளின் முகங்கள் புன்முறுவல் பூப்பனவாம். அன்றி, எவர் துணையும் இலலாதவ னென் றெள்ளப்படுவாய். குரங்கு பிடிபடாத குறைவு, வெல்ல வல்லவ ரல்லவரை விட்டதனால் விளைந்த விளைவு. எங்களை ஏவுக!' என, இராவணன் இசைந்தான.

அவர்கள், அவன் சம்மதிப்பை வெகுமதிப்பாகக்கொண்டு, உலக மூன்றையும் ஒருங்கு பெற்றவர்போல உள்ளம் உவந்து, நெற்றி நிலம்பட விழுந்து பணிந்து, விடைபெற்றுப் படைசுற்றப் போர்க்குப் புறபபட்டார்கள்.

அவர்கள் ஐவரும், பஞ்சபூதங்கள்போலப் பலம் படைத்தவர்கள்; அமரர்க்கும் முனிவர்க்கும் ஐம்பொறிபோலத் துன்பம் விளைப்பவர்கள்; இந்திரன் வச்சிராயுதமும் இயமன் தண்டாயுதமும் இம்மியளவு வடுவும இயற்றாத தோள்களுடையவர்; சூரனைத் தொலைத்த சுப்பிரமணியனது மயிலினின்றும், பாரினைப் படைதத பிரமனது அன்னத்தினின்றும் பறித்த இறகுகள் சொருகிய இரத்தின கிரீடத்தினர். இராவணன மார்பிற பாயந்து முறிந்து எஞ்சிய திசையானைக் கொம்புகளை அரிந்து செய்த அழகொழுகும குழைகள் அணிந்தவர். அந்த யானைகளின் மத்தகத்தில் அணிந்திருந்த பொன்னோடைகளைத் தம் நெற்றிப் பட்டங்களாகப் புனைந்தவர். அவர்களுடைய ஏனைய ஆபரணங்கள், இராவணன்

குபேரனை வென்று அவன் செல்வத்தைக் கொள்ளைகொண்ட நாளில வாரிவநதவை.

'இயமன், உனக்கன்றிப பிரமனுக்கு ஆளாய, அவன் விதிப் படி உன் கோனுக்குட்பட்ட குடிகளின உயிர்களையும கொண்டு போகின்றுன்' எனக் கேட்டுச் சீறிய இராவணன் சீறறததை மாறற, அவர்கள், காலனைப் பிடிததுக் காலகளையும கைகளையும கட்டிய சூரர்கள்.

அப்படிப்பட்டவர்கள் சேனைகளுடன் சென்று அனுமானை எதிர்ததார்கள். சேனுவீரர் சோனுமாரியாக அம்புகளைப் பொழிந தார்கள். அநத அம்புகள் அவன்மேல் தாக்குதல் தினவுதீரச சொறிதல்போலவாக, அவன் தூங்குவான் போலக் கண்மூடியிருந தான். அவர்கள் அதுகண்டு சினங்கொண்டு நெருங்கியபோது ஓர் இரும்புத தடியை எடுத்துச் சுழற்றியடித்து நால்வகைச சேனைகளையும் நாசமாக்கினுன். அவனுல் விசைத்து வீசியெறியப் பட்டதனுல், — தமமேல் உயர்த்தப்பட்ட சேலைக்கொடிகளையுடைய யானைக் கணங்கள் கடலில விழுந்து அழுந்துவன, கடலிற் பாய் மரத்தோடு முழுகும கப்பலகள் ஒத்தன; கடலில் விழும் தேர்கள் கடலினின் றெழும் சூரியனது தேரினை நேர்வனவாயின. வாயி னின்று இரத்தங் கக்கிக்கொண்டு கடலில் விழும் குதிரைகள், கடலில் உள்ளதும் வாயினின்று நெருப்புச சுவாலை புறப்படுவது மான வடவை யென்னும் குதிரையை நிகர்த்தன; அவன் காலாட் படைகளை வாலாற சுற்றிச சுழற்றியெறிய, அப் படைக்கூட்டம் சுழன்றுகொண்டு கடலில் விழும காட்சி, கடலில் அமுத மதன காலத்தில, மநதர மலை சுழலுந் தோற்றம் போன்றது.

கொல்லுதற்கு ஆயுதங்களாக, மலைகளும் மரங்களும் இரும் புத் தடிகளும் எண்ணிறந்தன இருந்தன; கொன்ற உயிர்களைக் கொண்டுபோக இயமன் சித்தமாயிருந்தான்; ஆனதனுல், அள வற்ற அரக்கரனைவரும் அனுமானுல் அடிபட்டுச செத்துப் போனுர்க ளன்றித தப்பிப்போனுர் எவரும் இலர்.

சேனைகள் யாவையும் செத்தொழிந்தது தெரிந்து, சினங் கொண்டு, பஞ்ச சேனுபதிகள் அனுமானை அணுகி அம்புமாரி பொழிந்தார்கள். அவன் அவைகளைத் தன்மேல் தாக்காமல்

தடிதது அழித்தான். பின்பு, ஐவருள் ஒருவன் தேரைச சிதைத்தான். தேர் சிதைந்தவன் ஆகாயத்தில் எழ, அவனை அனுமான இரும்புத்தடிகொண் டோசச, அதை அவன் வில்லினுல் தாங்க, வில் முறிய, மலையை எடுக்க, எடுத்த மலை எறியப்படுமுன் அவனை அனுமான் இரும்புத் தடியால் அடித்துக் கொன்றான்.

மிஞ்சின நால்வரும் வெஞ்சினங்கொண்டு வில்லுகளை வளைத்து அம்புகளை எயதார்கள். அனுமான் அவர்கள் மேல் ஒரு மலையை எறிய, அவர்கள் அதனைப் பொடியாக்கினார்கள். அவன் அந்த நால்வருள் ஒருவனைத் தேரோ டெடுத்து மேலே யெறிய, எறியப்பட்டவன், அந்த இரதம் மேலே சென்று கீழே விழுமுன் பூமியிற் குதித்தான். குதித்தவன்மேல், யானைமீது சிங்கம் பாயநதாற் போலப் பாயந்து, குதிதது மிதித்துக் கொன்றான். எஞ்சிய மூவரும் 'எஙகே தப்புவாய' என்று எதிர்க்க, அவர் இருநத தேர்களில் இரண்டை இரண்டு கைகளி லெடுத்துக் கொண்டு எழுந்தான். எழவே, அவர்கள் ஆகாயத்திலே பாய, அவர்கள் மேலே தப்பிப்போகாமல் விரைந்து கிட்டப்போய் அவர்கள் பிடித்திருந்த வில்லுகளைத் தொடுத்திருந்த அம்புகளுடன் தொலைத்தான். தொலைக்கவே, நிராயுதரான அவர்கள், அவனுடன் ஆகாயப் போர்க்களத்தில் மல்லயுத்தம் செயயலானார்கள்.

வெண் பல்லும, கருமேனியும், பகுவாயும் உடைய அவர்கள் வெண்மையான பல்லும், கருமையான உடலும், பிளந்த வாயுமுடைய பாமபுகள் போனறனர். அனுமான் சூரியன் ஒததான். அவன் அவர்கள் தோள்களை வாலினுல் வரிந்து இறுக்கி முறிக்க, அவர்கள் இறநது பூமியில விழுந்தார்கள். அப்போது ஆகாயத்தில் விளங்கிய அவன் பாம்புகள் நீங்கின பரிதியை நிகர்த்தான். தனியனாய்த் தப்பிநின்ற தலைவனது தலைமேலே, அனுமான் ஆகாயத்தினின்று குதிக்க, அவன் தேரோடு பூமிக்குள் அழுந்தி யிறந்தான்.

தீயவழிகளிற சென்ற ஐவரையும் வென்ற அனுமான், தீவழிச செல்லும் ஐம்பொறிகளையும் அடக்கிய அறிவை ஒத்தான்.

அசோகவன காவலரான பருவதத தேவர் இராவணனிடம் சென்று பஞ்ச சேனுபதிகள் படைகளோடு அனுமானுல் அழிநததை அறிவித்தனர்.]



11. அட்சகுமாரன் வதைப் படலம்

[இராவணன் மகன் அட்சகுமார னென்பவனை அனுமான் கொன்றதைக் கூறுவது]

அனுமானைப் பிடிக்க இராவணன் அனுமதிபெற்று அட்சகுமாரன் புறப்படுதல்

[*பஞ்ச சேனாபதிகள் படையோடு பட்டதைப் பருவத தேவர் பகரக் கேட்டுக், கொடுங் கோபங்கொண்டு, தானே அனுமானை எதிர்க்க எழுநத இராவணனை அவன் மகன் அட்சன தடுத்துக் கூறலானான். 'ஐயனே! அநதக் குரஙகைப் பிடிக்க அடியேனுக்கு அனுமதி அருளுதி. எளிய குரங்கை எதிர்ததல் உன பெருமைக்கு ஒவவாது. இச சிறிய காரியத்தைச செயய எனககு இடஙகொடு. நீ, இடம பெயராது இஙகேயே யிருநதருள்.*

'முன், இநதிரனைப் பிடிததுக் கொடுக்க யானிருக்கவும், என அண்ணனை ஏவினை. அதனால், என் சௌரியததைக் காட்டு தறகு வாயதத சநதாப்பம், எனக்குப் பயன்படாமற் போயிற்று. அந்தக் குரங்கு, இந்த இலங்கைககு இழிவை யுணடாக்க எண்ணி ராசனை வேடமாறி வந்ததா யிருந்தாலும், அதனை அரை நொடிக் குள்ளே பிடித்துக் கொடுப்பேன்; தவறுவேனேல, தண்டனை செய். படைகொடு செல்ல, விடைகொடு' என்றான. இராவணன், அவனை, மகிழ்நது நோககித, 'தேரேறிச சேனையோடு செலலுதி' என்றான்.]

சேனைப் பெருக்கம்

[*அட்சனோடு சென்ற சேனை, கடல்போல அளவற்றதா யிருந்தது. கடலிலுள்ள மீனை எண்ணலாமானால், சேனையிலுள்ள தேர்களை யெண்ணலாம; சுறுமீன்களை யெண்ணலாமானால், யானை களையும், அலைகளை யெண்ணலாமானால், குதிரைகளையும, மணலை எண்ணலாமானால், காலாள்களையும எண்ணலாம். அரக்க அரச குமாரரான அடசன் தோழர் பன்லிராயிரவரும மந்திரிகள் தந்திரிகள் முதலானோர் மக்கள் பல லட்சத்தினரும் அவனுக்குத் துணையாகத் தொடர்ந்தார்கள்.*]

அட்சன் சபதம்

[அனுமான், அட்சகுமாரனை நோக்கி, இராவணனோ இந்திரசித்தோ வென்று சந்தேகித்து, இருவருமல்லனென்று முடிவு செய்தான். அட்சன் அனுமானை நோக்கி, நகைத்து, 'இந்தக் குரங்கா இராக்கதர் கூட்டத்தைக் கொன்றது?' என்று கூறச், சாரதி, 'இதனை அலட்சியமாக எண்ணலாகாது. மன்னனோடு பொருத வாலி, குரங்கன்றோ? இதனைச் சாக்கிரதையாக எதிர்ப்பாயாக' என்றான். அட்சன், 'அசோகவன பங்கஞ்செய்ததமட்டோடமையாமல், அளவற்ற அரக்கரை அழித்து நமக்கு மானபங்கத்தைச் செய்த குரங்கைக் கொல்லுதலோடு நில்லாமல், உலகெங்குஞ் சென்று, குரங்கு என்ற பேரே யில்லாமற்போகக் குரங்குக் குலத்தைக் கருவறுத்து நிர்மூல மாக்குவேன!' என்று, வெஞ்சினத்தோடு வஞ்சினங்* கூறினான்.]

அரக்கர் படையை அனுமான் அழித்தல்

[அரக்கர் சேனை அறக் காய்ந் துலர்ந்த புற்காடாகத், தான் அக்கினியாக, அனுமான், அந்தச் சேனையை அழிப்பானானான். போர்க்களம் தாழியாக, சேனை தயிராக, அனுமான் மத்தாக, அவனால் தாக்கப்பட்ட சேனை, மதத்தெறியுண்ட தயிர்போல உடைந்து சிதறியது. அவன் சூரியனாக, அவன் பொருதல் வெயிலெறித்தலாகச், சேனை வெயிலில் அகப்பட்ட புழுப் படும் பாடு பட்டது.]

அனும அட்ச யுத்தம்

[அரக்கர் சேனை அனைத்தும் அழியக் கண்ட அட்சகுமாரன், சினமூண்டு, தீப்போலக் கண்கள் சிவக்கச் சென்று அனுமான் மேல் ஈரேழம்புகள் எய்தான். இவன், அந்த அம்புகளை இருப்புத் தடியால் அடித்துத் தரையில் வீழ்த்தினான். அவன், அம்புகளால் அந்தத் தடியைப் பொடியாக்கினான். இவன், வேறு ஆயுதம் யாதும் இல்லாமையால், கையே ஆயுதமாகக் கொண்டு, அவன் தேர்மீது தாவித், தேர்ப்பாகனையும் குதிரைகளையும் கொன்றான். அப்போது, அவன் எய்த வாளிகள் மார்பிலும் தோள்களிலும் அழுந்த, இவன் அவன் வில்லை ஒரு கையினால் பற்ற, அவன்

* வஞ்சினம் - சபதம்.

அதனைப் பிடித்த கையோடு அடுத்த கையாலும் பற்றியிழுக்க, அது முறிந்தது. அது முறியவே, அவன் வாளை யுருவிக் குத்த, இவன், அதை ஒடித் தெறிந்தான். வாட்போர் தோற்றவன், தோட்போர் செய்வானாய், அநுமானைக் கட்ட, இவன், அவனைத் தப்பவொட்டாமல் வாலினால் சுற்றிக் கீழே தள்ளி, மேலே ஏறி, வாயினின்று பற்களும் கர்ணகுண்டலங்களினின்று கற்களும் * உதிரக் கன்னங்களிலே அடித்துப் பிடர் பிடித்துக் குடாப்பிதுங்கக் குத்தினான்: பின்பு, போர்க்களம் அம்மியாக, அவன் சதை அரைக்கும் அரிசியாக, இரத்தம் அரிசியை அரைத்தற் குதவும் நீராக, சதையொழிந்த எலும்புப் பகுதி அம்மிக் குழவியாக அரைத்தான். அதனால் குற்றுயிராகக் கிடந்த அவன், முற்று யிரும் இழந்தான்.]

அட்சன் இறக்கக் கண்ட அரக்க வீரர் உயிர்தப்பச் செய்த உபாயங்கள்

[அட்சகுமாரன் இறந்தபோது, இறவாமல் எஞ்சியிருந்த இராக்கதரிலே, சிலர் இரத்த வெள்ளத்துள் மூழ்கியும், சிலர் பிணக் குவியல்களுள் நுழைந்தும் மறைந்துகொண்டார்கள்: சிலர் செல்லுந் திசை தெரியாமல் திண்டாடித் திரிந்து வலியழிந் தார்கள்: சிலர் எங்கும் போகாமல் நின்ற இடத்தே நின்றார்கள்: சிலர் கண்ட கண்ட திசைகளிலே தாறுமாறாக ஓடினார்கள். சிலர், ஓடும்போது, எதிர்ந்து தழுவிய தம்மவரை நோக்கி, 'நும்மவ ரல்லேம்; தேவரேம்!' என்று உரைத்து உதறித் தள்ளிவிட்டு ஓடினார்கள்.]

இறந்தோர் உறவினர் எய்திய துயரம்

[போர்க்களத்துக்கு வந்து தேடித் தம கணவருடலைக் கண்டு மேல்விழுந்து வெயதுயிர்த்து ஆவி நீங்கிய மாதர், காதலிருவர்க்கு உடம்பு இரண்டே யன்றி உயிர் ஒன்றே யென்பதை உருபிப்பார் போன்றார். உயிர்துறந்தோருடைய உறவினர் அழுத ஒலி உலக முழுதும் பரவியது.]

---

* கல் - இரத்தினம்.

மண்டோதரி மறுகுதலும் இராவணன் இன்னலும்

[அட்சகுமாரன் இறந்ததை யறிந்த மண்டோதரி இராவணன் அடியில் விழுந்து வயிறறில் அறைந்து, வாயவிட்டலறி அழுதாள். அட்சகுமாரனும் சேனையும் அழிந்ததை அறிவிக்க வந்த அசோகவன காவற்றேவர்கள், இராவணன் அடைந்த கடுந் துயர் கண்டு, உள்ளே உண்டான உவகையைக் காட்டாமல், வெளியே தோன்றிய உவகைக் கண்ணீரைத் துக்கக் கண்ணீராகக் காட்டிக்கொண்டு, தாமும் அவன் காலில் விழுந்து கதறி யழுதார்கள்.]



12. பாசப் படலம்

[இந்திரசித்து எய்த பிரமாத்திரம் பாம்பு வடிவாகிக் கயிறுபோல அனுமானைக் கட்டியதைக் கூறுவது] *

இந்திரசித்து வீரம் கூறித் தேரில் ஏறல்

[இந்திரசித்து, அனுமானால் அட்சகுமாரன் கொல்லப்பட்டானென்று கேட்டபோது, கோபமும் சோகமும் கூர, நெஞ்சு கொதிக்க, மூக்கு சுடுமூச்சு விட, மேனி வெதும்பி வியர்க்க, வீர வாதம் கூறித் தேரின்மீது ஏறினான்.]

தேய்ந்தது, தம்பி உடலன்று, தந்தை புகழென்று வருந்தல்

தம்பியை யுன்னுந் தோறுந் தாரைநீர் ததும்புங் கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி வாய்மடித் துருத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக் குரங்கினாற் குரங்கா வாற்றல்
எம்பியோ தேய்ந்தா னெந்தை புகழன்றோ தேய்ந்த தென்றான்

கொண்டுகூட்டு: (இந்திரசித்து,) தம்பியை உன்னும் தோறும் தாரை நீர் ததும்பும் கண்ணன் (ஆகி), வாய்மடித்து வம்பு இயல் சிலையை உருத்து நோக்கி நக்கான். 'கொம்பு இயல் மாய வாழ்க்கைக் குரங்கினால் குரங்கா ஆற்றல் எம்பியோ தேய்ந்தான? எந்தை புகழ் அன்றோ தேய்ந்தது!' என்றான்.

---

* பாசம் - கயிறு.

பொருள் : (இரதத்தில் ஏறிய இந்திரசித்து,) தம்பி (இறந்த செய்தி)யை எண்ணும்போதெல்லாம் தாரை தாரையாக வடிகின்ற கண்ணீர் பொங்குங் கண்ணினனாகி, ('இந்த வில் இருந்து என் பயன்! என் தம்பி உயிரைக் காவாது போயிற்றே!' என்று) உதட்டை மடித்துக் கடித்துக்கொண்டு, தன் வில்லைக் கோபித்துப் பார்த்து, ('இந்தப் பயனற்ற, பரிகாசத்துக் கிடமான வில்லைத் தாங்கிக்கொண் டிருக்கின்றேனே!' என்று தன்னைத் தானே எள்ளி)ச் சிரித்தான். 'மரக் கொம்புகளில் வாழ்தலுடைய (அற்பக்) குரங்கினால் தேயக்கப்பட்டுத் தாழாத வலிபடைத்திருந்த என் தம்பியோ தேய்ந்தான்? என் தந்தை புகழன்றோ தேய்ந்தது!' என்று எண்ணினான்.

வம்பு - கயிறு - வில்லின் நாணியாகிய கயிறு. சிலை - வில். வாய் மடித்தல், கோப மெய்ப்பாடு. உருத்தல் - கோபித்தல். நகுதல் - சிரித்தல். நக்கான் - சிரித்தான். கொம்பு - மரக்கொம்பு இயல்ல - உலாவல். —த. அ. மாய்ம் - மறைவு: மாய (- மறை) பகுதி, அம் தொழிற்பெயர் விகுதி: மாயம், வஞ்சகமும் நிலையாமையுமாம். குரங்குதல் - தாழ்தல், வளைதல். மாய வாழ்க்கை - எதிர்ப்பாரைக் கண்டால் ஓடி ஒளியும் இயல்புடைய வாழ்க்கை; வஞ்சகமாகச் சீவித்தல், மனிதர்போல மனையில் ஓரிடத்தில் நிலையாக வாழாமல் நிலையில்லாது வாழ்தல்.

'குரங்கினால் தேய்ந்தது, என தம்பியோ வென்னில், அன்று, மற்று யாதெனில், என் தந்தை புகழ்!' எனபதுபட, ' "எம்பியோ தேய்ந்தான? எந்தை புகழன்றோ தேய்ந்த!" தென்றான்' என்றார். தம்பியின் சாவினும் தந்தை புகழின் தேய்வு அதிக விசனத்துக் குரியதென் றெண்ணினா னென்பது கருத்து.

போர்க்களம் அம்மியாக, அட்சகுமாரனது உடலின் சதை அரிசியாக, இரத்தம் நீராக, எலும்புக் கூடு அம்மிக் குழவியாகத் 'தேய்த்தான் ஊழியின் உலகேழ் தேயினும் ஒருதன் புகழ் இறை தேயாதான்' என்று முன் கவிக் கூற்றுக்குக் கூறியதை அநுவதித்து, இப்போது, இந்திரசித்தின் கூற்றாக, ' "எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழன்றோ தேய்ந்த" தென்றான்' என்று ரென்பது கவனிக்கத்தக்கது. (கஉச)

தம்பி சாவுக்காகத் தந்தையிடம் துக்கங் கொண்டாடிக், குரங்கைப் பிடித்துக்கொண்டு வருவதாகக் கூறிப் போதல்

[இந்திரசித்து, இராவணனை அடைந்து, தாளில் விழுந்து தம்பி யிறந்ததற்காக அழுதான். தந்தை, மைந்தனை வாரியெடுத்து,

மார்பிலணைத்துத் தானும் அழுதான். பின்பு, மகன், தந்தையை நோக்கி, 'அந்தக் குரங்கு கடலைக் கடந்து அசோகவனத்தை அழித்த அசாதாரண ஆற்றலுடையதென அறிந்திருந்தும், ஆழ்ந்து ஆலோசியாமல், அதனிடம் கூட்டங் கூட்டமாக அரக்கரை அனுப்பினாய். ஆதலால், 'கொன்றனை நீயே யன்றோ அரக்கர் தங் குழுவை!'* என்றான்.

என்றவன், மேலும் கூறுவானாய், 'கிங்கரர், சம்புமாலி, பஞ்ச சேனாபதிகள் என்பவர்களோடு சென்ற சேனாவீரரெல்லாரும் மாண்டாரேயன்றி மீண்டார் ஒருவருமில்லை என்றால், அந்தக் குரங்கை என் என்பது! திரிமூர்த்திகளின் ஒரு மூர்த்த† மென்றன்றோ செப்பவேண்டும்! ஆயினும், நீ கவலையின்றி இங்கே இருப்பாயாக. யான் சென்று அதனை எளிதாகப் பிடித்துக் கொண்டுவந்து கொடுப்பேன்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.]

சேனைச் சிறப்பு

125. உடைந்தவல் லிருளோற் றுப்பல்
லுருக்கோடக் கதிர்க்கு ழாங்கள்
மிடைந்தன மிலைச்சி யாங்கு
மெய்யணி பலவு மின்னக்
குடைந்துவெம் பகைவ ரூன்றோய்
கொற்றப்போர் வாள்வில் வீச
அடைந்தகா ரரக்கர் தானை
யகலிட மிடமின் றென்ன

கொண்டுகூட்டு: (சூரியனுக்கு) உடைந்த வல் இருள், நோற்றுப், பல உருக்கொ(ண்)டு அக் கதிர்க் குழாங்களை மிடைந்தன மிலைச்சி ஆங்கு, மெய் அணி பலவும் மின்ன, கார் அரக்கர் தானை, அகல் இடம் இடம் இன்று என்ன, வெம் பகைவர் ஊனுள் குடைந்து தோய் கொற்றப் போர் வாள் வில் வீச அடைந்த(து).

பொருள்: முன் சூரியனுக்குத் தோற்றுப்போன இருட்டு, (அந்தச் சூரியனை வெல்லத்) தவஞ்செய்து, (செய்த தவத்தின் பயனாகப்) பல (கரிய) ரூபங் கொண்டு (வென்று, கவர்ந்த சூரிய)

* குழு - கூட்டம். † மூர்த்தம் - வடிவம்.

கிரணக் கற்றைகளை (வெற்றிச் சின்னங்களாக) அணிந்துகொண்டாற்போல, அந்தக் கரிய ரூபமான உடம்புகளிலே பலவகை ஆபரணங்கள் பிரகாசிக்க, கரிய ரூபிகளான இராக்கதர் கூடியான சேனை, பூமி இடம் போதாதென்று சொல்லும்படி (பெருங்கூட்டமாக இந்திரசித்தைச் சூழ வந்து) சேர்ந்தது.

உடைதல் - தோல்வியடைதல். கதிர் - கிரணம். குழாம் - கூட்டம். மிடைந்தன மிலைச்சியாங்கு - நெருங்கினவாக அணிந்தாற்போல. வெம்பகைவர் ஊனதோய் கொற்றம் போர் வாள் வில் வீச - கொடிய பகைவருடைய உடம்புகளுள் முழுகிய வெற்றியையுடைய யுத்தத்துக்குரிய வாள்கள் ஒளியை வீச. 'பூதகணத்தரசேந்தி அனலினின்று புறப்பட்ட' என்பதில், 'புறப்பட்டது' என்பது, 'புறப்பட்ட' என வந்ததுபோல, 'அடைந்தது' என்பது, 'அடைந்த' என, 'து' என்னும் ஒன்றன்பால் வினைவிகுதி தொக்கு வந்தது. அகலிடம் - பூமி.

கரிய இராக்கதருக்கு இருட்டின துண்டங்களும், அந்த இராக்கதர் ஒன்றுகூடிய திரளான இராட்சச சேனைக்குத் துண்டப்படாத இருட்பரப்பும், இராக்கதர் அணிந்திருந்த ஆபரணங்களுக்குச் சூரியகிரணத் தொகுதிகளும் உவமை.　　　　(கஉரு)

தம்பியின் தேகத்தைக் கண்டு சோகத்தை அடைதல்

[　சேனை நடுவே சேனவீரர் எல்லாரினும் உயர்ந்தோனாக இந்திரசித்து நின்ற தோற்றம், பூமி முழுதும் கவர்ந்து மூடிய பிரளயப் பெருங்கடல் மத்தியில் மகாமேரு நிற்கும் காட்சி போன்றது. அவன் சேனையுடன் அனுமான் நின்ற இடத்துக்குச் செல்வானானன். செல்லும்போது, யுத்தகளத்தை நோக்கி, அது, பிணக்குவியல்களான மலைகளையும், இரத்த வெள்ளமான ஆறு கடல்களையும், ஆயுதக்கூட்டமான காட்டையும் பெற்று, வேறோருலகம்போல விளங்கியதென்றெண்ணி வியப்புற்றான். 'எண்ணிறந்த வீரர் இறந்து கிடக்கின்றார்கள். இவர்களெல்லாரையும் கொன்ற குரங்கு, ஒன்றே! "எப்படை கொண்டு வெல்லவ திராமன்வந் தெதிர்க்கின்!"' என்றான். 'கண்ணனோர் உயிரே அன்னார் கைப்படைக் கலத்திற் * காப்பார்' ஆக இருந்த வரம்பற்ற வீரர் மாண்டு கிடப்பதைக் கண்டு, புண்ணுள்ளே கோல்கொண்டு குத்தினாற் போல, மானத்தினால் வருந்தி மனம் புழுங்கினான்.

* கைப் படைக் கலத்தின் - கையிலுள்ள ஆயுதம்போல.

'என் அத்தை சூர்ப்பநகைக்கு உற்ற அங்கபங்கமும், என் சிறிய தந்தை கரனுக்கும்* தம்பி அட்சனுக்கும் நேர்ந்த மரணமும், மற்றைய வரம்பற்ற அரக்கர் வதமும மானுடர் இருவராலும வானரம ஒன்றிஞலும் ஏற்பட்டிருக்கின்றன வென்ருல், என் வீரம், மிக நன்ருயிருக்கிறது!' என றெண்ணினன். இவவாறு எண்ணிக் கோபம் கூர்ந்து செல்வோன், தேயப்புண்ட தம்பியின் தேகத்தைக், கையினின்று வில்லும கண்ணினின்று நீரும் சோரக், கண்டான். கண்டவன், 'என் ஐயா! உன் தந்தையின் சௌரியத்துக்கு அஞ்சி எமன் உன் உயிர் கவர அஞ்சுவானே! எமலோகததோரன்றி எவ்வுலகத்தோரும் உன்னை மறைதது வைக்க மனந துணியாரே! அப்படியாக, நீ எவ்வுலகத்திலே இருக்கின்ருய!' என்று புலம்பிச சகோதர சோகததைத தாங்கமாட்டாதவனுனன். அப்போது, அந்தச் சோகம், ஆணியால் அடிக்கப பட்ட ஆணி ஆழ்ந்து உள்ளடங்குதல்போல, தம்பியைக் கொன றவனைக் கொலல எழுநத கோபத்தால் தாக்குண்டு உள்ளடங்கியது.]

இந்திரசித்தைக் கண்ட அனுமான் எண்ணங்கள்

[அனுமான், எதிரே வநத இநதிரசித்தைப் பாரத்து, 'யான் எண்ணிறந்த இராக்கதரை எமலோகத்துக்கு அனுப்பியது, இவனை இங்கே இட்டுவநதிருக்கிறது. இவன இநதிரசிததே. யான் இதுவரை போராடியது, போராட்டன்று; விளையாட்டே: இவனேடு பொருதலே போராம்: இதுவரை வெறறியைப் பற்றிய சநதேகம் இல்லாதிருந்தது, இப்போது உண்டாயிருக்கிறது. இவனை வெல்வது, இராவணனையும் வெல்வதாம்' என் றெண்ணினன்.]

போர்

[அப்போது, இராட்சச சேனை போர்தொடங்க, அனுமான், ஒரு மராமரத்தை எடுததுக்கொண்டான். அரக்கர் அனுமான் மேல் எய்த அம்புகள், பழுக்கக் காய்ச்சிய இரும்பு, பட்டடையைச் சுடாததுபோல, அவனை ஊறுசெய்யவில்லை. இந்திரசித்து, அனுமானல் படை முழுவதும் அழிவுறுவதைப் பார்த்து, இவனுக்குச சமீபமாக வந்து, வில்லின் நாணியை விரலினல் தெறித்து

* இராவணன தாய் கேகசியின் தங்கை கும்பீநசிககும அவன் தநதை விச்சிரவ முனிவனுக்கும் பிறந்தவன் கரன்.

மிருந்த ஒலியை யுண்டாக்கினுன். அவ் வொலிக்குக் காரணமான அந்த நாணியானது அதிர்ச்சியால் அற்றுப்போம்படி இவன் தோள்கொட்டி எதிரொலி எழுப்பினுன். அவன், இவன் தலையி லும் மார்பிலும் தைக்கும்படி பலபல பாணங்களைத் தொடுததான. இவன் தனது, மிகப் பெரிய இயற்கை வடிவத்தை எடுத்தான். அவன் அவ வடிவை முடியக் காணமுடியாது, ஒரு பாகத்தையே பார்த்துப் பிரமிததுக்கொண் டிருக்கும்போது, இவன், தன்மேல் எய்யப்பட்ட அம்புகள் திரும்பி எயத அவன மேலேயே போய் விழும்படி வீசியெறிந்துவிட்டு, அவன் தேரையும் பாகனையும் குதிரைகளையும் அறைநது அழித்தான். அவன், வேறோர் தேரேறி இவன் மேனிமுழுதும மறைய, அம்பு மாரி பொழிந் தான். இவன் அந்தத் தேர்மேற் பாய்நது, அவன் வில்லைப் பறிதது முறித்தான. அநத வில் முறிந்த ஓசை அடங்குமுன், அவன வேறொரு வில்லை யெடுததுப் பல பாணங்களைத் தொடுக்க, இவன் சற்றே அயர்ந்தான. அயர்சசி அகன்றவுடன், மேரு வென்று கூறும்படியான தாரு* ஒன்றைப் பிடுங்கிச சுழற்றி, அவன் விடுத்த கணைக ளனைத்தையும முறித்து அவன் தலைமேல் அறைந்தான். மலையினின்றும் அருவி நீர் வடிதல்போலத் தலையி னின்று இரத்தநீர் வழிய, அவன் சோர்நதான். சோர்வு தீர்வுறவே, சோனுமாரியாக வாளி மாரி பொழிந்தான. இவன் அவனைத் தேரோடு மேலே எறிநதான். அவன நெடுந்தூரம மேலே சென்று திரும்பிக் கீழே விழுநதான். விழுநதவுடனே, எழுநது விரைந்து விண்மிசை ஏகினுன். அப்போது, இவன், அவன் சேமத் தேர் களை யெல்லாம சிதைத்தான்.

பிரமாத்திரத்தால் அனுமான் கட்டுணல்

[அவன, ஏறத் தேரு மில்லாமல், எதிர்க்க வலியு மில்லாமல், யாது செயவதெனறு நினைநது, 'இதுவே தக்க'தென்று துணிநது, பிரமாத்திரத்தைப் பிரயோகம பண்ணினுன். அது, பெரும பாமபு வடிவுகொண்டு, இவனைக் கயிறுபோல இறுகக் கட்டியது. இவன், தளர்ந்து சாய்ந்தான். அப்போது, உயிர்தப்ப ஒதுங்கிப் பதுஙகி ஒளிந்திருந்த இராக்கதர், ஓடிவந்து சூழ்ந்து, இவனைச சுற்றியிருந்த நாகத்தைப் பறறி யிழுததார்கள்.]

---

* தாரு - மரம.

கட்டுண்ட அனுமானது நிலைமையின் வருணனை

126. குரக்கு நல்வலங் குறைந்ததென் றுவலங் கொட்டி
இரைக்கு மாநக ரெறிகட லொத்ததெம் மருங்கும்
திரைக்கு மாசுணம் வாசுகி ஒத்தது தேவர்
அரக்க ரொத்தனா மந்தர மொத்தன னனுமான்

கொண்டுகூட்டு: *குரங்கின நல வலம் குறைந்தது என்று ஆவலம் கொட்டி (அரக்கா) இரைக்கும் மா நகா, எறிகடல ஒத்தது. (அனுமான் உடலின) எம மருஙகும திரைக்கும் மாசுணம வாசுகி ஒததது. அரக்கா தேவா ஒததனா. அனுமான மந்தரம் ஒததனன.*

பொருள்: *குரங்கினது பலம குறைநத தென எண்ணிக் களிப்புறறு, வெற்றிக்குறியாக ஆர்த்து வாயகொட்டி, இராக்கதர் ஆரவாரஞ் செய்யப்பெற்ற இலங்கை மாநகரம், அலையடித்து ஒலிக் கின்ற பாறகடல் ஒததது. அனுமானது உடலின் எல்லாப் பக்கங்களேயும சுற்றித் தன்னுள் அடக்கிய பிரமாத்திரமாகிய பெரும் பாமபு (அமுதம் உண்டாகப பாற்கடலைக் கடைநத காலத் திற் கடைகயிறாக மநதா மததைச் சுற்றிய) வாசுகிப பாம்பு போன்றது. (பிரமாததிரப் பாம்பைப பற்றிய) அரக்கர் (வாசுகிப் பாம்பைப் பற்றிய) தேவரை ஒத்தனர். (இலங்கையைக் கலங்கச செய்த) அனுமான், (பாற் கடலை மறுகச் செய்த) மநதா மலையை ஒததான்.*

ஆவலஙகொட்டல் - ஏககாலததில் ஒலிததுககொணடும் கையால் வாயில அடித்துககொணடும ஒருவகை ஓசை உணடாககல. இரைததல - ஆரவாரிததல. எறிதல் - (அலை) அடிததல. அலையடிததலால ஓசையுண டாககல குறிபபு. திரைததல - தன்னுள அடககல். மாசுணம் - பெரும் பாமபு வாசுகி, அஷ்ட மாநாகஙகளுள ஒனறு, அமுத மதன காலததிற கடை கயிறாக உபயோகிககபபட்டது. (சஉசு)

கட்டுண்ட அனுமானைக் கண்ட இலங்கைவாசிகளின் எக்களிப்பு

[*இநதிரசிதது அனுமானைக் கட்டிவரக் கண்ட ஆண்பாலார், பெண்பாலார், பிள்ளைகள், பெரியோரான எல்லா இலங்கை வாசிக ளும எக்களிதத எக்களிபபுக்கு மிக்க களிப்பிலலை. அவர்கள் அடைந்த அததியந்த சந்தோஷம், இநதிரன கட்டுண்ட நாளில் அவர்கள் அடைநததை ஒத்தது.*]

13. பிணிவீட்டு படலம்

[இந்திரசித்து, அனுமானைப் பிரமாத்திரத்தினாற் கட்டியிருந்த கட்டை நீக்கியதைக் கூறுவது] *

கட்டுண்ட அனுமானைக் கண்ட இராக்கதர் பேச்சும் செயலும்

[*கண்டுண்டிருநத அனுமானைக் கண்ட அரக்கரில் பலர், 'இவனைத தப்பவிட்டால், எல்லாரையுங் கொன்றிடுவான்; அம்பால் எய்யுங்கள்; கல்லால் எறியுங்கள்; கத்தியால் வெட்டுங்கள்; உடலைப் பல கூறுபடுத்துஙகள்; தரையிலிட்டு அரையுங்கள்' என்றார்கள். பலர், 'இந்தப் பயலை இத்தனை நேரம் உயிரோடிருக்க விடுவதோ! உடனே கொல்வோம!' என்று கொல்ல எத்தனித்தார்கள். பலர், 'கடலுள் அமிழததுங்கள்; தீயிலிட்டுக் கொளுத்துஙகள்' என்றார்கள். (அனுமானால் தந்தையர், தமையர், தமபியரை இழநத) பலர், 'என் தநதையைத் தநதுபோ; என் தமையனைத தநதுபோ; என் தம்பியைத தந்துபோ!' என்று மறித்தார்கள். கணவரை இழந்த இராட்சசிகள், 'இவனைக் கொன்று இவன் தலைமே விருநதுதான் தாலி வாங்குவோம்' என்றார்கள்.*

மரத்தைக் காண்போர் அதன்மேல் ஊரும் எறும் பொழுக்கைக் காணாதவாறு, அனுமானைக் கண்ட சில இராட்சசிகள், அவன் தீங்குசெய்ய இடமின்றி அவனைக கட்டியிருககும் நாகபாசத்தைப் பாராமல், தம்மைக் கொன்றிடுவானென்று பயநது வயிற்றிலடித்துக்கொண்டு ஊருக்கு வெளியே ஓடினார்கள்.]

அனுமான் ஆலோசனை

[*அனுமானைக் கட்டியிருந்த பாம்பைப் பற்றிப் பக்கத்துக்கு ஐம்பதினாயிரவராக நூறாயிரம் இராட்சசகிங்கரர் இழுத்துச் சென்றார்கள். அப்போது, அவன், 'என தந்தை வாயுதேவனின் அன்புப் பலமும் தேவாதிபர்களும் சீதாபிராட்டியும் தந்துள்ள வரபலமும் எனக்கு இருத்தலால், இந்த நாகபாசத்தை எளிதிற்*

---

* *கடடை நீக்கி யென்ற பொருளில 'பிணியைவீட்டி' என மிதிலைக் காட்சிப் படலம் ௯௬-ல வருதல காணக.*

சிதைக்கவல்லேன். அது செய்யாது அடங்கியிருத்தலே இப் போதைக்கு ஏற்றது. இதனால், இராவணனைக் காணவும், அவ னும் அவனுடைய அமைச்சரும் அறிய, இராமபிரான் ஆணையால் அவன் அடையும் ஆபத்துக்களை எடுத்துக் கூறவும், அதனால் அவன் மனஉறுதி குலைந்து சீதாபிராட்டியைச் சிறையினின்று விட்டுவிடவும் கூடும். இஃதன்றி, ஏக ராம பாணத்தினால் ஏழு மராமரங்கள் ஒருசேர ஊடுருவப்பட்டதும், வாலி மாண்டதும், வானர சைனிய மகத்துவமும் புகலுதற்கு வசதி வாய்க்கும்' என்று எண்ணிக்கொண்டு சென்றான்.]

சீதை துயரம்

[அனுமான் அகப்பட்டதை அறிந்த சீதை, குஞ்சு பிடிபட்ட பறவைபோலவும், கன்று கவரப்பட்ட பசுப்போலவும் கதறினாள். இந்திரசித்து அனுமானை இராவணன் அரண்மனைக்குக் கொண்டு போனான்.]

இராவணன் கோலு

127. தலங்கண் மூன்றிற்கும் பிறிதோரு மதிதழைத் தென்ன
அலங்கல் வெண்குடை தண்ணிழ லவிரோளி பரப்ப
வலங்கோ டோளினன் மண்ணின்றும் வானுற வெடுத்த
பொலங்கொண் மாமணி வெள்ளியங் குன்றெனப் பொலிய

கொண்டுகூட்டு: தலங்கள் மூன்றிற்கும் பிறிது ஒரு மதி தழைத்(த)து என்ன, அலங்கல் வெண் குடை தண் நிழல் அவிர் ஒளி பரப்ப, (அது) வலம் கொள் தோளினன், மண் நின்றும் வான் உற எடுத்த பொலம் கொள் மா மணி வெள்ளியங் குன்று எனப் பொலிய (அவன் கொலுவிருந்தான்.)

பொருள்: (இராவணன் ஆளும்) மூன்று உலகங்களுக்கும் (பூவுலக மொன்றுக்கே யுரிய சந்திரன் போதா தென) வேறொரு சந்திரன் தோன்றினாற் போலச், (சூழவும் முத்துச்) சரங்கள் தொங்குகின்ற ஒற்றை வெண்கொற்றக் குடை குளிர்ந்த நிழலையும் பிரகாசிக்கின்ற ஒளியையும் பரவச்செய்யவும், அந்தக் குடை இராவணன் பூமியினின்று பெயர்த்தெடுத்து ஆகாயம் அளாவ மேலே தூக்கிய வெள்ளிமலை போல விளங்கவும் (இராவணன் கொலுவிருந்தான்.)

அலஙகல் - மாலே ; இஙகே குடையைச சூழ்ந்து தொஙகக் கட்டியிருக் கும் முதநுச சாஙகளேக குறித்தது , அசைதல் லென்னும் 'பொருளுடைய அலஙகலும தொஙகுதல் லெனனும் பொருளுடைய தொஙகலும், அசைதலும் தொஙகுதலும இயலபாக உடைய மாலேயை உணாத்துதல் கவனிககத தககது. வலம - வலிமை , வெறறி. பொலம - பொன , அழகு.

சிஙகாதனததுககு மேலாக அநதரததிலே விளஙகிய வெணகுடையின் காட்சி, இராவணன் பூமிககு மேலாகத தூககியபோது விணணில விளஙகிய வெள்ளி மலேயின தோறறம போனறதைக கமபா, கவிப படததில, சொல் வருணஙகொணடு, கறபனைசகதித தூரிகையால *, சிததிரகாரா சிததிரந தீட்டுவது † போலத தீட்டிக காட்டியிருபபது, கணடு களிககததககது.

'இராவணன கைலாசகிரியைப பெயாத்தெடுத்த வரலாறு கூறு மிடத்து, அவன அம் மலேயைத் தலேககு மேலே தூககியதாகக் கூறுதலும உளதாதலின், அஙஙனம உயா எடுககபபட்ட வெள்ளி மலேயோடு அவ வெணகொறறக குடை உவமிககபபட்டது.' ‡ குடையின மேறபகுதி வெள்ளி மலேயையும குடைக காமபு இராவணனேயும போனறமை போதரும்.

பாட பேதம் : வெணகுடைத தண்கொடை. (கஉள)

[இராவணன் புயங்களில் திரிமூர்த்திகளின் ஆயுத வடுக்களும் காதல் மாதரின் நக வடுக்களும் காணப்பட்டன. அவன் இரததின கிரீடங்கள் பூண்ட பல தலேகளோடு சிங்காதனத்தில் கொலு விருததல், நாகரததினங்களுடன் விளங்கும பல தலேகளேயுடைய ஆதிசேடன் அரசிருததல் போன்றது. கரிய பெரிய காத்திர முடைய § அவன் பொனமுடி புனேநதிருத்தல், கருங்கடல் பொன் மலேயை முடியாகப் பூணடிருததல போனறது. கருமலே போன்ற அவன் செம பொனனுடையும் வெண் முத்தாபரணங்களும் விளங்க வீறறிருத்தல, செவ்வநதிவான ஆடை உடுததது, நட்சத் திர ஆபரணங்கள் பூண்டு, அநதகாரம் $ அரசுவீற்றிருத்தல் ஒத்தது.

* தூரிகை - சிததிரம எழுதும குசசு. † தீட்டுதல - எழுதுதல ; சித்திரிததல.
‡ வை. மு. கோ. § காததிரம - உடமபு.
$ அநதகாரம் - இருள.

தேவ மாதர்கள் பக்க வாத்தியங்களோடு ஒற்றுமைப்பட்ட பாட்டாகிய அமுதத்தை இருபது செவிகளுக்கும் விருந்தாக வழங்கவும், முற்றத் துறந்த முனிவர்கள் வீட்டையும் வெறுத்து யாருடைய ஆட்டை விரும்புவார்களோ, அந்த மேனகை, தாளத் தொனியொடும் மத்தள ஓசையொடும் பொருந்தத், தாள்கள் பெயர்த்து, மனக்கருத்தைக் கண் கைகளின் அபிநயத்தாற் காட்டும் பரதநாட்டியம் இருபது கண்களையும் களிப்பிக்கவும, தன்னைக் காதலிக்கும மாதர் கண்களாகிய தாமரைகளை மலரச்செய்யும சூரியனாகவும் தேவாசுரர் கைகளாகிய தாமரைகளைக் குவியச்செய் யும் சந்திரனாகவும் விளங்கினான்.]

அனுமான் இராவணனைக் கண்டு பேசுதல்

[அந்த நிலையில் அவனை அனுமான் கண்டான். இராவணன், அனுமானைக் கொடுங் கோபங்கொண்டு பார்த்து, 'நீ இங்கு வந்த காரணம் யாது? நீ யார்? இந்திரனோ? இயமனோ? பிரமனோ? குமரனோ? அரனோ? அரியோ? வடிவம் மாறிவந்திருக்கின்ற நீ இவருள் எவன்? ஆர் உன்னை அனுப்பினவர்? என்ன காரியமாக இங்கு வந்தாய? சொல் லென்று கட்டளையிடுகின்றேன். சோர் வில்லாதபடி சொல்' என, அனுமான் கூறுகின்றான்:

'நீ அடுக்கிச் சொல்லிய அனைவரு மல்லேன். அந்த அற்ப ஆற்றலினோர் ஆருடைய ஆளும் அல்லேன். ஒரு வில் வீரனது தூதனேன். அவன ஆரெனறு அறிய அவாவுவாயானால், அறை கின்றேன, கேள். அவன், முனிவரும், தேவரும், தேவதேவர் மூவரும் — முடித்தற்கரிய வென்பதேன்? — முடித்தறகு நினைத் தறகே அரியதான பெரிய காரியத்தை முடிக்கப பிறந்திருக்கின் றான். அவன, உனது தேகபலமும, தேவரிடம பெறற ஆயுத பலமும், ஆயுட் பலமும, பிற பல வரபலமும், பிரபலமான பெருஞ் செல்வமும் ஓ ரம்பினால் அடியோ டழியச்செய்ய வந் திருக்கின்றான். அவன், நீ செயித்த தேவ ரல்லன், திசையானைக ளல்லன், திக்குப்பாலக ரல்லன், கயிலைமலை யல்லன், திரிமூர்த்தி களுமே யல்லன். மற்று, யாவ னெனில், பூவுலகத்தைப பொது நீக்கி அரசாண்ட தசரத சக்கரவர்த்தியின் திருக்குமாரன்.]

மும்மூர்த்திகளான முழுமுதற் கடவுளே இராமனாகியிருக்கின்றானெனல்

மூலமு நடுவு மீறு மில்லதோர் மும்மைத் தாய
காலமுங் கணக்கு நீத்த காரணன் கைவில் லேந்திச்
சூலமுந் திகிரி சங்குங் கரகமுந் துறந்து தொல்லை
ஆலமு மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்

கொண்டுகூட்டு: 'மூலமும் நடுவும் ஈறும இல்லது (ஆய்) ஓர் மும்மைத்து ஆய காலமும கணககும் நீதத (சருவ) காரணன (ஆன பரமன்,) சூலமும, திகிரி சஙகும, கரகமும் துறந்து, (கோதணடம எனனும) வில்லைக் கையில் ஏநதி, தொலலை வெள்ளிப பொருபபும, ஆலமும, மலரும் விட்டு, அயோததி வந்தான.

பொருள்: 'முதலும், நடுவும், முடிவும் (என்னும் உண்டாதல், நிலைபெறுதல், ஒழிதலாகிய மூன்றும்) இல்லாததாய் (இறப்பு, நிகழ்வு, எதிர்வு என) மூவகைப்பட்டதான கால அளவையும் வேறு அளவுகளையும கடந்த சருவ காரணன் (ஆன பரமன், சங்கரனாகித் தரித்திருந்த) சூலாயுதத்தையும், (திருமாலாகித் தாஙகியிருந்த) சங்க சக்கரங்களையும், (பிரமனாகிப் பிடித்திருந்த) கமண்டலத்தையும் கைவிட்டு, (கோதண்டம் என்னும்) வில்லைக் கைக்கொண்டு, (மூவராக முறையே வாழ்ந்த) கைலை மலையையும், ஆலிலையையும், தாமரை மலரையும் நீங்கி வநது, அயோத்தி நகரம் வசிககுமிடமாக இருக்கின்றான்.

மும்மைதது - மூன்று தனமையுடையது கணககு - அளவு: 'கணக்கிலாததிருக கோலம் நீவநது காட்டி னுபகமுக குன்றிலே'. — திருவாச. நீதத - நீஙகிய, இஙகே கடந்த என்ற பொருளை குறிததது. திகிரி - சக்கராயுதம். கரகம, கமணடலம, குணடிகை, ஜலபாததிரம என்பன ஒரு பொருட் பெயாகள் துறநது - நீககி.

முழுமுதற கடவுளின ஒவவோர அமசபூதரே மும்மூாததிக ளெனபதும பூரணம்சபூதன இராம னென்பதும் உய்ததுணரவைததார. (கஉஅ)

அனுமான், தான் வாலி மகன் தூதன் எனல்

['அவன், அதர்மத்தை அற ஒழித்துத் தருமத்தை நிலை நிறுத்தவும், தீயோரை வீழ்வித்து நல்லோரை வாழ்விக்கவும் அவதரித்திருக்கின்றான். அத்தகைய பெரியோனுக்கு அடிமை

செய்யும் பெருமை யுடையேன். அனுமா னென்னும் பெயரினேன். சீதாபிராட்டியைத் தேடத் திசைகள் நான்கினும செலுத்தப் பெற்ற சேனைத் தலைவரில் தென்றிசைக்கு வந்த வாலி குமாரனான அங்கதன் தூதனாக இங்கு வந்தேன்' என்றான்.]

வாலி இறந்ததும் சுக்கிரீவன் அரசனானதும் கூறல்

[வாலி மகனுடைய தூத னெனவே, தன் நண்பனான அந்த வாலியினுடைய நாமத்தைக் கேட்ட மகிழ்ச்சியினால், அனுமான செய்த தீங்குகளை மறந்து, அத் தீங்குகள் காரணமாகக் கொண்டிருந்த கோபம் மாறிச சந்தோஷ முகத்தினனாகி, மேகத்தினின்று மின்னல் வெளிப்பட்டாற்போலச சிரித்து, 'வாலி மகனுடைய தூதனே! வாலி சுகமாயிருக்கின்றானா? அவன் அரசாட்சி நன்றாக நடக்கின்றதா?' என்று கேட்டான். உடனே, அனுமான், முன, தன்னை வாலிற கட்டி எட்டுத திக்கும் இழுத்துச சென்று இமிசித்தவனை எதிர்க்கும் வலி யில்லாமையால் நட்புக்கொண்டு நண்பனாக நடித்தவன், இப்போது, சேமம் விசாரிக்கும் நடிப்புச செய்கின்றானென் றெண்ணிச் சிரித்து, 'ஏ! அரக்கனே! அஞ்சாதே. வாலி மண்ணுலக வாழ்வொழிந்து விண்ணுலக வாழ்வடைந்தான். இனித் திரும்பி வாரான். அவனோடு அவன் வாலும் ஒழிந்தது! அவன், ஒரே ராம பாணத்தால் உயிர் நீங்கினான். இப்போது வானர ராசன், சூரிய குமாரனான சுக்கிரீவ மகாராசன்' என்றான்.]

வாலி கொல்லப்பட்ட காரணமும், சீதையைத் தேடிவந்த வரலாறும்

[இராவணன், 'இராமன், என்ன காரணத்தினால் வாலியைக் கொன்றான்? எங்கே யிருக்கின்றான்? அவன தேவியை அங்கதன் தேடுவானேன்?' என, அனுமான, 'தேவியைத் தேடிவந்த சீராமனுடன் சிநேகஞ்செய்து, "என் துன்பத்தைத் தீர்ப்பாயாக" என்று சுக்கிரீவ ராசன் தன் குறைகூறி வேண்ட, இராமபிரான் தைரியமாக, "வாலியின் அரசையும் அவன் கவர்ந்திருக்கும் உன் மனைவியையும் தந்தேன" என்று முன்பு வாக்களித்துப், பின்பு வாலியைக் கொன்று வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினான். அதன்பின், சேனைத் தலைவர்களைச், "சேனைகளோடு திசையனைத்துஞ் சென்று தேவியைத் தேடுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

யாங்கள் தேடுவேமானேம. இவைகளே நிகழ்ந்த செயதிகள்' என, இராவணனை கூறுகினறுன.]

அநுமான் சொல்லக் கருதியவை யாவையென் இராவணன் வினவுதல்

['ஒப்பறற உயர்வுடைய உங்கள் குலத் தலைவனைக் கொலை செய்தவனுக்கு அடிமைததொழில ஆற்றுவதை ஏற்றுககொண்டீர் களே! இப்பழி எப்படி யொழியும! உங்கள செயலை உலகம் புகழு மாறுல், அது, பெரும பேதைமையுடையதேயாம். தன தலைமை யனைக் கொல்லச சொல்லிக் கொன்றவனுக்கு அன்புகூர்ந்த உன் தலைவன ஆணையின்படி தூதுவனுக வநத நீ எனககுச சொல்லக் கருதியவை யாவை? நீ போர்புரிநத காரணம் யாது? உன்னைக் கொல்லேன. அசசமின்றி உன் உள்ளததுள் உள்ளதை ஒளியா மல் உரை' என்றுன்.]

அநுமான் பொது நீதி புகலல்

[அனுமான், 'பொதுவான சில நீதி புகல்வோம்' என் றெண்ணி, 'உன் மேலான வாழ்ககையை வீணுக வீழ்த்திஞய். இராச நீதியை எண்ணிப் பார்ததாயில்லை. தீங்கைத் தேடிக்கொண் டாய. இறுதி கடிதே உறுவதா யிருக்கின்றுய. ஆயினும், ஓர் உறுதி உரைக்கினறேன். அதன்படி நடப்பாயாஞல், ஆயுள் நீடித திருப்பாய. பெருந் தவஞ்செய்து பெறற வாழ்வைச சீதையை வாதைப்படுததிய பாதகத்திஞல் பாழ்படச செய்தலை உணர்கின்று யிலலை. தீமை, நன்மையைச் செயிக்கா தென்னும் உண்மையை ஓரா தொழிநதாய்.]

முறை தவறிய காம முடிவு

129. திறந்தி றம்பிய காமச் செருக்கிஞல்
மறந்து தத்தம் மதியின் மயங்கிஞர்
இறந்தி றந்திழிந் தேறுவ தேயலால்
அறந்தி றம்பின ராருள ராயிஞர்

கொண்டுகூட்டு : 'திறம் திறம்பிய காமச செருககிஞல் தம்மை மறந்து தம் மதி மயஙகிஞா, இறந்து இறந்து இழிந்து (அவ இழிவில) ஏறுவதே அலால், அறம் திறம்பின (அவ)ா உளா ஆயிஞர் ஆர்?

பொருள் : 'முறைதவறிய காமக் களிப்பினால் தமமை மறந்து மதிமயக்க மடைந்தவர்கள், மேலும் மேலும் முறை கடந்து, இழிவடைந்து, அவ் இழிவு மிகைபுறுவ தல்லாமல், அறந்த தரும நெறி தவறி நடந்தவர், (குறைந்த வாழ்நா ளுடையராய இறந்தாரன்றி, இறவாது நிறைந்த வாழ்நா ளுடையராய நீடித்து) இருந்தார் யார்? (எவருமில்லை யென்றபடி).

திறம - கறபு, ஒழுக்கம.—த. அ. திறமபுதல - தவறுதல. செருக்கு - களிப்பு. திறம திறமபிய காமச செருக்கு - (மனையாளிடத்து மட்டும் காமம நுகாவதாகிய) கறபு நெறி தவறிய காமக களிப்பு இறந்து இறந்து இழிந்து - (மனையாளமாட்டே காமம நுகரும கறபு நெறியை ஒரு முறை கடந்து அயல மாதினிடத்துக காமம நுகாந்தவா) மேலும மேலும (அக கறபு நெறியைக) கடத்தலும (அதனால மேலும மேலும) இழிவடைதலும உறறு. ஏறுதல - (இழிவில) மிகுதல. (கஉகூ)

சீதையை விட்டுவிடும்படி செப்புதல்

['முறைதவறிய காமத்தினால இளமையிலேயே இறந்தவர்களின எண் கணக்கி லடங்காது. அறநெறிக்கு மாறான சிற்றின்ப விருப்பும பொருள் விருப்பும போல அறிவை மயக்கும மயக்கமும, அவ விருப்புககளினின்று விடுதலையடைதலைப போல அறிவைத் தெளிவிக்கும தெளிவும இல்லை யென்பது, அறிவொழுக்கங்களிற சிறந்த ஆனறோா துணிபு. இதுவரை இராசரா யிருந்தாருள் ளே உன்னைப்போல நீதியறிவுடையாராய எவரும இருந்ததில்லை. வேத நீதி விதிவழி யொழுகும விருப்பினனாயிருந்த நீ, தரும வரமபு கடக்கலாமோ! தீயை உட்பொதிந்த சேலைபோல, உலக முழுதையும ஒழிக்கவல்ல உன் உடல வலிமை, உன் உள்ளத்துள் வைத்திருக்கும சீதாதேவியைப பறறிய காமத் தீயினால் வெந்து நீறாய விடும. பிரமன முதலியோா வரம பிழைக்கும: இராமபிரான சரம பிழையாது. ''உனது அருமபெறற் செலவமும அருமந்த சுற்றமும ஆருயிரும அழியாதிருக்க வேண்டுவையானால், சீதாதேவியைத் தருவாயாக'' என்று சுக்கிரீவ மகாராசன சொன்னான்' என்றான்.]

இராவணன் அனுமானைக் கொல்லச் சொல்லல்

[என்றவுடனே, இராவணன், 'எல்லாந தெரிந்த எனக்கு இந்த நீதிகளைக கூறியது ஒரு குரங்கு! நன்று நன்று!' என்று

பெருஞ் சிரிப்புச சிரித்தான. பின்பு, 'இராமன் வீரமும சுக்கிரீவன் நீதியும இருக்கட்டும்; நீ அவைகளைச சொல்வது நிற்கட்டும். ஏனடா, தூதாக வநத நீ அசோகவனததை அழித்து அரககரைக் கொன்றாய்? அதைச சொல்!' என்றான. அனுமான், 'உன்னைக் காட்டுவா ரில்லாமையால், அசோகவனததை அழிததேன். என்னைக் கொல்ல வநதவாகளைக் கொனறேன்' எனறான. எனவே, இராவணன, கோபமூண்டு, 'இவனைக கொல்லுங்கள்' எனக், கொல்லுவோர் நெருஙகியபோது, 'நில்லுங்கள்!' என்று கூறி, எழுநது, இராவணனை நோக்கிக கூப்பிய கையனாய, விபீடணன கூறுகினறான் :]

விபீடணன் தடுத்தல்

['நீ சினநதது நியாயமனறு. பெருந தவஞ்செயது பிரமனிடம பெற்ற வரததினால் மூன்றுலகங்களையும செயித்துத் தனியாக அரசாளும நீ, "தூதாக வநதே"னென்று சொல்லியவனைக் கொலலுவாயோ! மன்னருள் மாதரைக் கொன்றுளரேனும தூதரைக் கொன்றிலா. பகைவரிடத்தைதத துணிவுடன் அடைந்து, தம்மை அனுப்பினவர் கூறியதை அஞ்சாது கூறி, மெய்மமை உரைத்தலே விரதமாகவுடைய தூதரைக் கொல்லலினும பழிப்புககு ஏதுவாவது யாதுமில்லை. இவனைக் கொல்லுதல் நமது குலததுக்கு இழுக்காம். நாம் இவனைக் கொனறால, நமது பெருமித வாழவைக் கண்டு பொறாமை கொண்டிருக்கும தேவரும தேவாதிபரும சிரிப்பார்கள். இராம லக்குமணாகள் சூர்ப்பணகையை அங்கபங்கம செய்து, "இவ்விடததுச செயதிகளை இராவணனுக்கு உரை" என்று கூறிவிட்டாரே யன்றிக கொன்று விட்டா ரல்லர். இவனைக் கொல்வாயானால், இவன் இங்கே கண்ட காட்சிகளையும் நிகழ்நத நிகழ்ச்சிகளையும் இராமனிடம சொல்லாதபடி செய்தாயாவாய. அன்றியும், "உனனைக கொல்லேன்"* என்று வாக்களித்திருக்கிறாய' என்று கூறினன.]

இராவணன், அனுமான் வாலைச் சுட்டு ஊரைவிட்டு ஓட்டும்படி கட்டளையிடல்

[அதுகேட்டு, இராவணன், 'நீ கூறியது நியாயமே' என்று சொல்லி, அனுமானை நோக்கி, 'நீ போய்,' இங்கு நிகழ்நத

* '"நம்மினைக கொலலாம, நெஞசம அஞசலை நுவலதி" எனறான.' (இப் படலம அகூ.)

செய்திகளைத் தெரிவித்து, இராம லக்குமணரைக் கொண்டுவா!' என்று கூறிப் பக்கத்துள்ளாரைப் பார்த்து, 'இவன் வாலை மூலை முச் சுட்டு ஊரைச் சுற்றிக்கொண்டுபோய் ஓட்டிவிடுங்கள்!' என்றான். எனவே, அவர்கள் அவன் ஆணையை நிறைவேற்ற ஆர்ப்பரித்து எழுந்தார்கள்.]

அரக்கர் அனுமானைக் கயிறுகள் கொண்டு கட்டல்

[அப்போது, இந்திரசித்து 'இவன் பிரமாத்திரத்துடனிருக்கும்போது சுடலாகாது. இவனைக் கயிறுகொண்டு கட்டுங்கள்!' என்று அந்த அத்திரத்தை விடுவித்தான். இராக்கதர்கள், தேர்க் கயிறு, யானைக் கயிறு, குதிரைக் கயிறு முதலாக, இராட்சசிகள் தாலிக் கயிறு நீங்கலாக, கண்ட கண்ட கயிறுகளையெல்லாம் கொண்டுவந்து அனுமானைக் கட்டினார்கள். அவன், 'யான் தெய்வப் படையைச் சிதைத்தேனாகாமல் அதனைப் பகைவன் தானே விடுவித்தது நலமாயிற்று. என் வாலைச் சுடச் சொல்லியது ஊரைச் சுடச் சொல்லியதாயிற்று' என்றெண்ணிக்கொண்டு, பாசபந்தம் * நீங்கியும் நீங்காதவன்போல நடிக்கும் யோகிபோல, தான் நினைத்த மாத்திரையே அறுத்துவிடக்கூடிய எளிமையான பாசபந்தத்துக்கு † உட்பட்டு, வலிமையில்லாதவன்போல, அடங்கிச் சென்றான்.]

அரக்கர், அனுமான் வாலில் சீலையைச் சுற்றித் தீயைப் பற்றவைத்தல்

[அவன் இராவணன் அரண்மனை வாசலுக்கு வெளியே வந்தபோது, அரக்கர் அவன் வால் முழுவதையும் துணிகொண்டு சுற்றி, நெய்யும் எண்ணெயும் விட்டு நனைத்து, நெருப்புப் பற்ற வைத்தார்கள். 'சீதையைக் கண்டு பேசி, அசோகவனத்தை அழித்து, அட்ச குமாரன் முதலியோரைக் கொன்ற குரங்குக்கு வந்த கதியைக் காண வாருங்கள்!' என்று இராக்கதர் இலங்கைத் தெருக்களெல்லாம் சென்று பறையறைந்து சாற்றிச் செய்தி தெரிவித்தார்கள்.]

---

* பாசபந்தம் - பிறப்பிறப்பிற்குக் காரணமான கட்டு.
† பாசபந்தம் - கயிற்றுக்கட்டு.

சீதை, அனுமானைச் சுடாதிருக்கும்படி அக்கினி தேவனை வேண்டல்

[அச் செய்தியைச் சில அரக்கர்கள் சென்று சீதைக்குந் தெரிவித்தார்கள். அவள், 'உயிர்ப்பதைத்தாள்,—ஓய்ந்தாள், உலந்தாள்*, விம்மினாள், விழுந்தாள், அழுதாள், வெய்துயிர்த்தாள்†.' பின்பு, 'அக்கினி தேவனே! யான் கற்பினால் பரிசுத்தியுடையே னென்றால், உலக சாட்சியான நீ அனுமானைச் சுடாதிருப்பாயாக' என்று வேண்டினாள். அக்கினி அஞ்சி அடங்கினான். அனுமான் வால், மயிர்ச்சிலிர்ப்புற எலும்புவரையும் குளிர்ச்சி பரவலுற்றது.]

தீ தன்னைச் சுடாதது சீதை கற்பின் செயலென அனுமான் களித்தல்

[வாலில் வைத்த தீ சுவாலித்தெழுந்து உடம்பு முழுதும் மூடியும் சுடாதிருந்ததை உணர்ந்து, அனுமான், 'இந்த அற்புதம் சீதாதேவி கற்பினாலாகிய'தென்று களிப்புற்றான். உலகக் காட்சிகளை அறிவில்லாத ஐம்பொறிகள் காட்ட, அறிவு அறிந்து கொள்ளுதல் போல, இலங்கா நகரக் காட்சிகளை அறிவற்ற அரக்கர் காட்ட, அனுமான் கண்டுகொண்டு சென்றான்.]

இலங்கையை எரித்தல்

[அவன் இலங்கையின் முடிவெல்லையை அடைந்தபோது, நழுவி அகல்வதற்கு உரிய சமயம் வந்ததென்றெண்ணி விரைவாக விண்ணின்மேலெழுந்தான். எழவே, அவனை இரு பக்கமும் பற்றி யிழுத்துச்சென்ற இராக்கதர் ஈரைம்பதினாயிரவரும் கீழே வீழ்ந் திறந்தார்கள். இனிச் செய்யற்பாலது இலங்கையை எரிக்கு இரையாக்குவதே யென்று எண்ணி, எரிபற்றி எரியும் வாலை இலங்கையெங்கும் செலுத்தினான். அந்த வால், சிவாம்சனான அனுமான் இலங்கையை எரிக்க எண்ணியதை அறிந்து சிவனுடைய எரியிரும்புப்படையாகிய மழுவாயுதம் அவன்பின் உற்றது போன்றது. ஈசனும் அனுமானும் தத்தம் தனுவி‡னின்று முறையே முப்புரத்தையும் இலங்கையையும் எரிக்க ஏவிய கோலும்§ வாலும் ஒன்றையொன்று ஒத்திருந்தன. எரியும் வாலோடு அனுமான் இலங்காநகர மாடங்களின்மீது குதித்தது, மலைகளின்மேலே எரிந்துகொண்டு இடி வீழ்வதை ஒத்தது.]

---

* உலந்தல் (நெஞ்சு) அழிதல்   † வெய்துயிர்த்தல் - சுடுமூச்சுவிடுதல்

‡ தனு - வில்; உடம்பு.   § கோல் - அம்பு.

14. இலங்கை யெரியூட்டு படலம்

[அனுமான் இலங்கையைக் கொளுத்தியதைக் கூறுவது] *

இலங்கை தீப்பற்ற, இராக்கதர் கூக்குரலிடல்

[*அனுமானது வாலின் தீ, இலங்கா நகரத்து வீடுதோறும் புகுந்து, கொடி, விதானம், தூண், சுவர் முதலியவைகளைச் சுற்றிப் பற்றியெரித்தது. அதனால், அந்த நகரத்துள்ள அரக்கர் அஞ்சி, அங்குமிங்கும் அலைந்து கூக்குரலிட்டனர்.*]

அரக்கர் அரக்கியர் மயக்கம்

[*சிவந்த மாணிக்க மணிகளிழைத்த மாளிகைகளில், தீச் சுவாலை பற்றிய பகுதியும் அந்தச் சுவாலை பிரதிபலித்த பகுதியும் வேற்றுமை தெரியாமையால், மாதர், எங்கே ஒதுங்குவதெனத் துணிய மாட்டாராய் மதிமயங்கி வருந்தினார்கள். போகுந் திசையறியாது புகை நடுவில் அகப்பட்டு அலையும் மாதர்களின் தோற்றம், இருண்ட சோலையிடையே உலாவும் மயில்களின் காட்சி போன்றது. அரக்கரும் அரக்கியரும் தீச்சுவாலை போலும் செம்பட்ட மயிரினராதலால், யார் தலை தீப்பற்றியது, யார் தலை தீப்பற்றாதது என்று தெரியாராய், ஒருவர் தலையில் ஒருவர் மாறிமாறி நீர் சொரிந்து தீ யவியவில்லையே என்று திகைத்தனர். ஒரு பிள்ளையை ஒக்கலில் வைத்து, ஒரு பிள்ளையைக் கையிற் பிடித்துப் பல பிள்ளைகள் அழுது தொடர, அரக்கியர் கதறிக் கொண்டு கடலில் விழுந்தனர்.*]

பல தீக்கள் ஒன்றுபடல்

[*அடுப்புத் தீ, விளக்குத் தீ, ஓமத் தீ முதலிய பல தீக்கள், பகுத்தறியப்படாதபடி, வீடு முழுதும் பற்றி ஏகமாக எங்கும் பரந்து தெரியும் தீயொடு ஒன்றுபட்டது, பல சீவான்மாக்கள், முத்திநிலையில் வேற்றுமை யில்லாதபடி, எங்கும் வியாபகமான பரமான்மாவோடு ஐக்கியப்பட்டிருப்பது போன்றது.*]

---

* ஊர்தேடு படலம் என்றும் பிரதிபேத முண்டு.

தீப்பற்றிய யானைகள் முதலியவை

[தீயினால் தாக்கப்பட்ட யானைகள், கழுத்திற் கட்டிய கயிறு களையும் காலிற் பூட்டிய விலங்குகளையும் அறுத்துத், தம்மைக் கட்டியிருந்த தூண்களைப் பறித்துக், காதை அசையாமல் நிறுத்தி, வாலை முதுகின்மேல் நீட்டிக், துதிக்கையைத் தூக்கி வீரிட்டுக் கொண்டோடின. தீப்பற்றித் தோலுரிந்த யானைகள், இந்திரனது வெள்ளை யானை போன்றன. தீக்குப் பயந்து கடலில் விழும் எருமைகள் மேகங்கள் போல, மாதர்கள் அன்னங்கள் போன்றனர்.

வண்டுகள், செந்தாமரைக் காடென்று மயங்கித் தீச்சுவாலையில் வீழ்ந்து இறந்தன. தீயினால் வெந்த மேகத்தின் நடுவே சூரியன் துலங்கும் தோற்றம், உலைக்கரி மத்தியில் உருகித் திரண்ட பொற் பிழம்பின் நற்காட்சி போன்றது. தீக்குப் பயந்து கடலில் விழுந்த இராக்கதரின் செம்பட்ட மயிர் எங்கும் தோன்றலால், கடலே தீப்பற்றி எரிவது போன்றது.]

புகையின் மிகுதி

[கொழுநரைத் தேடிப் புகையுள்ளே புகுந்த அரக்கியர், மேகத்துள் மறையும் மின்னல்கள் போன்றனர். தங்கள் மாளிகைகள் தீப்பற்றி யெரியக் கண்டு தப்பிப் பிழைக்க விண்மீதே சென்ற 'இலவினும் சில முத்துள வெனும் நகை* இளையார்' ஆன இராட்சசிகள், புகையாற் சூழப்பட்டுத் திரை மத்தியில் உள்ள சித்திரப் பாவை போன்றனர். இலங்கை முழுதும் பற்றியெரியும் தீயின் புகை யெங்கும் பரவியதனால், அன்னங்களுக்கும் காகங்களுக்கும், பாற்கடலுக்கும் வேறு கடல்களுக்கும், வெள்ளி மலைக்கும் வேறு மலைகளுக்கும், வெள்ளை யானைக்கும் வேறு யானைகளுக்கும் வேற்றுமை தெரியமுடியா திருந்தது.]

இராவணன் தேவியருடன் இலங்கையை நீங்குதல்

[ஊர் முழுதையும் சுட்ட தீ, இராவணன் அரண்மனையையும் சுட்டெரிக்கத் தொடங்கவே, அவன் தேவிமார் முதலியோருடன் புட்பக விமானமேறி, இலங்கையை விட்டுப் போனான். ஆகாய கமனம் வல்ல மற்ற அரக்கர்களும் விண்மீது சென்று தீக்குச

* இலவம்பூ இதழுக்கும், முத்து பலலுக்கும் உவமை. நகை - பல.

தப்பினார்கள். அவ்வாறு தப்பிப்போகும் அறிவில்லாமையால், இலங்கை மாநகரம் இருந்த இடத்தே யிருந்து எரிந்து பாழாயிற்று.

தனக்கு எதிர்ப்பட்ட இராக்கதரை நோக்கி, இராவணன், 'இலங்கை எரியக் காரணம் என்ன?' என, அவர்கள், 'வாலைக் கொளுத்திய தீயைக்கொண்டு குரங்கு கொளுத்தியது இலங்கையை' என்றார்கள்.]

இலங்கை எரிந்ததற்கு இராவணன் இரங்கல்

130. இன்று புன்றொழிற் குரங்குதன் வலியினா லிலங்கை
நின்று வெந்துமா நீறெழு கின்றது செந்தீத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்றுபோர் வலியென விராவண னக்கான்

கொண்டுகூட்டு: 'புன் தொழில் குரங்கின் வலியினால், இன்று, இலங்கை நின்று வெந்து மா நீறு எழுகின்றது! செந்தீ (நகரைத்) தின்று தேக்கிடுகின்றது! தேவர்கள் சிரிப்பார்! (நமது) போர்வலி நன்று! நன்று!' என இராவணன் நக்கான்.

பொருள்: 'அற்பத் தொழிலுடைய குரங்கின் வலிமையினால், இன்று, இலங்கை, நின்று எரிந்து சாம்பல் பறக்கின்றது! நெருப்பு, இந்த நகரத்தை உண்டுவிட்டு ஏப்பமிடுகின்றது! (நமக்கு அடங்கியிருந்த) தேவர்கள் (அவருள் ஒருவனாகிய அக்கினி நம் மூரை எரித்தது கண்டு) சிரிப்பார்கள்! நமது போராண்மை நன்றா யிருக்கிறது! மிகவும் நன்றாயிருக்கிறது!' என்று இராவணன் (வெட்கச் சிரிப்புச்) சிரித்தான்.

புன்மை - அற்பம். நகுதல் - சிரித்தல். நக்கான் - சிரித்தான். (கங௦)

அனுமான் சீதையை வணங்கி விடைகொண்டு செல்லல்

[அனுமான், இனிச் சுடவேண்டிய இடமில்லை யென்று வாலைக் கடலிலே தோய்த்துத் தீயை அவித்தான். விண்வழியே சென்ற வித்தியாதரர் 'ஊரெங்கும் பரவிய தீ, சீதையின் சாலை இருக்கும் சோலைக்கு அருகேயும் செல்லவில்லை' யென்று சொல்லக் கேட்டு, அனுமான், மகிழ்ந்து சென்று, சீதை பாதங்களில் விழுந்து வணங்க, அவள், அவன் சேமமாயிருப்பது தெரிந்து,

கவலை நீங்கிக் களித்து வாழ்த்த, அவன், 'வணக்கம், விடை பெற்றுக்கொள்கின்றேன்' என்று கூறிச் சென்றான்.]

தீ அவிதல்

[*'இனி நாமிருந்தால், அனுமான் துணையில்லாமையால், நம்மை அரக்கர் பிடித்து வருத்துவர்' என்று அக்கினிதேவன் ஒளிந்துப் போயொழிந்தானென்னும்படி, இலங்கையை எரித்துக்கொண்டிருந்த தீ, அவிந்துபோயிற்று.]*

—•—

15. திருவடி தொழுத படலம் *

[அனுமான் (இலங்கையினின்று திரும்பிவந்து) இராமன் பாதங்களில் பணிந்ததைக் கூறுவது] †

அனுமான், இலங்கையினின்று புறப்பட்டு, வழியில் மைநாக பருவத ராசனைக் கண்டு, மகேந்திர மலைக்கு வரக்கண்ட வானரர் மகிழ்ச்சி பாராட்டல்

[*சீதையிடம் விடைகொண்டு சென்ற அனுமான், இலங்கைக்குப் பக்கத்தேயுள்ள ஒரு குன்றின்மீது, சூரியன் உதய கிரியை அடைகுவது போல, அடைந்து, தன் இயற்கைப் பெருவடிவுகொண்டு, விண்வழியே விரைந்து சென்று, மைநாக பருவத ராசனுக்கு, முன் இலங்கைக்குப் போகும்போது வாக்களித்திருந்தபடி அந்த மலையில் இறங்கி, விருந்தருந்தி, இலங்கையில் நிகழ்ந்த செய்திகளைக் கூறி, விடைபெற்றுப் புறப்பட்டு, தான் திரும்பி வருகையை விரும்பி எதிர்பார்த்துக்கொண்டு தெற்கு நோக்கிய வண்ணமாய் மகேந்திர மலைமேலிருந்த அங்கதனுதியார் முன்பு வந்து குதித்தான். அவன் முகப் பொலிவினால், சென்ற காரியம் சித்தியானதென்று தெரிந்துகொண்ட வானர வீரர்கள்,*

** இதற்கு மீட்சிப் படலமென்றும் பிரதி பேதமுண்டு: மீட்சி - (அனுமான் இலங்கையினின்று) மீளுதல் - திரும்புதல்.*

† இதன் பொருள், இராமனது திருவடிகளை அனுமான் தொழுத படலமென்று கூறுவதேயன்றித் 'திருவடி' என்னும் பெயருடைய அனுமான் இராமனைத் தொழுத படலமென்று கூறுவதும் உண்டு. கருடனைப் 'பெரிய திருவடி' யென்பதும் அனுமானைச் 'சிறிய திருவடி' யென்பதும் வைணவ சம்பிரதாயம்.

தமக்கு இரை தேடிக் கொண்டுவர வெளியே போயிருந்த தாயப் பறவை வரக் கண்ட குஞ்சுகள் போல, அவன் வரக் கண்டு மகிழ் கூர்ந்தார்கள். அந்த மகிழ்ச்சி மேலீட்டால், சிலர் ஆடினார்கள், சிலர் பாடினார்கள், சிலர் ஆர்த்தார்கள் *, சிலர் அவனை விழுங்குவார் போலப் பார்த்தார்கள். சிலர் தூக்கிச் சுமந்தார்கள். சிலர் இனிய கனிகளையும் தேனையும் தேடிக் கொண்டுவந்து எதிரே வைத்து, 'இவைகளை உண்டு இளைப்பாறுக. நீ வினைமுடித்து மீண்டுவந்தா யென்பது விளம்பாமலே விளங்குகின்றது. இப்போது உண்ணுக. உண்டபின் விவர முரைக்கலாம்' என்று உபசரித்தனர். சிலர் அவன் தலையிலும், முகத்திலும், தோளிலும், மார்பிலும், கையிலும், காலிலும் அம்பு முதலிய ஆயுதங்கள் செய்த காயங்களைக் கண்டு கசிந்துருகி உயிர்போவார் போன்று வருந்தினார்கள்.]

அனுமான், அங்கதனுதியரை வணங்கி, அவர்க ளெல்லாரையும் சீதை வாழ்த்தினு ளென, அவர்கள் தென்திசை நோக்கித் தெண்டனிடல்

[அனுமான், முதலில, இளவரசனான அங்கதனையும், பின்பு, ஆண்டில முதிர்ந்த சாம்பவானையும் வணங்கி, மற்றவர்களுக்கு உரிய மரியாதைகளை முறையாகச் செய்து, 'இங்கே உள்ளா ரெல்லாருக்கும் எம்பெருமாட்டி வாழ்த்துக் கூறினாள்' என்றான். எனவே, எல்லாரும் எழுந்து, சீதையிருந்த திக்குநோக்கித் தெண்டனசமர்ப்பித்தார்கள். பின்பு, அவர்கள், 'நீ சென்றதுதொட்டு வந்தது வரையும் நடந்த செயல்களை ஒன்றுமவிடாமல் உரைப்பாயாக' என, அனுமான் கூறுகின்றான்:]

அனுமான், இலங்கை நிகழ்ச்சிகளில் தன் வீரச் செயல்களைக் கூறாது மற்றவைகளைக் கூறல்

ஆண்டகை தேவி யுள்ளத் தருந்தவ மமையச் சொல்லிப்
பூண்டபே ரடையா ளங்கைக் கொண்டதும் புகன்று போரில்
நீண்டவா ளரக்க ரோடு நிகழ்ந்தது நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான் றன்றன் வென்றியை விளம்ப வெள்கி

கொண்டுகூட்டு: ஆணதகை (- அனுமான) தேவி உள்ளதது அருந தவம அமையச சொலலிப, பூணட பேர் அடையாளம் கைககொணடதும

---

* ஆரவாரித்தார்கள்.

புகனறு, தான் தன வென்றியை விளமப வெளகி, நீணட வாள அரகக ரோடு போரில நிகழநதது௩ம, நெருபபுச சிகதி மீணடதும விளமபான.

பொருள்: அனுமான, சீதையின் கறபொழுககத்தைச் செவவையாகச் சொலலி, சூளாமணியாகிய அடையாளததைக் கைக்கொணடதையும சொல்லித, தன வெறறியைத தான் சொலல. நாணியதனுல் இராக்கதரோடு நிசழநத (போரில, தான் வெனற) தையும இலஙகையில் நெருபபிட்டதையும் சொலலாதுவிட்டான.

ஆணடகை - வீரன, பெருமையிற சிறநதோன்: ஆண தகை (-தனமை) எனனும இரணடு சொறகள, ஒனறுசோநது, ஆணடகை யென ஒரு சொல லாகி, ஆணமை யென்னும பொருளுடையதாய ஆணமையுடையானே உணாததியது. ஆணடகை தேவி யெனபதறகு இராமன மனைவி யெனப பொருள கொணடால, முநதிய பாட்டில உளள 'மருததின மைநதன' (- வாயுவினமகன் - அனுமான) எழுவாயாம பூணட - (சீதை) அணிநத. வாள - கொடுமை: வாளரககா எனபதிறபோல, வாளரா என்பதிலும வாள கொடுமையை உணாததுதல் காணக.

ஆடவாகருத தவநெறி போல, மாதருககுக கறபுநெறி யிருததலபற்றிச் சீதை கறபைத தவ மெனறுன. அக கறபு, உடலைத தூயமையாக வைத திருததலனறி அதனினும மிகமிக அருமையான, உளளததைத தூய்மையாக வைததிருத்தலும உடைய தெனபது விளஙக 'உளளதது அருந்தவம' எனறுன

உள்ளககறபு அருமையினும் அருமையான தெனபது, 'எம்பெருமானே எனககு (ஒருவரனறு) ஐவாகள ஐமபுலனகள போலக கணவரா யிருககவே யும் (அமமட்டில திருபதி அடையாமல) இனனும வேறொருவன கணவ னுக வேணடுமெனறு என் மனம உருகாநிறகும் (ஆதலால என்போலப) பெணணுகப பிறநதவாக ளெலலாருககும, ஆடவரே யில்லாதிருநதா லலலா மல, நம்புதறகிலலை' யெனறு வசிட்டனது தருமபததினியான அருநததி யையே ஒதத சிறநத கறபுடையாளான திரௌபதி கிருட்டிணனை நோககிக கூறினு ளெனனும கருததுடைய பாரதப பாட்டினுல் விளஙகும. அப பாட்டு வருமாறு.

'ஐமபுலன களுமபோல ஐவரும பதிகள
ஆகவும, இனனுமவே றொருவன
எனபெருங கொழுநன ஆவதற குருகும,
இறைவனே! எனதுபே ரிதயம!
அமபுவி தனிறபெண பிறந்தவ ரெவாக்கும்,
ஆடவா இலாமையி னலலால,
நமபுதற் குளதோ?' எனறனன, வசிட்டன
நல அற மனைவியே அனையாள

— பழம் பொநந்து சருக்கம் உக.

இதனல், திரௌபதி கறபுடையளல்ல ளென்று கருதலாகாது. மாதாகள் கறபுநெறியில ஒழுகுதல போலத தவநெறியி லொழுகும் தவசிகள், தம மனம தமமைத தீயவழியிற செலலும்படி தூணடுமபோது அதறகு உடன்படாமல, தம மனததை அடககி ஆணடு தம தவத்தை நெறிபிறழாது கடைபோகக காததலபோலத திரௌபதி தன மனததினவழிச செல்லா ளாயக கறபைக காததாளெனபது, அவள கவிககூறறாக 'வசிட்டன நலலற மனைவியே அனையா' ளெனபபட்டதனுலும 'யான் உருகுகின்றேன்' எனறது 'என மனம் உருகும' எனறதனுலும் பெறபபடும. 'வேறொரு வன் என கணவனுக உருகும என் மனம்' எனற திரௌபதி, 'பெணணு கப் பிறநதவ ரெவரையும் நம்புதறகுளதோ?' எனறது, 'பெண பிறநதவ ரெவாக்கும நமபுதறகுளதோ?' எனறதனல, (மேலே 'என் மனம்' என்றது கொணடு 'நம்புதறகுளதோ' எனபதன்முன அவர்கள் மனம் என்பது வருவித்தறபாலதாய, அவள், 'என் மனம எனககு நமபுதற குரியதா யிலலாதது போலப, பெணணுகப பிறந்தவ ரெல்லாருககும் அவாகள மனம் அவாகளுககு நமபுதற குரியதா யிலலை' யென்று ளென்பதும், அதனல, மாதாகள மனததை அடககிக கறபைக காததலவேணடு மெனறு குறிபபிததா ளெனபதும பெறபபடும். இஃது, அகலிகை வெண்பாவி லுள்ள ஒரு பாட்டை நினைவுறுததுகினறது அது வருமாறு:

நலலா உளததினிலும நலலா ரலாஉளததும
பொலலா நினைவு புகல்இயலபே;—நலலா,
புகுநதவுடன அநநினைவைப போககிடுவா, பொலலா,
மிகுநதுறைய* விட்டிடுவா வேட்டு†

பாட பேதம்: செயத வெனறியை: வெனறியை உரைபப (கஙக)

வானரர், 'நீ போர் செய்ததைப் புண்களும், வென்றதை மீண்டமையும், இலங்கையை எரித்ததைப் புகையும் சொல்லத் தெரிந்தோம்' எனல்

பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்த தன்மை
உரைசெய வூதீயிட்ட தோங்கிரும் புகையே யோதக்
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர வுணர்ந்தேம் பின்ன ரென்னினிச் செய்து மென்றார்

கொண்டுகூட்டு: '(நீ சொல்லாமலே) பொருதமை புணணே சொலல, வெனறமை (நீ) போந்த தன்மை உரை செய, (நீ) ஊா தீ இட்டது ஓஙகு இரும புகையே ஓதக், கருதலா பெருமை தேவி மீணடிலாச செயலே காட்டத, தெரிதர உணாநதேம். பின்னா இனி என செயதும்?' என்றா.•

* உறைய - தஙக. † வேட்டு - விருமபி.

பொருள்: '(நீ இராக்கதரோடு போர செய்து வென்றதை யும் இலஙகையை எரித்ததையும கூறினாயில்லை. ஆயினும்.) நீ சொலலாமலே,—போர் செய்தா யெனபதை உன் உடம்பிலுள்ள புண்கள் புகலுதலாலும், செயமடைந்தா யென்பதை நீ திரும்பி(க் குதூகலமாக) வநதது கூறுதலாலும், இலஙகையை யெரித்தா யென்பதை (எரிபட்ட இலங்கையினின்று)உயாந்தெழுந்த பெரும் புகை (தூரத்துள்ள எங்களுக்குத தோன்றிச) சொல்லியதனு லும், எதிரிகளது பெருமையைச சீதாதேவி திரும்பி வராதது செப்புதலாலும தெளிவாகத் தெரிநதுகொண்டோம. இனிமேல் யாது செய்யக்கடவேம்? (அதனை இசைப்பாயாக.)' என்று (வானர வீரர்) கூறினார்கள்.

பொருதல் - போர செய்தல். போந்த - வந்த. இருமை - பெருமை. இரும புகை - பெரும் புகை கருதலா - (உடனபாடாக) எணணுதவா - (எதிரிடையாக எணணும) பகைவா. மீணடிலா - திரும்பாத தெரிதர - தெரிய: தர, துணைவினை. செய்தும - செயவோம.

புணணே, புகையே, செயலே என்பவறறோடு இயைய, போந்தமை என்பதன்பின் ஏகாரம் வருவிததுககொள்க. அந்த ஏகாரம், செய்யு ளாத லால் தொககது. நானகு ஏகாரஙகளும பிரிநிலை; 'நீ சொலலாமலே' எனற பொருளை நயமபடக குறிததவை. பெருமை, கருதலர்களுடைய தொகை மிகுதியையும் வலிமை மிகுதியையும உணாத்திநினறது. சொல்ல, உரை செய, ஓத எனபவறறுககுப பின அவறறின தொடாபாக வநத, (இயலபாகக காண்பிகக எனனும் பொருளுடைய) காட்ட என்பதைச் (செயறகையாகச்) சொல்ல என்று தெளிவாகப பொருளபடும்படி பிரயோகிததுக, கவி மோனை யமைததிருபபது கவனிககததககது. வானரவீர ரெலலாருககுமாக, அவருள ஒருவா கூறியதை அவாக ளெலலாரும் கூறியதாகக கூறியிருபபது, சொலலாமலே தெரியககூடியதாம.

இந்தப பாட்டு வாசாலக மென்னும பேசசுததிறமையும் ஊகித்து உண ரும வல்லமையும் ஒருஙகு அமையசசெயத சமதகாரமான கவிகளுள் ஒனறும். (கஙஉ)

வானரர் புறப்பட்டு மதுவனம் அடைந்து தேனுண்டு களித்து விளையாடல்

[அநுமான், 'இராமபிரானுக்குச சீதாதேவி சேமமாயிருப்ப தைச சீககிரமாகத தெரிவித்து அவனது கவலையை அகற்ற

வேண்டும்' என, எல்லாரும் ஒருமுகமாக எழுந்து புறப்பட்டுக் குறித்த இலக்குத் தப்பாமல் வேகமாகச் செல்லும் இராமபாணம் போல, விரைந்துசென்று, உச்சிநேரத்தில் கிட்கிந்தைக்குக் கிட்ட இருந்த மதுவனத்தை அடைந்தார்கள். அங்கே, வானரத் தலைவர்கள், அனுமானை நோக்கி, 'இலங்கைக்குச் சென்ற நீ சித்தி பெற்றுத் திரும்பவேண்டுமே யென்ற கவலையினால் நாங்கள் நெடு நாள் ஊணுறக்கமின்றி வருந்தியிருந்தோம். நீ சிறிதுகாலம் வாராது தாமதித்திருந்தாயானால் செத்தேபோகவிருந்த எங்களைச் சாவாமற் காத்தாய். அப்போது காத்ததுபோல, இப்போது யாங்கள் பசியால் இறவாமற் காப்பாயாக' என்றார்கள். அவன் அவர்களைக் கூட்டிக்கொண்டு அங்கதனிடம் சென்றான். எல்லாத் தலைவர்களும், அங்கதனைக் கைகூப்பித் தொழுது 'உன் சேனை தாகத்தால் தவிக்கின்றது. இந்த வனத்தில் உள்ள தேன் கூடுகளை அவர்களுக்கு அளிக்கவேண்டும்' என்று கூற, அதற்கு அவன் இசைந்தான்.

உடனே, வானரர்கள், தேன்கூடுகளினூடு, ஒருவருக்குமுன் ஒருவர் ஓடி, அக் கூடுகள் தொங்கும் கொம்புகளை ஒடித்து, தேனைத் தெவிட்ட உண்டு களிப்பாராயினார். ஒருவர் கைக்கொள்ள முயன்ற தேனை ஒருவர் கைக்கொண்டு ஓடுவர். ஒருவர் கையி லெடுத்து வாய்க்குக் கொண்டுபோகுந் தேனை ஒருவர் இடையே புகுந்து பிடுங்கிக்கொள்வர். ஒருவர்மே லொருவர் விழுவர், எறு வர். ஒருவரை யொருவர் தழுவுவர். இவ்வாறாக எல்லாரும் இனிது களித்து விளையாடிக்கொண்டிருந்தனர்.]

மதுவனத்துக் காவலாளர் தலைவன் ததிமுகனை அங்கதன் இரத்தம் கக்கக் குத்திச் சுக்கிரீவனிடம் அனுப்புதல்

[அப்போது, அந்த மதுவனத்துக் காவலாளர்கள் கண்டு சீறிச, 'சுக்கிரீவாக்கினையை மீறி உங்கள் உயிருக்கு முடிவு தேடிக் கொண்டீர்கள்' என்று கூறித், தங்கள் தலைவன் ததிமுகனிடம் சென்று, 'நாம் காக்கும் மதுவனத்தில் அங்கதன் சேனை அவன் அனுமதிபெற்றுப் புகுந்து, எதிரிகளும் செய்யக் கூசும அழிவைச் செய்து விட்டது' என்று தெரிவித்தார்கள். அவன், 'அப்பன் * பட்டபாடு மகனுக்குத் † தெரியாதுபோலும்!' என்று சொல்லித்

* அப்பன் - வாலி. † மகன் - அங்கதன்.

தனது படையுடன் மதுவனத்துள்ளே புகுந்தான். புகவே, அங்கே களித்துக்கொண்டிருந்த வானரர், கண்டு பயந்து, அங்கத னிடம் போய், அபயமிட்டு அடியில் விழுந்தார்கள். ததிமுகன், அங்கத னெதிரே சென்று, அவன்மீது ஒரு பாறையைப் பேர்த் தெடுத்து வீசியெறிய, அவன் அதனைப் புறங்கையால் விலக்கித் ததிமுகனைப் பிடித்து இரத்தங் கக்கக் குத்திச், 'சுக்கிரீவனிடம் போய்ச் சொல்' என்று சொல்லிப் போகவிட்டான். அங்கதன் சேனை வீரர், தங்கள் தலைவர்களுக்கு இனிய கனிகளும் தேனுங் கொண்டுவந்து கொடுத்து உண்பித்து உவகையோடிருந்தார்கள். இது நிற்க.]

தெற்குத் தவிர மற்றைத் திசைகளுக்குச் சென்றவர்கள் திரும்பிவந்து சீதையைக் காணவில்லை யென்று தெரிவித்தல்

[சுக்கிரீவன், சீதையைத் தேடும்படி வானர சேனைகளை நாலு திசைகளுக்கும் அனுப்பியபின், கிட்கிந்தை மலையில் இராமனுக்குத் தேறுதல் வார்த்தைகள் கூறிக்கொண்டிருந்தான். தெற்குத்திசை தவிர மற்றைத் திசைகளுக்குச் சென்றவர்கள், திரும்பிவந்து, சீதையைக் காணவில்லை யென்று இராம சுக்கிரீவருக்குத் தெரிவித் தார்கள்.]

சீதை பிரிந்த துன்பந் தாங்கமாட்டாமல் இராமன் பலமுறை செத்துப் பிழைப்பான் போலல்

133. காரவரை யிருந்தவக் கதிரின் காதலன்
சீரிய சொற்களாற் றெருட்டச் செங்கணான்
ஆருயி ராயிர முடைய னாமெனச்
சோர்தோறுஞ் சோர்தோறு முயிர்த்துத் தோன்றினான்

கொண்டுகூட்டு: செங்கணான் (- இராமன்) சோர்தோறும் சோர் தோறும், கார் வரை இருந்த அக் கதிரின் காதலன் சீரிய சொற்களால் தெருட்ட, ஆர் உயிர் ஆயிரம் உடையன் ஆம் என, உயிர்த்துத் தோன்றினான்.

பொருள்: இராமன் (சீதை பிரிவாற்றாமையால் உயிர் நீங்கி னான் போல) மயங்கி மூர்ச்சிக்குந்தோறும், சுக்கிரீவன் சிறந்த தேறுதல் வார்த்தைகளால் தெளிவிக்கப், (பார்த்தோர், அவன் பல முறை உயிர்நீங்கி மீள்கின்றானதலால்) பல உயிர்களுடையான் போலு மென்று சொல்லும்படி, உயிர்பெற்று எழுந்தான்.

கார் - கருமை, மேகம். வரை - மலை. கதிர் - சூரியன். காதலன் - மகன். சீரிய - சிறந்த. தெருட்டல் - தெளிவித்தல். செங்க(ண்)ணன் - சிவந்த கண்களையுடையவன், இராமன். ஆம் என - போலும் என்று சொல்லும்படி. சோர்தல் - மூர்ச்சித்தல். உயிர்த்தல் - உயிர்பெற்றெழுதல்.

இராமன் பலமுறை மயங்கித் தெளிந்ததைப் பலமுறை செத்துப் பிழைத்ததாகவும், இறந்த உயிர் திரும்பாதாதலால் அவன் பலமுறையிறந்து பிழைத்தற்கு அவனுக்குப் பல உயிருண்டு போலுமென்பதாகவும் கூறிய நயம் கொண்டாடத்தக்கது.

பாட பேதம்: *கார்வரை இருந்தனன்.* (௧௩௩)

சீதையை அனுமான் காண்பா னெனும் நம்பிக்கையினுல் இராமன் இறவா திருத்தல்

134. தண்டலி னெடுந்திசை மூன்றுந் தாயினார்
கண்டிலர் மடந்தையை யென்னுங் கட்டுரை
உண்டுயி ரகத்தென வொறுக்க வும்முளன்
திண்டிற லனுமனை நினையுஞ் சிந்தையான்

கொண்டுகூட்டு: *தண்டல் இல் நெடும் திசை மூன்றும் தாயினார் மடந்தையைக் கண்டிலர் என்னும் கட்டுரை ஒறுக்கவும், (இராமன்) திண் திறல் அனுமனை நினையும் சிந்தையான்(ஆய), அகத்து உயிர் உண்டு என உளன்.*

பொருள்: *(கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய) மூன்று திக்குக்களிலும் சென்ற வானரர் சீதையைக் காணவில்லையென்று சொன்ன சொல் வருத்தஞ்செய்யாநிற்கவும், இராமன், அனுமா(ன் சீதையைக் காணக்கூடியவ னென்று அவ)னை நினையும் மனமுடையவனாய், (அந் நினைவினால் நம்பிக்கைகொண்டு உயிரை விடாதிருந்ததனால்) உயிர் (போய்விடவில்லை) உள்ளே யிருக்கிறதென்று (சொல்லும்படியான அளமாத்திரையே உயிருடையானாக) இருக்கின்றான்.*

தண்டுதல் - தடைப்படுதல். நெடுமை - பெருமை. தாயினார் - தாவினார் (விரைந்து சென்றனரென்றபடி). மடந்தை - பெண் - சீதை. கட்டுரை - உறுதிச்சொல். ஒறுத்தல் - வருத்துதல். திண்மை - வலிமை. திறல் - வலிமை. திண்திறல் - மிக்க வலிமை. 'அகத்து (- உள்ளே) உயிர் உண்டு'

என்றபாலது, செய்யுளாதலால 'உண்டு உயிர் அகத்து' என அடி தலைமாறி நின்றது. 'ஒறுக்கவும் உயிர் உண்டு (- உளது) என' என்று கூட்டாது 'உயிர் (- உயிரை) உணடென (- உணடாலென - உண்டாற்போல) ஒறுக்கவும்' என்று கூட்டலுமாம். (கஉச)

தென்றிசை சென்றார் திரும்பாமை, மரணத்தாலோ, மற்றேதனுலோ என, இராமன் வினவல்

[இராமன், துன்பம் மேலிட்ச் சுக்கிரீவனை நோக்கிச், 'சீதையைத் தேடச்செய்த முயற்சி பயனபடவில்லை. அவளைத் தேடித் தென்றிசைக்குச் சென்றவர்கள் திரும்பவில்லை. அவர்கள் திரும்புதற்குக் குறித்த கால எல்லை கடந்துவிட்டது. அவர்கள் செத்துப் போனார்களோ? சாகவில்லையானால், அவர்களுக்கு வேறு ஆபத்து யாது நேர்ந்ததோ? "அவள் மாண்டனள். மாண்ட வார்த்தையை மீண்டுபோய்க் கூறுதலினும் நாமும் மாண்டொழிதல் நன்று" என்று மாண்டார்களோ? இராக்கதரை எதிர்த்துப் பொருது இறந்து வீர சுவர்க்கமடைந்தார்களோ? இறவாராய்ச் சிறைப் படுத்தப்பட்டார்களோ? தவணை கழிந்தபின் திரும்பிப் போய்த் தண்டனையடைதலினும் தவஞ்செய்தல் சிறந்ததென்று தவஞ் செய்கின்றார்களோ? அவர்கள் நிலைமையைச் சொல்லு' என்றான்.]

அங்கதனுதியர் மதுவனத்தை அழிக்கின்றனரெனத் ததிமுகன் சுக்கிரீவனிடம் சொல்லல்

[அப்போது, ததிமுகன், தலையினின்று இரத்தம் வடிய வந்து, சுக்கிரீவன் காலில் விழுந்து, தொழுது எழுந்து, கூப்பிய கையனாய், 'மதுவனம் முழுதும் இன்றே அழிந்திடும்' என, 'அழிப்பார் யார்?' என, 'நீலனும், குமுதனும், சாம்பவானும் சேனையோடு வந்து மதுவனத்தை அழித்தலைக் கண்டு தடுத்த நம் சேனையை, அங்கதன் அப்புறப்படுத்தி உன்னை இகழ்ந்து பேச, யான் பொறுக்காமல் ஒரு பாறையை எறிய, அதனை அவன் புறங் கையால் அகற்றிவிட்டு, என்னைப் பற்றி இரத்தங் கக்கக் குத்திச், "சுக்கிரீவனிடம் போய்ச் சொல்" என்று சொன்னான்' என்றான்.]

சீதை, கற்புடையளாய்ச் சேமமா யிருக்கிறா ளென்று சுக்கிரீவன் இராமனுக்குச் சொல்லுதல்

[உடனே, சுக்கிரீவன், எழுந்துநின்று, இராமனைக் கும்பிட்டுக், 'கற்புடையளாய்ச் சேமமாய்ச் சீதாதேவி யிருக்கும் நற்செய்தியை அவர்கள் நடக்கை அறிவிக்கின்றது. தேவியைக் கண்டவர்கள் களிப்பினால் மதுவனத்தை அழித்துத் தேனைக் குடித்தார்கள்' என்றான். பின்பு, ததிமுகனை நோக்கி, 'உனக்கு ஓர் உறுதிச் சொல் உரைக்கின்றேன்: கேள். அங்கதன், அற்பத் தொழில் செய்பவனல்லன். தேவியைத் தேடிக் கண்டுபிடிப்பதாகிய செயற்கரிய செயலைச் சித்திபெறச் செய்தவர்கள் திறத்தில், நாம் அருமை பாராட்டக் கடவேம். அன்றியும், அங்கதன் அரசனாதலால், அவனோடு மாறுபடலாகாது. அவனைச் சரணடைவாயாக' என்றான்.]

சுக்கிரீவன் ஆணைப்படி அங்கதனைத் ததிமுகன் சரணடைதல்

[ததிமுகன், சுக்கிரீவனை வணங்கித், 'திருவுளப்படி செய்கின்றேன்' என்று விடைபெற்றுச் சென்று மதுவனத்தை அடைந்தான். அவனைக் கண்ட அங்கதன், 'இன்னும் எதிர்ப்பானானால், கொன்றிடுவேன்' என்று நினைந்தான். ததிமுகன் தூரத்தே வரும்போதே, 'தொண்டன்' என்று சொல்லித் தொழுது கொண்டு வந்து, 'வெட்டினாற்போல் அடியேன் செய்த குற்றத்தை மன்னித்தருள்க' என்று அடியற்ற மரம்போல விழுந்து வணங்க, அங்கதன், குனிந்து, அவனை வாரியெடுத்து மார்புறத் தழுவி, 'நான் செய்த குற்றத்தைப் பொறுப்பாயாக' என்று உபசார வார்த்தை கூறினான்.]

அனுமான், இராமனுக்குச் சீதை சேமம் தெரிவிக்கச் செல்லல்

['இன்னும் இராமபிரான் துன்புறுவண்ணம் நீர் முன்னாகச் சென்று "சீதாதேவி சேமமா யிருக்கின்றாள்" என்று தெரிவிப்பீராக' என்று எல்லாரும் கூற அனுமான் போனான்.]

அங்கதனாதியர் இராம சுக்கிரீவரைக் காணச் செல்லல்

[ததிமுகன்மீது கொண்ட கோபந் தணிந்த அங்கதன், வெயிலின் தாபந் தணிந்த மாலை வேளையில், 'நாம் இராம சுக்கிரீவரைக் காணப் புறப்படுவோம்' என, எல்லாரும் போகலுற்றார்கள்.]

அனுமான் வருதலை இராமன் காணுதல்

[இராமன், ‘தென்திசை நின்று திரும்பிய சேனைவீரர் “சீதையைக் கண்டோம்” மெய்யோ, பொய்யோ, வேறு கூறுவரோ?’ என்று சுக்கிரீவனை வினவிய அதே சமயத்தில், அனுமான், தெற்கே சூரியன் உதயமாவதுபோலத் தோன்றினான். அவனை இராமன் அன்புகூர நன்கு நோக்கினான்.]

அனுமான், இராமனை வணங்காமல், சீதை(யிருந்த திசை)யை நோக்கி வணங்குதல்

135. எய்தின னனுமனு மெய்தி யெந்தைதன்
மொய்கழற் றொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகந் தழீஇ நெடி திறைஞ்சி வைகினான்

கொண்டுகூட்டு: அனுமன் (இராமனை) எய்தினன், எய்தி எந்தை தன் மொய்கழல் தொழுகிலன் (ஆய்), முளரி நீங்கிய தைய(லிருந்த தென் எல்)லை நோக்கி (வணங்கி)ய தலையன் கையினன் (ஆய்), வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி வைகினான்.

பொருள்: அனுமான், (இராமனிடம்) வந்துசேர்ந்து, இராமன் பாதங்களை வணங்கானாய்ச், சீதை(யிருந்த திசை)யை நோக்கி (வணங்கி)ய தலையும் கையும் உடையவனாய்ப், பூமிபடிய விழுந்து நெடுஞ்சாணகிடையாய் வணங்கிக்கிடந்தான்.

எய்தல் - அடைதல். எந்தை - என் தந்தை: கவிகூற்றாய் இராமனைக் குறித்தது. மொய் - வலி. கழல் - கால். மொய்க் கழலென்றபாலது எதுகை நோக்கி மொய்கழலென நின்றது. முளரி - தாமரை. தழீஇ - தழுவி. வையகம் தழீஇ - பூமியிற் படிய விழுந்து நெடிது இறைஞ்சுதல் - சாட்டாங்கமாக நமஸ்கரித்தல் வைகுதல் - தங்குதல், வணங்கியவன் உடனே எழுந்திடாமல் சிறிதுநேரம் வணங்கியபடியே கிடந்தானென்பது குறித்தது.

நான்கு திசைகளுள் வடக்கொழிந்த முத்திசைகளில் எத்திசைமுகமாகவோ வீற்றிருந்து, அனுமான் தெற்கேயிருந்து வருகையை எதிர்பார்த்து, அத்திசையை நோக்கியவண்ணமா யிருந்த இராமனைக் காணவந்த அனுமான், கண்டபோது, அவனைப் பிரிந்திருந்த சீதையை நினைந்து, அந்நினைவின் ஆவேசத்தினால், அவன் காலில் விழுந்து வணங்குவதை மறந்து,

அவள்பால் வைத்த பத்தி மேலிட்ட பரவசமாகி, 'இராமனுக்கு முதுகு காட்டுகிறேன்' என்ற எண்ணமில்லாமல், வடக்குமுகமாக வந்தவன் தெற்கு முகமாகத் திரும்பித் தலைவணங்கிக் கைகூப்பி, 'இறைவனான இராமனுக்கு எதிரே காலநீட்டும் அத்தியந்த அபராதஞ் செய்கிறேன்' என்று பிரஞ்ஞை சிறிது மின்றிச், சீதாத்தியானபரனாய்ப், பூமியில் அடியற்ற மரம்போல விழுந்து சாஷ்டாங்கமாக வணங்கிக் கிடந்தான் என்பது கருத்து. அனுமான் இராமனை வணங்காமல் சீதையை அவளிருந்த திசைநோக்கி வணங்கியது, அவள் கற்பு நீங்காமல் சேமமாயிருக்கிறா ளென்பதைச் சொல்லினால் உணர்த்துமுன் குறிப்பினா லுணர்த்தக் கருதி யென்று கூறுவா ருளர். அவன் அவ்வாறு கருதவில்லையாயினும், கருதினாற்போலவே, அவனது அவசரச் செயல்கள் சீதையின் கற்பையும் சேமத்தையும் தெரிவித்தமை தெளிவாம்.

எல்லாம் அறியவல்ல இராமன், அனுமான் தனக்கு நேரே கால் நீட்டித் தன் பத்தினியை வணங்குவது தன்னை நேராக வணங்குதலினும் சிறந்ததென்றும் அனுமானது உடம்பின் அபசாரச் செயல் அவனது உள்ளத்தின் உபசாரச் செயலைச் சிறப்பித்த தென்றும் ஊகித்துணர்ந்தா னென்பது ஆராய்ந்து அறியத்தக்கது. அதிமேதாவியான அனுமான், தான், அறியாமல் இராமனுக்குச் செய்த அபசாரம், இராமபத்தி காரணமாக ஏற்பட்ட சீதாபத்தி மேலீட்டால் நிகழ்ந்ததென் றுணர்ந்தபோது, தான் வேறு சீதை வேறென் றெண்ணாத இராமன் சீதைக்குச் செய்த வணக்கம் தனக்குச் செய்ததெனக் கொண்டா னென்று தெரிந்தா னென்பதும் உய்த்துணரத் தக்கது. அதனால், அனுமான், சீதையை வணங்கியெழுந்த பின், இராமனுக்குச் செய்யத் தவறிய வணக்கத்தைச் செய்தா னென்று கூறப்படவில்லை.

பாட பேதம்: எய்தி ஏந்தல்: இறைஞ்சி வாழ்த்தினன். (கங௫)

அனுமான் செயல்களால், சீதை சேமமாயிருத்தலையும் கற்புடைமையையும் இராமன் ஊகித்துணர்தல்

136. திண்டிற லவன்செய றேரிய நோக்கினன்
வண்டுறை யோதியும் வலியண் மாறிவன்
கண்டது முண்டவள் கற்பு நன்றெனக்
கொண்டனன் குறிப்பினு லுணருங் கொள்கையான்

கொண்டுகூட்டு: குறிப்பினால் உணரும் கொள்கையான் (இராமன்) திண் திறல் அவன் (அனுமான்) செயல் தெரிய நோக்கினன்: (நோக்கி,) 'வண்டு உறை ஓதி (சீதை)யும் வலியள், இவன் அவளைக் கண்டதும் உண்டு; அவள் கற்பு நன்று' எனக் கொண்டனன்.

பொருள்: (முகம முதலிய அவயவங்களின் தோறறரு செயல்களாகிய) குறிப்புககளினுல (உளளதகினுள்ளே நிகழ்வ தைத்) தெரிநதுகொளளும் திறமையுடைய இராமன, அனுமா னுடைய (வழககமில்லாத அசாதாரணமான) செயகையை நன ருகக் கவனிததுப பாரததான: (பாரத்து,) 'சீதை சேமமா யிருககிருள்; இவன அவளைக கண்டதுணடு, அவள கறபுநிலை கலங்கவிலலை' யென்று தெரிநதுகொண்டான்.

திணமை - வலிமை. திறல - வலிமை. திணதிறல - மிகக வலிமை உறைதல - தஙகுதல. ஓதி - கூநதல. வணடு உறை ஓதி - வணடு தங கும கூநதல (உடையாள) - சீதை. வலியள - திடமாயுளளவள - (தேக) பலம குறையாமல (சுகமாக) இருககினறவள. கொளகை, கோடபு எனபதுபோல வலிமை யெனனும திறமையை உணாததினறது.

சீதை இறவாது சேமமாயிருநதாலனறி அவளைக காணககூடாமை பறறி 'வலியள' என முதலாவதாகவும, அவளைக கணடாலனறி அவள கறபுநிலை கலஙகாதவளோ கலஙகினவளோ வெனபது அறியககூடாமை யினுல அவளை அனுமான் கணடதைக 'கணடதும உணடு' என இரணடாவ தாகவும், அவளை வணஙகுதலால அவன அவள கறபின தூயமையை அறிந ததைக 'கறபும நனறு' என மூனருவதாகவும இராமன ஊகிததுணாநதா னென, அவனுடைய எணண நிகழசசிகளை நிகழநத முறைபபடியே கவி கூறியிருததல கவனிககததககது.

பாட பேதம்: வணடறல ஓதியும். (கங௬)

அனுமான், 'கற்பலங்காரியாய்ச் சேமமாயிருக்கும்
சீதையைக் கண்டேன்' எனல்

137. கண்டனன் கறபினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை யலைகட லிலங்கைத் தென்னகா
அண்டர்நா யகவினித் துறத்தி யையமும்
பண்டுள துயருமென் றனுமன் பன்னுவான்

கொண்டுகூட்டு: அனுமன் (இராமனை நோககி,) 'அணடா நாயக! கறபினுககு அணி(யான சீதை)யைத தெள் திரை அலை கடல இலஙகைத தென நகரில (என்) கணகளால கணடனன. பணடு உள ஐயமும துயரும இனித துறததி!' எனறு (பின்னும்) பன்னுவான.

பொருள்: அனுமான், (இராமனை நோக்கி,) 'தெய்வ நாயகனே! கற்பலங்காரி(யாகவுள்ள சீதாபிராட்டி)யை இலங்கையிலே என் கண்களால் பிரத்தியட்சமாகக் கண்டேன். முன் (அவள் உயிரோடிருக்கிறாளோ, உயிரோடிருந்தாலும் கற்புடனிருக்கிறாளோ, என்றெண்ணி) இருந்த சந்தேகத்தையும் அதனால் உண்டாயிருந்த துன்பத்தையும் விட்டுவிடுவாயாக!' என்று கூறிப் பின்னுங் கூறுகின்றான்:

அணி - ஆபரணம். தெள்திரை அலைகடல் இலங்கை - தெளிவான அலைகள் அலைகின்ற கடல் (சூழ்ந்த) இலங்கை. தென் - தெற்கு, அழகு. தென் நகர் - தெற்கேயுள்ள நகரம்; அழகுடைய நகரம். துறத்தி - துறப்பாய் - நீக்குவாய்.

இராவணன் தனக்கு இணங்கும்படி வணங்கியபோது, சீதை கொடுங் கோபங்கொண்டு கடுஞ்சொற் கூறியதையும், அவள் தற்கொலைசெய்யப் புகுந்ததையும் அனுமான் கண்ணாரக் கண்டதை மனத்துட்கொண்டு, தான் சீதை கற்புடைமையை அறிந்தது வேறொருவர் சொல்லக் கேட்டதனாலன்று நேராகக் கண்டதனா லென்று இராமனுக்குத் தெரிவிக்கக் கருதிக், 'கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்' என்றான்.

கூசி ஆவி குலைவுறு வாளையும்
ஆசை யால்உயிர் ஆசழி வானையும்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்
ஊசலாடி உளையும் உளத்தினன் *

என்பதைக் காண்க.

'"பிராட்டியை" என்று முதலிற் கூறினால், அவளது நிலைமை என்னாயிற் றென்று கூறுவாரோ வென்னுஞ் சங்கையினால் இராமனுக்கு மிக்க துன்பமுளதாகக்கூடு மெனக் கருதி, "கண்டனன்" என முதலிற் கூறினன் அனுமான், ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் "த்ருஷ்டா ஸீதா" என வருதலுங் காண்க. "கண்டனன்" என்றதையடுத்துக் "கற்பினுக்கணி" என்று கூறியதன் காரணம் தானே விளங்கும், அவள் கற்பிற் சிறவாதிருப்பின், அவளைக் கண்டது பயன்படாமை யுணர்க....... ...."கற்பினுக் கணியைக் கண்டே" னென்றது—"அந்தச் சீதாபிராட்டி உன்னைப் பிரிந்து சிறைப்பட்டிருக்கின்ற அங்குக் கண்களினின்று நீரைத் தாரைதாரையாகப் பெருக்கிக்கொண்டிருப்பதனால், அவள் கற்பினுக் கணியாவ ளென்பதை யுணர்ந்தே" னென்றவாறு: கற்புக் கெட்டிருப்பின் துயர்க்குக் காரணமில்லை

* இந்நூல் 44-ம் பாட்டு.

யாதலால, இவவாறு கூறியது: "கலஙகுதேண டிரையிற ருய கணணி னீாக கடலிற கணடேன" என மேலவருவதும, "அமுவ தலைதய லொன றுஞ செயகுவ தறியாள" எனறதுங காணக.'

பாட பேதம்: இனித தவிாதி. (கரு௭)

சீதை இராமன் தேவியாகவும், தசரதன் மருமகளாகவும், சனகன் மகளாகவும் இருந்தற்கு ஏற்ற தகுதி மிகுதியாக உடையா ளெனல்

உன்பெருந தேவி யென்னு முரிமைக்கு முன்னைப் பெற்ற
மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கு மிதிலை மன்னன
தன்பெருந தனயை யென்னுந் தகைமைக்குந் தலைமை சான்ருள
என்பெருந் தெய்வ மையா வின்னமுங கேட்டி யென்ருன்

கொண்டுகூட்டு: 'ஐயா! என பெரும தெயவம (அனை பிராட்டி,) உன பெரும தேவி எனனும உரிமைககும், உனனைப பெறற மன பெரு மருகி எனனும வாயமைககும, மிதிலை மனனன தன பெரும தனயை எனனும தகைமைககும் (ஏறற) தலைமை சானருள. இனனமும கேட்டி' எனருன.

பொருள்: 'சுவாமி, எனககுச சிறந்த தெய்வமான சீதா பிராட்டி, உனது கோபபெருநதேவி யெனற உரிமைபபாட்டுக் கும, தசரத சககரவாத்திககு முதல் மருமகள என்ற பிரபல வாாத்தைக்கும், சனக மகாராசனது பிரதான புததிரி யெனனும தகுதிக்கும ஏறற சிறப்பு மிகுநதவள். (அவள பெருமைக குணங கள் இவவளவில் அடஙகவிலலை) இனனமும கேட்டாயாக' எனறு (அனுமான தொடாந்து) கூறுகினருன.

மன - அரசன. மருகி - மருமகள. வாயமை - வாாததை. தனயை - மகள. தகைமை - தகுதி. தலைமை - முதனமை - மேனமை - சிறபபு. சானருள - மிகுநதாள. கேட்டி - கேட்பாயாக.

சீதை, மனைவியாகவும, மருமகளாகவும, மகளாகவும உளள நிலைகளில ஒபபு ஒருவருமினறி உயாவற உயாநது முதனமையுறறு விளஙகுகினருளென்பது கருதது.

இநதக கவியில், சீதை, தனக்கு உறவினரான உயர் பெருந்தகையாளாக குத தான் உறவினளா யிருததறகுச் சிறநத தகுதியைக, கடுஞ சோதனைக

* வை. மு. கோ.

குளளான காலததில கறபுநிலை கலஙகாதிருநததனால், மிகுதியாகப பெறறா ளெனபது கூறபபட்டது. அடுதத இரணடு கவிகளில, அவள தனககும தனககு உரியோரான மேலோாககும கீழோாககும, தன கறபுநிலை காரண மான சிறநத பெருமையை அளிததா ளெனபது கூறபபடுகினறது. (கஙஅ)

'சீதை, தனக்குத் தன்னையும், உனக்கு உன்னையும், எனக்கு என்னையும் தவிர வேறு ஒப்பாரிலராகச் செய்தாள்' எனல்

பொன்னல தில்லைப் பொன்னை யொப்பெனப் பொறையி னின்றாள்
தன்னல தில்லைத தன்னை யொப்பெனத் தனக்கு வந்த
நின்னல தில்லை நின்னை யொப்பென நினக்கு நேர்ந்தாள்
என்னல தில்லை யென்னை யொப்பென வெனக்கு மீநதாள

கொண்டுகூட்டு: '(சீதாதேவி,) பொனனை ஒபபு பொன அலது இலலை எனத, தனனை ஒபபு தன அலது இல்லை எனப பொறையில நினறாள, தனககு(க கொழுநனாக) வநத நினனை ஒபபு நின அலது இலலை என நினககு(ப பிரசிததியை) நோநதாள; எனனை ஒபபு என அலது இலலை என எனககு (வரம) ஈநதாள.

பொருள்: 'சீதாதேவி, பொன்னுக்கு ஒப்பான பொருள பொன்னையலலது வேறிலலை யென்பதுபோலத, தனக்கு ஒப பாவார் தன்னையல்லது வேறொருவரு மிலலை யென்னும்படி பொறுமைக குணததில் நிலைத்துநினறாள; தனக்கு(க் கொழுந னாக) வாயதத உனககு ஒப்பாவாா உன்னையல்லது வேறொருவரு மில்லை யெனனுமபடி உனக்கு(ப் பிரசிததியை)க கொடுததாள; (தொணடனான) என்னை ஒபபவர் என்னையல்லது வேறொருவரு மிலலை யென்னுமபடி எனககும (வரம) அருளினாள்.

பொறை - பொறுமை. நோதல - கொடுத்தல.

இராமனைப பிரிநது அடைந்த சொலலறகரிய துன்பஙகளைச சீதை ஆச்சரியகரமாகப பொறுததலைக கருததுட்கொணடு, இஙகே, அனுமான கூறறாகப 'பொறையில நின்றாள' எனற கமபா, முன, கவிககூறறாகச சீதையை 'உமையாா ளொககும மஙகையாா உசசிக காம்பைககும கமையாள்'* எனறு கூறியிருபபதும, இனி, இப படலததில 'விறபெருந தடநதோள' எனற 140-ம பாட்டில விதநதெடுததுக கூறும் சீதையின்

* க. ரா. சா. பாலகாணடம - 90. கமை - பொறுமை.

சிறந்த குணங்களுள் நடுநாயகமாக அவளது 'இரும்பொறை'*யைக் கூறு வதும் கவனிக்கத்தக்கவை.

கம்பர் சீதையின் குணங்களுள்ளே பொறுமைக் குணத்தைப் பல இடங்களில் சிறப்பாகக் கூறியதன் காரணம், அவள், 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' எனப் பொறுமைக்குச் சிறந்த உவமானமாகவுள்ள பூமியின் அதிதேவதையான பூதேவியின் அம்சமாய்ச், சனகமகாராசன் யாகஞ் செய்தற்கு உழுத படைச்சாலில் பூமியுள்ளிருந்து தோன்றியது போலும்.

செம்பு முதலிய வேறு லோகக் கலப்புற்ற தங்கத்தைப் புடத்திலிட் டால் தன்னோடு கலந்திருந்த உலோகங்களெல்லாம் எரிந்தொழிந்துபோகத், தனியாகித் தங்குவது தங்கமே. (அதனால், நோக்குத லென்னும் பொரு ளுடைய நோக்கம் போலத் தங்கம் தங்குத லென்னும் பொருளுடைய தாயப், பொன்னுக்கு ஒரு பெயராயினதுபோலும்.) புடச் சோதனை யைப் பொறுக்கமாட்டாது மற்றெல்லா உலோகங்களும் நிலையா தொழியப் பொன் ஒன்றே பொறுத்து நிலைகெடா திருத்தல்போல, மற்றெல்லா மக் களும் பொறுக்கமாட்டாமல் நிலைகெட டொழியும்படியுள்ள துன்பச் சோதனையைப் பொறுத்து நிலைகெடாது நின்றாள் சீதை யென்பது முதலிரண்டடிக் கருத்து.

பொறுமைக்கு நிலைப்பிடமாய், அதனால் தானன்றித் தனக்கு நிக ரில்லாதவளான சீதை, தனக்கு நாயகனாகப் பெற்ற இராமன், அப்படிப் பட்ட மனைவியைப் பெற்ற மற்றைய ஆடவரெவரும் ஒப்பாகாது, தனக் குத் தானே ஒப்பாகும் பிரசித்தியைப் பெறச் செய்தாளென்பது மூன்றா மடிக் கருத்து.

அனுமான், 'ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்று சீதை தன்னை வாழ்த் தித், தொண்டராளு ருள்ளே தன்னையன்றித் தன்னை யொப்பவ ரில்லை யென்னும்படி, தான் சிரஞ்சீவியாகும் வரம் தந்தாளென்றா னென்பது நான்காமடிக் கருத்து.

பாட பேதம்: பொன்னை யொப்பன: தன்னை யொப்பவா: நுன்னை யொப்பவா: உன்னை யொப்பவா. (கஙக)

* இருமை - பெருமை. பொறை - பொறுமை. இரும்பொறை - மகத்தான பொறுமை.

சீதை, தன்னைச் சார்ந்தார்க்கு மேன்மையும், பகைத்தார்க்குக் கேடும் உண்டாகச் செய்தா ளெனல்

உன்குல முன்ன தாக்கி யுயர்புகழ்க கொருத்தி யான
தன்குலந் தன்ன தாககித் தன்னையித் தனிமை செயதான்
வன்குலங் கூற்றுக கீந்து வானவா குலத்தை வாழ்வித்
தென்குல மெனககுத் தந்தா ளென்னினிச் செயவ தெம்மோய்

கொண்டுகூட்டு: 'எமமோய, உன் குலம் உனனது ஆககி, உயா புகழ்ககு ஒருததியான தனகுலம தனனது ஆககித, தனனை இத தனிமை செயதான் (ஆன இராவணன) வன குலததைக கூறறுககு ஈந்து, வானவா குலததை வாழவிதது, என் குலம எனககுத தந்தாள. (இவறறினும) என இனிச் செயவ(தறகிருககிற)து!

பொருள்: 'எங்கள் மாதாவான சீதாதேவி, உன்னுடைய குலம (இக்ஷவாகு குலம, ரகு குலம், ககுஸ்த குலம் என வழங்குத லொழிந்து) இராம குலம (என வழங்குமபடி) ஆககச்செய்து, தனது குலம் (சனக குல மெனபது தவிாந்து) சீதை குலம் (என் னும்படி) ஆககச்செயது, தன்னை (உன்னைவிட்டுப் பிரித்து)த் தனிய ளாகுமபடி செய்த இராவணனது இராட்சச குலததை எமனுக குக் கொடுத்து (மாளச்செயது), தேவர் குலத்தை வாழச்செயது, எனது வானர குலததை (அனுமான் குலமென என பேரால் வழங்கச்செய்து) எனககு(ப் பெருமை) ஈநதாள். (அவள் செய்த, இபபடிப்பட்ட அருமையான செயல்களினும சிறநத செயல) யாது இனிச செயதற கிருக்கின்றது!

கூறறு - எமன். மோய - தாய.

புகழகளில் தன்னை யொததது்ம் தன்னின் மிககது மிலலாததாய, உயாநத புகழை வேறெவரோடும பஙகிடாது தாமொருததிககே தனியுரிமை யாகப பெறற எனற விரிவான பொருளை 'உயாபுகழக கொருததியான' எனச் சுருககச சொலலி விளககவைதத நயம மிகவும பாராட்டறபாலது.

சீதையின் அருஙகுணஙகளும அரிய செயலகளும அவளை மேம படுததியதன்றி அவளைச சாாநதாரையும மேனமையுறச செயத தெனபது கருதது.

பாட பேதம்: ஒருததி யாய: இத தனமை செயதான்: செயத மனகுல மரலி: வானவா குலமுங காததினறு: செயவதமமா. (கசo)

'இலங்கையிலே சீதையைக் கண்டேனில்லை,
இற்பிறப்பும், பொறுமையும், கற்பும் நடனமாடக் கண்டேன்' எனல்

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீ ரிலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டே னல்லேன்
இற்பிறப் பென்ப தொன்று மிரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்

கொண்டுகூட்டு: *'பெரும வில (எநதிய) தடந தோள் வீர! வெறபு வீஙகு நீா இலஙகையில், நல் பெரும தவததள ஆய நஙகையைக கணடேன அலலேன். இறபிறபபு எனபது ஒனறும, இரும பொறை எனபது ஒனறும, கறபு எனும பெயரது ஒனறும் களி நடம் புரியக கணடேன.*

பொருள்: *'வீராதிவீரனே, (எனன ஆசசரியம! காணக் கூடிய ஓர் உருவப பொருளைத தேடிசசெனற அடியேன், அதனைக் காணுமல, அதன் தானததில், காணக்கூடாத மூன்று அருவப பொருள்களைக் கண்டேன. அநத விவரததைக் கேட்டருள்.) இலங்கையிலே (அடியேன் தேடிசசென்ற) சீதாதேவியைக் கணடேனில்லை. (வேறு கண்டது யாதோ வெனில்,) உயர்குடிப பிறப பெனப தொரு குணமும, மகத்தான பொறுமை யெனப தொரு குணமும், கறபு எனனும பெயரினையுடைய தொரு குண மும ஆனநத நாததனஞ செயதுகொணடிருததலைக கண்டேன (எனபது. இறபிறப்பு முதலிய மூனறு குணங்களின் சொரூபமா யுள்ளாள சீதை யெனறவாறு.)*

பெரும வில தடம தோள் வீர - பெரிய விலலை யேந்திய விசாலமான கையையுடைய வீரனே. வெறபு வீஙகு நீா இலஙகையில - திரிகூட மலைமேலுள்ள, மிகுநத நீரையுடைய கடல் சூழநத இலஙகை நகரில. இறபிறபபு - உயாகுடிப பிறபபு. இருமை - பெருமை பொறை - பொறுமை. களிநடமபுரிதல - களிபபோடு கூததாடல. 'இலஙகை வெறபில' எனபது 'வெறபிலஙகையில' என மாறியும உருபு பிரித்துக கூட்டியும உரைககப பட்டது.

சிஙகாதனததிலே அரசனும் அரசியும அரசிளங குழவியும் ஒருஙகு விளஙகக கணடு, அநதக கமபீரமான காட்சியில் முழு மனமும முழுகிய ஒருவன சிஙகாதனததைக காணுனனறே, அவவாறே, சீதையினிடததே குடிபபிறப்பும பொறுமையும கறபும ஆகிய முககுணஙகள் மூாததனனிய மாய முனைநது நினறு முறபட்டுத தோனறிச சொலிககக கணடு, அநதக

காட்சியில் மனம் அழுநதி அவசனுன அனுமான, அந்தச் சமயததில் அக குணஙகளைக கணடதனறி, அவைகளையுடைய அவளைக காணவிலலை யெனபது கருதது.

இயலபாக வடிவமும தொழிலு மில்லாத, கட்புலனுகாத இறபிறபபு முதலிய குணஙகளின சிறபபு இனிது புலபபட,

'இறபிறப பெனப தொனறும இருமபொறை யெனப தொனறும
கறபெனும பெயர தொனறும களிதடம புரியக கணடேன'

என, அவைகளைக காணபபடும உருவமும செயலு முடையனவாகக கூறிய அதிசய கவிசாதுரியம பாராடடததககது. (கசக)

சீதை இராமனைப் பிரிந்தா ளென்பது பொருந்தா தெனல்

கண்ணினு முளைநீ தையல் கருத்தினு முளைநீ வாயின்
எண்ணினு முளைநீ கொங்கை யிணைக்குவை தன்னி னோவா
தண்ணல்வெங் காம னெய்த வலரம்பு தொளைத்த வாறுப்
புண்ணினு முளைநீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற் றாமோ

கொண்டுகூட்டு: 'நீ தையல் கணணினும உளை! கருததினும் உளை! வாயின் எணணினும உளை! கொஙகை இணைக குவை தனனின ஓவாது அணணல வெம் காமன் எய்த அலா அமபு தொளைதத ஆறுப புணணினும் நீ உளை. (ஆக) நினனை (அவள) பிரிநதமை (எனபது) பொருந்திறறு ஆமோ?

பொருள்: 'நீ, எப்போதும சீதாதேவியின் கண்களி லிருக் கின்றாய! கருத்தினு மிருக்கின்றாய! மனமதன் எயத புட்ப பாணங்கள் தொளைத்ததனு லுண்டான ஆறுத புண்களிலு மிருக கின்றாய்! (இப்படியிருக்கவேயும,) உனனை அவள் பிரிநதிருக் கின்றா ளென்று கூறுவது பொருததமான கூறறுமோ?

உளை - உளளாய. எண - எலலை வாயின எணணில் - வாயின் எலலை யில - வாயில. இணை - இரட்டை. குவை - மேடு - முகடு. ஓவாது - நீஙகாமல் - இடைவிடாமல. அணணல் - பெருமை. வெம்மை - கொடுமை. அணணல வெம காமன - பெருமை கொடுமையுடைய மனமதன. அலா - பூ. தொளைதத புண - தொளைததனுல் உணடாகிய புண.

சீதை, எபபோதும இராமனை உருவெளிததோறறமாகக காணலால அவன அவள கணணைவிட்டுப பிரியாமையையும், அவனை அவள் சதா

சிந்தித்துக்கொண்டிருத்தலால் சிந்தையைவிட்டுப் பிரியாமையையும், இடைவிடாமல் அவன் பெயரைச் சொல்லிக்கொண்டிருத்தலால் வாயைவிட்டுப் பிரியாமையையும், ஓயாது அவன் காதல் கூர்தலால் மன்மதன் அம்பு செய்த புண்ணைவிட்டுப் பிரியாமையையும் உடையாள் என்பது உள்ளுறை பொருள்.

இதற்கு முந்திய பாட்டில், காணக்கூடாத குணங்கள் காணப்பட்டன வாகக் கூறியது அதிசயமானது அந்த அதிசயத்துக்கு மேல் அதிசயமானது, இந்தப் பாட்டில் இராமனைப் பிரிந்த சீதையைப் பிரியாதவ ளென்றது. மேற்கொண்டும் அதிசயமானது, பிரிந்த தூலராமன் ஒருவனுயிருக்க, வாயில் உள்ள ராமன், மனத்திலுள்ள ராமன், கண்ணிலுள்ள ராமன், புண்ணில் உள்ள ராமனுக்ச் சூக்கும ராமர் பலரா யிருப்பதாகக் கூறியது　　(கசஉ)

சீதை இராவணனுல் தீண்டப்படாமல்
தூயளா யிருக்கின்ற ளெனல்

[　*'இலங்கை நகரிலே, ஒருபுறத்திலே, அசோகவன மென்ற சோலையிலே, இளையபெருமாள் இயற்றிய சாலையிலே, "தவம் செய்த தவமாம் தையல்"* ஆன சீதாதேவி உனது திருநாமத்தையே செபித்து உனது திருவுருவத்தையே தியானித்து அருந் தவம் புரிந்துகொண்டிருக்கக் கண்டேன். அவளுடைய கற்புத் தீயும் "இராவணன், விரும்பாதவளைத் தொட்டால், தலைவெடித்துச் சாவக்கடவன்" என்று பிரம னிட்டிருந்த சாபத் தீயும் அகத் தீக்கோட்டையும் புறத் தீக்கோட்டையுமாய்த் தடையா யிருந்தத னுல், அவளைத் தொடுதற்கு அஞ்சி அவளிருந்த சாலையோடு தூக்கிப்போனுன்.*　]

சீதை கற்புநிலை கலங்காமை மாதர்க ளெல்லாருக்கும்
உயர்ந்த மதிப்பை உண்டாக்கிய தெனல்

143. சோகத்தா ளாய நங்கை கற்பினுற் றெழுதற் கோத்த
மாகத்தார் தேவி மாரும் வான்சிறப் புற்றா மற்றைப்
பாகத்தா ளிப்போ தீசன் மகுடத்தாள் பதுமத் தாளும்
ஆகத்தா ளல்லண் மாய ஞயிர மௌலி மேலாள்

---

* *மகாத்துமாக்களாற் செய்யப்படும் மகிமையுடைய தவம், தானே தவஞ் செய்து, அந்தத் தவப்பயனைப் பெற்ற சீதை - தவத்தின் தவப்பயன் வடிவெடுத்தாற்போன்றவள்*

கொண்டுகூட்டு : 'சோகத்தாள் ஆய நங்கை கற்பி(னின்) கலங்காமை யி)னால், தொழுதற்கு ஒத்த மாகத்தார் தேவிமாரும் வான சிறப்பு உற்றார். ஈசன (இடப) பாகத்தாள (ஆன உமை) இப்போது (அவன) மகுடத்தாள பதுமத்தாளும் மாயன ஆகத்தாள அல்லள்(ஆய அவன) ஆயிரம மௌலி மேலாள

பொருள் : '(உனது பிரிவினால்) துன்பமுடையவளான சீதா பிராட்டி கற்புநிலை (கடுஞ்சோதனைக் குள்ளான காலத்தும்) கலங் காமையினால் (அவள உயர்வுற்றாளென்பானேன், "தக்கவன் ஒரு வன் வாழத் தன் குலமெல்லாம் வாழும்" என்றவாறு, பெண்ணாகிய அவ ளினமான பெண்களெல்லாருமே உயர்வுபெறறார்கள். அப்படி உயர்வுபெற்ற பெண்கள் பூலோகத்துப் பெண்கள் மட்டுமோ வென்னில், அன்று) தேவலோகததுத் தெய்வப் பெண்களும் உயர்வடைந்தார்கள். (ஏனைய எல்லா உலகத்துப் பெண்களும் உயாநதாாகள். பிராட்டி யொருத்தியுடைய கற்பினால், பெண்க ளெல்லாரும் அடைந்த மேம்பாட்டைக் கொண்டாடுவாராய், ஆடவ ரெல்லாம, அவரவர் நாயகிமாரைத தலைமேற்கொணடு கௌரவப் படுத்தினாகள். சீதாதேவி கறபுச சோதனைக் குள்ளாகுமுன்) சிவபிரானுடைய பாகத்தாளாயிருந்த உமாதேவி, இப்போது (சோதனைக குள்ளான சீதாதேவி கற்புநிலை கலங்காமை தெரியலான போது) அந்தப் பெருமானுடைய தலைமேலுள்ளாள. இலக்குமி தேவியும திருமால் மார்பி லுறைபவ ளல்லளாய் அந்த அமலன் சிரமே லிருக்கின்றாள்.

சோகம் - துககம. மாகம் - தேவலோகம். பதுமததாள் - இலக்குமி. மகுடம - மௌலி. முடி - கிரீடம்.

'அர்த்தநாரீசுவர மூர்த்ததநிலே சிவபிரானது பாகம் வலப்புறமாத லால, இடப்புறம் "மறறைப பாகம" எனப்பட்டது. "ஆயிர மௌலி" என்றது — விராட ஸவரூபததின நிலைமையைக கருதி.' *

சீதை ஒருததியின கறபினால மாதாக ளெல்லாருககும மதிப்பு அதிகப பட, ஆடவா மாதரை முன்னினும அதிகமாகக கவுரவப்படுததினாாக ளென பதைப பாவனாீதியான கவிமுறையாக, ஆசசரியமும ஆனநதமு முணடாக,

'பாகததாள இப்போ தீசன மகுடத்தாள பதுமத தாளும
ஆகததா ளல்லள மாயன ஆயிர மௌலி மேலாள'

என்று கூறியிருத்தல் கண்டுகளிககத்தககது.

* வை. மு. கோ.

சீதையின் மேம்பாடு, 'உன்பெருமை,' 'பொன்னலை,' 'உன்குலம்,' 'சோகத்தாள்' என்ற கவிகளில் ஆரோகண கதியாக உயர்தலுடன் பரவுதலும் உடையதாகக் கூறப்பட்டு, அக் கவிகளிற் கடைசியான இந்த 'சோகத்தாள்' என்ற பாட்டில், அதிப்பந்த உச்சமும் வியாபகமும் அடைந்ததாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

பாட பேதம்: மௌலியாளே.　　(கசங)

அனுமான், 'சீதையை அசோகவனத்திற் கண்டேன்' எனல்

['தெண்ணீர்க் கடலின் நடுவே இலங்கையைக் கண்ட அடியேன், அங்கே சாதாரணமாகச் சன சஞ்சாரமுள்ள எல்லா இடங்களிலும், விசேடமாக இராவணன் அரண்மனையிலும், தேவியைத் தேடிக் காணாமல் அசோகவனத்தை அடைந்தேன்; அங்கே கண்ணீர்க் கடலின் நடுவே அவளைக் கண்டேன்.]

'இரக்கமே பெண்ணுருக் கொண்டாற்போன்று
சீதை சிறையிலிருக்கின்றாள்' எனல்

144. அரக்கிய ரளவற் றார்க ளலகையின் குழுவு மஞ்ச
நெருக்கினர் காப்ப நின்பா னேசமே யச்ச நீக்க
இரக்கமென் றொன்று தானே யேந்திழை வடிவ மாகித்
தருக்குயர் சிறையுற் றன்ன தகைமைய டமிய ளம்மா

கொண்டுகூட்டு: 'அலகையின் குழுவும் அஞ்ச, அரக்கியர் அளவற்றார்கள் நெருக்கினர் காப்ப, (ஏற்பட்ட) அச்சத்தை நின்பால் நேசமே நீக்கத், தமியள் (ஆன சீதாதேவி,) இரக்கம் என்ற ஒன்று தானே ஏந்திழை வடிவம் ஆகித், தருக்கு உயர் சிறையுற்றது அன்ன தகைமையள் (ஆய் இருக்கின்றாள்.)

பொருள்: '(தாம் பயப்படாது பிறரைப் பயப்படுத்துமியல்புடைய பேய்கள், ஒன்றன்று, அனேகம் திரண்டு கூடியனவான பல) பேய்க் கூட்டங்களுமே பயப்படும்படி (இம்சிக்கும்) அரக்கியர் (ஒருவரல்ல) அளவற்றவர்கள் (தப்பிப்போதற்குச் சந்துவிடாது நெருங்கிச் சூழ்ந்துநின்று) வருத்தஞ்செய்துகொண்டு காவல் காத்துநிற்க, (அவ் வருத்தத்தால ஏற்பட்ட) அச்சத்தை உன்பால் வைத்த அன்பு ஒன்றே (பக்கபலமில்லாமல்) நீக்கா நிற்க, (அந்த அன்புத் துணையன்றி எந்தத் துணையுமில்லாது)

தனியளாயுள்ள சீதாதேவி, இரங்கிப பரிதாபப்படத்தக்க தென்ற ஒரு தன்மையானது ("பெண்ணொன்றல் பேயு மிரங்கும்" எனப தற கிலக்கான) பெண்ணுருசகொண்டு சிறையி லிருந்தாறபோனற தன்மையளா யிருக்கின்றனள்.

அலகை - பேய குழு - கூட்டம. நெருக்குதல - வருத்துதல்.— ந அ. நெருக்கினா - நெருக்கி - வருத்தி. முற்றெச்சம ஏந்திழை - பெண. தருக்கு - தருக்குதல - வருத்துதல: முதனிலைத தொழிற பெயா — ந. அ. தருக்கு உயா - வருத்துதல் மிகுந்த. சிறை - சிறைச்சாலை - காவறகூடம. தகைமை - தனமை. தமி - தனி. அம்மா, அதிசய இரக்கக குறிப்பு.

பேய, பிறரைப பயமுறுத்தும், தான பயமுறுது. அப்படிப்பட்ட பேய தனியாகவன்றிக கூட்டங்களாக வுள்ளவைகளும அஞ்சுமபடி, எனவே அதி அசாதாரண அச்சமுண்டாமபடி, அரக்கிகள சீதையை வருந் தச்செய்தாாக ளெனபான 'அலகையின குழுவும அஞ்ச நெருக்கினா' என்றன. அப்படிப்பட்ட வருத்தப்படுத்துதலைப பொருட்படுத்தாதபடி செய்தது சீதை இராமனபால வைத்த நேச மென்றதனால், சீதையின இராம நேசத்தை, அனபென்பதை அறியாரும அறியச்செய்தான.

'இரக்கமென றொன்று தானோ ஏந்திழை வடிவமாகித்
தருக்குயா சிறையுற றனன தகைமையள தமியள அமமா!'

என்ற இனிய அருமந்த இரக்க வருணனை, சீதையின அதி பரிதாபகரமான நிலைமையை நனகுணரச்செய்து, கருங்கல் மனமுங் கரைந்துருகச் செயவதா யுள்ளது. அது கருணை சொரூபியான இராமன மனத்தை யாது செய திருக்கு மெனபது பகரமுடியாத தன்றிப பாவிக்கவும முடியாததா யுள்ளது. (கசச)

இராமனைக்காட்டிலும் பாக்கியசாலியான ஆடவரில்லை யெனல்

['எப்படிப்பட்ட பெருந துன்பத்தையும அச்சத்தையும் பொருட்படுத்தாதபடி செய்யவல்ல சிறந்த அனபைச சீதாதேவி உன்பால் வைத்திருக்கின்றனள். அப்படிப்பட்ட அன்பைத் தம மனைவியரால் வைக்கப்பெற்றவா எவரும இலா: ஆதலால், நீ ஆடவ ரனைவரினுஞ் சிறப்புடையையாய, அவ ரெவரும அனுபவி யாத, ஆணாகப் பிறந்ததன் பயனாக அனுபவிக்கும் செல்வங்களுட் சிறந்த செல்வத்தை அனுபவிப்பாயா யிருக்கின்றா யென்பதைத் தேவியைக் கண்டபோது தெரியலானேன்.]

இராவணன் இணங்கும்படி இரந்து வேண்டச் சீதை கடிந்து மறுத்தா ளெனல்

['அடியேன் தேவியை அணுகித் தெரிசித்துச் சேவை செய்தற்கு ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருந்தபோது, இராவணன் வந்து இறைஞ்சி இணங்கும்படி இரந்து வேண்ட, அவள் கொடுங் கோபங்கொண்டு கடுஞ்சொற் கூறி மறுக்க, அவன் அவளைக் கொல்லத் தொடங்கிவிட்டான். அப்போது, அவள் தூய கற்பும், உன் திருவருளும், நல்லறமும் ஒன்றுகூடிக் காத்தன. அவன் அவளைத் தனக்கு இணங்கும்படி காவல் காத்துநின்ற இராட்சசிகளுக்குக் கட்டளையிட்டுச் சென்றான். அவர்கள் என் மந்திர வலியால் இறந்துபோனார் போல உறங்குவாரானார்கள்.]

சீவனை விடப்போன சீதையை இராம நாமம் இயம்பிக் காத்ததும் மோதிரங் காட்டியதும் கூறல்

['அப்போது பிராட்டி உயிரைவிட ஒருப்பட்டு ஒரு கொடியைக் கழுத்தில் இறுக மாட்டக் கண்டு, அடியேன் பதறிப் பக்கத்திலே போய்க் கையாற் றடுக்கமாட்டாது, வாயாற் றடுப்பேனாய், உன் திருநாமத்தை உச்சரித்தபோது, குரக்குருக்* கொண்ட அரக்கனோ வென்று ஐயுற்றாளாயினும், "யான் இறக்கலுற்ற போது எம்பெருமான் பேரைக் கூறி இறவாது காத்தாய்" என்று நன்றி யுரைத்தாள். அடியேன், உன் செய்திகளைத் தெரிவித்து உன் மோதிரத்தைக் காட்டினேன். அது, அவளுக்கு அந்திய காலத்தில் சாவாது காக்கும் தேவாமுதம் போன்றது.]

எதிரிடையான இரண்டு அதிசய சம்பவங்கள் நிகழ்ந்தன வெனல்

ஒருகணத் திரண்டு கண்டே னொளிமணி யாழி யான்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலுஞ் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னால்வெந்
துருகிய துடனே யாறி வலித்தது குளிர்ப்புள் ளூற

கொண்டுகூட்டு: 'செல்வ! ஒரு கணத்து இரண்டு கண்டேன். (தேவி, உனது) ஒளி மணி ஆழியை ஆன்ற திருமுலைத் தடத்து வைத்தாள்: வைத்தலும், நின்பால் விரகம் என்பதனின் வந்த வெம் கொழும் தீயினால் (அவ் ஆழி) வெந்து உருகியது: உடனே (மகிழ்வால்) உள் குளிர்ப்பு ஊற (அது) ஆறி வலித்தது.

* குரக்குரு - குரங்கின் வடிவம்.

பொருள்: 'சீமானே! ஒரு கண நேரத்துக்குள்ளே (ஒன்றுக்கொன்று எதிரிடையான) இரண்டு (வியப்பான நிகழ்ச்சிகளைக்) கண்டேன். (அவை எவையெனில், தேவி, உனது பொன்) மோதிரத்தை (உன் அன்பு தூண்டத் தன்) தனமுகட்டிலே வைத்தாள்: வைத்தவுடனே (உன் பிரிவுத் தீயாகிய) விரகாக்கினி(யினால் வெதுப்பப்பட்டிருந்த அவள் திருமேனி வெம்மை)யினால் (அந்த மோதிரம்) வெதும்பி உருகியது: உடனே (அம் மோதிரத்தை அனுப்பிய நீ "விரைவாய் வந்து சிறை மீட்பாய், திரும்ப உன்னைச் சேரலாம்" என்ற சந்தோஷ சிந்தனையினால்) மனத்திலே குளிர்ச்சி உண்டாக (அது கொங்கையுள்பட்ட உடம் பெங்கும் பரவிக் கொங்கைமீது வைக்கப்பட்டிருந்த மோதிரத்தையுங் குளிர்விக்க, அது) சூடாறி யிறுகிக் கட்டியானது (ஆச்சரியம்! ஆச்சரியம்! மிகவும் ஆச்சரியம்!)

மணி (- அழகுடைய) ஆழி (- மோதிரம்). ஆன்ற - அகன்ற - பரந்த. தடம் - உயர்ந்த இடம். (திருக்கோ ச)—சஅ - முகடு. விரகம் - பிரிவு, வலித்தல் - வன்மையாதல். ஊறல் - பெருகல்.—த. அ. 'உள (மனம்) குளிர்ப்பு ஊற' என மாறுக.

இராமன் பிரிவு நீட்சிபற்றிய சிந்தனையால் வெதும்பியிருந்த சீதை தேகம் அவனைத் திரும்பச் சேரலா மென்ற எண்ணத்தால் குளிர்ச்சியடைந்த தென்பது கருத்து. இதனை அதிசயமும் ஆனந்தமும் உண்டாக உணர்த்துவானாய், இராமன் மோதிரம் முந்திய வெப்பத்தால் உருகிப், பிந்திய தட்பத்தால்* இறுகிய தென்றான். இது உயர்வுநவிற்சியணி. இது போலக் 'காதளவும் நீண்ட கண்' எனத் தமிழிலும், 'இரு காதுகளும் எட்ட இளித்தான்'† என ஆங்கிலத்திலும், 'பிணமலை' 'இரத்த ஆறு' என ஆங்கிலம் தமிழ் இரண்டினும் வழங்குவன உயர்வுநவிற்சிக்கு உதாரணங்களாம்.

தேகத்தில் பொன் உருகும்படியான சூடு உண்டாகுதல் இயல்பன்று. மோதிரம் (பொன்) உருகியபோது மோதிர வடிவத்தை யிழந்துவிடும்: பின்பு அது, குளிர்ந்து கட்டியாகும்போது பழைய மோதிர உருவத்தை அடையமாட்டாது. இவற்றுக்கு எதிரிடையாக, மோதிரம் உடற் சூட்டினால் உருகிய தென்றும், அப்படி உருகிய மோதிரம் உடற் குளிர்ச்சியால்

* தட்பம் - குளிர்ச்சி.

† கடைவாய்கள் காதுகளை அணுகவும் பற்கள் மிகவும் வெளிப்படவும் மூடச் சிரிப்புச் சிரித்தான் ('He grinned from ear to ear').

இறுகிய தென்றுட் உரைத்தல் பொருத்தமன்றென்று கருதலாகாது. யாதாயினும் மொன்றை இன்பமும் அதிசயமும் உண்டாக மிகைப்படுத்துக் கூறுவதே அதிசயோக்தி யலங்கார மெனனும் உயர்வுநவிற்சி யணியாம். இப்பாட்டிலுள்ள உயர்வுநவிற்சி, அதி அசாதாரண அற்புத கற்பனு சக்தியுடையாராலேயே கூறக்கூடியது. இந்த உயர்வுநவிற்சிக் கவி, மராமரப் படலத்தில் வரும் 'ஊழி பேரினும்' என்ற முதற் கவி தொடக்கமாக 'ஏழு மாமரம்' என்ற கவி இறுதியாகத் தொடர்ச்சியாகப் பரமாச்சரியமும் பரமானந்தமும் பயக்கும் பதினான்கு உயர்வுநவிற்சிக் கவிகளையும் கலிங்கத்துப்பரணியில் உள்ள 'அணைகண்ட' என்ற அருமந்த அதிசய உயர்வுநவிற்சிக் கவியையும் நினைவுறச் செய்கின்றது.

'கடலில் திருவணை கட்டிய (இராமன் சேனையைச் சேர்ந்த) குரங்குக் கூட்டங்கள் (அந்தப் பாலைவனத்தில் அதி உட்டணமான மணற்பரப்பிலுள்ள எண்ணிறந்த மணல்களுள்) ஒரு மணல் (காணப் பெற்றிருக்குமானால், அதைக் கடலிற் போட்டுக் கடல்நீர் முழுவதையும் வற்றச்செய்து கடலைக் கடக்க அணை கட்ட வேண்டிய வேலையை அனாவசியமானதாகச் செய்திருக்கும். அந்த ஒரு மணல்) காணாமையால் (கடலில் அணை கட்டுதற்கு) மலைகளையெடுத்து(க் கொண்டுவந்து போட்டு வருந்தி) மயங்குவனவாயின' என்ற பொருளடங்கிய அந்தப் பாட்டு வருமாறு:

அணைகண்ட குரங்கினங்கள் அலைகடலுக் கப்பாலை
மணலொன்று காணாமல் வரையெடுத்து மயங்கினவே.

உண்மையில், கடலைச் சுவறச்செய்யும் சூட்டுமணல் உள்ளதன்று, உள்ளதாயினும் தொடக் கூடியதா யிராதென்றும், தேகச் சூட்டினால் மோதிரம் உருகாது, உருகி உருவழிந்த மோதிரப் பொன் சூடாறியபோது (கம்மியன் கைத்தொழிலாலன்றி) மோதிர மாகாதென்றும் ஆட்சேபிப்போர், கவிஞர்கள் மனோபாவனையாற் சிருட்டிக்கும் கற்பனுலோகக் காட்சிகளைக் காண மறுப்போராவார்.

பாட பேதம்: ஆழி ஊன்ற. (௧௪௫)

'சீதை "ஒரு மாதத்துக்குட் சிறை மீட்கப்படாவிட்டால் செத்திடுவே" னென்றாள்' என்ல்

['அடியேன் உன் திருநாமம் தீட்டிய கணையாழியைக் காட்டியபோது கையில் வாங்கி, அநியாயம் மிகுந்த அரக்கரிருக்கும் ஊருக்கு வந்து ஆசூசமடைந்த* தென்று ஆயிரங் கலசம் புண்ணிய தீர்த்தத்தினால் அபிடேகஞ் செய்வாள்போல, அதனை

* ஆசூசமடைந்தது - தீட்டுப்பட்டது.

எமபெருமாட்டி ஆனநதக் கணணீரால் முழுககாட்டினள். மகிழ்சசி யழுகை அழுதுகொண்டு வாயபேசாமல மௌனமாயிருநதாள. மெலிநதிருநத மேனி விமமுதலுற்றாள். ஆசசரியத்தால மூச சடஙக, ஆவிபோனாள் போனறிருநதாள. அப்போது அடியேன அவள் பிரிநத பின்பு நிகழநதவைகளையும உன துயரையும் உரைதது, அவளிருக்குமிடம அறியப்படாததனால் நீணட கால தாமதம நேர்ந்த தென்று கூறக் கேட்டபின் நெடுமூசசு விடுவா ளாயப், போன உயிர மீளவந்தாள் போன்றாள். உனனைப் பிரிந்த பின் தனககு நேர்நத ஆபத்தையும் துனபததையும் அறிவிததாள். முடிவில், "இன்னும ஒரு மாதம் உயிரோடிருப்பேன. அதற குள எமபெருமான இனனருளபுரியா னெனில இறநதிடுவேன" எனறு கூறித தன் திருமுடியில் உன் திருவடிகள பொருந்தத் தியானிததுத திககு நோககித தெண்டனிட்டாள்.]

இராமன் கையிற் சூளாமணியைக் கொடுத்தல்

['பினபு, தன முன தானையில் முடிநதுவைத்திருநத சூளா மணியை அவிழ்ததெடுதது அடையாளமாக அடியேன் கையிற கொடுததாள. அதனைக கண் களிககக காணபாயாக!' என்று கூறி அனுமான் சூளாமணியை இராமன கையிற் கொடுததான.]

சூளாமணியை வாங்கிய இராமன் மெய்ப்பாடுகள்

146. பையவுட் பயந்த காமம் பரிணமித் துயாந்து பொங்கி
மெய்யுற வெதும்பி யுள்ள மெலிவுறு நிலையை விட்டான்
ஐயனுக் கங்கி முன்ன ரங்கையாற் பற்று நங்கை
கையென லாயிற் றன்றே கைபுக்க மணியின் காட்சி

கொண்டுகூட்டு: (சூளாமணியைப் பெறற இராமன) பைய உள பயநத காமம பரிணமிதது உயாநது பொஙகி(யதால) மெயயுற வெதுமபி உளளம மெலிவுறும் நிலையை விடடான. (அவன) கைபுகக மணியின காடசி, ஐயனுககு அஙகி முனனா அஙகையால பறறும நஙகை கை எனல ஆயிறறு.

பொருள்: (சீதையின் சூளாமணி இராமன் கையி லுற்ற போது அதன காட்சியாலும பரிசத்தாலும அவன) நெஞ்சி னுள்ளே மெள்ள உண்டாகிய சீதை காதல வளர்நது மேனமே லோஙகியதனால் உடம்பு வெதுமபி மெலிவுறறிருந்த நிலைமை

நீங்கப்பெற்ருன். அவன் கையை அடைந்த சூளாமணி அவனுக்குக் (கல்யாண காலத்தில்) அக்கினி முன்னிலையில் அவன் கையாற் பற்றிய சீதை கைபோல (இன்பம் அளிப்பது) ஆயினது.

பைய - மெல்ல. பயத்தல் - உண்டாகுதல்.—தி. அ. பரிணமித்தல் - (வித்திலிருந்து மரம் உண்டாதல்போல) வளர்தல். மெய் - உடம்பு. அங்கி - அக்கினி. கை எனல் ஆயிற்று - கை போலுதலானது - கைபோன்றது: குலமுறை கிளத்து படலத்தில் 'வில்லெனும்' என்ற பாட்டில், 'அல்லெனும் திருநிறத்த அரி' என்பதில் 'என்னும்' என்பது 'போலும்' என்று பொருள்பட நிற்றல் காண்க. அன்று, ஏ, அசைகள். காட்சி - தன்மை.—தி. அ.

முன் சீதையை மிதிலையிலே கன்னிமாடத்திலே கண்டு காதல்கொண்டு வருந்தியிருந்த இராமன் விவாக காலத்தில் அவள் கையைப் பற்றியபோது 'அவளை அடைந்தோ' மென்று மகிழ்ச்சியுற்றதுபோல, இப்போது அவள் பிரிவால் வருந்தும் அவன், அவளுடைய சூளாமணியைக் கையிற் கொண்டபோது, 'இராவணனை விரைந்து வென்று இச் சூளாமணிக்குடையாளை மீட்டு அடைந்திடுவோம்' என்று களிப்படைந்தா னென்பது ஈற்றடியிரண்டின் கருத்து.

பாட பேதம்: பைப்பய. (கசசு)

பொடித்தன உரோம மேன்மேற் பொழிந்தன கண்ணீர் பொங்கித்
துடித்தன மார்புந் தோளுந் தோன்றின வியாவின் றுள்ளி
மடித்தது மணிவா யாவி வருவது போவ தாகித்
தடித்தது மேனி யென்னே யாருளர் தன்மை தேர்வார்

கொண்டுகூட்டு: (இராமனுக்கு) உரோமம் பொடித்தன; கண்ணீர் பொங்கி மேல் மேல் பொழிந்தன, மார்பும் தோளும் துடித்தன, வியாவின் துள்ளி தோன்றின; மணிவாய் மடித்தது; ஆவி வருவது போவது ஆகி மேனி தடித்தது: என்னே! (இத்) தன்மை தேர்வார் யார் உளர்?

பொருள்: (அந்தச் சூளாமணியின் பரிசம் அதனை அணிந்திருந்த சீதையின் பரிசம்போன்றிருந்ததனால், இராமனுக்கு) உரோமம் சிலிர்த்தது; (ஆனந்தக்) கண்ணீர் மேன்மேலாகப் பொங்கி வழிந்தது; தோளும் மார்பும் துடித்தன; (இன்ப) வேர்வைத் துளிகள் (இனிது) வெளிப்பட்டன; வாய் மடித்துற்றது; (ஆனந்தமேலீட்டால்) உயிர் (வெளியே) போவதும் (உள்ளே) வருவதுமாகி உடம்பு பூரித்தது: என்ன ஆச்சரியம்!

இத்தனமைகளை ஆராய்ந் தறியவல்லார் யார இருக்கின்றனர்? (எவருமில்லை யென்றபடி).

பொடித்தல - புளகித்தல - சிலிர்த்தல. வியாவு - வேர்வை. துளளி - துளி. மணி (- அழகு)வாய - அழகியவாய. ஆவி - உயிர.

சீதையினது சூளாமணியின பரிசம் அவள தேகப பரிசமேபோல, இராமனுக குண்டாககிய மெயப்பாடுகளை வியப்பு விளைய விவரித்திருககும விதத்துவ சாதுரியம மெச்சத்தக்கது. அததியநத துககத்தாறபோல, அததியநத சநதோஷத்தாலும சிலா இறககும உணமையை மனததுட்கொணடு ஆவி அகனறிடலாமபடியான பேரானந்தததை இராமன அடைந்தான எனபார 'ஆவி வருவது போவதாகி' யென்றார. (கசள)

இராமன் சேனையுடன் தென்கடற்கரை சேர்தல்

[அப்போது அங்கதனுதியா வந்து இராம சுக்கிரீவரை வணங்கினார்கள். சுக்கிரீவன இராமனை நோக்கித, 'தேவியைத தேடச சென்றிருந்த சேனைக ளெல்லாம் திரும்பி வந்துவிட்டன. அவளிருககு மிடத்தை அறிநதுகொண்டோம். இனி வீணே காலஞ்செலலவிடலாமோ?' என்றவுடனே, இராமன எழுநது, 'நமது படைகள் புறபபடுக' என்றான். சேனைக ளெல்லாம் திரண்டு தெற்குநோக்கிச் செல்வனவாயின. அப்போது இராம லக்குமணரை முறையே அனுமானும அங்கதனும வணங்கி வேண்டிககொண்டபடி முந்திய முன்னவன் பிந்திய முன்னவன மீதும், முந்திய பின்னவன் பிந்திய பின்னவன் மீதும் ஏறிக், கருடாரூடனான திருமாலும் இடபாரூடனான சிவபிரானும்போலச, செல்வாரானார். தேனும பழங்களும கிழங்குகளும் கிடைக்கும் மலைப்பிரதேச மார்க்கமாகச் சேனை சென்றது. இலங்கையையும இராக்கதரையும் பறறிய எல்லா விவரங்களையும் அனுமான் சொல்லிககொண்டு செல்ல, எளிதாக வழிகடந்து எல்லாரும பன்னிரண்டாம நாள் தென்றிசைக் கடலைக் கண்டார்கள்.]

சுந்தரகாண்டம் முற்றுப்பெற்றது.

காண்டம் ஐந்துக்கு விருத்தம் 659.



பாட்டு முதற்குறிப்பகராதி

[எண—பக்கவெண்]

அரும்பத அகராதி

[எண்—பாட்டெண். பதப் பொருளைப் பாட்டுப் பொருட்கீழ்ப் பாரக்க.]

	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
பிழை திருத்தம் :	53	26	பொருளகளின்	பொருளின்
	161	21	போனலுல்	போனலும்

ராவ் ஸாஹிப்

வே. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C.

இயற்றிய நூல்கள்

1.	சுவர்க்க நீக்கம் முதற் காண்டம் ('பாரடைஸ் லாஸ்ட்' என்னும் ஆங்கில நூலிலிருந்து விருத்தப்பாவில் மொழி பெயர்த்தது, திண்மையான அட்டையுடன்)	..	0	12	0
	ஷை காலிகோ கட்டிடம்	....	1	4	0
2.	கோம்பி விருத்தம் (2-ம் பதிப்பு) (சென்னைச் சர்வகலாசாலை 1934-ம் வருஷத்து இண்டெர்மீடியேற்றுப் பாட புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது)	....	0	8	0
3.	நெல்லைச் சிலேடை வெண்பா (2-ம் பதிப்பு) (இதிற் சில வெண்பாக்கள் சென்னைச் சர்வகலாசாலை 1936-ம் வருஷத்து B. A. பாட புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.)	....	0	6	0
4.	அகலிகை வெண்பா (2-ம் பதிப்பு)	....	1	0	0
5.	இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம் (ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தது.)	....	2	0	0
6.	இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற அதிக பிராணபாயமான வியாதிகளைப் பற்றிய புஸ்தகம் (ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தது, கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டது. சென்னைக் கவர்ண்மெண்டு அச்சுக்கூடம் சூபரிண்டெண்டுக்கு எழுதிப் பெறலாம்.)				
7.	இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய ஜாதி வரலாறும் (2-ம் பதிப்பு)	....	0	6	0

8. கல்வி விளக்கம் முதற் பாகம் 1 0 0

(ஸ்பென்ஸரின் எஜுகேஷன் என்ற ஆங்கில நூலிலிருந்து ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ S. V. கள்ளபிரான் பிள்ளை அவர்கள், B. A., ஸ்ரீ அப்பாவு பிள்ளையவர்கள், L. M. & S. ஆகிய மூவர்களும் மொழிபெயர்த்தது)

9. ஜான் மில்டன் சரித்திரம் 0 4 0

(மேற்குறித்த சுவர்க்க நீக்கம் முதற் காண்டத்தின் ஒரு பகுதி 1911-ம் வருஷத்து இண்டர்மீடியேற் பரீக்ஷா பாட புத்தகம்.)

10. கால்நடைகளுக்கு வியாதி வராமல் அம்மை குத்தலும் அதன் உபயோகங்களும் 0 1 0

11. சருவ சன சேபம் 0 1 0

(சென்னைச் சர்வகலாசாலை 1937-ம் ஸ்ரீ ஆண்டு பிரவேசப் பரீக்ஷா பாடபுத்தகத்திற் சேர்ந்தது.)

கம்பராமாயண சாரம் :

இந்நூல் தனித்தனிக் காண்டமாக வெளியிடப்பெறுவது. இதுவரை பால காண்டமும், அயோத்தியா காண்டமும், ஆரணிய காண்டமும், கிஷ்கிந்தா காண்டமும், சுந்தர காண்டமும் வெளியாகி யிருக்கின்றன.

இந்நூல் 'கம்பராமாயண இன்கவித் திரட்டு' என்ற பெயருடன் 'செந்தமிழி'ல் வெளிவந்த காலத்திற் கிடைத்த சில நிருபங்களுள் இரண்டிலுள்ள அபிப்பிராயங்கள்.

ஸ்ரீ C. V. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள், B. A., B. L., (Retired District Judge):

'இன்றையதினம் எனக்கு கிடைத்த "செந்தமிழ்" 21-ம் தொகுதி 1-ம் பகுதியில், நீங்கள் எழுதியிருக்கிற "கம்பராமாயண இன்கவித் திரட்"டின் முன்னுரையைப் படித்து வெகு ஆனந்தமடைந்தேன். நேற்றிரவு இவ்வூர் ஆனந்த நடராஜகான சபையின் முதல் வருடாந்தக் கொண்டாட்ட சபையில், நான் அவைத் தலைமை வகித்தேன்.... ....என் முடிவுரையில், கம்பராமாயணம் வெகு மேன்மையான காவியமா யிருந்தபோதிலும், அது வெகு விரிவாக இருப்பதினால் இக் காலத்தில் தமிழ்ப்பிமானிகளும் படித்து ஆனந்திக்க சாவகாசமில்லை என்றும், — அந்தப் பெரிய காவியத்தில் உள்ள

இனக்கவிகளை, ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் மகாகவியின் கவிகளை “Beauties of Shakespeare” என்று தேர்ந்தெடுத்துப் பதிப்பித்ததுபோல, பதிப்பிக்க வேண்டுமென்றும், இந்த சத்காரியத்தைச் செய்யும்படி ஈச னருள்புரிய வேண்டுமென்றும் நடராஜாவைப் பிரார்த்தித்தேன். இவ்வளவு சீக்கிரம் என் பிரார்த்தனை நிறைவேறுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. தாங்கள் எடுத்த காரியம் வெகு மெச்சத்தக்கது. இனி ஒவ்வொரு மாதமும் “செந்தமிழ்” பத்திரிகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன். சர்வேஸ்வரன் தங்களையும், தாங்களெடுத்துக்கொண்ட காரியத்தையும் அநுக்கிரகிப்பாரென்று நம்புகிறேன். தங்களை யெனக்கு முன் தெரியாதபோதிலும் தங்களுடைய நன் முயற்சியினால் ஆனந்தப்பட்டு எழுதினேன்.’ 4—1—1923.

மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலைத் தலைமை யாசிரியர் ஸ்ரீ திருநாராயணையங்காரவர்கள்:

‘கம்பராமாயணம் இனக்கவித் திரட்டைப் பற்றி எனக்குண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதனை நான் தங்களுக்குத் தெரிவித்தால் முகமனென்றெண்ணக் கூடுமோ என்று ஐயமுடையவனாகி இதுகாறு மெழுதா திருந்தேன்.

பல பிரதிகளை ஒப்புநோக்கி நன்கு பரிசோதித்தெழுதப் பெறுதலால் பல சுத்தமான பாடங்களும், பொருணயங்களும் நன்கு புலப்படுத்தப்படுகின்றன.

தொடர் மொழிகளுக்கு இடையிடையே இசையெச்சத்தானும், பிற குறிப்புக்களானும் விரித்துக் காட்டவேண்டிய சொற்களை இருபிறைக் குறிகளுக்கிடையே அமைத் தெழுதியிருப்பதை யுற்றுநோக்குந் தோறும் உள்ளம் களிப்புறுகின்றது. காவியச்சுவை நுகர விரும்பும் ஒரோருவரும் தங்கள் உரைநயங் கண்டு களியாதிரார்.

இக்காலத்துச் சிலர் போலத் தத்தம் கொள்கைகளை நூலிடை நுழைக்க விரும்பாது கவி கருதிய கருத்தெதுவோ அதனையே புலப்படுத்திச் செல்லும் தங்கள் பொது நோக்குடைமையும் புலமைத் திறமையும் பாராட்டத்தக்கன.

இத்தகைய புத்துரையை முற்றுவித்துப் புத்தக ரூபமாகப் பதித்துதவினால் அது தமிழ்நாடு செய்த தவப்பயனென் றெண்ணத்தகும்.’ 2—2—1926.

12.	கம்பராமாயண சாரம் : பாலகாண்டம்	(*ராப்பர்*)	1	10
		(*காலிகோ*)	2	0
13.	,, அயோத்தியா காண்டம்			
		(*ராப்பர்*)	1	6
		(*காலிகோ*)	1	12
14.	,, ஆரணிய காண்டம்			
		(*ராப்பர்*) ...	1	6
		(*காலிகோ*)	1	12
15.	,, கிஷ்கிந்தா காண்டம்			
		(*ராப்பர்*)	1	6
		(*காலிகோ*) ...	1	12
16.	,, சுந்தர காண்டம்			
		(*ராப்பர்*)	1	10
		(*காலிகோ*)	2	0



5, 6, இலக்கப் புஸ்தகங்கள் கையிருப்பில்லை.

மற்றப் புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் Ltd.

திருநெல்வேலி & சென்னை.

ஹிலால பிரஸ், திருநெல்வேலி,—8—'37.